# நாவலர் உரைத்திறன்




இரா. வை. கனகரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தி. செல்வமனோகரன்

# நாவலர் உரைத்திறன்

(சைவசமய நெறியுரையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

Donated by
Prof.N.Gnanakumaran
Senior Professor in Philosophy
Department of Philosophy
University of Jaffna

இரா. வை. கனகரத்தினம்
முதுநிலை விரிவுரையாளர் (இந்துப் பண்பாடு)
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை

தி. செல்வமனோகரன்
141, கேணியடி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

பூரணம் வெளியீடு
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NAVALAR URAITTIRAN

(Lucidity of Navalars Commentery)

**V. KANAGARATNAM** M.A

Senior Lecturer (Hindu Culture)

Department of Tamil

University of Peradeniya

Peradeniya

Pooranam Publication

Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர்

**இ. சுந்தரமூர்த்தி,** M.A., PhD.

**அவர்களுக்கு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : நாவலர் உரைத்திறன்

ஆசிரியர் : இரா.வை. கனகரத்தினம்

மொழி : தமிழ்

பதிப்பு : முதற் பதிப்பு – 1997.

உரிமை : ஆசிரியருக்கு

அளவு : 1/8 டெமி (125 செ.மீ று 145 செ.மீ)

அச்சு : கார்த்திகேயன் பிறைவேட் லிமிட்டெட்

வெளியீடு : பூரணம் வெளியீடு

பதிப்பு : தயா பதிப்பகம்

விலை : 250 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


சிறப்புப்பாயிரம் vii - viii

அணிந்துரை

முகவுரை ix - xiii

இயல் - 01 ஆறுமுகநாவலர் வரலாறு : சுருக்கம் 01-13

சூழ்நிலை, பிறப்பும், கல்வியும், பணிகள் - பிரசங்களும் பயனும்(2 - 4), மிஷனரிமார்களின் ஊழியம், கல்வி (4 - 5), நாவலர் இயக்கம் - சைவப்பிரகாச சமாசியம் (5- 7) பதிப்பித்த நூல்கள் (7 - 8), உரைநடை நூல்கள் (8 - 9) உரைநூல்கள் (9), சமூகப்பணி - கஞ்சித்தொட்டித் தருமம், இராமநாதனை அரசியலில் ஈடுபடுத்தல், யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு வேளாண்மைச் சங்கம் அசைவியக்கமாதல் (9 - 10), 11 உரை நூல்கள்: ஓர் ஆய்வு (11 - 13)

இயல் - 02 தமிழ் உரையின் தோற்றமும் வளர்ச்சியும் : ஓர் அறிமுகம். 14 – 36

உரையின் தொன்மை (14), வாய்மொழி வரலாறு (15 - 16), உரையின் வளர்ச்சிப் படிநிலை - அரும்பதவுரை, விளக்க வுரை, உரைக்கு உரை, செய்யுளாள் அமைந்தவுரை, தம் நூலுக்குத் தாமே உரை எழுதல், மறுப்புரை, கண்டன உரை, திருப்பாசுரங்களுக்கு உரை எழுதல், தேவாரங்க ளுக்கு உரை எழுதல், உரையாசிரியர் காலம், பழந்தமிழ் மீட்சி இயக்கம் (16 - 23), உரை வகை (23 - 26).

ஈழநாட்டில் உரையின் தோற்றமும் வளர்ச்சியும் (26 - 36), ஞானப்பிரகாசரின் உரைத்திறன் (28 - 29) கூழங்கைத் தம்பிரான் உரை (29 - 31), சிவசம்புப்புலவரின் உரைத்தி றன் (31 - 33), வித்துவசிரோமணி ந.ச.பொ.பின் (33 - 34), இருபதாம் நூற்றாண்டில் ஈழத்து உரையாசிரியர்கள் (34 - 36).

இயல் - 03 நாவலரின் பல்துறைப் புலமை : பொது நோக்கு 37 - 48, தமிழ்ப்புலமை (37 - 39), இலக்கணப் புலமை (39 - 40),


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட மொழிப் புலமை (40 - 41), கலைநோக்கு (41 - 42), யோகம் (42 - 43), சோதிடம் (43), படிமவியல் (43 - 46), மனையின்பம் (46 - 47).

**இயல் - 04 நாவலரின் பல்துறைப்புலமை : சிறப்பு நோக்கு** (48 - 90)

சைவசமயநெறி (48), பல்நூல் புலமை - திருமுறைகள் தேவாரம், திருமந்திரம் (50 - 53), புராணங்கள் - பெரிய புராணம், திருத்தொண்டர் புராணம், அருணகிரிப் புராணம் (53 - 55) , சைவசமய ஒழுக்க நூல்கள் - நித்திய கருமநெறி, உருத்திராக்க வசிட்டம் (55 - 56) சித்தாந்த நூல்கள், சங்கற்ப நிராகரணம், பதிபசுபாசப்பனுவல் (56 - 57), ஆகம நூல்கள் - சுப்பிரபேதம், காமிகம், காரணாகமம், அஞ்சுமான், சிவதருமோத்திரமம் (57 - 60), வேதப்பொருள் உணர்த்தும் நூல் - சங்கர சங்கிதை, நீலகண்ட பாடியம், கந்தகாலோத்தரம், வாயுசங்கிதை, காசிகாண்டம் (61 - 65), வடமொழிப்புலமை - பஞ்சலக்கணம், சொல்நிலை, முதல், சார்பு, வழிநூல், (65 - 70), சைவவாகமங்களை ஆராய்யும் முறை-1 தோற்றம் உபதேசமுறை, ஆகமம் தோன்றுவதற்கான இருடிகளும் அவர்களின் கோத்திரமும் அதிதேவதைகளும், ஆகம பேதங்கள், ஆகமங்களின் கிரந்த சங்கிதை, சிவாகமங் களின் பொருள் மரபு, சிவாகமங்களின் புறத்தோற்றம், உபாகமங்கள் சிவாகமங்களைக் கேட்டோர் தொகை, வேதசிவாகமங்களுக்கிடையிலான தொடர்புகள் (70 - 77) மாயாவாதிகள் (77 - 78), பரிவார நாயன்மார் (78), சமயிகளின் இலக்கணம் (79), தீக்ஷைவகை (79 - 80), திருப்பணி (81), சோதிடம் (81 - 82), பிராயச்சித்தம் (82), பஞ்சதீர்த்தம் (82), சன்னியாசி (82), வானப்பிரத்தர் (86 - 87), உருத்திராக்க வசிட்டம் (87 - 88), வாணலிங்கம் (88), அநுலோமர் (88 - 90).

**இயல் - 05 நாவலர் உரைநெறி**

அதிகாரத் தோற்றுவாய் (91), அதிகார அடைவு (91 - 93), அரும் பொருள் விளக்கம் (93 - 9 5), தொகை (95 - 97), கலைச் சொல் விளக்கம் தரல் (97 - 98), உவமை (98 - 101), அணியிலக்கணம் (102), இடை, அசை நிலை எச்சம் (99 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

106), உரைமறுப்பு (106 - 107), கருத்துக்களை மறுத்தல் (107 - 108), தம் கருத்தினை எற்றிப் பொருள் சொல்லல் (109 - 110), நுண்ணறிவு தோன்றப் பொருள் கூறல் (111), மரவு வழிப் பொருள் தருதல் (111 - 112), சொற்களை வருவித்தல் (112), சமயக் கோட்பாடு (112 - 114), சித்தாந்தக் கோட்பாடு (114 - 115), நயம் (116 - 121), நடை (121 - 126)

**இயல் - 06 பரிமேலழகரும் நாவலரும் - ஓர் ஒப்பு நோக்கு** (127 - 130)

நாவலரும் அறவொழுக்கமும் ஓர் ஒப்பு நோக்கு (127), திருக்குறளின் பொருள் மரபும் சைவசமயநெறியின் பொருள் மரபும் (127 - 129), பரிமேலழகரின் உரைநெறிகளும் நாவலர் உரை நெறிகளும் (128 - 130).

**இயல் - 07 நாவலர் உரை - ஒரு மதிப்பீடு**

திறனாய்வின் தோற்றம் (131), திறனாய்வின் வகை (131 - 132) இலக்கியத் திறனாய்வாளரின் மதிப்பீடு (132 - 137) ஒப்பீடு (137 - 138), உரைப் பெருமை (138 - 142).

**பின்னிணைப்பு**

1. நாவலர் எடுத்தாண்ட நூல்கள் 143 - 163
2. மேற்கோள் விளங்காப் பாடல்கள் 164 - 168
3. நாவலரின் அருஞ்சொல் விளக்கம் 169 - 171
4. நாவலர் தொகை விரித்தல் 172 - 189
5. நாவலர் உரை அகராதி 210 - 215

**ஆய்வு நூற் பட்டியல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புப்பாயிரம்

## பிள்ளைக்கவி வ. சிவராஜசிங்கம் (B.A.Hons) வழங்கியது

உழுந்தள வாக உவரியைக் கரத்தில்
ஒடுக்கிய கும்பமா முனிபோல்
செழுந்தமிழுடனே சைவசித் தாந்தத்
தெண்கடல் உளத்தடக் கும்சீர்
வளந்திகழ் ஞானா கரனறு முகநா
வலர்மொழிக் காற்றிய பணிகள்
தொழுந்தகு வசன நடையினைக் கையாள்
சோபிதம் சொலற்கரி தாமால்

இலக்கண விளக்கம் தருவதற்கு இலகு
வியல்நடை சைவசித்தாந்தம்
கலக்கறத் தெளித்தற் கேரணமியன்ற
கவினடை கந்தவேள் புராண
நிலப்பொரு ளுணர்த்தற் கேற்றதா மாற்று
நீரொழுக் கினைநிகர் நடையாய்
பலப்பல பொருளின் பான்மைகட்கேற்ப
படர்ந்திரு நடை நளினங்கள்

நாவலர் வசன நடையிலிவ் வாறு
நலவித மாகவே பயின்று
மேவுறு விகற்ப வகைகளில் இலங்கு
விற்பன நயமெலாம் மேற்கோள்
ஓவறக் காட்டி உணர்த்திநா வலர்தம்
உரைவளம் எனும்பெயர்நூலைத்
தாவறப் படைத்து யாவரும் நயக்கத்
தந்தவர் யாவரோ என்னில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறு

சீருறுபே ராதானைப்பல் கலைக்கழக
வளாகத்தில் திகழும்சீர்த்தி
சாருமிந்து நாகரிகத் துறைதனிலே
சிரேட்டவிரி வுரையா ளராய்
ஆர்வமொடு மாணவருக் கறிவு கொளுத்
திடுவதுடன் அளவில்ஞானச்
சீருறுமெய்ப் பனுவல்களின் திட்பநுட்பம்
தேர்ந்திடுநற் திறனாய் வாளன்

வசன நடைகைவந்த வல்லாளர்
படைத்தவுரை வளங்களாய்ந்து
பசிதமி ழுபரபரி மேலழகர்
இவரென்னும் பான்மை மேவ
இசைவுறவொல் பீடுசெய்து நாவலர்தம்
இனிய உரை இயல் தெரித்தார்
வசமுறத்தன் சுவைமொழியால் அறிஞரையீர்த்
திரும்கனக ரத்ன வேளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *சிறப்புப்பாயிரம்*

## கவிஞர். இ. முருகையன் (B.A.,B.Sc) வழங்கியது

*நல்லை நகர் ஆறுமுக நாவலரை ஆர்வமுடன்*
*நயந்தினிது பாராட்டவும்*
*நவையற்ற அன்னவர் சுவைமிக்க நற்புலமை*
*நண்ணியே ஆராயவும்*
*இல்லை இனி வேறொருவர் இவற்கு நிகராகவென*
*எண்ணுமா றுழைக்கும் தொண்டன்,*
*இரா. வை. கனகரத்தினம் என ஈழம் போற்றிட*
*இசை பரந்தியன்ற ஆசான்,*
*பல்கலைகள் தேர்திறன் படைத்தவன், மட்டுவிற்*
*பண்டிதமணிக்கும் அன்பன்,*
*பக்குவம் படைத்தவன், தக்க நுண்ணுணர்வினன்,*
*பாடுபட் டுழைக்கும் சான்றோன்,*
*வல்லதமிழ் உரையாளன், இந்துமத ஞானவான்,*
*வகுத்தமைத் தியற்ற ஈந்தான்*
*மாண்பு மிகு 'நாவலர் உரைத்திறன்' எனப்படும்*
*வடிவான தமிழ் நூலையே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மகாபுருஷர் எனப் போற்றப்படுவர் ஆறுமுகநாவலர். நாவலர் நல்லறிஞர். மகா புருஷர் என்ற பதம் பொருள் பொதிந்தது. செயலில் துறவு என்னும் மகாவாக்கியத்தின் உட்பொருளை உணர்த்தி நிற்பது. நாவலரவர்கள் தமது பணிகளை இந்நோக்குடன் முன்னெடுத்துச் சென்றவர். அவ்வகையில் நாவலரவர்கள் மகாபுருஷர். நாவலரவர்கள் சைவசமயத்தினதும் தமிழ் மொழியினதும் நீர்மையினைத் தமிழ் மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் அவற்றை மீட்டுருவாக்கம் செய்து வைத்தவர். சைவத்தையும் தமிழ் மொழியையும் பிரிக்க முடியாத வகையில் அவற்றின் வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்தவர்.

நாவலரவர்களின் பணிகளுள் சமயம், கல்வி, பிரசாரம், கண்டனம் முதலான துறைகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுட்சில சிறப்பான ஆய்வுகளாக வெளிவந்துள்ளன. ஆனால் நாவலரவர்கள் ஆற்றிய மூலபாடத்திறனாய்வு, உரையாசிரியர், உரைநடை முதலான துறைகள் பற்றிச் சிறப்பாய்வுகள் இதுவரை மேற் கொள்ளபடவில்லை. 1982 ஆம் ஆண்டு நாவலரவர்களின் உரையாசிரியர் பணி பற்றிய ஆய்வினை இந்நூலாசிரியர் மேற்கொண்ட பொழுதும் அவ்வாய்வு முழுமையான திருப்தியை இந்நூலாசிரியருக்குக் கொடுக்கவில்லை. இந்நூலாசிரியருக்கு முன்பாக ஈழநாட்டவரின் உரைநெறி பற்றியோ உரைத்திறன் பற்றியோ எவ்வித ஆய்வுகளும் சரியான வகையில் மேற்கொள்ளப்படவில்லை என்பது இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டியதொன்றே யாகும்.

தமிழ் நாட்டில் நக்கீரர் காலம் தொட்டு இன்றுவரை உரை வளர்ந்து வருகின்றது. ஈழநாட்டிலும் ஆரியச் சர்க்கரவர்த்திகளின் காலம் தொட்டு இன்று வரை உரை வளர்ந்து வருகின்றது. தமிழ்நாட்டில் உரை வளர்வதற்கு ஆசிரியர் மாணவர்களுக்கிடையிலான வினா விடைப் பாங்கான உரையாடல்களும் உரை கூறலும் காரணங்கள் என்பர். ஈழநாட்டில் உரைவளர்வதற்குத் தொழில் முறை சார்ந்த புராணபடன முறையும் ஆசிரியர் மாணவர்களுக்கிடையிலான வினாவிடைப் பாங்கிலான உரையாடலும் காரணங்கள் எனலாம். தமிழ் நாட்டில் எழுதிய அகப்பொருள் உரையே உரைநூல்களுள் காலத்தால் முற்பட்டதென்பர். ஈழநாட்டில் ஞானப்பிரகாச முனிவர் எழுதிய சிவஞான சித்தியார் தமிழ் உரை, சிவ ஞானபோத வடமொழி உரை ஆகிய உரைகள் காலத்தால் முந்திய உரைநூல்களாகக் கருதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப்பிரகாசர் காலம் முதல் இன்றுவரை பல உரையாசிரியர்கள் ஈழநாட்டில் தோன்றியுள்ளனர். ஆயினும் இவ்வுரையாசிரியர்கள் மேற்கொண்ட உரைநெறிகள் பற்றி எவ்விதமான ஆய்வுகளும் மேற் கொள்ளப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். குமார சாமிப் புலவர் எழுதிய தமிழ்ப்புலவர் சரித்திரம் *(19)* சி.கணேசையர் எழுதிய ஈழநாட்டுத் தமிழ் புலவர் வரலாறு *(1938)* பேராசிரியர் வி. செல்வநாயகம் எழுதிய உரைநடை வரலாறு *(195)* மு. கணபதிப் பிள்ளை எழுதுய ஈழத்துத் தமிழ்ச்சுடர் மணிகள் முதலான நூல்கள் ஈழநாட்டு உரையாசிரியர்கள் பற்றிய குறிப்புக்களைத் தருகின்றன. ஆனால், அவை இவ்வுரையாசிரிகளின் திறன் பற்றிய எவ்வித குறிப்புக்களையும் தரவில்லை. ம.பீதாம்பரம் எழுதிய **ஈழநாட்டு உரையாசிரியர்கள்** *(1960)* என்னும் கட்டுரையே இத்துறை பற்றி எழுந்த காலத்தால் முற்பட்ட கட்டுரை யாகும். F. X. C நடராசா எழுதிய **ஈழம் வளர்த்த உரை** *(1960)* என்னும் கட்டுரையும், இத்துறையிலும் அடங்கி நோக்கப்பட வேண்டிய தொன்றே. பீதாம்பரம் எழுதிய கட்டுரையும் உரையாசிரியர் பெயர்களும் அவர்கள் எழுதிய நூல்களும் பற்றிய தொகுப்பாகவுமே அமைந்துள்ளது. இத்தகைய பின்னணி ஈழநாட்டு உரையாசிரியர்களின் பங்களிப்புகளைப் பற்றி ஆராயப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி நிற்கின்றன.

தமிழ் நாட்டில் காலந்தோறும் உரையாசிரியர்கள் தோன்றி உரைகளை ஆக்கிய பொழுதும் அவர்களின் உரைகளை மதிப்பீடு செய்யும் பணி இந்நூற்றாண்டின் நடுக்கூறின் ஆரம்பத்திலேதான் மேற்கொள்ளப்பட்டது. அதன் இறுதிக் காற்பகுதயில் அதன் வளர்ச்சி யின் உயர்நிலையைக் கண்டுள்ளது. மு. அரவிந்தன் எழுதிய **உரையாசிரி யர்கள்** *(1968)* மு. அருணாசலம் எழுதிய **இளம்பூரணார், தமிழ் இலக்கிய வரலாறு** பதின்மூன்றாம் நூற்றாண்டு *(1971)* மு.கோவிந்தசாமி எழுதிய **பரிமேலழகர்** *(1978)* ச.வே.சுப்பிரமணியம் எழுதிய **அடியார்க்கு நல்லார் உனரத்திறன்** *(1976)* இ.சுந்தரமூர்த்தி எழுதிய **பரிமேலழகர் திருக்குறள் உரைத்திறன்** *(1985)* இரா மோகன், ந. சொக்கலிங்கம் ஆகிய இருவரும் இணைந்து எழுதிய **உரைமரபுகள்** *(1988)* தமிழண்ணல் எழுதிய **உரைவிளக்கு** *(1985)* முதலான நூல்கள் இவ்வகையில் குறிப் பிடத்தக்கன.

ஈழநாட்டு உரையாசிரியர்களின் சிறப்புக்களை ஆய்ந்து கூறுவ தற்குத் தக்க ஆய்வாளர்கள் இங்கில்லை என்பது அர்த்தமல்ல. இந் நிலையில் இந்நூலாசிரியரின் இம்முயற்சி மேற் கூறிய கருத்துக்கள் அனைத்தையும் மனங்கொண்டு மேற்கொள்ளப்பட்டதாகும். குறிப்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமேலழகர் உரைத்திறன், அடியார்க்கெல்லார் உரைத்திறன் நூல்களும் அதன் ஆசிரியர்களான பேராசிரியர்கள் இ. சுந்தரமூர்த்தி. ச.வே.சுப்பிரம ணியம் ஆகியோர்களுடன் இத்துறை பற்றி உரையாடிய அநுபவமும் உந்துசத்தியாக அமைந்தன என்பதை நன்றியுடன் நினைவு கூர்ந்து கொள்கின்றேன்.

இவ்வாய்வு நாவலரவர்கள் உரையெழுதிய **சைவசமய நெறியினை அடிப்படை யாகக் கொண்டு "நாவலரின் உரையினை ஆய்வு செய்யும் "நாவலர் உரைத்திறன் ஆய்வு"** என்பதாகும். இது ஏழு இயல்களைக் கொண்டது. **ஆறுமுகநாவலர் வரலாறு:- சுருக்கம், தமிழ் உரையின் தோற்றமும் வளர்ச்சியும், நாவலரின் பல்துறைப்புலமை, நாவலரின் பலதுறைப் புலமை, சிறப்பு நோக்கு, நாவலரின் உரைநெறி, பரிமேல ழகரும் நாவலரும் ஒப்பு நோக்கு, நாவலரின் உரைப்பெருமை** என்பன அவ்வியல்கள் ஆகும்.

நாவலரவர்கள் சைவசமய நெறிக்குப்புத்துரை செய்து வெளிப் படுத்தினார். இது எட்டுப் பதிப்பினைப் (1955) பெற்றுள்ளது. அவ்வகை யில் இஃதோர் மதிப்புக்குரிய நூலாகவே கொள்ளப்படுகின்றது. நாவலரவர்கள் மாத்திரம் இதற்கு உரை எழுதியுள்ளமையால் ஒப்பீட் டாய்வுக்கு இடந்தரவில்லை. ஆயினும் இது குறள் வெண்பாவால் ஆக்கப்பட்டமை யினாலும் நாவலர்கள் திருக்குறளிலும் பரிமேழகரிலும் கொண்டிருந்த ஈடுபாட்டினை மனங்கொண்டும், பரிமேழகரும் நாவலரும் என்ற இயல் ஒப்பாய்வு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

நாவலரவர்களின் உரைத்திறனை அறிந்து கொள்வதற்கு உரைநெறி களை மாத்திரம் அளவு கோலாகக் கொண்டு உதாரணங்களை எடுத்துக் காட்டுவதன் மூலம் அறிந்து கொள்ள முடியாது. அதனால் சைவசமய நெறி உரையினை அடிப்படையாகக் கொண்டு சொல் அடைவுகள் தயாரிக்கப்பட்டு 2200 மேற்பட்ட சொற்கள் கொண்ட **சைவசமய நெறி: நாவலர் உரை அகராதி** இவ்வாய்வின் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள் ளது. அத்துடன் பின்னணிணைப்பாக வரும் **நாவலர் எடுத்தாண்ட மேற்கோள் நூல்கள் விளக்காப்பாடல்கள், நாவலர் அருஞ்சொல் விளக்கம், நாவலர் தொகை விரித்தல்** முதலானவையும் நாவலர்கள் பற்றிய அனைத்துக் கருத்துக்களையும் ஒரே பார்வையில் முழுமையாக நோக்குவதற்குப் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் இப்பின்னிணைப்புக்கள் தலையாய பகுதியென்றே கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில இடங்களில் சொல்விளக்கம் பொருள்விளக்கம் திறன் ஆராய்தல் என்பவற்றின் பொருட்டு ஒரு மேற்கோள் பிறிதோர் இடத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தால் அது கூறியது கூறல் என்பதன் பாற்படும் என யாரும் கூறின் அது பற்றிக் கூறுவதற்கு ஒன்றுமில்லை. ஒரு நூலை அதுவும் உரை நூலைத் திறனாய்வு செய்யும் பொழுது இது தவிர்க்க முடியாததாக அமைந்து விடுவது இயல்பு. இந்த உண்மையைப்புரிந்து கொண்டால் போதுமானது. மேலும் ஒரு நூலாசிரியன் தனியாக ஆய்வாளராக மாத்திரம் இருக்க வேண்டியதில்லை. சமுதாயத்தின் தேவை நோக்கி எதனையும் ஆற்றுப்படுத்துபவனாகவும் இருக்க வேண்டும் என்பதில் இந்நூலாசிரியன் நம்பிக்கை கொண்டவன்.

தமிழ் நாட்டில், நாவலரவர்கள் தமது உரை நூல்கள் யாவற்றையும் வெளியிட்ட பொழுதும், தமிழ் நாட்டு ஆயாவாளர்கள் நாவலரவர்களின் உரையாசிரியர் பணியினையும் ஆராயத்தவறி விட்டனர். ஈழநாட்டில் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. நாவலரவர்களின் வரலாற்றினை ஆராய்ந்தோர் நாவலரவர்களின் இப்பணியினை ஆராயத் தவறிவிட்டனர். இத்தகைய சூழ்நிலையில் இந்நூல் வெளிவருவது சாலப்பொருத்தம் என்பதை விட, இந்நூலுக்குரிய முக்கியத்துவமும் இவ்வாய்வுக்குரிய அவசியமும் நன்கு உணரப்படுமென்று நினைக்கின் றேன். அத்துடன் நாவலரவர்களின் வரலாற்றில் காணப்படும் இடை வெளியின் ஒரு பகுதியை நிரப்பும் என்ற நோக்கமும் இந்நெறி பற்றி இந்நாட்டில் எழும் ஆய்வேடுகளுக்கு ஒரு முன்னோடியாகவும் வழிகாட் டியாகவும் இந்நூல் அமையும் என்ற தன்னம்பிக்கையும் இந்நூலாசிரிய ருக்கு உண்டு. ''உன்னையே நீ அறிவாய்'' என்னும் பொருள் பொதிந்த மகாவாக்கியம் இவ்விடத்தில் நினைவு கூரத்தக்கது

இவ்வாய்வினை மேற்கொள்ளப்பல நூல்களைத் தந்துதவிய பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கட்கும் கலாநிதி ம.தியாகராச அம்மையாருக்கும் முதற்கண் நன்றி கூறிக் கொள்கின்றேன். இத்துறை பற்றிய ஆய்வுக்கு வழிகாட்டியதோடு, தாம் இத்துறை பற்றி எழுதிய பல நூல்களையும் தந்து உதவி புரிந்த பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி அவர்களை (தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்) நன்றியோடு நினைவு கூர்ந்து கொள்கிறேன். அவரது நூலே இந்நூலுக்கு முதன்நூல் எனக்குறிப்பிடலாம். அவரது நூலே இந்நூலுக்கு முதன் நூல் எனக் குறிப்பிடலாம். அவரே இன்று தமிழ் உலகில் இத்துறைபற்றித் துறைதோய்ந்த ஆய்வாளராகக் கருதப்படுபவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைத் தன்னுடைய மாணவ நண்பனாகக் கருதி இந்நூல் பெரிதும் பிழைகள் இன்றி வெளிவருவதற்குப் பெரிதும் துணை நின்று உழைத்தவர்களான பிள்ளைக்கவி சிவராசிங்கம், சி. சிவகுருநாதச் செட்டியார் இந்நூலுக்குச் சிறப்புப்பாயிரம் அளித்தபிள்ளைக்கவி சிவராசசிங்கம், கவிஞர் இ. முருகையன் முதலான பெருந்தகையர்க்கும் எனது உளம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நூல் இவ்வளவுக்குச் சிறப்பாக வெளிவருவதற்கு காரணமாக இருந்த கார்த்திகேயன் கணணி அச்சக உரிமையாளர் ந. குருபரனுக்கும் இந்நிறுவன உறுப்பினராகிய இளைஞர்களுக்கும் குறிப்பாக வி. கிருபாகருக்கும் நன்றி கூறக் கடைப்பட்டவன். அவ் விளைஞர்களின் வளர்ச்சிக்கு எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்நூல் முழுமையாக வெளிவருவதற்குப் பலவகைகளிலும் உதவிய தாயார் வை. சிவகாமிப்பிள்ளைக்கும் மனைவி மீனாவுக்கும் நன்றி பாராட்டாது இருப்பது நன்றல்ல. நன்றிகள்.

முதுநிலை விரிவுரையாளர் **இரா. வை. கனகரத்தினம்**
*(இந்துப்பண்பாடு)*
தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை.
*23 வைகாசி 1995.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - 01

## ஆறுமுகநாவலர் வரலாறு

## ஓர் அறிமுகம்

"கல்லுகள் யாவற்றிலும் அவை உருவாகிய வரலாற்று யுகத்தின் முத்திரை பொறிக்கப் பெற்றிருக்கும். ஆனால், சிறப்புமிக்க ஆக்கங்களில் அம்முத்திரை மிகவும் ஆழமாகப் பதிக்கப் பெற்றிருக்கும்"

ஹென்ரி மற்றிஸே

### சூழ்நிலை

நாவலரவர்கள் வாழ்ந்த காலத்தில் ஆங்கிலேயர்கள் ஈழநாட்டை ஆட்சி செய்தனர். அவர்களின் ஆட்சிக்காலத்தில் ஈழநாடு பல்வேறு துறைகளில் மாற்றங்களைக் கண்டது. அவர்கள் வேற்றுமையில் ஒற்றுமை காணும் பண்புடையவர்களாக விளங்கினர். ஆங்கிலமொழிக்கும் கிறிஸ்துவ சமயத்துக்கும் முதன்மை அளித்த பொழுதும் ஏனைய சமயங்களுக்கும் மதிப்பளித்தனர். கத்தோலிக்க மிஷன் வெஸ்லியன் மிஷன் (1814) அமெரிக்கன் மிஷன் (1816) சேர்ச்சு மிஷன் (1818) முதலான மிஷன்மார்கள் ஊழியத்துக்கு முதன்மை அளித்தனர். இவர்களது ஊழியம் சமயம் சமூகம், கல்வி, சுகாதாரம் முதலான துறைகளாகப் பரந்து காணப்பட்டது. எத்துறை ஊழியத்திலும் சமயப்பிரசாரம் என்னும் அம்சம் மேலோங்கி நின்றது. ஏனைய காலக் கிறிஸ்துவ ஊழியங்களைக் காட்டிலும் இக்கால மிஷனரிமார்களின் ஊழியம் மக்களால் வரவேற்கப் பட்டது. அதற்குத் தமிழ் மக்களிடையே காணப்பட்ட சமூக அமைப்பும், சமய மூடப்பழக்க வழக்கங்களும், போதிய கல்வியறிவின்மையும் பொருளாதாரத்தில் காணப்பட்ட மிகுந்த ஏற்றத்தாழ்வுகளுமே முக்கிய காரணங்கள் எனலாம். தமிழ் மக்களிடத்தில் காணப்பட்ட இம்முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதாகவே மிஷனரிமார்களின் ஊழியம் அமைவதாகக் கூறிக் கொண்டாலும் உண்மையில் எல்லா மிஷனரிமார்களின் ஊழியம் உள்நோக்கம் கொண்டதாக அமைந்திருந்தது. இவ்வுள் நோக்கம் சமயமாற்றமாகவே இருந்தது. இதுவே அவர்களின் ஊழியத்தின் இலட்சியமாகவும் இருந்தது. இவ்விலட்சியத்தை அடைவதற்குப் பிரசங்கம் செய்தல்,துண்டுப் பிரசுரங்களை வெளியிடல், நவீன வசதிகள் கொண்ட பாடசாலைகளை அமைத்தல், பாடத்திட்டங்களை அமைத்தல், ஆங்கில மொழியினைக் கற்றலின் அவசியத்தை வற்புறுத்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் கல்வி வளர்ச்சியில் என்று மில்லாதவாறு அக்கறை காட்டல், பலதரப்பட்ட பாடசாலைகளை அமைத்தல் முதலான முயற்சிகளில் ஈடுபட்டன. மிஷன்கள் யாவும் ஒரு இயக்கமாகச் செயற்பட்டன. அவற்றுக்கு நோக்கங்கள் இருந்தன. அந்த நோக்கத்தை அடைவதற்கு அவை எடுத்துக் கொண்ட முயற்சிகளே மேற்கூறியவையாகும்.

## பிறப்பும் கல்வியும்

ஆறுமுகநாவலர் அவர்கள் சித்திரபானு வருடம் மார்கழி மாதம் 5ம் திகதி புதன்கிழமை (1822 மார்கழி 18) பிறந்தவர். தமது ஆரம்பக் கல்வியை நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயர், நல்லூர் வேலாயுத முதலியார், இருபாலை நெ.சேனாதிராய முதலியார், நல்லூர் ம. சரவணமுத்துப் புலவர் முதலானோர்களிடத்தில் பயின்றார். 1834 ஆம் ஆண்டு ஆவணி மாதம் யாழ்ப்பாணம், வெஸ்லியன் மிஷனில் சேர்ந்து ஆங்கிலக் கல்வி பயின்றார். 1841 ஆம் ஆண்டு அக்கல்லூரியின் தமிழ் ஆசிரியராக நியமனம் பெற்றார்.

## பணிகள்:- பிரசங்கமும் பயனும்

நாவலரவர்கள் இங்கு கடமையாற்றுங் காலத்திலே மிஷனரி இயக்கங்களின் நோக்கங்களையும், அந்நோக்கங்களை அடைவதற்கு அவர்கள் காட்டிய அர்ப்பணத் தன்மைகளையும், அதற்குப் பிரதி உபகாரமாக அவர்களிடம் வேண்டி நிற்பனவற்றையும் நன்கு அறிந்து கொண்டார். கிறிஸ்தவ மிஷனரிமார்களின் ஊழியமும் அதற்காக அவர்கள் வேண்டி நிற்கும் மதமாற்றமும் நாவலரவர்கள் தம்மைச் சைவசமய இயக்கவாதியாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்று சிந்திப்பதற்கு இடம் அளித்தது. 1846 ஆம் ஆண்டு தை மாதம் தமது வீட்டின் திண்ணையிலே திண்ணைப் பள்ளியை ஆரம்பித்து மாணவர்களுக்குப் பாடம் சொல்லி வந்தமையே அதன் முதற்படியாக அமைந்தது எனலாம். அடுத்து வண்ணார் பண்ணையிலே, மகௌதாரிய மகாப்பிரபுவாகிய வைத்திலிங்கச் செட்டியாராற் கட்டுவிக்கப்பட்ட வைத்தீசுவரன் கோயில் வசந்த மண்டபத்திலே கலியப்தம் 4949 க்கும், சாலிவாகன சகாப்தம் 1770 க்கும் சமமாகிய பிலவ ங்க வருடம் மார்கழி மாதம் 18 ஆம் தேதி (31-மார்கழி 1847) சுக்கிரவாரமும் சுவாதி நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்திலே சைவமென்னும் செஞ்சாலி வளரும் பொருட்டு பிரசங்கித்தமையும் பின்னர் சுக்கிர வாரம் தோறும் பிரசங்கிப்பித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தமையும்[1] தன்னைத் தனிமனித இயக்கமாக மாற்றிக் கொள்ளு வதற்கான பிறிதொரு முயற்சியாகவும், 'தனிமரம் தோப்பாகாது' என்ப தற்கிணங்க, வெகுசனக் கோட்பாட்டினை மனங்கொண்டு மக்களைத் தம்மோடு இணைத்துக் கொள்ளும் வகையிலும் இப்பிரசங்கத்தை ஆற்றிவந்தார். அவர் பிரசங்கத்தின் பொருட்டுத் தெரிந்தெடுத்த விடயங்க ளாவன, கடவுள் வாழ்த்து, உருத்திராக்ஷதாரணம், சிவபத்தி, வேதாகமங் கள் திருவிழா, சிவலிங்கோபாசனை, யாக்கைநிலையாமை, சிவதீக்ஷ மகளிரொழுக்கம், தருமம், பிக்ஷயிடுதல், கல்வி கற்பித்தல், கடவு ளொருவருண்டெனல், பசுக்காத்தல், அறிவொழுக்கங்களிற் சிறந் தோரைத் தழுவி நடத்தல், பிரபஞ்சமாயை, பேதைமை, கொல்லாமை, நீதசிக்ஷ வியபிசாரம், கள்ளுண்ணல், சிவத்திரவியங்களைக் கவர்தல் முதலியவையாகும்.

இப்பிரபஞ்சம் மூலம் சாமானியமக்கள் உண்மைகளைப் புரிந்து கொண்டு அவற்றைக் கடைப்பிடித்துச் சமய ஒழுக்கமுடையவர்களாகவும் பண்புடையவர்களாகவும் விளங்கவேண்டுமென்று விரும்பியதோடு, மக்கள் எக்கருத்துக்களையும் ஒப்பியல் உணர்வோடு நோக்கப் பழகுதல் வேண்டுமென்று கருதினார். பொதுசன இயக்கமொன்று மக்களைத் தமது நோக்கிற்கு அமைய ஆற்றுப்படுத்தற்கு எடுத்துக் கொள்ளும் பொதுவான உத்திமுறைகளுள் பிரசங்கமும் ஒன்றெனலாம்.நாவலரவர்களும் அவ்வகையிலே பிரசங்கத்தைப் பயன்படுத்தினார். பிறச்சமயிகளுக்குள் ளேயன்றி நமது சைவசமயிகளுக்குள்ளே நெடுங்கால மில்லாதிருந்த பிரசங்கத்தை ஆறுமுகநாவலர் செய்யத் தொடங்கிய பின்னர் பிராமணர் வித்துவான்கள் பிரபுக்கள் என்னும் எத்திறத்தாரும் மிக்க ஊக்கத் தோடும் அன்போடும் ஒவ்வொரு கிழமையினும் வருவ ராயினார்கள்''[3] என்னும் கூற்று நாவலரவர்கள் வெகுசனத் தொடர்பு ஊடகங்களிளொன் றாகப் பிரசங்கத்தைப் பயன்படுத்திப் பொதுமக்களைச் சிந்திக்க வைத்த தோடு அவர்கள் மத்தியில் என்று மில்லாத வகையில் ஒரு அசைவியக் கத்தையும் தோற்றுவித்தார் எனவும் கொள்ள முடிகின்றது. வெகுசனம், என்னும் கருத்தோட்டம் வளரும் அளவிற்கு ஒப்பவே, ஒரு சமுதாயத் திலே சனநாயகம் வளர்ச்சியுறுகிறது''[4] என்னும் கூற்று இங்கு மனங்

---

1. கனகரத்தினம், வை.,. 1994, வே.கனகரத்தின உபாத்தியாரின் ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுக நாவலர் சரித்திரன், ஏழாலை, புவனேஸ்வரி அம்மன் வெளியீடு, ப.18
2. மேலது நூல், ப. 21
3. மேலது நூல், ப. 20
4. கைலாசபதி, க., 1986, ஈழத்து இலக்கிய முன்னோடிகள், மக்கள் வெளியீடு, சென்னை, ப. 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளத்தக்கது. நாவலரவர்களும் தனது சமய சமூக சிந்தனை யையும் இயக்கத்தையும் இத்தகைய கருத்தோட்டத்திலே இயக்கரீதியாக வளர்க்க முற்பட்டார்.

### மிஷனரிகளின் ஊழியம்

மிஷனரிமார்கள் தமது ஊழியத்தின் இலட்சியங்களை விரைவாக நிறைவேற்றும் பொருட்டு அச்சியந்திரசாலைகளை நிறுவிச் சைவசம யத்துக்கு எதிரான துண்டுப் பிரசுரங்களையும் நூல்களையும் அச்சிட்டு வெளிப்படுத்தியதோடு, தமது சமயத்தின் வளர்ச்சிக்குக் கருவியாகிய நூல்களையும் வெளியிட்டுவந்தனர். குருட்டு வழி *(1844)* மும்மூர்த்தி இலட்சணம் *(1844)* முதலான சைவ சமயத்துக்கு எதிரான கண்டன நூல்களையும், போதகர் இலக்கணம், போதகர் ஒழுக்கம் வேதப் பொருட்கண்ணாடி *(1898)* முதலான கருவி நூல்களையும் கிறிஸ்தவ சமயத்தின் வளர்ச்சியின் பொருட்டு வெளியிட்டு வந்தனர். உதயதாரகை *(1841)* கத்தோலிக்கப்பாதுகாவலன் *(1870)* முதலான பொது சனத் தொடர்புச் சாதனங்களையும் தமது சமய வளர்ச்சிக்காகப் பயன்படுத் தினர். மிகவும் விவேகத்துடன் வெகுசன நோக்கைத் தம்பால் திரும்பு வதில் ஏனைய சமயவாதிகளைக் காட்டிலும் கிறிஸ்தவ மிஷனரிமார் சிறப்பாகச் செயல்பட்டனர்.

### கல்வி

கிறிஸ்தவ மிஷனரிமார்கள் தம் பாடசாலைகளினது அமைப்பி னைச் சுதேசியபாடசாலைகள், தமிழ் ஆங்கிலப்பாடசாலைகள், விடுதிப்பாட சாலைகள், பெண்கள் பாடசாலைகள், உயர்கல்விப் பாடசாலைகள் எனத் தரம்பிரித்து அவற்றைக் கிராமம், நகர்ப்புறம், பட்டணம் ஆகிய பகுதிகளில் நிறுவிக் கல்வி ஊழியம் புரிந்து வந்தனர். அமெரிக்கமிஷன் அமைத்த பாடசாலைகளுள் வட்டுக்கோட்டை செமினரி, *(1822)* உடுவில் மகளிர் கல்லூரி *(1824)* என்பன குறிப்பிடத் தக்கன, சேர்ச்சு மிஷன் அமைத்த பாடசாலைகளுள் சுண்டுக்குளி மகளிர் பாடசாலையும் புனித பரியோவான் பாடசாலையும் முதன்மை மிக்கன. வெஸ்லியன் மிஷன் அமைத்த பாடசாலைகளுள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி *(1834)* வேம்படி மகளிர் கல்லூரி *(1842)* என்பன சிறப்பானவை. போதனை முறைகள், பாடத்திட்டங்கள், பாடசாலை அமைப்புகள் யாவும் சுதேசியக்கல்விப் பாரம்பரியத்தினின்று முற்றிலும் வேறுபட்ட னவாகக் காணப்பட்டன. கல்வி மரபில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டிருந்த மையும் ''கல்வி வெகுசனங்களுக்குக்கே'' என்ற கிறிஸ்தவக் கோட்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும், தமிழ் மக்களை, யாழ்ப்பாணத்து வைதிகப் பாரம்பரியக் கட்டுக் கோப்புக்களை உடைத்துக் கொண்டு கிறிஸ்தவ மிஷனரிமார்களின் பள்ளிகளில் கல்வி பயிலத் தூண்டிற்று. கத்தோலிக்க மிஷனரிமார்களின் ஊழியங்களைக் காட்டிலும் 19ஆம் நூற்றாண்டின் கிறிஸ்தவ மிஷனரி மார்களின் ஊழியம் தமிழ் மக்களின் சிந்தனையில் புதிய மாற்றங்களை உருவாக்கின. இம்மாற்றம் விவேகத்துடன் கூடியதாக அமைந்திருந்தது. என்றுமில்லாத அளவிற்கு உத்வேக முடையனவாக இருந்தது. மக்கள் தமக்கென ஆளுமையுண்டென்பதை நன்குணர்ந்தனர். தம்மைத் தாம் புரிந்து கொண்டனர். இத்தகைய நிகழ்ச்சி தமிழ் மக்கள் வாழ்வியலில் ஒரு புதிய அத்தியாயம் என்று கொள்ளல் வேண்டும்.

**நாவலர் இயக்கம்**

கிறிஸ்தவ மிஷனரிமார்களின் ஊழியத்தினை நாவலரவர்கள் போற்றியபோதும் அவ்வூழியம் உள்நோக்கம் கொண்டதென்பதை உடனிருந்து அறிந்திருந்தார். இத்தன்மை வாய்ந்த கிறிஸ்தவ ஊழியம் தமிழ் மக்களுக்கு அவசியமில்லையெனக் கருதினர். இதனால் நாவல ரவர்கள் கிறிஸ்தவ ஊழியங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கினார். பாரம்பரியக் கல்வி முறையைப் பெரிதும் மாற்றியமைக்க முயன்றார். அதனை ஆங்கிலக் கல்வி முறைக்கமைய மாற்றினார். கீலக வருடம் ஆவணி மாதம் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலே ''சைவப்பிரகாச வித்தியாசாலை'' என்னும் பெயர் கொடுத்து ஒரு பாடசாலையை நிறுவினார். பாடசாலை அமைப்பு, போதனா முறை முதலானவற்றில் மாற்றங்களைக் கொண்டு வந்தார். பாடசா லைப்பிள்ளைகளின் பாடநூல் வெளியீட்டின் பொருட்டும், மிஷனரி மார்கள் சைவசமயிகள் பால் தொடுக்கும் சைவதூஷணங்களுக் கெதி ராகப் பிரதிகண்டனங்கள் செய்தற் பொருட்டும், பழைய-புதிய நூல்களை அச்சிட்டுவதன் மூலம் பொதுமக்கள் அந்நூல்களைப் பற்றிய அறி வைப் பெறுதற் பொருட்டும் சென்னைபட்டணத்துக்குச் சென்று அச்சி யந்திரத்தை வாங்கி வந்தார். அதுமுதலில் (1850) நல்லூரிலும் பின்னர் சாதாரண ஞூதை மாதத்தில்(1851) வண்ணார்பண்ணைக்கும் மாற்றப்பட் டது. நாவலரவர்களின் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் நாவலர வர்களின் சமகால நண்பர்களும் ஒருங்கிணைந்து 1854 ஆண்டு **ஸ்ரீ வேதாகம மோத்த சைவப் பிரகாச சமாசியம்** என்னும் ஒரு சங்கத்தை நிறுவினர். இச்சங்கத்தின் இயக்கத்துக்கு நாவலரவர்கள் அமைத்த பாடசா லைகளும் அச்சுயந்திரசாலையும் சிறப்பாக உதவின. இவ்வியக்கத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவராக ஆறுமுகநாவலரவர்கள் விளங்கினர். இச்சபையின் இலட்சியம் நோக்கம் செயற்பாடு முதலாவனஷ்றை விளக்கி நாவலரவர்கள் 1854 ஆம் ஆண்டு ஒரு விக்கியாபணத்தை வெளியிட்டார்[5]. அவற்றைச் சுருக்கமாக நோக்கின்

**இலட்சியம்:-** இறைவனின் திருவருட்பேற்றுக்காக எதைச் செய்யும் பொழுதும் ஏற்படும் துன்பங்களை முழுமனதுடன் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

**நோக்கம்:-** சிவனே பரமபதி, சிவனுக்கு மேலான தெய்வமில்லை. தேவாரதிருவாசகமே மேலான நூல்
வேதம் பொது நூல், ஆகமம் சிறப்பு நூல்.

**செயற்பாடு:-** சைவ ஒழுக்கலாறுகளைத் தவறாது கடைப்பிடித்தல் வேண்டும். சமாஜம் வெளியிடும் நூல்களை வாங்கிப் படித்தல் வேண்டும். கிறிஸ்தவ கண்டனம் செய்தல் வேண்டும்.

இவ் **விக்கியாபனத்தில் 'சமாஜம்'** வெளியிடும் நூல்களை வாங்கிப்படித்தல் வேண்டும்'' என்னும் தொடர் மிக முக்கியமானதொன்றாகும். ஈழத்துத் தமிழ்க் கல்விப் பாரம்பரியம் திண்ணைப்பள்ளி வழிவந்தது. அது குறிப்பிட்ட உயர் குழாத்துக்கே சொந்தமாக இருந்தது. அதுவே ''உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே'' என்னும் இயல்புரிமைக்கு வித்திட்டது. இந்நிலையி லும் நாவலரவர்கள் சைவசமயிகளைப் பார்த்து சமாஜம் வெளியிடும் நூல்களை வாங்கிப்படித்தல் வேண்டும் என்று வற்புறுத்துவது நாவலரவர்களின் பரந்த உயர்ந்த நோக்கத்தை வெளிப் படுத்தும். கல்வியானது ஒரு சிறு குழுவிடம் இராது பொதுமக்களை நோக்கிச் செல்ல வேண்டும். அதன் மூலம் அவர்கள் பயன்பெறும் பொழுதேதான் உண்மையான தேசிய உணர்வும் பண்பாடும் பிரதிபலிக்கும். என்பதை நாவலரவர்கள் நன்கறிந்திருந்தார் போலும். இதனாலேதான் தாம் கோப்பாய் (1871) புலோலி (1872) முதலான இடங்களில் பாடசாலை களைக் கட்டியதோடு அமையாது தனது நண்பர்களையும் மாணவர்களையும் ஊர்கள்தோறும் பாடசாலைகளை அமைக்குமாறு பணித்து வந்தார். இதனால் இணுவில், கோண்டாவில், மானிப்பாய், கந்தர்மடம், வேலணை முதலான இடங்களில் புதிய சைவப்பிரகாச வித்தியாசாலைகள் ஆரம்பமாயின. எனவே இக்காலப்பகுதியில்

---

5. இந்து தருமம், 1993/94, பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்க வெளியீடு, ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ நிறுவனங்களும் சைவ நிறுவனங்களும் வெகுசனக் கோட்பாட்டினை உணர்ந்து செயற் பட்டமையால் தமிழ் மக்களிடத்தில் முதற்தடவையாக ஒரு தீவிரமான அசைவியக்கம் ஏற்பட்டு அவர்களின் பொருளாதாரம், கல்வி, அறிவியல் முதலான துறைகளில் முன்னேற்றம் அடைவதற்குக் காரணமாக அமைந்திற்று.

நாவலரவர்கள் தனது இயக்கத்தின் வளர்ச்சியின் பொருட்டும் பொதுமக்கள் நன்மைகருதியும் யாழ்ப்பாணத்திலும் *(1849)* சென்னை பட்டணத்திலும் *(1858)* அமைத்த வித்தியாநு பாலயந்திரசாலைகளில் இருந்தும் மற்றும் சென்னைப்பட்டணத்திலுள்ள வர்த்தமான தாங்கிணீ சாகை யச்சுக்கூடம், தத்துவபோதினி அச்சுக் கூடம், வாணி நிகேதன அச்சுக் கூடம், முத்தமிழ் விளக்க அச்சுக்கூடம் முதலான அச்சுக் கூடத்திலிருந்தும் பலநூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தினார். நாவலரவர்களின் இத்தகைய முயற்சிகள் தமிழ் இலக்கிய வரலாற்றில் மூலபாடத்திறனாய்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதோடு அமையாது, பிரபுக்கள், ஜமீன்தார்கள் சிற்றரசர்கள், மடாதிபதிகள், கணக்காயர்கள் மட்டத்தில் வழங்கிய இலக்கியம் ஓரளவு பொது மக்கள் மட்டத்திற்கும் பரவ வழி பிறந்தது[6].

நாவலரர்களால் வெளிப்படுத்தப்பட்ட நூல்களை மூன்று வகையாக நோக்கலாம். அவை வருமாறு

(அ) பதிப்பித்த நூல்கள்

(ஆ) உரை நடை நூல்கள்

(இ) உரை நூல்கள்

## (ஆ) பதிப்பித்த நூல்கள்

சங்கர நமச்சிவாயப்புலவராற் செய்யப்பட்டு, சிவஞான முனிவரால் திருத்தப்பட்ட நன்னூல் விருத்தியுரை, விரோகிருது ஷுஐப்பசி மாதமும் *(1851)* திருப்போரூர் சிதம்பரசுவாமி கள் கொலை மறுத்தல் என்னும் நூலுக்குச் செய்த உரையினை விரோகி ருது ஷுசித்திரமாதமும் *(1854)* புட்பவிதி என்னும் நூலினை சாதாரண ஷுமாசி மாதமும் *(1851)* யாழ்ப்பாணம் வித்தியா நூபாலன யந்திரசாலையில் அச்சிட்டு வெளிப்படுத்தினார்.

சூடாமணி மூலமும் அதன் உரையினையும் சௌமிய ஷுஆடி மாதமும் *(1849)* சௌந்தரியலகரி மூலமும் எல்லப்பநாவலர் உரையையும் சரஸ்வதிவிலாச அச்சுக் கூட்டத்திலே சௌமிய ஷுகார்த்திகை

6. கைலாசபதி, க.1986, ஈழத்து இலக்கிய முன்னோடிகள், ப.16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதமும் (1849) திருக்கோவையார் மூலமும் நச்சினார்க்கினியர் உரையினையும் சென்னைபட்டணம் முத்தமிழ் விளக்க அச்சுக்கூடத்தில், ரௌத்திரி ஞூஐப்பசி மாதமும்,(1860) திருக்குறள் பரிமேலழகர் உரையினை, சென்னப்பட்டணம் வாணி நிகே தனவச்சுக் கூடத்திலே துன்மதி ஞூ வைகாசி மாதமும் (1861) கந்தபுராண மூலத்தினைச் சென்னைபட்டணம் வர்த்தமான தரங்கிணீ சாகையச்சுக் கூடத்திற் சுக்கில ஞூசித்திரை மாதமும் (1869) பதிப்பித்து வெளிப்படுத்தினார். தொல்காப்பியம் சேனாவரையர் உரையினை விபவ ஞூபுரட்டாதிமாதம், சென்னபட்டணம் ஊ புஷ்பரதச் செட்டியாரின் கலாரத்நாகர வச்சுக் கூடத்திலும், உவமான சங்கிரரகமும் இரத்தினச் சுருக்கமும் என்னும் நூலினை அக்ஷய ஞூஐப்பசி (1866) மாதம் சென்னை பட்டணம் கலாரத்நாகரம் அச்சுக் கூடத்திலும் பதினொராம் திருமுறையினைச் சுக்கில ஞூவைகாசி மாதம் (1869) சென்னைபட்டணம் வர்த்தமான தரங்கிணீசாகைக் கூடத்திலும் தருக்க சங்கிரகத்தையும் அதனுரையாகிய அன்னபட்டியத்தையும் துன்மதி ஞூவைகாசி மாதம் (1861) சென்னபட்டணம் வாணிகேதன அச்சுக்கூடத்திலும் அச்சிட்டு வெளிப்படுத்தினார்.சிதம்பர மும்மணிக் கோவையைப் பிரபவ ஞூஆனி மாதத்திலும்,(1867) அருணகிரிநாதர் திருவகுப்பினை பிரபவ ஞூஐப்பசி மாதத்திலும் (1867) நால்வர் நான் மணி மாலையின் நால்வர் நான்மணிமாலை, விருத்தாசலம் பெரிய நாகியம்மை நெடுங்கழி நெடிலாசிரிய விருத்தம், பெரிய நாயகியம்மை கலித்துறை, பழமலைநாதர் பிச்சாடண நவமணிமாலை என்னும் நான்கு நூல்களின் தொகுப்பு) இரண்டாம் பதிப்பினை ஆங்கீரச ஞூபங்குனி மாதமும், (1873) பட்டணத்துப் பிள்ளையார் திருப்பாடற்றிரட்டினை (2ம்பதிப்பு) ஆங்கீரச ஞூபங்குனி மாதமும் (1873) அச்சிட்டு வெளிப்படுத்தினார்.

## (ஆ) உரைநடைநூல்கள்

நாவலரவர்கள் எழுதிய வசன நூல்கள் கண்டனநூல்கள் துண்டுப் பிரசுரங்கள் யாவற்றையும் இப்பகுப்பினுள் அடக்கி நோக்கலாம்.

நாவலரவர்கள் பாலபாடம் முதற் புத்தகம் (1881) பால பாடம் இரண்டாம் புத்தகம் (1852) பாலபாடம் மூன்றாம் புத்தகம் (பிரபவ ஞூ ஆனிமாதமும் 1864) பெரிய புராண வசனம். (பரிதாபி ஞூசித்திரை மாதம்-1852) திருவிளையாடற் புராண வசனம் (1895) கந்தபுராண வசனம் அசுரகாண்டம்வரை (துன்மதி ஞூஆவனி மாதம்) சிவாலயதரிசனவிதி (துன்மதிகு ஆனிமாதம் 1861) சைவ வினாவிடை முதலாம் புத்தகம் (1870) சைவ வினாவிடை- இரண்டாம் புத்தகம் (யுவ ஞூஐப்பசி மாதம் 1875)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலான சமய நூல்களையும் சிதம்பரமான்மியம், இலக்கணச் சுருக்கம் (யுவ ஞூ கார்த்திகை மாதம் 1874) இலக்கண வினாவிடை (யுவ ஞூ புரட்டாதி மாதம் 1875) **இலங்கைப் பூமிசாத்திரம்** (1874) முதலான இலக்கணம், லௌகிகம் சார்ந்த நூல்களையும், நல்லூர் கந்தசுவாமி கோயில் முதலாம்பத்திரிகை (யுவ ஞூ ஆனி மாதம்) 1875) நல்லூர்க் கந்த சுவாமி கோயில் - இரண்டாம் பத்திரிகை (யுவ ஞூ ஆவனி மாதம்-1875) மித்தியாவாத நிரசரனம் (யுவஞூ தைமாதம் 1875) யாழ்ப்பாணச் சமய நிலை (ஆங்கீரச ஞூ ஐப்பசி மாதம் 1874) போலியருட்பா மறுப்பு (சுக் கில ஞூ வைகாசி மாதம் 1869) முதலான சுதேசிய கண்டன நூல்களையும் சைவசமயி (1878) அநாசாரம் (1878) முதலான துண்டுப்பிரசுரங்களையும் சுப்பிரபோதம் (1853) வச்சிர தண்டம் (1853) சைவதூஷணபரிகாரம் ஆனந்த ஞூ(வைகாசி மாதம் 1854) முதலான கிறிஸ்தவ கண்டன நூல்களையும் நாவலரவர்களால் எழுதப்பெற்ற உரைநடை நூல்கள் என்னும் வகையில் அடக்கலாம்.

## (இ) உரைநூல்கள்

திருமுருகாற்றுப்படைக்கு நச்சினார்க்கினியர் உரையினைத் தழுவிப் புத்துரை செய்து பிரமாதீச ஞூ சித்திரை மாதத்திலும் (1853) திருச் செந்தினிரோட்டகயகம வந்தாதிக்குப் புத்துரை செய்து சாதாரண ஞூ பங்குனி மாதத்திலும், (1851) ஆத்திசூடி, கொன்றைவேந்தன் (1852) ஆகிய நூல்களுக்கு உரைஎழுதி பரிதாபி வருடத்திலும், (1852) யாழ்ப் பாணம் வித்தியாநுபாலன யந்திரசாலையில் பதிப்பித்து வெளிப்படுத் தினார். சைவசமயநெறி மூலமும் புத்துரையும் என்னும் நூலினை விப வஞூ புரட்டாதி மாதமும் (1868) கோயிற்புராணம் மூலமும் புத்துரையும் என்னும் நூலினைப் பிரபவ ஞூதைமாதமும் (1868) வாக்குண்டான் நல்வழி, நன்நெறி ஆகிய நூல்களுக்கு உரைஎழுதி பிரபவ ஞூஆனிமாத மும் சென்னைபட்டணத்தில் பதிப்பித்து வெளியிட்டார். இவ்வகை நூல்கள் இம் மூன்றாம் பகுப்பினுள் அடங்குவனவாகும்.

## சமூகப்பணி

நாவலரவர்களது கஞ்சித்தொட்டித் தருமமும் (1877) துவைனம் துரையின் மேல் நாவலரவர்கள் தொடுத்த முறையீட்டு விண்ணப்பங்க ளும் குறிப்பாகச் சேர் வில்லியம் கிறேகறி (Sir william Gregory)1872 இல் யாழ்ப்பாணம் வருகை தந்த பொழுது கொடுத்த முறையீட்டு விண்ணப் பத்தையும் சேர் ஜேமஸ் லோங்டன் 1878 ஞூ தை மாதம் யாழ்ப்பாணம் வருகை தந்த பொழுது கொடுக்க முனைந்த முறையீட்டு விண்ணப்பத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையும், சட்ட நிர்வாக சபை அங்கத்தவரான சேர் முத்துக்கு மாரசுவாமியுடன் கொண்டிருந்த தொடர்பும், பொன்னம்பலம் இராமநாதன் அவர்களை அரசியலில் ஈடுபடுத்தியமையும், (1879) யாழ்ப்பாணம்-மட்டக்களப்பு வேளாண்மைச் சங்கம் நிறுவியமையும் நாவலரவர்களும் அவரது இயக்கமும் பொதுமக்கள் வாழ்வியல் அம்சங்களில் கொண்டிருந்த ஈடுபாட்டையும் சமூக நோக்கையும் நன்கு பிரதிபலித்துக் காட்டும். நாவலரவர்களின் இம் முயற்சிகளில் யாரும் களங்கம் கற்பிக்க முடியாது. நாவலரவர்களின் இம்முயற்சிகள் சமூக நோக்கம் கொண்டவையே. நாவலரவர்களது சமூக இயக்கத்தினதும் கிறிஸ்தவ மிசனரிமாரின் இயக்கத்தினதும் உந்துசக்தியே தமிழ் மக்களிடத்தில் உத்வேகமான அசைவியக்கத்தைத் தோற்றுவித்தது. அதுவே 19ஆம் நூற்றாண்டின் கடைக் கூற்றிலும் 20 ஆம் நூற்றாண்டின் முதலிரு கால்நூற் றாண்டிலும் தமிழ் மக்கள் ஈழநாட்டின் பல்வேறு துறைகளிலும் தமது முத்திரையைப் பதிக்கக் காரணமாக இருந்தது எனலாம்.

ஆயினும், நாவலரவர்களால் ஏற்படுத்தப்பட்ட அசைவியக்கம் எல்லாச் சத்திகளையும் தம்முள் அடக்கும் வகையில் வீறு கொண்டு செயற்பட்டது என்பதையும் கருத்திற் கொள்ளுதல் அவசியமானதாகும். அந்த வகையில் நாவலரவர்கள் கடந்த நூற்றாண்டின் மகா புருஷர் என்பதை யாரும் மறுப்பது கடினம். மகாபுருஷர் அல்லது பெரியார் என்னும் சொல்லை அசாதாரணமாகவோ மேலெழுந்தவாரியாகவோ குறிப்பிட முடியாது. ஒருவரின் ஆசாரங்களினாலோ குலமரபு வழியாகவோ உயர்நிலை காரணமாகவோ இந்நிலையைப் பெற்று விட முடியாது. ஒருவரது சிந்தனையும் செயலும் உண்மைத்தன்மை கொண்டதாகச் சமுதாயத்தினது நன்மைகருதிச் செயற்படல் வேண்டும். அச்செயலில் துறவும் அர்ப்பணத் தன்மையும் பிரதிபலிக்க வேண்டும். செயலில் தூய்மையும் அர்பணத்தையும் கொண்டு சமுதாய நலன்கருதி யொருவர் செயற்படுவாரானால் அத்தகையோரை மகான் என்றோ மகாபுருஷர் என்றோ பெரியார் என்றோ தயங்காமல் கூறலாம், போற்றலாம். நாவலரவர்களின் வரலாற்றினையும் அவர்களின் சமய சமூக நோக்கினையும் செயற்பாட்டினையும் நோக்கும்பொழுது நாவலரவர்களை இதற்கோர் எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II

## உரைநூல்கள் ஓர் ஆய்வு

இதுவரை நாவலரவர்களுக்கிருந்த பல்துறைப் புலமைகளுள் சில நோக்கப்பட்டது. நாவலரவர்கள் ஆத்திசூடி *(1852)* கொன்றைவேந்தன் *(1852)* வாக்குண்டாம் நல்வழி *(1852)* நன்னெறி *(1854)* திருச்செந்தினிரோட்டகயமக வந்தாதி *(1851)* திரு முருகாற்றுப்படை *(1853)* சைவசமய நெறி *(1868)* மருதூரந்தாதி கோயிற்புராணம் நன்னூல் முதலான நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். நாவலரவர்கள் நைடதம் சிவதரு மோத்திரம் ஆகிய நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார் என சிலவரலாற்று ஆசிரியர் குறிப்பிடுவர். வேறுசிலர் இந்நூல்களுக்கு நாவலர் உரை எழுதினாரா? எனக் கேள்வி எழுப்புவர். அகச் சான்றுகள் மூலமும் புறச்சான்றுகள் மூலமும் நாவலரவர்கள் இந்நூல்களுக்கு உரைஎழுதியுள்ளார் என அறிய முடிகின்றது. நைடதத்துக்கு உரை எழுதிய மேலைப் புலோலி நா.கதிரைவேற்பிள்ளை அவர்கள் ''சைவசித்தாந்த தீபகராய், செந்தமிழ்ப் பரிபாலனராய் சிவபுண்ணியபேறு உடையவராய் விளங்கிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலராம் நம்பெருந்தகையார் ஒருரையியற்றியுள்ளார். அவ்வுரை அன்னார்போல வித்தியாசாலை தாபித்தல் முதலிய சிவபுண் ணியங்களைச் செய்து சைவசித்தாந்த பரிபாலனஞ் செய்யாநிற்கும் யாழ்ப்பாணத்து மகாவித்துவான் ஸ்ரீமத் சுவாமிநாத பண்டிதரவர்களால் வெளிப்பட விருக்கிறதென்று அறிகின்றோம்''[7] எனக் குறிப்பிட்டிருப்பதையும், வே. கதைரத்தின உபாத்தியாயர் தனது நூலின் அநுபந்தத்தில் நாவலர்கள் அச்சிற்பதிப்பிக்கும் பொருட்டு எழுதி முடித்தவை என்னும் நூல் பட்டியலில் ஒன்றாக நடதவுரையையும் குறிப்பிடுவதையும்[8] ஒப்புநோக்கும் பொழுது சுவாமிநாதர் பண்டிதர் பதிப்பித்த நைடதம் மூலமும் உரையும் என்னும் நூல் நாவலர்களால் எழுதப்பட்டது என்பது புலப்படும்.

தம்பு கைலாசபிள்ளை சிவதருமோத்திரத்துக்கு நாவலர்கள் உரை செய்தார் என்று குறிப்பிடுவார்[9] நாவலரவர்கள் தாம் எழுதிய சைவ தூஷணபரிகாரம் *(1854)* என்னும் நூலில் வரும் சில பாடல்களுக்கு உரை எழுதியுள்ளமை இங்கு மனங் கொள்ளத் தக்கதாகும். சைவசமய நெறிக்கு உரை கூற வந்த நாவலரவர்கள் ஆசௌசத்திற் பூசிக்கும் முறைமையை

7. கதிரைவேற்பிள்ளை, நா, *1924*, நைதம் மூலமும் விருத்தியுரையும், வித்தியரத்நாகர அச்சுக் கூடம், சென்னை.
8. கனகரத்தினம், வை, *1994*, வே. கனகரத்தின, உபாத்தியாரின் ஸ்ரீலஸ்ரீ அறுமுகநாவலர் சரித்திரம் ஏழாலை புவனேஸ்வரி அம்மன் கோவில் வெளியீடு
9. கைலாசபிள்ளை, *1930*, ஆறுமுகநாவலர் சரித்திரமம், ப. 69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்குகையில், ''சனனா, மரணா சௌசத்தின் பொழுதுசிவபூசை செய்வது திடபத்தியினாலே பாசத்தாரோடு கூடாது தனியே பாகஞ் செய்து புசித்துக் கொண்டிருப்பினென்க. இதனைச் சிவதரு மோத்திரவு ரையிற் காண்க''[31] எனக் குறிப்பிடுவதையும் ஒப்பிட்டு நோக்கும் பொழுது நாவலரவர்கள் சிவதருமோத்திரத்திற்கு ஓர் உரை எழுதியிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரவேண்டி உள்ளது. அந்நூல் வெளிவந்ததா வெளிவரவில்லையா என்பது பிறிதோர் ஆய்வு. நாவலர்கள் 'உபநிட தவுரை' என்னும் நூலொன்றினைப் பதிப்பித்துள்ளார். இற்றைவரையும் இந்நூல் நாவலரவர்களின் பெயராலேயே வழக்குற்று வருகின்றது. இதன் மூலநூல் ஆசிரியர் பற்றி நாவலரவர்கள் ஏதும் குறிப்பிட வில்லை. எனவே இதன் மூல நூலாசிரியரும் உரையாசிரியரும் நாவலர வர்களாகவே இருக்க வேண்டும் எனத் துணிந்து கூறுவதற்கு அதன் உரைப் போக்கு மொழிநடை முதலான விடயங்கள் தடையாக அமை வது போல் தோன்றுகின்றது. உபநிடதவுரையின் இரண்டாம் பதிப்பு ஸ்ரீமுகவூ வைகாசி மாதம் *(1873)* சென்னபட்டணம் வித்தியாநு பாலனயந்திரசாலையில் இருந்து வெளிவந்துள்ளது. இவ்வுரை நூல் பற்றி ஆய்வது ஆய்வாளர் கடனாகும்.

நாவலரவர்கள் திருமுகாற்றுப்படைக்கு நச்சினார்க்கினியர் உரையைத் தழுவிப் புத்துரை செய்துள்ளார். சைவசமய நெறிக்கு அகலவுரையாகப் புத்துரையொன்றினை முதன் முதலாக ஆக்கியுள்ளார். கோயிற் புராணத்துக்கும் புத்துரை செய்துள்ளார். ஆத்திசூடி, கொன்றை வேந்தன் ஆகிய இரு நூல்களுக்கும் பதவுரை செய்துள்ளார். வாக்குண் டான், நல்வழி, நன்னெறி ஆகிய நூல்களுக்கு பதவுரையும் கருத்துரையும் வழங்கியுள்ளார். திருச்செந்தினிரோட்டகயமக வந்தாதிக்கும், மருதூரந் தாதிக்கும் பதவுரை செய்துள்ளார். நன்னூலுக்குக் காண்டிகை உரை செய்துள்ளார். மேற்கூறிய பத்து நூல்களுக்கும் ஒரே தன்மை உடையதாக நாவலரவர்கள் உரை வழங்கவில்லை. இந்நூல்களின் உரைப் போக் கினை மனங்கொண்டு பின்வரும் அடிப்படையில் அவற்றை வகுத்து நோக்கலாம்.

(அ) அகலவுரை செய்த நூல்கள்
(ஆ) பதவுரை செய்த நூல்கள்
(இ) பதவுரையும் கருத்துரையும் செய்த நூல்கள்
(ஈ) காண்டிகை உரை செய்தல் நூல்

இப்பகுப்பினை விரித்து நோக்கின்

---

*10.* ஆறுமுகநாவலர், 1955, சைவசமயநெறிமூலமும் புத்துரையும், ப. 183

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) ***அகலவுரை செய்த நூல்கள்***

சைவசமயநெறி, திருமுருகாற்றுப்படை ஆகிய இரு நூல்களை யும் இதனுள் அடக்கலாம்.

(2) ***பதவுரை செய்த நூல்கள்***

ஆத்திசூடி, கொன்றைவேந்தன் திருச்செந்தினிரோட்டயமக, வந்தாதி, கோயிற்புராணம் ஆகிய நூல்கள் இவ்வகையினுள் அடங்கும்.

(3) ***பதவுரையும் கருத்துரையும் செய்த நூல்கள்***

வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி ஆகிய நூல்கள் இப்பகுப் பினில் அடங்குவனவாகும்.

(4) ***காண்டிகை உரை செய்த நூல்***

நன்னூல் இவ்வகையில் அடங்கும்.

நாவலரவர்கள் எழுதிய மேற்படி உரை நூல்களைக் கொண்டு நாவலரவர்களின் உரைத்திறனை ஆய்ந்து அறிய வேண்டுமெனினும் நாவலரவர்கள் அகலவுரை செய்த நூலான சைவசமயநெறி என்னும் நூலை அடிப்படையாகக் கொண்டு நாவலரவர்களின் உரை நெறியினை யும் உரைத்திறனையும் நோக்குவது பயனுடையதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - 02

# தமிழ் உரையின் தோற்றமும் வளர்ச்சியும். ஓர் அறிமுகம்.

## உரையின் தொன்மை

தமிழ் இலக்கிய வளர்ச்சியின் படிநிலைகளிலொன்றாக அமைவது உரையாகும். கவிதையில் உள்ளுறைந்து நிற்கும் பண்பாட்டுக் கோலங்களை நயம்பட வெளிப்படுத்துவது உரையாகும். அது அதன் இயல்பாய் அமைந்த நடையால் மேலும் விளக்கம் பெறுகின்றது. உரைநடை என்பது உரையும் நடையும் தம்முள் பேதமற்று இனைந்து செல்வதாகும். உலகிலுள்ள எந்த மொழியிலாயினும் இலக்கியம் தோன்றும் பொழுது அது கவிதை வடிவிலே முதற் தோன்றுகின்றது.[1] கவிதையைத் தொடர்ந்து உரைநடை வெளிவருகின்றது. எனவே தான் பாட்டிலிருந்து முளைத்த கிளைதான் உரை நடை என்றனர்.[2]

தமிழில் உரைநூல்கள் தோன்றுவதற்கு முன்பாகச் சிலப்பதிகாரம் படனஞ் செய்யும் முறையில் இருந்து வந்தது. நூலைக் கற்க விரும்புவோர் அதற்கேற்பத் தம்மைத் தேர்ச்சிப்படுத்திக்கொள்வது ஒரு பொதுவான அம்சமாக விளங்கிற்று. இக்கருத்தினை ''உரையின்றிச் சூத்திரந்தானே பொருள் நிகழ்ந்த காலமும் உண்டென்பதாம்'' என்றும் உதாரணங்காட்டல் வேண்டாமையை உணர்ந்து உரைநடந்த காலமும் உடையவாகும் முற்காலத்து நூல்களென்பது கருத்து'' என்றும் பேராசிரியர் தொல்காப்பியம்- பொருளதிகாரம் மரபியலில் விளக்கி உரைப்பது இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும்.[3]

## வாய்மொழி வரலாறு

ஆரம்பகாலத்தில் ஆசிரியர்கள் திண்ணைப் பள்ளிகளிலும் தனியார் பள்ளிகளிலும் உரைவிளக்கம் செய்து வந்தனர். இவ்வாசிரியர்கள் சொல்லிய உரைகள் சுருதி வழிப்பட்டு, வாழையடி வாழையாகக் கருத்து வளமும் உரைவிளக்கமும் பெற்று ஏட்டில் எழுதப்பட்டன.[4] சங்க

---

1. செல்வநாயகம், வி. 1957, தமிழ் உரைநடைவரலாறு, சாரதாவிலாஸ், கும்பகோணம்,ப. 1
2. மேலது நூல் ப. 1
3. தொல்காப்பியம், மரபியல், பேராசிரியர் உரை, பக். 98-101
4. மோகன்,இரா.சொக்கலிங்கம்,ந.,1988,உரைமரபுகள், மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை. ப.12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் எழுந்த இறையனாரகப்பொருளுக்கு நக்கீரர் எழுதிய உரை காலந்தோறும் அவர் மாணவபரம்பரையினரால் பாடம் சொல்லப்பட்டு வந்தமையைப் பின்வரும் குறிப்பின் மூலம் அறிந்து கொள்ள முடி கின்றது.[5]

''மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம் மகனார் கீரங்கொற்றனார்க்கு உரைத்தார்; அவர் தேனூர்கிழார்க்கு ரைத்தார்; அவர் படியங்கொற்றனார்க்குரைத்தார்; அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சு வனார்க்குரைத்தார்; அவர் மணலூர் ஆசிரியர் புளியங்காய்ப் பெருஞ் சேர்த்தனார்க்குரைத்தார்; அவர் செல்லூராசிரியர் ஆண்டைப் பெருங்குமாரனார்க்குரைத்தார், அவர் திருக்குன்றத்தாசிரியர்க்குரைத்தார்; அவர் மாதவனனார் இளநாகக் குரைத்தார்; அவர் முசிறியாசிரியர் நீலகண் டனார்க் குரைத்தார்.''

நக்கீரனார் காலந்தொடங்கி நீலகண்டனார் காலம் வரையும் இந்நூல் உரைவிளக்கம் பெற்றுவந்துள்ளது. பின்னர் இந்நூல் 8ம் நூற்றாண்டிலே உரை நடை வடிவம் பெற்று ஏட்டிலே இடம் பெற்றது. இதனாலேதான் தமிழ் உரை நூல்களின் தோற்றத்தின் வரலாற்றிலே முதலிடம் பெற்று விளங்குவது இறையனார் அகப்பொருள் உரையாகும் என்றனர்.[6] இவ்வுரைகளில் பெரும்பாலனவை ஆசிரியர் மாணவர்கட் குப் பாடம் சொல்லும் வகையில் அமைந்தனவாகும். ஆசிரியர் மாணவர் களை வினாவுதல் அதற்கு அவர்கள் விடையிறுத்தல் மாணவர்கள் ஆசிரியர்களை வினாவு தல் அதற்கு அவர்கள் விடையிறுத்தல் என்னும் வினா விடைப்பாங்கில் அது அமைந்திருந்தது. பாடம் கூறும் முறை இங்ஙனம் கேள்வி வாயிலாக வந்ததொன்றை ஏட்டுவடிவில் அமைக்கும் பொழுது வினாக்களும் விடைகளும் பேச்சுவடிவில் இருந்தவாறே எழுத்து வடிவிலும் அமைதல் உண்டு. இங்ஙனம் வாய்மொழி உரையாட ல்கள் காலப்போக்கில் அதேவடிவில் எழுத்து வடிவம் பெற்றன.[7] இவ் வாசிரியர்கள் பாடத்தில் சொல்லிய உரைகளே அவர்கள் எழுதிய உரை களாம் என்பர்.[8] இறையனார் அகப்பொருள் உரை சேனாவரையர் தொல் காப்பியத்துக்கு எழுதியவுரை, பேராசிரியரின் திருக்கோவையார் உரை முதலான உரைநூல்கள் மாணவர்களுக்குப் பாடம் கூறும் வகையில் வினாவிடையாக அமைந் தனவாகும். என்னை எனின் 'என்னுதலிற்றோ

5. செல்வநாயகம், வி., 1957, தமிழ் உரைநடைவரலாறு, ப.12
6. மோகன், இரா, சொக்கலிங்கம், 1988, உரைமரபுகள், ப. 12
7. மேலது நூல், பக் 12-13
8. மேலது நூல், ப. 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனின்' 'என்ன பெயர்த்தோ எனின்', 'வந்தவழி கண்டு கொள்க'. 'வல்லார் வாய்க் கேட்டுணர்க'; 'உதாரணம் முன்னர் காட்டுதும்' 'அற்றன்று' 'நன்று கடாயினாய்' 'அறியாது கடாயினாய்', 'என்று கூறுவாரும் உளர் முதலான தொடர்களும் இவைபோன்று உரையாசிரியர்களால் விளக்கிச் செல்லும் தொடர்களும் மேற்கூறிய வகையில் அமைவன.[9]

**உரையின் வளர்ச்சிப் படிநிலை** :-

உரையின் வளர்ச்சியானது படிமுறையாகவே வளர்ந்து சென்றது. ஆரம்பத்தில் **அரும்பதங்களுக்கு உரைக்குறிப்பு எழுதுவதே** அதன் ஆரம்பப்படியாக இருந்தது. சிலப்பதிகாரத்துக்கு முதலில் எழுந்த அரும்பதவுரையே உரைவளர்ச்சியின் முதற்படி நிலையாகும். அரும்பதக் குறிப்புக்கள் மெல்லமெல்ல விரிவடைந்து **விளக்கவுரைகளாயின**[10] காலந்தோறும் உரைக்குறிப்புக்கள் ஆய்வு தெளிவு விளக்கம் முதலான வற்றால் விருத்தியுற்று வளர்ச்சியின் இறுதி நிலையை அடைந்தன. இவ்வகையில் பேராசிரியர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், மயிலைநாதர், சங்கரநமச்சிவாயர், சிவஞான முனிவர், நாவலர் முதலான உரையாசிரியர்களால் எழுதப்பெற்ற சிறந்த உரைகள் காலத்தை வென்று உரையின் தனித்துவத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. உரை நூல்கள் தனிநூல்களாக நிலைபெற்ற பொழுது அவற்றின் சிறப்பு நோக்கியும் அவற்றின் சிறப்பைப் பொதுமக்கள் விளங்கிக் கொள்ளும் வகையிலும் இவ்வுரைகளுக்கு **உரைநூல்கள் தோன்றின.** இவை உரைக்கு உரையாகவும் **உரைக்குச் செய்யுளாகவும்** அமைந்தன. 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமேனிகாரி இரத்தினக்கவிராயர், பரிமேலழகரின் திருக்குறள் உரையை விளக்கும் வகையில் நுண்பொருள் மாலை என்னும் நூலை எழுதினார். இவரைப் பின்பற்றி பிற்காலத்தில் சரவணப்பெருமாள் ஐயர் *(1869)* முருகேச முதலியார் *(1885)* அரசன் சன்முகனார் முதலானோர்கள் பரிமேலழகர் உரைக்கு உரைவிளக்கம் செய்துள்ளனர்.

உரைநடையில் மட்டுமின்றிச் **செய்யுள் வடிவிலும் உரைகள் தோன்றியுள்ளன.** எல்லாவற்றையும் செய்யுளில் எழுதி மனப்பாடம் செய்து கல்விகற்ற காலமாதலால் அவ்வுரைநூல் வரவேற்கப்பட்டன.

> ''ஒரு செய்யுள் நூலுக்கு வசனத்தில் உரை இயற்றுவதோடு செய்யுள் உருவத்திலேயே உரை இயற்றுவதும் உண்டு. இது வடமொழியில் பெருவழக்கு. தமிழ் நூல்களிலும் சிவஞான போதத்திற்குரிய உதாரண வெண்பாக்களும் உரை நிலையிலே உள்ளன.''

9. மேலது நூல், ப.14 10. மேலது நூல், ப.-15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் உ.வே.சாமிநாதை ஐயரின் கூற்று இங்கு உளங் கொள்ளத் தக்கதாகும்.[11] "சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்களாலாயது. அதன் ஆசிரியரான மெய்கண்டார் அதன் பொருள் மரபினை 84 வெண் பாக்களால் உரைவிளக்கம் செய்துள்ளார். சிவஞானசித்தியார் ஒருவகை யில் சிவஞானபோதத்தின் கருத்துக்களை விருத்தப்பாக்களாப் விருத்து ரைக்கும் நூலே ஆகும். குருஞான ஞான சம்பந்தர் சிவஞான சித்தியார் நூல்மரபினை ஞானவரண விளக்கம் என்னும் பெயரில் பாடியுள்ளார். சேக்கிழார் பெரிய புராணமும் ஒருவகையில் தேவாரப் பாசுரங்களின் பொருள்மரபு தத்துவம் முதலானவற்றைப் பெரிதும் செய்யுள்களால் உரைக்கும் பாங்குடையது. 15 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டிப் புலவர் நன்னூலுக்கு விருத்தாப்பாவில் உரை எழுதியுள்ளார்.[12]

காலப் போக்கில் வட நூலாரைப் பின்பற்றிப் புலவரொருவர் தம் **நூலுக்குத் தாமே உரையெழுதும் மரபு** தோன்றிற்று "வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்வார்" எனப் பிரயோக விவேகம் கூறுவது அவதானிக்கத்தக்கது. இவ்வகையில் ஐயனாரிதனார் இயற்றிய புறப் பொருள் வெண்பாமாலையே தமிழ் மொழியில் முதன் முதலில் நூலாசி ரியர் தாமே தமது நூலுக்கு உரை எழுதப்பெற்ற நூலாக விளங்குகின்றது. பின்னர் தண்டியலங்கார ஆசிரியர் (12ம் நூற்) பல அணிகளுக்கு உதார ணச் செய்யுட்களையும் நாற்கவிராச நம்பி (16ம் நூற்) அகப்பொருள் இலக்கணம் என்னும் நூலை இயற்றித் தாமே உரையும் எழுதியுள்ளனர். இலக்கணக் கொத்து இயற்றிய சுவாமிநாத தேசியரும் தொன்னூல் விளக்கம் எழுதிய வீரமாமுனிவரும் தமது நூல்களுக்குத் தாமே உரை எழுதி உள்ளனர்.[13]

மூலநூல் ஆசிரியர்கள் தம் நூல்களுக்குத் தாமே உரை எழுதுவதற் குப் பின்வரும் காரணத்தைக் குறிப்பிடுவர்[14]

> "ஒரு நூலுக்குப் பல உரைகள் தோன்றியும் அந்நூலின் கருத்து நன்கு விளங்காமல் இருந்த நிலையைக் கண்ட புலவர்கள் தம் நூலுக்குத் தாமே உரை இயற்றினர். நூலாசிரியர் தம் காலத்தி லேயே தாம் இயற்றிய நூல்கள் தவறாக உரைக்கப் படுவதைக் கண்டு நூலாசிரியர்களே தம் நூலுக்கு உரையும் இயற்றினர்".

---

11. உலகத்தமிழாராய்ச்சி மன்றவெளியீடு,1981, ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு - கருத்தரங்கு ஆய்வுக் கூட்டுரைகள், மதுரை,ப.205
12. மேலது நூல், ப. 206
13. மேலது நூல், பக். 207 - 208
14. அரவிந்தன்; மு.வை., 1968 உரையாசிரியர்கள், மாணிக்கவாசகர் பதிப்பகம், சிதம்பரம்,ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைகளின் வளர்ச்சியில் பிறிதோர் வளர்ச்சியாக **மறுப்புரை களும் கண்டன உரைகளும்** அமைகின்றன. உரையாசிரியர் தனக்கு முன் அந்நூலுக்கு உரைகண்டோரின் கருத்துக்களை மறுத்துரைப்பது மரபு, புதிய உரைகள் தோன்றுவதற்கு அடிப்படையான காரணங்களுள் இதுவுமொன்று, தமிழ் உரை வளத்திற்கும் புதிய போக்கிற்கும் இஃது மொரு காரணம். ஆனால் கண்டனத்துக்காகவோ மறுத்துரைத் தலுத்தலுக்காகவோ தனிநூல் தோன்றுதல் வரலாற்றுச் சம்பவமாகவே கொள்ளுதல் வேண்டும். அவ்வகையில் அமைந்தனவே வைத்தியலிங்க தேசிகர் இயற்றிய இலக்கணவிளக்கம் என்னும் நூலும் சிவஞான முனிவரின் இலக்கண விளக்கச் சூறாவெளி என்னும் நூலுமாகும்.

19ஆம் நூற்றாண்டில் மிஷனரிமார்களின் வருகையால், உரையும் உரைநடையும் பிரிக்க முடியாதவாறு இயைந்து வருவது என்ற நிலை மாறி, உரை, **உரைநடை** என்னும் வகையில் வளர்ச்சி பெறவாயிற்று. புராணபடன முறையில் இருந்து வந்த இதிகாசங்களும் புராணங்களும் வசன நடையில் எழுதப் பெறலாயின. சங்க இலக்கியங்கள் இதற்குப் புறநடையாக அமைவில்லை. இவற்றுக்கு முன்னோடியாக விளங்கிய வர்கள் ஈழத்து அறிஞர்களான **ஆறுமுகநாவலர்களும்** வட்டுக்கோட்டை **நா.சி. கந்தையா** அவர்களும் ஆவர். சிறந்த வசன நடையைத் தமிழ் மொழிக்கு ஆக்கி அளித்தமையினால் நாவலரவர்கள் வசன நடை யின் தந்தை என்றும் வசனநடை கைவந்த வல்லாளர் என்றும் தமிழ் இலக்கிய வரலாறு போற்றும். சங்கநூல்களை வசனநடையில் எழுதி பாமர மக்களுக்கு உபயோகமாகும் பொருட்டு அளித்தவர் நா.சி. கந்தையா பிள்ளை அவர்கள் எனவும் பாராட்டுவர் இலக்கிய வரலாற்று ஆசிரி யர்கள்[15]

சங்க இலக்கியங்கள் 'காப்பியங்கள்' சிற்றிலக்கியங்கள் புராணங் கள் முதலானவற்றின் பொருள் அமைதிகளை விளங்கிக் கொள்ளும் வகையில் பதவுரை, பொழிப்புரை மேற்கோள் விளக்கவுரை முதலான உரைநெறிகளால் அவை விரிந்து வளர்ந்துள்ளன. **திருமுறைகளோ திருப்பாசுரங்களோ பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை அத்தகைய உரைநெறிகளால் விளக்கப்பெறாது இருந்து** வந்தன. ''அருட்புலவர்கள் இயற்றிய பத்திப் பனுவல்களைப் பன்முறை ஓதி உணர்ந்து இன்புற வேண்டுமேயன்றி அவற்றுக்கு உரை எழுதல் கூடாது'' என்ற கொள்கை சமய உலகில் நிலைத்து ஊன்றிய கொள்கையாக இருந்து வந்தது.

---

15. உலகத்தமிழாராய்ச்சி வெளியீடு, 1981 ஐ.உ.த.மாநாடு, கருத்தரங்கு - ஆய்வுக் கட்டுரைகள் ,ப. 208

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் 11ஆம் நூற்றாண்டில் **திருப்பாசுரங்களுக்கு உரைகள்** எழுதும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இராமாசநுசர் இப்பணியினை ஆரம் பித்து வைத்தார் என்பர். ஆயினும், வைணவப் பெரியோர் சமய உரை களை ''கால்கொம்பு சுழி ஏறாமல்'' எழுதி வைத்தனர்.[16] அதனால் ஆழ் வார்களின் பாடல்கள் பல்லாயிரம் படிகளைக் கண்டன. ஆயினும் நாயன் மார்களினதும் மெய்யடியார்களினதும் தோத்திரங்களுக்கு சைவர்களால் ''அருட்பாடல்களுக்குச் சின்னாள் பல்பிணிச் சிற்றறிவினராகிய மானிடர் எப்படி உரை எழுதுவது'' என்னும் தயக்கம் இத்திருமுறைகளுக்கு உரை கள் எழுதுதற்கு தடையாக இருந்தது. ஆயினும் பிறமத தாக்கமும் பொருள் உணர்ந்து ஓதிப்பயன் பெற வேண்டும் என்னும் பேரார்வமும் சைவப் பெரியோரிடையே மேலோங்கி நின்றதனால் **திருமுறைகளுக்கு பல உரைகள்** பெருகின. மணிவாசகர் ''சொல்லிய பாட்டின் பொரு ளுணர்ந்து சொல்வாய்'' என்று அறிவுறித்தியுள்ளமை இங்கு நினைவு கூரத்தக்கதாகும். இந்நூல்களுக்குப் அவற்றின் பொருளுணர்ந்து சொல்ல வல்லரால் உரை எழுதப்படும் பொழுதே, அந்நூல்காட்டும் ஆன்மீக உணர்வின் வெளிப்பாடுகளையும் அவற்றின் தத்துவங்களையும் நயங்க ளையும் அறிந்து போற்றுவதற்கு வாய்ப்பாய் அமையும். கீழைத்தேச இலக்கியச் சிறப்பைக் கூறவந்த எம்.எஸ். பூரணம்பிள்ளை அவர்கள்.[17]

> ''கீழைநாட்டு இலக்கியங்களுக்கு தனியான சிறப்புண்டு. அவற்றை உரைகளின் உதவியில்லாமல் எளிதில் கற்க முடி யாது. உரைவல்லார் ஒருவரின் உதவியாலேயே அவற்றின் நயப்பொரு ட்களையும் நுண் பொருளையும் உலகம் உணர்ந்து இன்புற முடியும்''

என்று குறிப்பிடுவது மேற் கூறிய கருத்துக்களோடு ஒப்ப நோக்கத் தக்கதாகும்.

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் திருமுறைகளுக்கு உரைகள் எழுதும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட பொழுதும் அவற்றுள் திருவாசகத்துக்கு உரை எழுதலாமா? என்ற வினா இருபதாம் நூற்றாண் டின் நடுப்பகுதிவரை இருந்து வந்தது. இந்நூற்றாண்டில் மறைமலையடி கள் திருவாசகத்துக்கு உரை எழுத முயன்ற பொழுது பல கண்டனங்கள் தோன்றின. இக்கண்டனங்களைப் பொருட்படுத்தாது திருவாசகத்தின் முதல் நான்கு பகுதிக்கும் உரை கண்டார் அடிகளார். அவர் காட்டிய வழியினைத் தொடர்ந்து தமிழ் நாட்டிலும் ஈழநாட்டிலும் இருந்து சைவர் தமிழ் அறிஞர்கள் திருவாசகத்துக்கு உரை கண்டனர். ஈழபாட்டில்

16. மேலது நூல் ,ப.209 17. மேலது நூல், .209

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிமணி அருளம்பலவனார், நவநீதகிருஷ்ண பாரதியார் ஆகியோரும் தமிழ் நாட்டில் கா.சுப்பிரமணியபிள்ளை பண்டிதமணி கதிரேசன் செட்டியார் போன்றோரும் திருவாசத்துக்கு உரை கண்டோரில் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சோழர்காலம் பொற்காலம். அரசியல் நிர்வாகத்துறைகளில் அமைதியும் பொருளாதாரத்தில் வளர்ச்சியும் கண்டிருந்தது. அதன் பொருளியல் வளர்ச்சிக்கு ஏற்ப கலைகளும் வளர்ந்தன. தமிழ் இலக்கியம் உயர் எல்லையை அடைந்தது. பெருங்காப்பியங்களும் சிறு காப்பியங்களும் சிற்றிலக்கியங்களும் புராணங்களும் பெருவளர்ச்சி பெற்றன. அவற்றோடு இயைந்து உரை என்னும் புதிய துறையும் வளர்ச்சியுற்றது. இதன் வளர்ச்சிக்குரிய சூழ்நிலையைப் பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்கள்[18]

> ''சோழப்பெருமன்னர் ஆட்சி மிகச் சிறப்புற்று விளங்கிய இக்கால த்திலே சைவசித்தாந்தம் விசிஷ்ட்டாத் வைதம் முதலிய தத்துவக் கொள்கைகள் நாட்டிலே பரவ ஆரம்பித்தன. அவை முதன் முதலாகச் செய்யுள் வடிவத்தில் அமைந்த நூல்களிலேயே வெளிவரலாயின. அந்நூல்களிற் காணப்படும் கருத்துக்களை மக்களுக்குத் தெளிவாக விளக்கும் பொருட்டு அவற்றுக்கு உரைகள் வகுக்கப்படலாயின. தத்துவக் கொள்கைகளைத் தருக்க முறைப்படி விளக்க வேண்டியிருந்ததனாலே தமிழ் உரைநடை ஒரு புதுவழியில் விருத்தியடையலாயிற்று''

எனக் குறிப்பிடுவது இங்கு அவதானிக்கத்தக்கது. உரை இலக்கிய வரலாற்றின் ஒரு பகுதியாக அமைந்த பொழுதும் அஃதொரு தனியான துறையாகக் காலந்தோறும் வளர்ச்சி கண்டது. இதன் சிறப்பான வளர்ச்சி பற்றிக் கூறவந்தோர், **கி.பி.10 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 17ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலப்பகுதி தமிழ் உரைநடை வரலாற்றில் உரையாசிரியர்காலம்** என்பர்[19]. சிலர் இக்காலப் பகுதியை **தமிழ் உரை நடையின் பொற்காலம்**[20] என்பர்.

உரையாசிரியர் தமிழ் இலக்கியத்தில் உரை என்னும் புதிய மரபினைத் தொடக்கி வைத்தனர். இப்புதிய தொடக்கத்தைத் தமிழ் இலக்கிய ஆசிரியர்கள் **பழந்தமிழ் மீட்சிஇயக்கம்** (RETURN TO CLASSICISM) என அழைப்பர். இவ்வியக்கம் தோன்றியமைக்குப் பின்வரும் சூழ்நிலையே காரணமாகும் எனப் பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்கள் குறிப்பிடுவார்கள்.[21]

---

18. செல்வநாயகம், வி., 1957, தமிழ் உரைநடை வரலாறு, ப 20
19. மேலது நூல், ப. 40
20. Kamlzvelebil, The Smile of Murugan on Tamil literature of south India, P.248
21. செல்வநாயகம், வி., உரைநடை வரலாறு, ப. 41

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சோழப் பெருமன்னர் காலம் தமிழ்நாட்டில் வடமொழிக்குச் செல்வாக்கு அதிகமாக நிலவிய காலமாகும். அக்காலத்தில் எழுந்த நூல்களுட் பெரும்பாலானவற்றின் கண் வடமொழிச் சொற்கள், காவிய மரபுகள், அணிமரபுகள் முதலியன இடம் பெறலாயின. இங்ஙனம் வடமொழித் தொடர்பால் தமிழிலக் கியம் மாற்றங் களுட்'' சில, அவற்றிக்குச் சிறப்பினைக் கொடுத் திருந்த போதும் தீமையையும் விளைக்கக்கூடிய சில பண்புக ளும் அவற்றின் கண்புகத் தொடங்கின. அத்திய பண்புகளால் தமிழ் இலக்கிய வளர்ச்சி பலவகையாலும் தடைப்படும் என்பதை அறிந்த கல்வியாளர்கள் அத்தீகமைகளை நீக்குதற் பொருட்டுச் செய்த முயற்சிகளுள் ஒன்றுதான் பண்டை நூல்களு க்கு உரை செய்தமை. போற்றுதற்குரிய பல சிறப்புடைய பண் புகள் சங்க நூல்களின் உள. அவற்றுக்கு இலக்கணமாக அமை ந்த தொல்காப்பியத்தில் அவை தெளிவாகக்காட்டப்பட்டுள் ளன. அப்பண்புகளை அக்காலத்துப் புலவர்கள் கைவிடா மல் வந்தமையாலே தான் சங்க காலத்துக்குப் பின்பும் சிறப்புடைய இலக்கியங்கள் பல தோன்றின. பண்டைய இலக்கியங்களிலே தெளிவு, ஆடம்பரமின்றி ஒன்றை நேராகக் கூறல், சுருங்கிய சொல்லால் விரிந்த பொருளைக் குறித்தல், குறிப்பாற் பொரு ளைச் சுட்டுதல் இன்னோரன்ன அரிய பண்புகள் சங்க நூல்களில் எங்கும் பரவிக்கிடத்தலைக் காணலாம். இத்தகைய பண்புகள் சோழப் பெரு மன்னர் காலத்திற் கைவிடப்பட அவற்றுக்குப் பதிலாக, பொருளை அலங்காரமாகவும் ஆடம்பரமாகவும் வேண்டாத அளவுக்கு விரிவாகவும் அதாவது சொற் பெருக்கமு டையதாகவும் கூறுதல் வழக்காறாக வரத்தொடங்கியது. இதை அறிந்த கல்வியறிவாளர்கள் அப்போக்கினைத் தடுத்தற் பொருட் டுப் பண்டை இலக்கியங்களின் சிறப்பினை ஆராய்ந்து கூறத் தொடங்கினர். இம்முயற்சியின் பயனாக எழுந்தது தான் அக் கால உரைநடை நூல்கள்.''

எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்கள் இம்மீட்சி இயக்கம் பற்றி பின்வருமாறு குறிப்பிடுவது அவதானிக்கத் தக்கது[22]

''சங்ககாலத்தமிழ் வழக்கு நின்று வெகுகாலமாகிவிட்டது இடைக் காலத்தில் தமிழ் பிறந்து வடமொழிச் சொற்களும் வடமொழிக் காவிய மரபுகளும் தமிழிற்குடிபுகுந்தன. ஆனால்

22. வையாபுரிப்பிள்ளை,சு., தமிழ்ச்சுடர் மணிகள், பக். 191-192

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றோடு சில தீயதன்மைகளும் புகுந்து விட்டன. சுருக்கம், நேர்மை என்ற இயல்புகள் இரண்டும் ஒழிந்து போயின; அலங்காரங்களும் ஆடம்பரங்களும் தலையோங்கி விட்டன. இதனால் தமிழ்க் கவிஞர்களின் புதுவது இயற்றும் ஆற்றல் தடைப்பட்டுப் போயிற்று. அக்காலக் கல்வியாளர் சிலர் இந் நிலைமைக்கு வருந்தினர். சங்கத் தமிழின் மீதும் அதன் நன் முறையைக் கைப்பற்றிய பெருநூல்களின் மீதும் பொது மக்கள் பற்றுக் கொண்டு கற்கும்படி செய்ய வேண்டுமென்று எண்ணினர். அவற்றின் நல்லியல்புகள் தமிழில் மீண்டும் தழைக்க வேண்டு மென்று கருதினர். இந்த நோக்கங்களைக் கொண்டு கல்வியில் தலை சிறந்தோர் சிலர் உழைத்தனர். **சங்கத் தமிழுக்கு மீட்சி இயக்கம் நிகழ்வதாயிற்று**. இம் மீட்சி இயக்கத்துக்கு அறிகுறியாகச் சங்க இலக்கியங்களுக்கும் அவற்றோடொத்த பெருமையுடைய குறள் போன்ற பெருநூல்களுக்கும் செவ்விய உரைகள் எழுதப்பட்டன. ஒரு வலுவான இலக்கிய இயக்கத்தின் விளைவாகவே தோன்றிய, இந்த இயக்கம் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிச் சுமார் மூன்று நூற்றாண்டுகள் வரை தமிழ் இலக்கிய உலகில் சத்தியுடன் இயங்கியது என்பார்.''

இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினாக்கினியர், பரிமேலழகர், அடியார்க்கு நால்லார் ஆகியோர் மீட்சி இயக்கத் ததைத் தோற்றுவித்தோர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். இதனாலேயே தமிழ் உரைநடை மிகச் சிறப்பாக வளர்ச்சியுற்றகாலம் இதுவே எனப் போற்றுவர்.

நல்ல படைப்புக்கள் காலத்தை வென்று வாழும் என்பது பொது விதி. அவ்வகையில் தமிழ் இலக்கிய வரலாற்றில் காலந்தோறும் உரை நூல் இலக்கியம் தோன்றி வளர்ந்துள்ளது. அது தொகுத்தல், வகுத்தல், தெளிதல், நீக்குதல், ஆராய்தல், மதிப்பீடு என்னும் அமைப்பிற்குள் உட்படுத்தப்பட்டு வளர்ச்சி உற்றது. இளம்பூரணர் தொல்காப்பியத்துக்கு, முதலில் உரை எழுதினர், ஆயினும் சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் ஆகியோரது உரைகளே சிறப்பிடம் பெறுகின்றன. திருக்குறளுக்குப் பலர் உரை எழுதிய பொழுதும் பரிமேலழகர் உரையே யாவற்றையும் மேவி நிலைத்து நிற்கின்றது. நன்னூலுக்கு மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர் எழுதிய உரைகளைக் காட்டிலும் சிவஞான முனிவர் எழுதிய நன்னூல் விருத்தியுரையும் நாவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லரவர்கள் எழுதிய நன்னூற் காண்டிகையுரையுமே சிறப்பிடம் பெற்றுள்ளது. இவ்வாறு புலமை, எளிமை, வன்மை மிக்க உரைகள் காலந்தோறும் நிலைத்து வாழ்வுபெறும் என்பது கண்கூடு. பொதுவாக, உரை மூலச்செம்மை, புலமை, திறனாய்வு, தத்துவம், பண்பாடு முதலான தன்மைகளை வெளிப்படுத்தும் அதே சமயம் அது இலக்கிய ஆராய்ச்சியாகவும் இலக்கிய ஆக்க முயற்சியாகவும் அமைந்து விடுவது அதன் தனிச் சிறப்பாகும்.[23]

**உரைவகை**

காலந்தோறும் இலக்கியத்தினூடே உரை வளர்ந்து வந்துள்ளது. இலக்கிய ஆசிரியர்களாலும் இலக்கண ஆசிரியர்களாலும் இவ்வுரை வரையறைக்கு உட்படுத்தப்பட்டதால் அதற்கோர் இலக்கண வரம்பு தோன்றிற்று. தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், நன்னூல், வீரசோழியம் முதலான நூல்கள் உரை எவ்வாறு அமைய வேண்டுமென வற்புறுத்துகின்றன. பொதுவாக உரையின் பல்வேறு கூறுகளையும் மனங் கொண்ட இலக்கண நூலோர் உரையினைக் காண்டிகை, விருத்தியென இருவகையில் அடக்கிக் குறிப்பிடுவர். தமிழில் உரை வளர்ச்சி இன்றுவரை இவ்விரு இயல்புகளின் அடிப்படையிலே வளர்ந்து வருகின்றது. அவ்வகையில், உரைவகையின் வளர்ச்சியினைச் சுருக்கமாக நோக்கலாம்.

தொல்காப்பியர் உரை வகையினை இரண்டு வகையாகப் பிரித்து நோக்குவார். அவை (அ) காண்டிகை (ஆ) விருத்தியாகும். இவற்றுள் காண்டிகையுரையாவது சூத்திரத்தில் உட்பொருள் அல்லது கருத்துரை மறைவின்றித் தெளிவாக விளக்குவது; சூத்திரப் பொருள் விட்டுப் போகாது கருத்தை விரித்துக் காரணகாரிய முறைகளோடும் எடுத்துக் காட்டுக்களோடும் பொருளை விளக்குவது என்பார்.[24]

---

23. சுந்தரமூர்த்தி, இ., 1985, திருக்குறள் பரிமேலழகர் உரைத்திறன், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, ப. 24

**காண்டிகை உரை**

24. (அ) "பழிப்பில் சூத்திரப்பட்ட பண்பிற்
கரப்பின்றி முடிவது காண்டிகை யாகும்"

விட்டகல் வின்றி விரிவொடு பொருந்திச்
சுட்டிய சூத்திரம் முடித்தற் பொருட்டா
ஏது நடையினும் எடுத்துக் காட்டினும்
மேவாங் கமைந்த மெந்நெறித் ததுவே

(தொல், மரபு 102.103)

ஆ) சுப்பிரமணியம், ச வே., 1976, அடியார்க்கு நல்லார் உரைத்திறன்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியீடு, ப. 214

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தியுரை என்பது

''சூத்திரத் துட்பொரு ளன்றியும் யாப்புற
இன்றி யமையா தியைபவை யெல்லாம்
ஒன்ற உரைப்பது உரையெனப் படுமே''

''மறுதலைக் கடாஅ மாற்றமு முடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்தநூ லானும்
ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்
தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்
துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்''

(தொல், மரபு, 104, 105)

என விளக்குவார் தொல்காப்பியர். இதனால் விருத்தியுரை சூத்திரத்தின் உட்பொருளைக் கொண்டிருப்பதோடு அதற்கு இன்றியமையாது பொருந்துவன வெல்லாற்றையும் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் அவை வினா விடையாகவும் ஐயமும் திரிபின்றியும் தன்னூலானும் பிறநூல் முடிபுகளாலும் பொருள் தெளிவும் வலிவும் கொண்டு அமைய வேண்டும் என்பர்.[25]

இறையனார் அகப்பொருள் உரை, கருத்துரைத்தல் கண்ணழித்துரைத்தல், பொழிப்புத்திரட்டல், அகலங்கூறல் என்னும் நான்குவகை உரையினைப் பற்றிக் குறிப்பிடும்[26]. அறநூல்களில் ஒன்றான நாலடியாரும் திரட்டிய பொருளைச் சொல்லுதல், விரித்துரைத்தல், கடாவும் விடையுமாகச் சொல்லுதல், இலேசான பொருளை உரைத்தல், எச்ச உம்மைகளால் எஞ்சிய பொருள்களை உரைத்தல் ஆகியன உரையின் இயல்பெனக் குறிப்பிடும்.[27]

---

25. விருத்தியுரை

(அ) ''சூத்திரத் துட்பொரு ளன்றியும் யாப்புற
இன்றி யமையா தியைபவை யெல்லாம்
ஒன்ற உரைப்பது உரையெனப் படுமே''

''மறுதலைக் கடாஅ மாற்றமு முடைத்தாய்த்
தன்னூ லானும் முடிந்தநூ லானும்
ஐயமும் மருட்கையும் செவ்விதின் நீக்கித்
துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்''

(தொல், மரபு. 104, 105)

(ஆ) சுப்பிரமணியம் க.வே., ப.1976 அடியார்க்கு நல்லார் உரைத்திறன்

26. மேலது நூல், ப. 216 27. மேலதுநூல், ப. 216

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னூலார் உரை வகையினை தொல்காப்பியர் வழி நின்று காண்டிகை விருத்தி என இருவகையாக நோக்குவார். பாடஞ்சொல்லல், கருத்துரைத்தல், சொல்வகுத்தல், சொற்பொருள் உரைத்தல், பொழிப்புரைத்தல், உதாரணங்காட்டல், வினாத்தோற்றல், விடை கொடுத்தல், விசேடம் காட்டல், விரிவுகாட்டல், அதிகார வரவு காட்டல், துணிவு கூறல், பயனொடுபடுதல், ஆசிரிய வசனங்காட்டல், என்னும் பதினான்கு பொருட்கூறுகளும் உரைநூலில் இருத்தல் வேண்டும் என்பார்.[28] இவற்றுள் கருத்து, பதப்பொருள், எடுத்துக் காட்டு, வினா, விடை ஆகிய ஐந்து பொருட் கூறுகளைக் கொண்டது காண்டிகை என்பார்.[29] இவற்றோடு பின்வருவனவும் விருத்தியுரையிற் கூறப்பட வேண்டும் என்பார் நன்னூலார். அது வருமாறு

''சூத்திரத் துட்பொரு ளன்றியு மாண்டைக்
கின்றி யமையா யாவையும் விளங்கத்
தன்னுரை யானும் பிறநூலானும்
ஐய மகல ஐங்காண்டிகை யுறுப்பொடு
மெய்யினை எஞ்சா திசைப்பது விருத்தி''

(நன்.பொது 28).

யாப்பெருங்கல விருத்தி இவற்றைப் பிறிதொரு வகையில் வகுத்துக் கூறுகின்றது. அது வருமாறு;

''முத்திறத்தானும் மூவிரு விகற்பினும்
பத்து விதத்தினும் பதின் மூன்று திறத்தானும்
ஏழ்வகையானும் இரண்டு கூற்றானும்
வழுவுநனி நீங்க மாண்பொடும் மதத்தொடும்
யாப்புறுத் துரைப்பது சூத்திரவுரையே''

இவற்றுள் வழு என்பது குன்றக் கூறல் முதலிய பத்துக்குற்றம் என்றும்,[30] மாண்பு என்பது சுருங்கச் சொல்லல் முதலிய பத்து அழகு என்றும்,[31] மதம் என்பது உடன்படல் மறுத்தல் முதலிய எழுவகை என்றும் இந்நூல் விளக்கும்.[32]

---

28. மேலது நூல், ப. 215    29. மேலது நூல், ப. 215

பத்துக்குற்றம் வருமாறு

30. குன்றக் கூறின் மிகைபடக் கூறல்
கூறியது கூறன் மாறுகொள்ளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தன் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தன் மற்றொன்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுத னின்றுபய னின்மை
என்றவை யீரைங் குற்ற நூற்கே

31. பத்தழகு வருமாறு.
சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை வைப்பே யுலகமலை யாமை
விழுமியது பயத்தல் விளக்குதா ரணத்த
தாகுத னூலிற் கழகெனும் பத்தே (நன். பொதுப்பாயிரம். 12,13)

32. அரவிந்தன், மு.வை., 1968, உரையாசிரியர் சிதம்பரம், ப. 33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் மூலம் செய்யுள் நூல்களுக்கு எழுதப்படும் உரை காண்டிகையாகவும் விருத்தியாகவும் அமையலாம். அல்லது, உரை வகைப் பண்புகளுள் சிலவற்றை உள்ளடக்கியதாகவும் அமையலாம். ஆனால், அவை வழு நீங்கியதாய், மாண்புடையதாய், ஆய்வும் தெளிவும் உடைய தாய் அமைந்து நிலையான பேற்றை அடைய வேண்டும் என்பது உணர்த் தப்பட்டதெனலாம்.

நல்ல உரையை வளர்த்துச் செல்வதற்கு உரையின் இயல்புகள் மனங்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். இவை மனங் கொள்ளப்படும் பொழுது நல்ல உரைப்பாங்கும் திறனாய்வுப் போக்கும் மதிப்பீடும் உரையாசிரியர் உள்ளத்தில் பதிந்து விடுகின்றன. நல்ல உரையாசிரியரிடத்தில் இலக்கணம், இலக்கியம் முதலானவற்றில் சிறந்த புலமையும் ஆளுமையும் இருக்க வேண்டியது அவசியமானதாகும். இவ்வியல்புடையவர்களாலேயே மூலநூலின் பொருள் மரபினையும் நூலாசிரியரின் கருத்தினையும் ஆராய்ந்து தெளிவாக உரை எழுத முடியும். இவர்களே சிறந்த உரையாசிரியர்களாகவும் விளங்க முடியும். அன்று சிறந்த உரையாசிரியர்கள் என்று போற்றப்பட்டோர் இத்தகைய பண்புகளை தம்முள் கொண்டவர்களாகவே காணப்பட்டனர். ''உரையாசிரியர்கள் ஆய்ந்தமைந்த கல்வி அறிவும் முடிவிலா ஆற்றலுடையமையும் பெற்றிருந்தமையே அவர்தம் சிறந்த உரைகளை உலகில் அன்று மட்டுமின்றி இன்றும் என்றும் வாழவைக்க உதவின - உதவுகின்றன - உதவும்.''[33] என்ற கூற்று இங்கு நினைவு கூரத் தக்கது.

## ஈழநாட்டின் உரையின் தோற்றமும் வளர்ச்சியும்

இத்தகைய பின்னணியில் ஈழநாட்டின் உரையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிச் சுருக்கமாக நோக்குதல் அவசியமானதாகும்.

தமிழ் நாடும் ஈழநாடும் தாயும் சேயும் போன்றவை. ஈழநாட்டின் கல்வி கலாச்சாரப் பாரம்பரியங்கள் தமிழ் நாட்டின் வழிவந்தவை. பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் ஆரியச் சக்கரவர்த்தியின் வருகையின் பின் இந்நாட்டுத் தமிழ் மக்கள் ஈழநாட்டின் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களைத் தம் தாயகமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். திண்ணைப் பள்ளியும் குருகுலமும் அவர்களது கலாசாலைகளாக அமைந்தன. இங்கு இலக்கணம், இலக்கியம், காப்பியம், தருக்கம், மருத்துவம், சோதிடம் என்பன கற்பிக்கப்பட்டன. நூல்களைக் கற்றல் கற்பித்தல், உரை சொல்லல் முதலான தன்மைகள் கற்றோர்க்கான சிறப்பான பண்புகளாகக்

33. மோகன், இரா., சொக்கலிங்கம், ந., 1988, உரைமரபுகள், ப. 35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்பட்டன. கற்றதன் பயன் படனஞ்செய்தல் அல்லது நூல்களுக்குப் பயன் சொல்லல் என்னும் வகையில் அதன் உயர்வு போற்றப்பட்டது. பயன் உரைகளை அடிப்படையாகக் கொண்டது. அது காண்டிகையாக வும் விருத்தியாகவும் அமைந்திருந்தது. இவற்றின் சில இயல் புகளோடு புராணம், இதிகாசம் முதலான இலக்கியங்களுக்கு உரை கூறல்(பயன்) பொது இயல்பு. ஆனால் இசைஞானம், இலக்கண இலக்கியங்களில் தெளிந்த புலமை, ஞாபக சக்தி, சிறந்த குரல்வளம் முதலான பண்புகள் உரை கூறுதலின் சிறப்பியல்புகளாகக் கருதப்பட்டன. தமிழ்மொழிக் கல்வியைக் கற்கப் புகுவோர் இத்தகைய அறிவைப் பெறப் பயிற்றப் பட்டனர். அவ்வகையில் கற்றோர் பெரிதும் இவ்வியல்புகளைப் பெற்றிருந்ததோடு, அவர்களால் இவ்வியல்புகள் சிறப்பாகப் பேணப் பட்டன. பயன் கேட்டோரும் கற்றல், கேட்டல், சிந்தித்தல், பேணல் முதலான இயல்புகளால் தமது கல்வி அறிவையும், இக்கல்வி முறைமை யினையும் பேண முயன்றனர். இதனால் ஈழநாடு சிறந்த உரையாசிரியர்க ளைப் பெற்றுத் திகழ்ந்தது[34].

ஈழ நாட்டின் உரையாசிரியர் வரிசையினை மூன்று வகையாக நோக்கலாம்.

(அ) உரை கூறுதலைத் தொழிலாக உடையோர்
(ஆ) உரை எழுதுவதைக் கல்விப் பணியாகக் கொள்வோர்
(இ) உரை கூறுவதையும் உரை எழுவதையும் கல்விப் பணியாக வும் கொள்வோர்.

(அ) உரை கூறுதலைத் தொழிலாக உடையார்: முத்துக் குமாரக் கவி ராயர், சரவண முத்துப் புலவர், நல்லூர் கார்த்திகேய ஐயர் முதலா னோர்களை இவ்வகையில் அடக்கலாம்.

(ஆ) உரை எழுதுவதைக் கல்விப் பணியாகக் கொள்வோர்: ஞானப் பிரகாச முனிவர், ஆறுமுகத் தம்பிரான், சுன்னாகம், அ.குமாரசுவா மிப் புலவர், புலோலி.வ.குமாரசுவாமிப் புலவர், சி. கணேசையர் மு. திருவிளங்கம், பண்டிதமணி நவநீதகிருஷ்ணபாரதியார் முதலா னோர்களை இப்பகுப்பி னுள் அடக்கலாம்.

(இ) உரை கூறுவதையும் உரையெழுவதையும் கல்விப் பணியாகவும் கொள்வோர்: சேனாதிராசமுதலியார், ஆறுமுகநாவலர், வித்துவ சிரோமணி ந.ச.பொன்னம்பலம்பிள்ளை, மட்டுவில் ம.க.வேற் பிள்ளை, உடுப்பிட்டி அ.சிவசம்புப்புலவர், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, பண்டிதமணி அருளம்பலவனார், சுழிபுரம் சிவபாதசுந்தரனார் முதலானோர்கள் இவ்வகையில் அடங்குவர்.

---

34 கனகரத்தினம் இரா.வை., 1993/94, இளங்கதிர் ஈழநாட்டில் உரையின் தோற்றமும் வளர்ச்சியும் - ஓர் அறிமுகம், தமிழ்ச்சங்க வெளியீடு, பே.ப. கழகம்,.பேராதனை, பக் 99-102

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாட்டவரின் உரைத்திறனை ஆராய்வதற்கு இந்நூல் இடந்தராததால் அவர்களின் உரைத்திறனை அறிந்து கொள்ளும் வகையில் ஞானப்பிரகாச முனிவர் கூழாங்கைத் தம்பிரான் சிவசம்புப் புலவர் முதலானோர்களின் ஆக்கங்களை உதாரணமாகக் கொண்டு சுருக்கமாக நோக்கலாம்.

## ஞானப்பிரகாசரின் உரைத்திறன்

ஈழநாட்டின் முதல் நூலாசிரியராக யாழ்ப்பாணம் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாச முனிவரைக் குறிப்பிடலாம். இவர் யாழ்ப்பாணத்தில் பிறந்து சிதம்பரத்தில் சித்தி பெற்றவர். தமிழ், சங்கதம் ஆகிய இரு மொழிகளிலும் புலமை மிக்கவர். சங்கத மொழியில் பௌஷ்கராகமம், சிவ ஞான போதம் ஆகிய நூல்களுக்கும் தமிழ்மொழியில் சிவஞான சித்தியார் சுபக்கத்திற்கும் உரை எழுதியுள்ளார். இவ்வுரை சர்வஜித்து ஆு மகர மாதம் (1888) திருப்பற்றூர் சின்னையநாட்டான் யந்திர சாலையில் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது. பதவுரை, அரும்பதவுரை தொகை விரித்தல், அகராதிப் பொருள் தரல், கலைச் சொல் விளக்கம் தரல், இடம் நோக்கிப் பொருள் கூறல், தொகை விரித்தல், தொகுத்துக் கூறல், சான்று காட்டல், அதிகாரப் பொருள் விளக்கம் தரல், பொருள் வருவித்தல், தத்துவக் குறிப்பை உணர்தல், பாடபேதம் காட்டல், அதிகார இயைபு காட்டல், இலக்கணத்துடன் பொருத்திப் பொருள் கூறல் முதலான உரைத்திறன் அம்சங்களை இந்நூலிலே காணலாம்.

இந்நூலில் அவர் எடுத்தாளும் மேற்கோள்கள் தமிழ் மொழி, சங்கத மொழிநூல்களில் இருந்து எடுத்தாண்ட போதும் பெரிதும் சங்கதமொழி நூல்களிலும் ஆகம நூல்களிலும் இருந்தே மேற்கோள் காட்டுவார். இவ்வகையில் அவர் பன்மொழிப் புலவராகவும் ஆகமநூல் வல்லவராகவும் விளங்கினார் என்பதை அறிந்து கொள்ளலாம். ஈழத்தவரால் எழுதப் பெற்ற முதல் உரை நூல் என்ற வகையிலும், அதன் உரைத்திறன் முன்னெழுந்த கால உரை நூல்களுக்கு எவ்வகையிலும் குறைத்து மதிப்பிட முடியாத வகையில் சிறப்புற அமைந்திருப்பதினாலும், தமிழ் உரைநூல் வளர்ச்சியிலும் ஈழத்தில் எழுந்த உரை நூல் வளர்ச்சியிலும் அதற்குரிய சிறப்பான இடத்தைப் பெற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை. சுவாமி ஞானப்பிரகாசரின் உரைத்திறனுக்குச் சில எடுத்துக் காட்டுகளை இங்கு நோக்கலாம்.

பூதக் கொத்து, தன்மாத்திரிகைக் கொத்து, கன்மேந்திரியக் கொத்து, ஞானேந்திரியக் கொத்து, அந்தக்கரணக் கொத்து, குணக்கொத்து, பிரகிருதிக் கொத்து, கலாதிக் கொத்து ஆகிய எட்டும் புயட்சம் எனத் தொகை விரிப்பார்[35].

35. நடராஜ ஐயர் 1888, (பதி) சிவஞான சித்தியார்- சுபக்கம் சின்னைய நாடார் யந்திரசாலை, திருப்பற்றூர், ப. 121

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிருஷ்டியாவது சுத்தசாத்துவ குணாதிக்கத்தாற் கர்த்திரு சங்கற்பத் தால் முதற் காரணத்திற்காரியப் பொருள் வெளியாதல் ஆகும்[36]. திதியா வது ராசத குணாதிக்கத்தாற் றோற்றிய அந்தந்தப் பொருள் அந்தந்தத் தொழிலிலமைந்து முதற் காரணம் பற்றாக நிற்றலாகும்[37]. அசலையா வது முன் பிரபஞ்சித்திருக்கின்ற ஞானக்கிரியா ரூப சிற்சத்தி மூர்த்தியா கும்[38] எனக் கலைச் சொல் விளக்கம் தருவார்.

கலையாவது சுத்தாத்துவ பரதேச மூர்த்தியாயும், சுத்தா சுத்தாத்துவ சூக்குமதேக மூர்த்தியாயும், அசுத்தாத்துவ தூலதேக மூர்த்தியாயும் இருப்பதாகும் என இடம் நோக்கிப்பொருள் உரைப்பார்.[39]

''முதற் சூத்திரத்திற் சிருட்டி திதி சங்கார கிருத்திய கர்த்தா சிவனென்றறி வித்ததனால், மேலனுக்கிரக கர்த்தா வென்றறிவிக்கப் போகின்ற படியால் இப்போது திரோபாவ கிர்த்திய கர்த்தா வென்ப துரைக்கின்றார்'' என முதலாம் சூத்திரத்திற்கும் இரண்டாம் சூத்திரத் திற்கும் இடையுள்ள இயைபினை விளக்கிக் காட்டுவார்[40].

இந்நூலில் 2ஆம் சூத்திரத்தின் ''பிணத்தினையொத்த'' எனத் தொடரும் விருத்தப்பாவில் ''கணத்திடைத் தோன்றிமாயுங்காய மென்றறிந் தொருகால்'' எனவரும் தொடரில் ''கணத்திடைத்தோன்றி நின்று கழியுமென்றறிந்து என்னும் பாட பேத முண்டு'' என அவ்வவ் விடயங்க ளில் பாடபேதங்களையும் காட்டிச் செல்வார்[41].

சுவாமி ஞானப்பிரகாசர் பற்றி எந்த விதமான ஆய்வுகளும் மேற் கொள்ளப்படவில்லை என்பது இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டிய தொன்றுமட்டுமல்ல, அவசியம் ஆய்வு செய்யப்பட வேண்டிய தொரு விடயம் என்பதையும் நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

**கூழங்கைத் தம்பிரான் உரை**

ஞானப்பிரகாச சுவாமியை அடுத்துக் கூறக் கூடியவர் கூழங்கைத் தம்பிரான் ஆவார். (1795) இவர் தமிழ் நாட்டின் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த வர். துறவியாக வாழ்ந்தவர். தம்பிரான் என்னும் பட்டத்தைப் பெற்றவர். பின்னர் இவற்றைத்துறந்து ஈழநாட்டுக்கு வந்து வாழ்ந்தவர். இங்கு தமிழ்க் கல்வியையும் வடமொழிக் கல்வியையும் போதித்தவர். 19ம் நூற்றாண்டில் ஈழநாட்டில் புதிய தமிழ் கல்விப்பாரம்பரியத்தை உருவாக் கியவர் தம்பிரான் அவர்கள். இருபாலை நெல்லைநாத முதலியார் சேனாதிராய முதலியார் மாதகல் மயில்வாகனப்புலவோர் இப்புலவரது சமகாலத்த வர். இவர் நன்னூலுக்கு ஒரு விருத்தியுரை செய்தாரென அறிய

36. மேலது நூல், ப. 66 37. மேலது நூல், ப. 66 38. மேலது நூல், ப. 83
39. மேலது நூல், ப. 83 40. மேலது நூல், ப. 41. மேலது நூல், ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகின்றது. இவர் நன்னூலுக்குச் சொல்லி வந்த உரையினையே சேனாதிராச முதலியார் முதலிய நல்லிசைப் புலவர்கள் பிற்காலத்திலே பயிற்றுவித்து வந்தனர் என்பர். இந்நூல் நூல்வடிவம் பெறவில்லை என்றும் பெற்றது என்றும் பலர் பலபடக்கூறுவர். நாவலரவர்களால் எழுதப் பெற்றதாகக் கூறப்படும் நன்னூல் காண்டிகையுரை கூழங்கைத் தம்பி ரான் உரை என்பர் சிலர்[42] இக்கூற்று ஆய்வுக்குரியதொன்று.

நாவலரவர்கள் இந்நூலின் முன்பக்கத்தில் ''நன்னூல் காண்டிகையுரை - யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் திருத்தியும் விளக்கியுங் கூட்டியும் புதுக்கியது'' எனக் குறிப்பிடுவது அவதானிக்கத்தக்கது. இங்கு யார் எழுதிய உரையை, நாவலரவர்கள் புதுப்பித்தார் என்ற கேள்விக்கு விடையாகவே, அது கூழங்கைத் தம்பிரானுடையது என்றனர் போலும். இவ்விடயத்தில் நாவலர் தாம் போற்றி வந்த நேர்மையை கை நழுவவிட்டு விட்டாரா என்ற பிறிதொரு வினா எழுவது இயல்பு. நாவலரவர்கள் தமது நூல்களை வெளியிடும் பொழுது, நூலின் பெயர் ஆசிரியர், பதிப்பகம், பதிப்பித்த ஆண்டு முதலான விபரங்களைச் சரியாகத் குறிப்பிடுவார். எடுத்துக்காட்டாகக் குறிப்பிடின், ''கோயிற் புராணம்-கொற்றவன் குடி உமாபதி சிவாசாரியார் அருளிச் செய்தது - இஃது யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் செய்த புத்துரையுடன்'' எனக் குறிப்பிடுவார். அத்துடன் ''திருமுருகாற்றுப்படை மூலமும் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் நச்சினார்க்கினியர் உரைக் கருத்தைத் தழுவிச் செய்த புத்துரையும்'' எனக் குறிப்பிடுவதும் இங்கு நோக்குதல் வேண்டும். இக் குறிப்புக்கள் நவலரவர்களின் பதிப்பாசிரியர் நேர்மையையும் நாவலரவர்களின் உயர்ந்த பண்பினையும் காட்டுவதாக அமைகின்றன. உண்மையில் நாவலரவர்கள் விரும்பியிருந்தால் நச்சினார்க்கினியர் உரைக் கருத்தைத் தழுவிச் செய்தது என்று குறிப்பிடாமலே ''திருமுருகாற்றுப்படை மூலமும் ஸ்ரீ ஆறுமுகநாவலர் செய்த புத்துரையும்'' என்று எழுதி வெளியிட்டிருக்க முடியும். ஆனால் நாவலரவர்களால் அவ்வாறு செய்ய முடியாது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாவலரவர்கள் நக்கீரர் போன்று விளங்கியவர். எதிலும் நேர்மையைக் கடைப்பிடித்தவர். அவ்வாறாயின் நாவலரவர்கள் அப்படி எழுதுவதற்குக் காரணம் யாது என்பதை ஆராய்தல் அவசியமாகும்.

நாவலரவர்கள் கூழங்கைத் தம்பிரானின் நேரடி மாணவர் அல்லர். நாவலரவர்கள் பிறப்பதற்குக் கால் நூற்றாண்டுக்கு முன்பே அவர் தேகவியோகம் அடைந்து விட்டார். நாவலரவர்கள் சேனாதிராச முதலியாரிடத்திலும் சரவணமுத்துப்புலவரிடத்திலும் சம்பந்தப் புலவரிடத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி பயின்றவர். நாவலரவர்கள் நன்னூலை மாணவர்களுக்குப் பாடம் சொல்லிய பொழுதும் அந்நூலைப் பதிப்பிக்க முயன்றமை 1875 க்குப் பின்னென்றே கொள்ளல் வேண்டும். நாவலரவர்கள் இருக்கும் பொழுது தானும் இந்நூல் வெளிவரவில்லை. நாவலரவர்கள் தேடிய நன்னூற் காண்டிகை ஏடு அக்காலப் பகுதியில் பலபாடபேதங்களுக்கும் சிதைவு களுக்கும் உட்பட்டிருக்கலாம். எனவே அப்படிப்பட்ட ஏட்டினை மூல ஏடாகக் கொண்டு பதிப்பித்தால், பெயர் சுட்டப்படும் ஆசிரியர்க்கு இழுக்கு ஏற்படும் என்பதால் அப்பெயரைச்சுட்டாது "திருத்தியும் விளக்கியும் கூட்டியும்" என்ற சொற்றொடரைப் பாவித்து இவ்வுரை நூலின் மூல நூல் ஆசிரியர் தானல்ல என்பதை இதய சுத்தியுடன் புலப் படுத்தினார். இவ்வுரையேடுகள் நாவலரவர்களுக்குப் பல ஆசிரியர் வழியில் கிடைத்திருக்கலாம். அவ்வாறாயின் யாருடைய பெயரைச் சுட்டுவது என்ற பிரச்சினையும் நாவலரவர்களுக்கு எழுந்திருக்கும். இதனையும் நாவலரவர்கள் தவிர்க்க முயன்றிருக்கலாம். எனவே நாவலர வர்களுடைய நோக்கை யாரும் ஐயுறவோடு பார்த்தல் ஆகாது.

இந்நூலில் காணப்படும் பகுப்புமுறை, அமைப்பு முறை, ஒழுங்கு முறை, எடுத்துக்காட்டு, தெளிவு யாவும் நாவலரவர்களின் இந்நூலில் கொண்டிருந்த ஆளுமையின் வெளிப்பாடு. அதில் யாரும் ஐயுறவு கொள்ள வேண்டிய அவசியமில்லை.

கூழங்கைத் தம்பிரானுக்குப் பின் சிறந்த உரையாசிரியராகக் குறிப் பிடத்தக்கவர் **ஆறுமுக நாவலர்** அவர்கள். நாவலரவர்களே இந்நூற்றாண் டின் சிறந்த உரையாசிரியராகவும் பின்னெழுந்த உரையாசிரியர்களுக்கு வழிகாட்டியாகவும் விளங்கினார். நாவலரவர்களின் உரைத்திறனை இந்நூலினில் காண்க.

## சிவசம்புப் புலவரின் உரைத்திறன்

ஈழநாட்டின் சிறந்த புலவராகவும் உரையாசிரியராகவும் விளங்கி யவர்களுள் உடுப்பிட்டி சிவசம்புப் புலவரும் ஒருவர். இவர் சேனாதிராச முதலியார், சரவணமுத்துப்புலவர் முதலானோர்களிடம் கல்வி பயின்ற வர். தமிழ் மொழியிலும் வட மொழியிலும் புலமை மிக்கவர். செந்தில் யமகவந்தாதி (1888) திருவேரக அந்தாதி, திருச்செந்திற்றிருவந்தாதி முதலான பலபிரபந்தங்களைப் பாடியதோடு, மறைசையந்தாதி (1893) யாப்பாருங் கலகக்காரிகை,(1893) கந்தபுராணம் - வள்ளியம்மை திருமணப்படலம் (1911) ஆகிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார்.

புலவரின் உரைகளில் அகராதிப்பொருள் தருதல், தொகை விரித் தல், இடம்நோக்கிப் பொருள்கூறுதல், தம் கருத்தினை ஏற்றுப் பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருதல், இலக்கணத்துடன் பொருத்திப் பொருள் கூறுதல் தத்துவக் குறிப்பமைய உரைத்தல், சான்றுகாட்டிப் பொருள் நிறுவுதல், சொல்வருவித்துப் பொருள் கொள்ளல், உவமை விளக்கம் தரல் முதலான உரைத் திறன் அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. எடுத்துக் காட்டாகக் சிலவற்றை நோக்கலாம்.

கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப்படலத்தில் பாரதம் இராமாயணம் ஆகிய காப்பிய நூல்களிலிருந்தும் தொல்காப்பியம், நன்னூல்,திவாரகம், நேமிநாதம்,சூளாமணிநிகண்டு, தண்டியலங்காரம் முதலான இலக்கண நூல்களிலிருந்தும் சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம் முதலிய சித்தாந்த நூல்களிலிருந்தும் தேவாரம், திருவாசகம், பெரியபுராணம் முதலான திருமுறைகளிலிருந் தும் தாம் விளக்கவரும் சொல், பொருள் இலக்கணம் ஆகியவற்றின் பொருட்டு, மேற்கோள்களை எடுத்துக் காட்டுவார். சுமார் ஐம்பது தமிழ் நூல்களில் இருந்தும் பத்து வடமொழி நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டுவார்.

முந்தையுணர்வு (47) என்ற செய்யுளில் ''எந்தைபுயம் புல்லுவதற் கிருப்ப'' என்ற அடிக்கு உரை கூறவந்த புலவர் எந்தைபுயம் புல்லுத லென்பது- குறிஞ்சிநிலத்து மங்கைப் பருவமாதர் சுப்பிரமணியக் கடவு ளுடைய தேசோமயமாகிய மகா சௌந்தரியத்தின் மயலுறுதல், அது திருக்கோவையாரிற் ''சேயின தாட்சியிற் பட்டனளாமித் திருந்திழையே'' என்பதிலும், கல்லாடத்திற் ''புகரிலை நெடுவேலறு முகக் குழகன் றகரங் மழு நெடுவரைக்காட்சி யுற்றனளாதல் வேண்டுஞ் சிற்றிடைப் பெருந் தோட்டே மொழிதானே'' என்பதினாலும் பிறவற்றனும் விளங்கும் என்பார்[43].

தொழிற்றன்மையணி(1) உதாத்தவணி(2) புகழுவமையணி(3) உவமையணி(4) ஏதுஉவமையணி(5) தற்குறிப்பேற்றவணி(6) வீறுகோ ளணி(7) பண்புவமையணி(8) போலியுவமையணி(9) திணைப் பொருட் டற் குறிப்பேற்றவணி(10) பயனுவமையணி (12) தொழிலுவமையணி (15) சங்கீரணவணி (16) உதரத்தவணி(18) மேலையணி(19) சாதித்தன் மையணி(26) என நூலினில் எங்கெல்லாம் அணி காணப்படுகின்றதோ அவற்றை இனங்கண்டு காரணகாரியத் தொடர்புடன் விளக்குவார்.

---

42. சிவசம்புப்புலவர், அ,1911 கந்தபுராண வள்ளியம்மை திருமணப்படலம் மூலமும் உரையும், சோதிடப்பிரகாச யந்திரசாலை, தும்பை நகர், யாழ்ப்பாணம், ப. 25

43. மேலது நூல், ப. 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாப்பருங்கலக்காரிகை யுரையின் முன்னுரையில் (1893) புலவர்கள்

"சிறுவர் முதலிய யாவரும் எளிதினுணரும் பொருட்டு..... ஆசிரியர் குணசாகருரையைத் திருத்தியும் விளக்கியும் சூத்திரத் திலே திருத்தியுஞ் சிறக்குமாறு காட்டியுஞ், சேர்க்கற் பாலனவற் றைச் சேர்த்தும், முன்னூல் உரைகளிற் சிலவற்றை மறுத்துஞ், சொற்பொருள் வளத்த உதாரணங்களைச் சேர்த்தும், ஒழுங்குறுத் திய உரையோடு கவிபாடுங் காதலுடை யார்க்கு இன்றியமையா ததாய மோனையியலை யியற்றித் தந்து பிரசுரிப்பித்தோம்"[44].

எனக் குறிப்பிட்டிருப்பதன் மூலம் அவர்கள் இந்நூலில் மேற் கொண்ட உரைத்திறனை அறிந்து கொள்ள முடிகின்றது. புலவரின் உரைத்திறன் தனி ஆய்வுக்குரியது. உண்மையில் புலவர்கள் கவிதை பாடுவதில் மாத்திரம் புலமை பெற்று விளங்கவில்லை. சிறந்த உரையா சிரியராகவும் இலக்கிய கர்த்தாவாகவும் விளங்கினார் என்றே கூறுதல் வேண்டும். புலவர்களின் இலக்கியத்திறன் மீளாய்வு செய்யப்பட வேண் டிய தொன்றாகும்.

### வித்துவ சிரோமணி ந.ச.பொ. பின்

இதுவரை சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களினதும் சிவசம்புப் புலவரதும் உரைத்திறன் பொதுப்படையாக நோக்கப்பட்டது. இனி ஈழத்து உரையாசிரியர்கள் பற்றிச் சுருக்கமாக நோக்கலாம்.

சிவசம்புப் புலவருக்கு அடுத்து உரைநூல் எழுதியோரில் வித்துவ சிரோமணி ந.க. பொன்னம்பலபிள்ளை அவர்கள் (1837 - 1897) குறிப்பி டத்தக்கவர். அவர் வில்லிபுத்தூர் பாரதம் - ஆதிபருவத்துக்கும் (1934) மயூரகிரி புராணத்திற்கும் திருக்கேதீச்சர பதிகங்களுக்கும் (1901) உரை எழுதியுள்ளார். ஆறுமுகத்தம்பிரான் திருமுறை கண்டபுராணம், சேக்கி ழார் புராணம், அற்புதத் திருவந்தாதி, மூத்த நாயனார் திருவிரட்டை மணி மாலை, பெரிய புராணம் (ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் வரை) முதலான நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். சங்கரபண்டிதர் (1829-1870) அகநிர்ணயம் (தமிழ் உரை) சிவபூசையந்தாதி ஆகிய நூல்க ளுக்கு உரை எழுதியுள்ளார். மற்றும் சி.வை தாமோதரம் பிள்ளை (1832-1901) நீதிநெறி விளக்கத்துக்கும், காரைதீவு கா.சிவசிதம்பர ஐயர் கந்தபுராணம் மகேந்திர காண்டத்திற்கும் (1970) சிவானந்தலக ரிக்கும், மேலைப்புலோலி.வே சிதம்பரப்பிள்ளை கந்த புராணம் யுத்த

---

44. 1893, யாப்பருங்கலகக்காரிகை மூலமும் உரையும், அச்சுவேலி இயந்திரசாலை, யாழ்ப்பாணம், முகவுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்டத்திற்கும், புலோலி வைத்திலிங்க தேசிகர் பிள்ளையார் புராணத் திற்கும், வல்வை க. ஏகாம்பரம் கந்தர் அநுபூதிக்கும், காசிவாசி செந்திநா தையர் நீலகண்டபாஷியத்துக்கு (தமிழ் உரையும்) இணுவில் அம்பிகை பாகர் *(1854-1904)* தணிகைபுராணம் - நகரப்படலத்திற்கும் உரை எழுதி யுள்ளனர்.

## இருபதாம் நூற்றாண்டில் ஈழத்து உரையாசிரியர்கள்

வல்வை. ச. வைத்திலிங்கபிள்ளை கந்தபுராணம் - அண்டகோசப்ப டலம், வள்ளியம்மை திருமணப்படலம், *(1878)* தெய்வானையம்மை திருமணப்படலம், *(1956)* சூரபன்மன் வதைப்படலம், கல்வளையந்தாதி *(1887)*, கந்தரலங்காரம் *(1878)* அகப்பொருள் விளக்கம், முதலான நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் திருக்கரசைப் புராணம் (பொழிப்புரை *1890*) சூடாமணி நிகண்டு- தொகுதி-*10* *(1895-1900)* கலைசைச்சிலேடை வெண்பா (அரும்பதவுரை- *1901)* மறைசையந்தாதி அரும்பதவுரை *(1901)* திருவாதவூரடிகள்புராணம் (புத்துரை-*1904)* முத்தக பஞ்ச விஞ்சதி (குறிப்புரை-*1918)* ஏரெழுபது (பொழிப்புரை-*1920)* கல்வளை யந்தாதி (பதவுரை-*1921)* யாப்பெ ருங்கலம் (பொழிப்புரை -*1920)* வெண்பாப் பாட்டியல் (பொழிப் புரை-*1900)* தண்டியலங்காரம் (பொழிப்புரை-*1903)* யாப்பருங்கலக் காரிகை (புத்துரை - *1908)* அகப்பொருள் விளக்கம் (புத்துரை-*1912)* முதலான நூல்களுக்கும், உரையாசிரியர் எனப்போற்றப் படும் மட்டுவில் ம.க.வேற்பிள்ளை,திருவாதவூரடிகள் புராணம் புலியூரந்தாதி, அபிரா மியந்தாதி, வேதாரணியப்புராணம். கௌளி நூல் முதலான நூல்க ளுக்கும், நன்னூல் காண்டிகை (விளக்கவுரையும்) வில்லிபுத்தூர் பார தம்-சூதுபோர்ச் கருக்கம் முதலான நூல்களுக்கு புலோலி வ.குமாரசு வாமிப்புலவரும் உரை எழுதியுள்ளனர். மேலைப்புலோலி சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை *(?-1906)* கூர்மபுராணம், பழனித்தலபுராணம், ஏகாதசி புராணம் *(1898)* பிரபுலிங்க லீலை முதலான நூல்களுக்கு புத்துரைகளும் நைடதத்திற்கு விருத்தி யுரையும் *(1924)* எழுதியுள்ளார்.

புலோலி சுப்பிரமணியசாத்திரி *(1875-1950)* கந்தபுராணம்- உற்பத்திக் காண்டம், அசுர காண்டம்,மகேந்திர காண்டம், யுத்தகாண்டம் ஆகிய காண்டங்களுக்கும் நீதிவெண்பா, கந்தரனுபூதி, ஏகாதசிப்புராணம் முதலான நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார். சி.தாமோதரம்பிள்ளை *(1863-1921)* சிவஞான சித்தியாருக்கும், திருவிளங்கம் சிவஞானசித்தி யார், கந்தரலங்காரம், சிவப்பிரகாசம், திருப்புகழ் திரட்டு என்னும் நூல்க ளுக்கும், புலோலி சு.சிவபாதசுந்தரனார் *(1877-1953)* திருவருட் பயனுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும், (விளக்கவுரை) சிவானந்தையர் புலியூர்ப்புராணத்துக்கும் கந்தபுராணம் - கந்தவிரதப் படலத்திற்கும், புலோலி,முத்துச்சாமிக் குருக்கள் கந்தபுராணம், உற்பத்திக் காண்டம், அசுரகாண்டம், மகேந்திர காண்டம் முதலான காண்டங்களுக்கும் சிவப்பிரகாச பண்டிதர் (1864-1942) திருச்செந்தூர்புராணத்திற்கும் சிவானந்தலகரிக்கும் (தமிழ் உரை), வி.சுப்பிரமணியம் கந்தபுராணம்-அண்டகோசப் படலத்திற்கும், பண்டிதர் பூபாலபிள்ளை உலகியல் விளக்கத்திற்கும், பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை கந்தபுராணம் தசஷ காண்டத்திற்கும் பண்டிதமணி சுப்பையாப்பிள்ளை கந்தபுராணம்- உற்பத்திக் காண்டம்- திருநாட்டுப் படலதிற்கும், சுந்தரகாண்டத்திற்கும் (1964) சிவத்தியானமாலைக்கும், பண்டிதமணி அருளம்பலவாணர் திருவாசகம், பதிற்றுபத்து, திருமுகாற் றுப்படை முதலான நூல்களுக்கும், பண்டிதமணி நவநீதகிருஷ்ண பாரதி யார் திருவாசகத்திற்கும் உரை எழுதியுள்ளனர். கணேசையர், தொல் காப்பியம் இரகுவம்சம், அகநாநூறு,மேகதூதக்காரிகை முதலான நூல்களுக்கும் உரையாற்றியுள்ளார். வை. நல்லையா கந்தபுராணம் உற்பத்தி காண்டம் (1972)யுத்தகாண்டம் (1974) மகேந்திர காண்டம், (1975) அசுரகாண்டம்(?) ஆகிய காண்டங்களுக்கு உரை எழுதியுள்ளார். கார்த்திகேயயோகி கந்தபுராணம் யுத்த காண்டத் திற்கும் (1971) உரை கண்டுள்ளார். ஏழாலை பண்டிதர் மு.கந்தையா, வ.சிவராசசிங்கம் கரவை.க.கணபதிப்பிள்ளை, வை கா.சிவப்பிரகாசம் வித்துவான், ந.க. வேலன், பண்டிதர் உமாம கேஸ்வரன், வித்துவான் க.கணபதிப்பிள்ளை, சொக்கலிங்கம், பண்டிதர் க.வீரகத்தி, அ.இ.க. கந்தசாமி, வித்துவான் பொன், முத்துக்குமாரு, கரைநகர் வைத்தீஸ்வரக்குருக்கள், கைலை நாதன், பண்டிதர் கா.செ.நடராசா முதலானோர்கள் இக்காலத்து இந் நாட்டு உரையாசிரியர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுக்கும் நாவலரவர்கள் மாணவர் பரம்பரையில் வந்தோருக்குமிடையில் மிகுந்த தொடர்பிருப்பது அவதானிக்கத்தக்கதாகும். இத்தகைய ஈழத்து உரை வளர்ச்சிக்கு நாவலரவர்கள் வளர்த்துச் சென்ற கல்விப் பாரம்பரியமும் நாவலரவர்களின் மாணவர்கள் பரம்பரையுமே காரணம் எனலாம்.

பொதுவாக ஈழநாட்டுத் தமிழ் புலவோர் புராணபடனஞ் செய்தல், காவிய ரசனையில் காட்டிய ஆர்வம் ஆகிய செயற்பாடுகள்,குருகுலக் கல்வியின் பயன் முதலானவற்றால் தமது இலக்கண இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டதோடு, உரை கூறும் திறனையும் வளர்த்துக் கொண்டனர். இத்தகைய செயற்பாடுகள், முயற்சி, ஞாபக சத்தி, புலமை, திறமை முதலான பண்புகள் புலவோரிடத்தில் இயல்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்வதற்கு உந்து சத்தியாக அமைந்தன. இவ்வுந்து சத்திகளின் விளைவாக இங்கு சிறந்த உரையாசிரியர்கள் உருவாகினர். அத்துடன் நாவலரவர்கள் காட்டிய முன்னோடித் தன்மையும் நாவலரவர்கள் தம்மாணவ பரம்பரைக்குக் கற்பித்த முறைமையும் ஊக்கமும் ஈழநாட்டவர் இத்துறையில் மேலும் சிறப்புற்று விளங்கக் காரணமாயின. 19ஆம் நூற்றாண்டின் தமிழ் உரைநூல் வளர்ச்சியை நோக்கின் அதில் ஈழ நாட்டவரின் பங்கு முதன்மையான இடத்தைப் பெறுவதோடு உரையாசிரியர் வரிசையிலும் சிறந்த உரையாசிரியர்கள் என்ற முத்திரையைப் பதித்த பெருமைக்கு உரியவர்களாகவும் விளங்குகின்றனர் எனில் அது மிகையான கூற்றன்று[45].

45. இளங்கதிர், 1993/94, பே.ப.கழக தமிழ்ச் சங்க வெளியீடு, பேராதனை, ப. 102

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - 03

# நாவலரின் பல்துறைப் புலமை

## பொது நோக்கு.

ஓர் உரையாசிரியன் பல்வகைத் திறமைகளைத் தம்முள் கொண்டிருந்தால் மாத்திரமே அவன் சிறந்த உரையாசிரியனாகத் திகழ முடியும். ''இது இன்ன காலத்தில் தோன்றிய நூல் என்ற கால அறிவும், இக்காலத்தில் இச் சொல்லுக்கு இப்பொருள் என்ற சொல்லறிவும், இன்ன காலத்து இருந்த பழக்க வழக்கங்கள் இவை என்ற சமுதாய அறிவும், இத் தொடர் ஓடிக்கிடக்கும் முறை இது என்ற நடையறியவும், நாட்டின் வரலாற்றறிவும், இன்ன பிறவும் **இருந்தால்** தான், உரை எழுதும் பொழுது நினைவுக்கு வந்தால் பொருளை முரணின்றிக் காணமுடியும்'' என்ற சுப-மாணிக்கம் அவர்களின் கூற்று உரையாசிரியருக்கு இருக்க வேண்டிய தகுதிப் பாட்டை வற்புறுத்தி நிற்கும்.

நாவலரவர்கள் சிறந்த கல்வியாளர்; தமிழறிஞர்; நல்லாசிரியர்; சமயப் பிரசாரகர் புராணபடன வித்தகர்; பல நூல்களின் ஆசிரியர்; திருக்கோவையார் - நச்சினார்கினியர் உரை, திருக்குறள் - பரிமேலழகருரை முதலான நூல்களைப் பிழையறப் பரிசோதித்து வெளிப்படுத்தியவர்; புதிய உரைநடை வரலாற்றைத் தோற்றுவித்தவர். நாவலரவர்கள் கல்வியியலோடு கொண்ட ஆர்வம் நாவலரவர்களைத் தமிழ்க் கல்வி உலகத்தின் பொருட்டு பலவகை நூல்களுக்கு உரையெழுதத் தூண்டிற்று எனலாம்.

நாவலரவர்களிடத்திலே காணப்பட்ட பல்துறைத் தமிழ்புலமையினை நாவலரவர்கள் எடுத்தாண்ட மேற்கோள்களிலிருந்தும். அவற்றைக் கருத்தை விளக்கப்பயன்படுத்தும் பல்துறை நூல்களில் இருந்தும் அறிந்து கொள்ள முடிகின்றது. நாவலரவர்கள் தமது உரையின் நீர்மையை வெளிக்கொணரும் வகையில் நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களில் இருந்து கருத்து விளக்கத்தின் பொருட்டும் பொருள் விளக்கத்தின் பொருட்டும் இலக்கண விளக்கத்தின் பொருட்டும் பலமேற்கோள்களை பயன்படுத்தியுள்ளார். உரையின் இடையிடையே ஆசிரிய வசனங்களை எடுத்துக்காட்டி விளக்குவது பொதுமரபாகும். தொல்காப்பியம் நன்னூல் முதலான இலக்கண நூல்கள் மேற்கோளை, உரையின் உறுப்புக்களிளொன்றாகக் குறிப்பிடுகின்றன. தமிழ்மொழியின் ஆளுமையைத்

1. மோகன், இரா., சொக்கலிங்கம், ந., 1988, உரை மரபுகள் மணிவாசகர் பதிப்பகம், சென்னை, பக்.37 - 38

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்முள் பரப்பி வைத்திருந்த நாவலர் புதிய உரை நடைப் பாங்கைத் தமிழ் மொழிக்கு அளித்தவர். அந்நடையின் நீர்மைகள் கவிதைப் பாங்கு முதலான இயல்புகளில் உரையையும் உரைநடையையும் மாலையாகத் தமிழ் மொழிக்கு சாத்தியவர். இவ்வகையில் சங்க இலக்கியங்கள், சிற்றிலக் கியங்கள், திருமுறைகள்,சமய இலக் கியங்கள், புராணங்கள் முதலான தமிழ் இலக்கிய நூல்களையும் ஆகமம், உபநிடதம் முதலான வடமொழி நூல்களையும் நன்னூல் முதலான இலக்கண நூல்களையும் நன்கு பயன் படுத்தியுள்ளார்.

பின்வரும் அட்டவணை நாவலரவர்கள் தம் உரைவளத்திற்குப் பயன்படுத்திய நூல் அடைவினைக் காட்டும்

| | | சை.நெ | திரு | திரு.செ.நீ | மருதூர் | கோ.புரா | நீ.நூ நூல்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | வாயு சங்கிதை | ★ | | | | | |
| 2. | அதர்வசிரசு | ★ | ★ | | | | |
| 3. | பிருகதாரணியம் | ★ | ★ | | | | |
| 4. | சாந்தோக்கியம் | ★ | ★ | | | | |
| 5. | உருத்திரசூத்திரம் | ★ | ★ | | | | |
| 6. | வாயு சங்கிதை | ★ | | | | | |
| 7. | பிரம சூத்திரம் | ★ | | | | | |
| 8. | விம்பதந்திரம் | ★ | | | | | |
| 9. | நீலகண்ட பாஷியம் | ★ | | | | | |
| 10. | சைவபுராணம் | ★ | | | | | |
| 11. | கந்தகலோத்தினம் | ★ | | | | | |
| 12. | காசிகாண்டம் | ★ | | | | | |
| 13. | புறநானூறு | | ★ | | | | |
| 14. | சீவகசிந்தாமணி | | | | | | |
| 15. | திருக்குறள் | ★ | | | | | |
| 16. | திருமுருகாற்றுப்படை | ★ | | | | | |
| 17. | காரணாகமம் | ★ | | | | | |
| 18. | காமிகாகமம் | ★ | | | | | |
| 19. | சுப்பிரபேதம் | ★ | | | | | |
| 20. | சிவதருமோத்திரம் | ★ | | | | | |

சை.நெ : சைவசமய நெறி  திரு: திருமுருகாற்றுப்படை
திரு.செ.நீ: திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதி
மருதூர் : மருதூரந்தாதி  கோ. புரா : கோயிற் புராணம்  நீ. நூ : நீதி நூல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | சை.நெ | திரு | திரு.செ.நீ | மருதூர் | கோ.புரா | நீ.நூ நூல்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 21. | தேவாரம்- திருஞான சம்பந்தர் | ★ | | | | | |
| 22. | திருநாவுக்கரசர் | ★ | ★ | | | | |
| 23. | சுந்தரர் | | | | | | |
| 24. | திருவாசகம் | | | | | | |
| 25. | திருக்கோவையார் | | | | | ★ | |
| 26. | சிவஞானபோதம் | ★ | ★ | | | | |
| 27. | சிவஞான சித்தியார் | ★ | ★ | | | | |
| 28. | சிவப்பிரகாசம் | ★ | | | | | |
| 29. | சங்கற்ப நிராகரணம் | ★ | | | | | |
| 30. | பசுபதிபாசப்பனுவல் | ★ | | | | | |
| 31. | பெரியபுராணம் | ★ | | | | | |
| 32. | கோயிற்புராணம் | | | | | | |
| 33. | அருணகிரி புராணம் | ★ | | | | | |
| 34. | மகோற்சவ தத்துவம் | ★ | | | | | |
| 35. | நிருத்தியகரும நெறி | ★ | | | | | |
| 36. | புறப்பொருள் வெண்பாமாலை | ★ | | | | | |
| 37. | திவாகரம் | | | | | | |
| 38. | பிங்கலந்தை | | | | ★ | | |
| 39. | தொல்காப்பியம் | | ★ | | | | |
| 40. | திருத்தொண்டர் புராணசாரம் | ★ | | | | | |

மேற் காட்டிய நூல் அடைவு, உரைத்திறனில் நாவலரவர்களுக் குள்ள ஈடுபாட்டினை வெளிப்படுத்தி நிற்கும்.

## இலக்கணப்புலமை

பொருளைத் தெளிவுபடுத்துவதற்கும் பொருளின் சிறப்பினை உணர்வதற்கும் சொற்களைச் சரியாகப் பிரித்துப் பொருள் கொள்வதற் கும் இலக்கணம் துணைபுரிகின்றது.[2] ஒருவகையில் இலக்கண அறிவின் துணை கொண்டே இலக்கியத்தில் அமைந்து கிடக்கும் சொல், தொடர், பொருள் முதலியவற்றின் நுட்பத்தை வெளிப்படுத்த இயலும்.[3] நாவலரவர்களது உரைநூல்கள் சிறப்புப் பெறுவதற்கு நாவலர்களுக்

2. சுப்பிரமனியம் க.வே., 1986 அடியார்க்கு நல்லார் உரைத்திறன், உ.த. ஆ. நிறுவன வெளியீடு, 48

3. சுந்தரமூர்த்தி, இ, 1985, பரிமேலழகர் உரைத்திறன், ஐந்திணைப்பதிப்பகம், சென்னை, ப.178

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருந்த இலக்கணப்புலமையும் முக்கிய காரணங்களிளொன்றெனலாம். தொல்காப்பியம், நன்னூல், புறப்பொருள் வெண்பாமாலை முதலான இலக்கண நூல்களின் குறிப்புக்களைத் தமது உரைநூல்களில் எடுத்தாண்டுள்ளார். இலக்கண விளக்கத்தைப் பொருள்விளக்கத்தின் பொருட்டும் மேற்கோள் விளக்கத்தைக் கருத்து விளக்கத்தின் பொருட்டும் கையாண்டுள்ளார். எழுத்து, சொல்லுறுப்புக்கள், சொல்லிலக்கணம், பெயர், வினை முற்று, இடை, உரி, தொடர்மொழி, அருத்தாபத்தி, அணி, வழக்கு முதலான இலக்கணக் கூறுகள் நாவலரவர்களின் உரைநூல் களில் இடையீடின்றி வந்து செல்கின்றன.

## வடமொழிப்புலமை

நாவலரவர்களின் மொழிப்புலமை பற்றிக் கூறவந்த ஆ. முத்துத் தம்பி ''இவர் தமிழ், சமஸ்கிதேம், ஆங்கிலம் என்னும் முப்பாஷைகளையுங் கற்று அப்பாஷைகளிலே வியவகாரசத்தி வந்த பின்னர் தமிழையே முற்றாகக் கற்கும் பேரவாவுடையராயினார்'' என்பார். இக் கூற்று நாவலரவர்கள் ஆங்கிலத்தைப் போல் வடமொழியினையும் நன்கு பயின்றறிந்தார் என்பதைப் புலப்படுத்தும். தமது தமிழ் சைவப்பணிகளின் மேம்பாட்டிற்கு வடமொழி அறிவு இன்றியமையாதது என்பதை நாவலரவர்கள் உணர்ந்திருந்தவர். தமது பதிப்பு நூல்களிலும் ஆக்கங்களிலும் உரைநூல்களிலும் இலக்கண நூல்களிலும் வடமொழி நூற்கருத்துக் களைப் பொருள் விளக்கத்தின் பொருட்டும் சொல் இணக்க விளக்கத்தின் பொருட்டும் நன்கு பயன்படுத்தி உள்ளார். நன்னூலில் பதவியலில் வடமொழியாக்கம் என்னும் பகுதியிலும் மற்றும் உரைநூல்களில் வேண்டும் இடங்களிளெல்லாம் மேற்கோள் காட்டி விளக்குவதற்குப் பயன்படுத்தி உள்ளார். சைவசமயநெறியுரை நாவலரவர்களின் வடநூற் புலமைக்கு ஒரு உரை கல்லாக அமைந்து விடுகின்றது. நன்னூலில் 146-149ஆம் சூத்திரம் வரை அடங்கி நான்கு சூத்திரங்களுக்கு நாவலரவர்கள் எழுதிய பதவுரைகளும் உதாரணக்குறிப்புக்களும் விளக்கவுரைகளும் நாவலரவர்களுக்கு வடமொழியில் இருந்த புலமையைச் சிறப்பை எடுத்துக்காட்டுவன. நன்னூலுக்கு விருத்தியுரை எழுதிய சங்கர நமச்சிவா யப்புலவரும் அதனைத் திருத்திய சிவஞான சுவாமிகளும் நாவலரவர்கள் போன்று விளக்கவுரை செய்யத் தவறிவிட்டனர் என்றே கூறுதல் வேண்டும். 146ஆம் சூத்திரம் ஆரிய மொழியிலுள்ள உயிரெழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள், சிறப்பெழுத்துக்கள் ஆரியத்துக்கும் தமிழுக்கும் பொதுவெழுத்துக்கள் முதலானவற்றைக் குறிப்பிடும். அச்சூத்திரம் வருமாறு.[4]

---

4. ஆறுமுகநாவலர், 1984, நன்னூற் காண்டிகையுரை, தமிழ்பல்கலைக்கழக வெளியீடு, ப.18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையி னான்கு மீற்றி லிரண்டும்
அல்லா வச்சை வருக்க முத லீறி
யவ்வாதி நான்மை ளவ்வாகு மையைம்
பொதுவெழுத் தொழிந்தநாலே ழுந்திரியும்
(நன்னூல் 146)

இதற்கு விளக்கவுரை கூறவந்த நாவலரவர்கள் வடமொழிக் கிரந்த வரிவடிவ எழுத்தை அடிப்படையாகக் கொண்டு உரை செய்திருப்பது நோக்கத்தக்கது.[5]

**கலை நோக்கு**

நாவலரவர்கள் அழகியற் கலைகளிலும் நாட்டார் வழக்காற்றுக் கலைகளிலும் நாட்டம் அற்றவர் என்பது நாவலரவர்கள் மேல் சுமத்தப்படும் பொதுவான குற்றச் சாட்டாகும். உண்மையில் நாவலரவர்கள் இரண்டு கலைகளையும் வரவேற்றவர். நாவலரவர்களின் குடும்பம் கலைகளில் வாஞ்ஞை உள்ள கலைக்குடும்பம். அக்குடும்பம் இக்கலைகளை ஆத்மீகத்தோடும் அறவொழுக்கத்தோடும் இணைத்தே பார்த்தது. இவை இரண்டும் கலைகளில் நின்றும் பிரிக்க முடியாத இரண்டற்ற தன்மை கொண்டவை என்றே கருதினர். அத்துடன் ஆத்மீகம், அறம் ஆகிய இரண்டும் வளர்வதற்கு கலைகள் ஊடகமாக விளங்க வேண்டுமென்றே எதிர்பார்த்தனர். அதற்காகவே ஆக்கங்களை ஆக்கி அளித்தனர். நாவலரவர்களின் தந்தையார் கந்தப்பர் இருபதுக்கு மேற்பட்ட நாடகநூல்களை எழுதினர் என்பது வரலாறு. நாவலரவர்கள் தனது தந்தையார் எழுதி முடியாது விட்டுச் சென்ற நாடகத்தைப் பாடி முடித்தார் என்பதும் ஒரு வரலாற்றுக் குறிப்பு. எனவே கூத்துக் கலையின் இலக்கணங்களை நன்கறிந்தவர். பஞ்சபுராணம் ஓதுதல், புராணபடனஞ் செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ளும் பொழுது இசைமரபு பிறழாது செய்யப் படல் வேண்டும் என்பதை வற்புறுத்தி வளர்த்து வந்தவர்; உருத்திர கணிகைகளுக்குரிய இலக்கணம் காட்டியவர். தமிழ் நாட்டிலும் ஈழ நாட்டிலும் ஓதுவார்களைக் கொண்டு பண்ணோதுவித்து அக்கலையை வளர்த்தவர்; நாவலரவர்களுக்கிருந்த நுண்கலைகளின் அறிவினை சைவசமய நெறி உரையில் பரக்கக் காணலாம். எடுத்துக் காட்டாக ஒன்றினை நோக்கலாம்.

''ஆதரவி னாலே யமலன் முடிக்கணிவித்
தோதித் துதியு முகந்து''
(இ. கு. 8)

---

5. மேலது நூல், ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் குறளுக்கு ''சிரத்தையினோடும் சிவ பெருமானுடைய திருவடியிலே.... சாத்துவித்து இத்திருத்தொண்டு செய்யும் பெரும் பேறு பெற்றேனேயென்று மகிழ்ந்து, முப்பத்திரண்டு ராகங்களுள் அவ்வக் காலத்துக்கேற்ற இராகத்துடனே தோத்திரங்களைச் சொல்லி''[7] என நாவலரவர்கள் பதவுரை கூறியதோடு அமையாது முப்பத்திரண்டு இராகங்களையும் அவை எவ்வெக் காலங்களில் பாடப்படவேண்டும் என்பதையும் விளக்க உரையில் பின்வருமாறு குறிப்பிடுவார்.[8]

''முப்பத்திரண்டிராகங்களாவன: பைரவி, தேவக்கிரியை, மேக ரஞ்சி, குறிஞ்சி, பூபாளம், வேளாவளி, மலகரி, பௌளி, ஸ்ரீரா கம், இந்தோளம், பல்லதி,சாவேரி, பட மஞ்சரி, தேசிலலிதை, தோடி, வசந்தம், ராமக்கிரியை, வராளி கைசிகம், மாளவி, நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, பங்காளம், தன்னியாசி, காம்போதி, கௌசி, நாட்டை, தேசாக்ஷரி, காந்தாரி, சாரங்கம் என்பனவாம்.

''வசந்தகால விராகம்: காம்போதி, அசாவேரி,தன்னியாசி; அன்றியும் மாலையிராகம்: கலியாணி, காபி, கன்னடம், காம்போதி, யாமராகம்; ஆகரி, விடியலிராகம் இந்தோளம், இராமகலி, தேசாக்ஷரி அன்றியும் ஆகரி, இந்தோளம், இராமகலி சாரங்கம், பூபாள நீக்கி நின்ற மற்றவை எக்காலத்துக்கும் பொதுமைய''

கருநாடக சங்கீதமோ தமிழிசையோ நன்கு வளர்ச்சி பெறாத காலகட்டத்தில் தமிழோடு இசைந்த கலைகளில் மிகுந்த நுண்ணறி வினைப் பெற்றிருந்தவர் நாவலரவர்கள் என்பதை மறுப்பது கடின மாகும். நாவலர்களுடைய குரலோசையோ வெகுதூரத்திலிருப்பவர்க ளுக்குங் கேட்கத்தக்க தொனியும் மதுரமும் உடையது. எல்லாவகையான இராகங்களும் இவருக்கு வரும் என்ற கூற்று எல்லோராலும் மனங்கொள் ளப்பட வேண்டிய தொன்றாகும்.[9]

**யோகம்**

இரவில் சலமெடுக்கும் பொழுது பதினொரு மந்திரங்களையும் வாயினாலே உச்சரித்து மூன்று தரம் பிராணாயாமம் பண்ணுதல் வேண் டும் என்பார் மறைஞான சம்பந்தர்.[10] நாவலரவர்கள் பிராணாயாமம் செய்தலை யோகமார்க்க வழி நின்று;

---

6. ஆறுமுகநாவலர், 1955, சைவசமயநெறி மூலமும் உரையும், ப. 60
7. மேலது நூல், ப. 60     8. மேலது நூல், த.,1930, ப.60
9. கைலாசபிள்ளை, த., 1930, ஆறுமுகநாவலர் சரித்திரம், கலாநிதியந்திரசாலை, பருத்தித்துறை, ப. 34     10. மேலது நூல், ப. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பிராணாயாமமென்பது ஆயாமமெனத் தலைக் குறைந்து நின்றது. பிராணவாயுக்களைத் தடுத்தலே பிராணாயாமம். அது இரேசகம் பூரகம் கும்பகம் என மூன்று பகுதிகளை உடையது. அவற்றுள் இரேசகமாவது அகத்திலுள்ள வாயுவைப் புறத்தே கழித்தல்; பூரகமாவது புறத்துள்ள சுத்தவாயுவினாலே இயன்ற மட்டுஞ் சரீரத்தை நிறைவித்தல்; கும்பகமாவது கழித்தலையும் உட்கொள்ளுதலையும் ஒழித்து உள்ளே உள்ள வாயுவைத்த டுத்து நிறுத்தல்''.[11]

என உரைப்பது அத்துறையில் அவருக்கிருந்த மெய்யியல் அறிவைப் புலப்படுத்தும்.

**சோதிடம்**

சடசீதி என்று சொல்லப்பட்ட புண்ணிய காலங்களிலே நீராடல், சிவபூசை, ஓமம், செபம்,தியானம் முதலாகிய நித்தியகருமங்கள் எல்லாவற்றையும் இரு மடங்கு செய்தல் வேண்டும் என்பார் மறைஞான சம்பந்தர்.[12] நாவலரவர்கள் புண்ணிய காலங்கள் என்பவற்றை **சோதிடசாத்திரம்** கூறுபவற்றைக் கொண்டு,

''சடசீதிமுக நான்கினும் மாசம் பிறந்த பதினாறு நாழிகை புண்ணியகாலம். கார்த்திகை, மாசி, வைகாசி, ஆவணி என்னும் இந்நான்கு மாச சங்கிரமமும் விட்டுணு பதியெனப்படும். இவைகளிலே மாசம் பிறக்குமுன் பதினாறு நாழிகை புண்ணிய காலம். தக்ஷிணாயனமாகிய ஆடிமாச சங்கிரமத்திலே மாசம் பிறக்குமுன் பதினாறு நாழிகை புண்ணியகாலம். உத்தராயணமாகிய தைமாச சங்கிரமத்திலே மாசம் பிறந்த பின் பதினாறு நாழிகை புண்ணிய காலம். சித்திரை விஷு ஐப்பசி விஷு என்னும் இரண்டினும் மாசம் பிறத்தற்கு முன்னெட்டு நாழிகையும் பின்னெட்டு நாழிகையும் புண்ணியகாலம். சூரிய கிரகணத்திலே பரிசகாலம் புண்ணியகாலம். சந்திரகிரகணத்திலே விமோசன காலம் புண்ணியகாலம்''[13]

என விளக்குவது நாவலரவர்களது சோதிட சாத்திரப் புலமைக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

**படிமவியல் பிரமாணங்கள்**

கலை வடிவங்கள் பல்வகைப் பிரமாணங்களுக்கு அமைய வடிக்கப்பட வேண்டும் என்பது சிற்ப, ஆகம விதியாகும். அவ்விதிக

11. மேலது நூல், பக் 97 - 98 12. மேலது நூல், ப. 82 13. மேலது நூல், ப. 82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுள் அளவை என்பது பிரதான பகுதியாகும். அளவைப் பிரமாணங்க ளைச் சிற்ப சாத்திர நூல்கள் அங்குலம் தாலம் எனச்சுட்டும். இது பேராங்குலம், மானாங்குலம், மாத்திராங்குலம் தேகலத் தாங்குலம் என நான்குவகைப்படும். பேராங்குலம் என்பது விக்கிரதத்தின் விரலகலத் தைப் பிரமாண மாக கொண்ட அங்குலமாகும். மானாங்குலம் என்பது பொதுவான அளவைப் பிரமாணமாகும். மாத்திராங்குலம் என்பது கர்த்தாவின் நடுவிரலில் நடு இடைவெளி காட்டும் அளவு. தேகலப்தாங் குலம் என்பது உருவத்தை நூற்றிருபதாறு, நூற்றிருபது அல்லது நூற்றுப் பதினாறு பகுதிகளாகப் பிரிக்க வரும் அங்குலம்[14]. இவ்வளவைப் பிரமா ணங்கள் ஒவ்வொன்றும் உத்தமம், மத்திமம், அதமம் என மூன்று வகை ப்படும்.

நாவலரவர்கள் சைவசமயநெறி உரையில் மூன்று இடங்களில் அளவைப்பிரமாணங்கள் பற்றி எடுத்துக் குறிப்பிட்டுள்ளார். கூர்மதானம் செய்யும் பொழும் (பொ.இ.60) தண்டினிலக்கணம் கூறும் பொழுதும் (பொ.இ.361) இட்டலிங்க பூஜைக்குரிய மண்டபத்தைச் செய்யும் முறைபற்றிக் கூறும்பொழுதும் அளவைப் பிரமாணங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

''மண்டபத்தை ஒன்பது முழத்தினுஞ் சிறக்கச் செய்க;

ஏழு முழத்தினும் எண் பொருந்திய ஐந்து முழம்

மூன்று முழத்தினும் செய்யற்க (480) என மறைஞான சம்பந்தர் குறிப்பிடுவார்[15] இது அளவைப் பிரமாணங்களுள் மானாங்குல அள வைப் பிரமாணத்துக்குட்படுவது. நாவலரவர்கள் இதன் விளக்க உரையில்

''முழமாவது மானாங்குலம் இருபத்து நான்கு கொண்டது. மானாங்குலம் உத்தமம், மத்திமம், அதமம் என மூவகைப்படும், எட்டு நெல்லுக்குறுக்குக் கொண்டது உத்தமம், ஏழு மத்திமம் ஆறு தமம் அன்றியும் நான்கு நெல்லு நீளங் கொண்டது உத்தமம், மூன்றரை மத்திமம், மூன்று அதர்மம்[16]'' எனக் குறிப்பிடுவது அளவையியல் பிரமா ணங்களில் அவருங்கிருந்த ஈடுபாட்டையும் அறிவையும் காட்டும்.

## இலிங்கமும் மூர்த்தி பேதங்களும்

நாவலரவர்கள் கலைப்படைப்புக்கான அளவைகளை மாத்திரம் அறிந்திருந்தாரல்லர். படிமவியல் பற்றிய அறிவும் புலமையும் நாவலர

---

14. கைலாசநாதக்குருக்கள், கா., 1963, சைவத்திருக்கோயிற் கிரிதயநெறி, மெய்கண்டான் அச்சகம், கொழும்பு, ப. 148
15. ஆறுமுகநாவலர், 1955, சைவசமயநெறி மூலமும் உரையும், ப. 272
16. மேலது நூல், ப. 273

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களுக்கு இருந்தது. இலிங்கம் பற்றியும் இலிங்க பேதம் பற்றியும் பிற விக்கிரங்கள் பற்றியும் மிகுந்த புலமை பெற்றிருந்தார்.

'மணிவாண லிங்கமிர தஞ்சுயம்பு தானு
மெணிலிவை யொன் றுக் கொன்றேற்றம்'
(பொ.இ.கு.81)

என்னும் குறளில் வரும் **''இவை யொன்றுக் கொன்றேற்றம்''** என்னும் தொடரை விளக்கப்போந்த நாவலரவர்கள்

''பச்சை மண்ணிலிங்கத்தினும் சுட்டமண்ணிலங்கம் பதின் மடங்கதிகம், அதினும் தாருலிங்கம் பதின்மடங்கதிகம். அதினும் சைவலிங்கம் பதின் மடங்கதிகம், அதினும் இரத்தின லிங்கம், அனந்த மடங்கதிகம், அதினும் மணிலிங்கம் இலக்ஷ மடங்கதிகம், அதினும் வாணலிங்கம் கோடிமடங்கதிகம், அதினும் இரசலிங்கம் கோடி மடங்கதிகம், அதிலுமதிகம் சுயம்புலிங்கம்.

ஆயிரஞ் சாளக் கிராமத்துக்குச் சமம் ஒரு சிவநாபம் ஆயிரஞ் சிவநாபத் துக்குச் சமம் ஒரு படிகலிங்கம். பன்னிரண்டிலக்ஷம் படிகலிங்கத்துக் சமம் ஒரு வாணலிங்கம்''[17]

எனக்குறிப்பிடுவது இலிங்கம் பற்றிய நாவலரவர்களது நுட்பமான அறிவைப் புலப்படுத்தும்.

''பீடமுஞ் சிவலிங்கமுமாயிருப்பது **அவ்வியத்தலிங்கமாம்** கரசரணாதியவயவங்களெல்லாம் விளங்கும் இருபத்தைந்து விக்கிர பேதங்களும் வியத்தலிங்கமாம்''
(பொ.இ.119)

என வியத்தலிங்கம் என்றால் என்ன என்பதனை மறைஞான சம்பந்தர் குறிப்பிடுவார்[18]. நாவலரவர்கள் இதனை மேலும் விளக்குகை யில் அவ்வியக்தலிங்கத்தின் பகுப்பு முறைகளையும் அதன் பேதங்களை யும் சிறப்பாக எடுத்துக் காட்டுவார்.

''அவ்வியத்தலிங்கம் சருவதோபத்திரம், வரகுத்தமானம், சைவாதிகம், ஸ்ரீராசிகம் என நான்கு வகைப்படும் அவை ஒவ் வொன்றும் நந்நான்காய்ப் பதினாறாம்; அவை ஒவ்வொன்று நந்நான்காய் அறுபத்து நான்காம்''.[19]

என அவற்றின் வகைகளை விளக்கிய நாவலரவர்கள், அவற்றின் இருபத்தைந்து பேதங்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது

''இருபத்தைந்து பேதங்களாவன சந்திரசேகரர், உமாமகேசர்,

---

17. மேலது நூல், ப. 112 18. மேலது நூல், ப. 126 19. மேலது நூல், ப. 127

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடபாருடர், சபாபதி, கலியாணசுந்தரர், பிக்ஷாடனர்,காமாரி, கலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், ஹரியர்த் தர். அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக் கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், கசமுகாநுக்கிரகர், சோமஸ் கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தக்ஷிணா மூர்த்தி, லிங்கோற்பவர் என்பன வாம்'' என்பார்.[20]

நாவலரவர்கள் காட்டும் இவ்வியத்தலிங்க பேதங்கள் ஸ்ரீதத்துவ நிதி முதலான சிற்பநூல் தரும் குறிப்புக்களை ஒத்தனவாகும்[21]. இவ்வ கையில் நாவலர்களுக்கு விக்கிரவியல் பற்றி இருந்த புலமை அவரது பல்வகைப் புலமைகளுள் ஒன்றெனலாம்.

**மனையின்பம்**

நாவலரவர்கள் மனையின்பம் அல்லது புணர்ச்சி பற்றி கூறும் கருத்துக்கள் பெரிதும் நவீன உடற்கூற்று மருத்துவர்கள் ஒப்புக்கொள் ளும் வகையில் அமைந்துள்ளன எனக் குறிப்பிடலாம். சைவசமய நெறியில் பெண்களைப் புணர்தலாகாக் காலம் பற்றிய சில குறள்கள் வருகின் றன. (பொ.இ.கு.223-226) இக் குறள் உரைகளுக்கு அப்பால் நின்று நாவலரவர்கள் சில மனையியல் இன்பம் பற்றிய சில குறிப்புக் களைத் தருகின்றார். பிறர் மனைவியரை நயவாமை. (அ)பகற்புணர்ச்சி (ஆ)புணர்ச்சிக்கு விலக்கப்பட்ட நாட்கள் (இ) புணர்ச்சி செய்யத் தகுதி உடையோர் (உ) புணர்ச்சி இன்பம் துய்த்தல் (ஊ) ருது காலம் என்பன அவற்றினுள் முக்கியமானவையாகும்.

(அ) **பிறர் மனைவியரை நயவாமை**

பிறர் மனைவியரை இம்சித்துப் பார்த்த கண்களிலே யமதூதர்கள் முளையடித்து வருத்தஞ் செய்வார்க ளென்று சிவதருமோத்திரஞ் செப்புதலறிக.[23]

(ஆ) **பகற்புணர்ச்சி**

பகற்புணர்ச்சி செய்தாருக்கு வயது குன்றுமென்க.

(இ) **புணர்ச்சிக்கு விலக்கப்பட்ட நாட்கள்**

சென்மந்திரங்களாவன பிறந்த நக்ஷத்திரமும் அதற்குப் பத்தா நக்ஷத்திரமும், அதற்குப் பத்தா நக்ஷத்திரமுமாகும். ஏகாதசி,திரையோதசி,மகம், மூலம், விதிபாதயோகம், மாசப்பிறப்பு, விரததினம் சிராத்ததினம், சிராத்ததினத் திற்கு முதற்தினம், சிரார்த்த தினத்துக்கு மற்றைத்தினம்,

---

20. மேலது நூல், ப. 127 21. மேலது நூல், ப.170 22. மேலது நூல், ப. 170
23. மேலது நூல், ப. 171 24. மேலது நூல், ப. 171

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தியா காலங்கள், அர்த்தராத்தரி என்பவைகளும் புணர்ச்சிக்கு விலக்கப் பட்டன வென்க.[24]

(ஈ) **புணர்ச்சி செய்யத் தகுதி அற்றோர்**

பிரமசாரியும் வானப்பிரத்தனும் சந்நியாசியும் புணர்ச்சியை நினைத்தலுமாகாது.[25]

(உ) **புணர்ச்சியின்பம் துய்த்தல்**

''இல்வாழ்வான் மாசத்துக்கு ஒரு நாள் இராத்திரிகாலத்திலே தன்மனைவியோடு மாத்திரங் கூடல் வேண்டும் இப்படிக் கூடினால் தாய்க்கும் தந்தைக்கும் அவருக்கு உற்பவிக்குங் குழந்தைக்கும் சரீரம் திடமாயிருக்கும். வியாதி வராது; வந்தாலும் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும். வயசினாலே தன்னின் மூத்தவர்களோடும், பிறன் மனைவியோடும் பொதுப் பெண்ணோடுங் கூடினும் வியாதி உண்டாகும். தன்மனைவியோடும் மாசத்துக் கொருதரமன்றிப் பலதரங் கூடினும், வியாதி உண்டாகும். மாசத்துக்கு ஒரு நாளென்றதும் ருதுகாலத்துட்பட்டதாயும் விலக்கப்பட்ட நாளல்லாததாயும் இருத்தல் வேண்டும்.[26]

(ஊ) **ருதுகாலம்**

''பெண்கள் வீட்டுக்கு விலக்காகு நாண்முதற் பதினாறு நாள் வரையும் உள்ள காலம் ருதுகாலம் எனப்படும். அக்காலத்தில் ஐந்தாநாண்முதற் பதினாறாநாள்வரையும் உள்ள பன்னிரண்டு நாளுமே கருத்தரிக்கும் காலம். இந்தப் பன்னிரண்டு நாளினுள் புணர்ச்சிக்கு ஆகாவென விலக்கப்பட்ட நாட்களை ஒழித்து மற்றைய நாட்களிலே மனைவியோடு கூடுதல் வேண்டும். **இரட்டித்த நாட்களிற் கூடிற் புத்திரனும், ஒற்றித்த நாட்களிற் கூடிற் புத்திரியும் பிறப்பர்;** ஆதலினாலே புத்திரவிருப்பமுடையவன் இரட்டித்த நாட்களிற் கூடல் வேண்டும்.[27]''

மேற்கூறிய நாவலரவர்களின் மருத்துவக் கருத்துக்கள் சில நவீன மருத்துவக்கருத்தக்களோடு உடன்படுவனவாயும், சில சமூக அநுமானங்களையும் விருப்பையும் பிரதிபலிப்பனவாயும் அமைவன. இவை நாவலர்களின் சமுகவியல் சிந்தனையைப் பிரதிபலிப்பனவாகவே கொள்ளுதல் வேண்டும்.

---

25. மேலது நூல், ப. 171  26. மேலது நூல், ப. 171  27. மேலது நூல், ப. 172

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் – 04
## நாவலரின் பல்துறைப் புலமை
## சிறப்பு நோக்கு

### சைவ சமய நெறி

இந்நூல் சிதம்பரம் மறைஞான சம்பந்த நாயனரரால் இயற்றப் பெற்றது. குறள் வெண்பாவால் ஆக்கப் பெற்றது. காப்பு, பாயிரம் உட்பட மொத்தம் 727 குறள் வெண்பாக்களைக் கொண்டது. பாயிரம் நீங்கலாக ஆசாரியரிலக்கணம், மாணவரிலக்கணம், பொதுவிலக்கணம் என்னும் மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது.

நாவலரவர்கள் தமிழ் இலக்கிய இலக்கணங்களில் மிகுந்த புலமை மிக்கவர். திருக்குறள் - பரிமேலழகருரை, திருமுருகாற்றுப்படை- நச்சினார்க்கினியருரை ஆகிய உரைநூல்களிலும், வில்லிபுத்தூரர் - பாரதப் பதிப்பு முதலானவற்றிலும் காணப்பெற்ற வழுக்களைத் தயங்காது சுட்டிக் காட்டியவர் நாவலரவர்கள். அவ்வகையில் அந்நூல்களுக்கு நாவலரவர்கள் புதிய உரை செய்திருக்கலாமே என்னும் வினா எழுவது இயல்பாகும். நாவலரவர்கள் தமிழ்மொழியைக் கருவியாகக் கொண்டு சைவத்தை வளர்க்க முற்பட்டவர். தம் காலத்துக்கு முற்பட்ட உரையாசிரியர்கள் அனைவரையும் மதித்துப் போற்றியவர். அவர்களின் உரை நூல்களில் சிற்சில இடங்களில் கருத்து மயக்கம், தெளிவின்மை ஏற்பட்டிருக்கலாம். அத்தகைய சிறிய குறைபாடுகள் உரையாசிரியர்களின் திறமைகளைக் குறைத்து மதிப்பிட இடமளியாது என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தார். உரையாசிரியர்களுள் பரிமேலழகர் எழுதிய உரைகளையும் நச்சினார்க்கினியர் எழுதிய உரைகளையும் உச்சிமேல் வைத்துப் போற்றி வந்தார். இவ்வுரையாசிரியர் மேல் நாவலரவர்கள் கொண்ட ஈடுபாடு இவ்வுரையாசிரியர் போல் தாமும் உரை எழுத வேண்டும் என்னும் உணர்வையும் பேரார்வத்தையும் அவர்பால் தூண்டிற்று. நாவலரவர்கள் சைவசமய நெறிக்கு உரை எழுதியமைக்கு இத்தகைய பேரார்வமும் முக்கிய காரணங்களுள் ஒன்றெனலாம்.

### பல்நூல் புலமை

திருக்குறள் தமிழ் மக்களது உயர்சிந்தனையினதும் அறக்கோட்பாட்டினதும் வெளிப்பாடு என்பதை நாவலரவர்கள் நன்குணர்ந்தவர். அதற்குப் பரமேலழகரின் உரை நாவலரவர்களது எண்ணத்திற்கு அழுத்தம் கொடுத்தது போல் இருந்தது. திருக்குறள் போன்று குறள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பாக்களால் ஆக்கப்பட்டு சைவமக்களின் ஒழுக்கவியல் கோட்பாடுகளை வற்புறுத்தும் சைவசமயநெறிக்குச் சைவ மக்களின் சமய ஒழுகலாறுகளை மனங்கொண்டு பரிமேலழகர் போன்று நாவலரவர்கள் உரையெழுத முற்பட்டமை ஒரு தற்செயல் நிகழ்ச்சியன்று.

நாவலரவர்கள் சைவசமயநெறிக்கு எழுதிய உரையின் உரைநெறிகளுள் அவரது பல்துறைப் புலமையை வெளிப்படுத்தி நிற்பது மேற்கோள்களாகும்.

உரையெழுதும் பொழுது இடையிடையே மேற்கோள்களை எடுத்துக் காட்டி நூலின் பொருள் மரபினை உறுதிப்படுத்துதல் உரைமரபாகும்.[1] மேற்கோள் காட்டல் உரை மரபின் ஒரு பகுதியாகும். இதன் வெற்றி உரையாசிரியரின் பல்வகைப் புலமையிலும் மொழியைக் கையாளும் விதத்திலும் தங்கியுள்ளது.[2] நாவலரவர்கள் உரையின் இடையே இவ்விலக்கிய இலக்கண அருந்தொடர்புகளைச் செய்து உரைக்கு அழகும் வனப்பும் சேர்த்துள்ளார். நாவலரவர்கள் இந்நூலின் பொருள் மரபினை விளக்கும் வகையில் **இருபத்தைந்து** நூல்களுக்கு மேற்பட்ட பெயர் சுட்டப்பெறாத மேற்கோள்களையும்[3] பெயர் சூட்டிய **இருபது** நூல்களில் இருந்து பல மேற்கோள்களையும் எடுத்துக்காட்டிக் கலைப்பண்பும் தத்துவமும் உடைய படைப்பாக இந்நூலை வெளிப்படுத்தி உள்ளார். நாவலரவர்கள் வடமொழி நூல்களையும் குறிப்பாகச் சங்கிதைகள் ஆகமங்கள் பிரம சூத்திரம் முதலான நூல்களையும் தமிழில் எழுந்த திருமுறைகள் புராணங்கள் முதலான இலக்கிய நூல்களையும் சைவ சித்தாந்தம் சைவசமய ஒழுகலாறுசார்ந்த நூல்களையும் நன்கு பயன்படுத்திப் பல்லோரும் பயின்று பயன்பெறும் வகையில் இந்நூலை ஆக்கி உள்ளார். இந்நூலில் நாவலரவர்கள் மேற்கோளாகப் பயன்படுத்திய இடங்களையும் நோக்கங்களையும் பின்வரும் அடைவு நன்கு புலப்படுத்தும்.

| எண் | எடுத்தாண்ட இலக்கிய நூல்கள் | எடுத்தாண்ட இடங்களின் மொத்த எண்ணிக்கை | பயன்படுத்திய நோக்கம் | | |
|---|---|---|---|---|---|
| | | | பொ.வி | சொ.வி. | இ.வி |
| 1. | காமிகம் | 1 | 1 | - | - |
| 2. | சுப்பிரபேதம் | 3 | 3 | - | - |
| 3. | கிரணாகமம் | 1 | 1 | - | - |
| 4. | அஞ்சுமான் | 1 | 1 | - | - |
| 5. | காரணாகமம் | 1 | 1 | - | - |
| 6. | சிவதருமோத்திரம் | 5 | 5 | - | - |

பொ.வி.-பொருள் விளக்கம்- இ.வி இலக்கண விளக்கம்- சொ.வி.சொல் விளக்கம்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம்; மரபியல் 650
2. சுந்தரமூர்த்தி, இ. 1995 பரிமேழலகர் உரைத்திறன், பக், 43,44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | சங்கர சங்கிதை | 1 | 1 | - | - |
| 8. | வாயு சங்கிதை | 1 | 1 | - | - |
| 9. | கந்தகாலோத்திரம் | 1 | 1 | - | - |
| 10. | நீல கண்ட பாஷ்யம் | 1 | 1 | - | - |
| 11. | திருநாவுக்கரசர்தேவாரம் | 3 | 3 | - | - |
| 12. | திருமந்திரம் | 1 | 1 | - | - |
| 13. | சங்கற்ப நிராகரணம் | 2 | 2 | - | - |
| 14. | பதிபசுபாசப்பனுவல் | 1 | 1 | - | - |
| 15. | நித்திய கருமநெறி | 1 | 1 | - | - |
| 16. | உருத்திராக்க வசிட்டம் | 1 | 1 | - | - |
| 17. | சைவபுராணம் | 1 | 1 | - | - |
| 18. | பெரிய புராணம் | 1 | 1 | - | - |
| 19. | திருத்தொண்டர் புராணசாரம் | 1 | 1 | - | - |
| 20. | அருணகிரிப்புராணம் | 1 | 1 | - | - |

நாவலரவர்கள் எடுத்துக் காட்டிய தமிழ்மொழி இலக்கிய இலக்கண மேற்கோள்கள் பெரிதும் முழுமையானவையாகவும் அவற்றுள் பல ஒன்றிற்கு மேற்பட்டனவாகவும் அமைந்துள்ளன. வடமொழி மேற்கோள்கள் சுருக்கமானவையாக அமைந்துள்ளன. இம்மேற் கோள்கள் சொல், பொருள், இலக்கணம் ஆகியவற்றை விளக்கும் பொருட்டு எடுத்தாளப்பட்டன. மேற்கொள்களைப் பொருள் விளக்கத்துக்காக எடுத்தாளும் பொழுது நூற்பொருளின் உடன் பாட்டிற்காகவும் எதிர்மறைக்காகவும் எடுத்தாளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க தொன்றாகும். மேலே காட்டிய அடைவுகளைப் பின்வரும் அடிப்படையில் பகுத்துச் சுருக்கமாக நோக்கலாம்.

## திருமுறைகள்

திருமுறை நூல்களுள் திருநாவுக்கரசு நாயனார் தேவாரம், திருமந்திரம் ஆகிய நூல்களை மேற்கோள்களாகக் காட்டியுள்ளார்.

| எண் | திருமுறைகள் | எடுத்தாண்ட இடங்களின் மொத்தத் தொகை | பயன்படுத்தியதன் நோக்கம் பொ.வி.சொ.வி.இ.வி |
|---|---|---|---|
| 1. | திருநாவுக்கரசுநாயனார் தேவாரம் | 3 | 1 |
| 2. | திருமந்திரம் | 1 | 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

திருநாவுக்கரசு நாயனார் மீது மாறாத அன்பு பூண்டவர் நாவலரவர்கள். நாவுக்கரசர் மேல் தாம் கொண்ட அன்பின் பெருக்கைப் பெரிய புராண சூசனத்தில் நன்கு காட்டியுள்ளார். நாயன்மார்களுள் முதன்மையான இடத்தை நாவுக்கரசருக்கே கொடுக்க விழைந்தார். நாவலரவர்கள் தமது உரைகளில் நாவுக்கரசரின் கருத்துக்களுக்கே முதன்மை அளித்து வந்தார். அவ்வகையில் அவரது பாடல்களை எடுத்தாண்டார். சைவசமய நெறி உரையினைப் பொறுத்த மட்டிலும் மிகுதியான இடங்களில் நாவுக்கரசரின் பாடல்களை எடுத்தாண்டுள்ளார். மூன்று இடங்களில் நாவுக்கரசரின் தேவாரங்களை ஆட்சிப்படுத்தியுள்ளார்.[4] அவை பொருள் விளக்கத்தின் பொருட்டு உடன்பாட்டுப் பொருளிலும் எதிர்மறைப் பொருளிலும் எடுத்தாண்டுள்ளார். எடுத்துக்காட்டாகக் கூறின்:

நாவலரவர்கள் குறள்களில் வருகின்ற பொருள் மரபுகளுக்கமைய அவற்றைத் தொகுத்துக் கருத்துரை வழங்குவதோடு, வேண்டிய இடத்து மேற்கோள்களையும் எடுத்துக்காட்டுவார். அவ்வகையில் மாணவரிலக்கணத்தில் கூறும் சிவபுண்ணியங்களிளுள் சிவனை வழிபடும் முறையினை வகுத்துக் கூறும் பொழுது மூன்று சூத்திரங்களால் (மா.இ.கு.7-9) சிவ புண்ணிய மகிமை உரைக்கப்படுகின்றது. முதற் சூத்திரம் ஆலய வழிபாட்டின் முறையினையும் சிறப்பினையும் எடுத்துரைக்கும்.

அதுவருமாறு

''**சென்றா லயத்துட் டிருவலகிட் டேமெழுகித்**
துன்றுமலர் கொய்து தொடுத்து''

*(மா.இ.கு.7)*

இரண்டாம் சூத்திரம் சிவதோத்திரங்கள் ஓதப்பட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தும். அது வருமாறு

''ஆதரவி னாலே யமலன் முடிக்கணிவித்
**தோதித் துதியு முகந்து**''

*(மா.இ.கு.8)*

மூன்றாம் சூத்திரம்

''நலங் கொளகி லாலு **நறும்புகையுங்** காட்டி
யிலங்கிடவா **னெய்விழக்கு மிட்டு**''

*(மா.இ.கு.9)*

என்னும் சூத்திரம் சுகந்தம் தூபங்களான குங்கிலியப்பூசை, அகிற் பூசை, விளக்கிடல் என்பவற்றின் மகிமையை விளக்கி நிற்கும்.

4. பார்க்க பின்னிணைப்பு - 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரவர்கள் இம்மூன்று சிவபுண்ணியங்களின் புனிதத்து வத்தையும் மகிமையையும் நன்கு உறுதிப்படுத்தும் வகையில் நாவுக்கர சரின் மூன்று தேவாரங்களை முழுமையாக எடுத்துக் காட்டுவார்.

'சென்றாலயத்துட் டிருவலத கிட்டே' என்பதனை விளக்கும் வகையில்!

''நிலை பெறுமா றெண்ணுதியே னெஞ்சேநீ வா
நித்தலு மெம்பிரானுடைய கோயிற் புக்குப்
புலர்வதன்மு னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் மாதீ யென்றும்
ஆரூராவென் றென்றே யலறா நில்லே''

என்னும் தேவாரத்தையும்[5] 'ஓதித் துதியு முகந்து' என்னும் தொடரின் பொருளை விளக்கும் வகையில்

''பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தற்குப் பத்தராகி
யரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை யுள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினா லிடவல்லார்க்குக்
கரும்பினிற் கட்டிபோல்வார் கடவூர்வீ ரட்டனாரே''

என்னும் தேவாரத்தையும்[6] மூன்றாம் சூத்திரம் தரும் கொண்டு சுகந்த தூபமும் நறுநெய் விளக்கும் பூசித்தலை;

''விளக்கினார் பெற்ற வின்ப மெழுகினாற் பதிற்றி யாகுந்
துளக்கினன் மலர்தொடுத்தாற் றூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகு
மளப்பிலை கீதஞ் சொன்னார்க் கடிகடா மருளுமாறே''

என்னும் தேவாரத்தையும்[7] எடுத்துக்காட்டிச் சரியை வழிபாட்டின் மகிமையை உலகத்தோர்க்குப் புலப்படுத்துவார்

மறைஞான சம்பந்தர் சிவபூசை செய்யாதவருக்கு கதியில்லை யென்பார் (பொ.இ.கு 130) சிவபூசை செய்வதன் அவசியத்தையும் செய்யா தொழிவதன் இழிவு பற்றியும் நாவலரவர்கள் அப்பர் பாடல்க ளில் எதிர்மறைப் பொருள் தரும் பாடல்களை எடுத்துக் காட்டி விளக்கு வார்.

---

5. ஆறுமுக நாவலர், 1955, சைவசமய நெறி மூலமும் புத்துரையும், பக். 61 - 62
6. மேலது நூல், ப. 62 7. மேலது நூல், ப.62

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''திருக்கோயி லில்லாத திருவி லூருந்
திரு வெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்க மூதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
மருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரு
மவை யெல்லா மூரல்ல வடவி காடே''

என்னும் தேவாரத்தையும்[8] 'திருநாம மஞ்செழுத்துஞ் செப்பா ராகிற்' எனத் தொடங்கும் தேவாரத்தையும்[9] முழுமையாக எடுத்துக் காட்டுவதன் மூலமும் விளக்குவார்.

## திருமந்திரம்

திருமந்திரத்தைப் பொருள் விளக்கத்தின் பொருட்டு ஓர் இடத்தில் மாத்திரம் பயன்படுத்தி உள்ளார். வேதாகமங்களின் உயர்வையும் ஒப்பிட்டு அவை தம்முள் வேற்றுமை யற்ற தன்மையையும் புலப்படுத் தும் வகையில் ''வேதமொடாகம மெய்யாம்'' என்னும் பாடலை முழுமையாக எடுத்துக்காட்டுவார்[10]

## புராணங்கள்

சைவ புராணம், பெரியபுராணம், திருத்தொண்டர் புராணசாரம், அருணகிரிப் புராணம் என்னும் நூல்கள் இப்பகுதியினுள் அடங்கும் நாவலரவர்கள் அவற்றைப் பயன்படுத்திய பாடல்களின் மொத்த எண்ணிகையும் நோக்கமும் பின்வருமாறு அமையும்

| எண் | இலக்கியம் | பயன்படுத்தப்படும் இடங்களின் மொத்தத் தொகை | பயன்படுத்திய நோக்கம் பொ.வி. | சொ.வி. | இ.வி |
|---|---|---|---|---|---|
| 1. | சைவபுராணம் | 1 | 1 | - | - |
| 2. | பெரிய புராணம் | 1 | 1 | - | - |
| 3. | திருத்தொண்டர் புராண சாரம் | 1 | 1 | - | - |
| 4. | அருணகிரிப் புராணம் | 1 | 1 | - | - |

8. மேலது நூல், ப.132 9. பார்க்க, பின்னிணைப்பு - 1
10. பார்க்க, பின்னிணைப்பு - 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பெரிய புராணம்

பெரியபுராணத்தை ஓரிடத்திலேயே சுட்டிக்காட்டுவார். அதிதி இறைவனுக்கு ஒப்பானவர். பரமசிவன் பார்வதி முருகன் விஷ்ணு பிரமா தருமதேவதை ஆகிய சகலரும் கூடிய வடிவமாய் வருதலால் அதிதி பூசிக்கத்தவர் என்பார் நாவலரவர்கள்[11]. அத்தகைய அதிதிகளைப் போசனத்துக்கு அழைக்கும் பொழுது உள்ளத்து உகப்போடு எதிர் கொண்டு அழைத்து, ஆசனத்தில் இருத்திப் பூசைபண்ணி அவர்களுக்குப் பிரீதிப்படி அன்னம் முதலியவற்றை ஊட்டவேண்டும் என்பார் மறைஞான சம்பந்தர்[12]. இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் நாவலரவர்கள் பெரிய புராணத்தில் இருந்து இரு பாடல்களை முழுமையாக எடுத்துக் காட்டுவார். அவற்றுள்ளொன்று வருமாறு[13]

''கொண்டு வந்து மனைப்புகுந்து குலாவுபாதம் விளக்கியே
மண்டு காதலி னாதனத்திடை வைத்தருச்சனை செய்தபின்
உண்டிநாலு விதத்திலாறு சுவைத்திறத்தன வொப்பிலா
வண்டர் நாயகர் தொண்டரிச்சையி னமுது செய்ய வளித்துளார்''

அத்துடன் 'ஆரமென்பு புனைந்தவையர்தம்' என்னும் தொடரையுடைய பாடலையும் எடுத்துக்காட்டுவார்[14].

### திருத்தொண்டர் புராணசாரம்

ஓரிடத்தில் மாத்திரம் இந்நூலை எடுத்தாள்வார். ''நல்லோர் தொழும் வெண்ணெய்'' என்னும் தொடருக்கு எண்வகைப் பத்திகளையுடைய நல்லோர்கள் வணங்குகின்ற திருவெண்ணெய் நல்லூர் என நாவலரவர்கள் பொருள் கொள்வார்[15]. எண்வகைப் பத்திகளை விளக்க வந்த நாவலரவர்கள்.

''தொண்டரடி தொழில்பூசைத் தொழின் மகிழ்த லழகார்
துளங்கியவர்ச் சனைபுரித றொகுதி நியமங்கள்''

எனத்தொடரும் பாடலை முழுமையாக எடுத்துக்காட்டுவார்[16]

### அருணகிரிப் புராணம்

இப்புராணத்தைப் பொருள் விளக்கத்தின் பொருட்டு ஓரிடத்தில் மாத்திரம் மேற்கோள் காட்டுவார். மாணவர்கள் ஆசாரியரையேயன்றி சேட்டாசாரியர் முதலியோரையும் வணங்கல் வேண்டும். அவர்களை

11. ஆறுமுக நாவலர், 1995, சைவசமய நெறி மூலமும் புத்துரையும்
12. மேலது நூல் பொ.இ.கு.பக். 189, 266-267, பக்.189
13. பார்க்க, பின்னிணைப்பு - 1 14. பார்க்க, பின்னிணைப்பு - 1
15. ஆறுமுக நாவலர், 1995, சைவசமய நெறி மூலமும் புத்துரையும், ப.71
16. பார்க்க, பின்னிணைப்பு - 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கலாகாக் காலமும் வணங்கும் முறையையும் விளக்க மேற்படி புராணத்திலிருந்து மூன்று பாடல்களை எடுத்துக்காட்டுவார்[17] அவற்றினுள் இரண்டினை இங்கு நோக்கலாம்.

(1) வணங்கலாகாக்காலம்[18]

''வழியிடை நடக்கும் போது மலரினைக் கொய்யும் போதும்
விழுமியர்க் கீயும்போது முத்தர வினையின் கண்ணு
மெழுதிடும் போதும் வாய்மை யியலினை யிதழின் கண்ணே
யழகுறு மரசர் பாற்சென் றடைந்தமர்ந் திருக்கும் போதும்''

(2) கால் நீட்டலாகாத்திசை[19]

''தேசிகன் றன்னைத் தேவர் திருவடி தன்னை யீச
னேசரைச் சத்தி தோறும் நிருமலன் றனையர்ச் சிக்கும்
பூசுரர் தம்மைத் தந்தை தாய்தமைப் பணியும் போது
காசினைக் களைவார் நீட்டல் வடக்கினுங் கிழக்குங் காலே''

## சைவசமய ஒழுக்க நூல்கள்

சைவசமய ஒழுக்க நூல்களுள் நித்திய கரும நெறி உருத்திராக்க வசிட்டம் ஆகிய இரு நூல்களையும் எடுத்துக் காட்டுவார். அவற்றைப் பயன்படுத்திய பாடல்களின் மொத்த தொகையையும் நோக்கத்தையும் பின்வரும் அடைவு விளக்கும்.

| எண் | இலக்கியம் | பயன்படுத்தும் இடங்களின் மொத்தத் தொகை | பயன்படுத்தியதன் நோக்கம் | | |
|---|---|---|---|---|---|
| | | | பொ.வி. | சொ.வி. | இ.வி |
| 1. | நித்தியகரும நெறி | 1 | 1 | - | - |
| 2. | உருத்திராக்க வசிட்டம் | 1 | 1 | - | - |

## நித்தியகரும நெறி

'ஈரவஸ்திரந் தரித்துக் கொண்டும் கௌபீனம் தரியாமலும் சந்தியா வந்தனம் சிவபூசை முதலிய கருமங்கள் செய்யினும் குற்றமாகும்' என்பதனை மூன்று குறள்கள் மூலம் ம.ஞா.சம்பந்தர் விளக்குவார். ஈரவஸ்திரம் நாயின் நாக்குக் கொப்பான தென்பதை

'ஈரத் துகினாயி னாவுக் கிணையுடலி
னீரத்தை மாற்று மிடத்து'

17. பார்க்க, பின்னிணைப்பு - 1
18. ஆறுமுக நாவலர், 1995, சைவசமய நெறி மூலமும் புத்துரையும், ப.71
19. மேலது நூல், ப.71

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பொ.இ.கு 54) என்னும் குறளால் விளக்குவார். நாவலரவர்கள் இக்குற்றங்கள் மீளவும் ஸ்நானம் பண்ணில் நீங்குமென்பதை நித்திய கரும நெறியில் இருந்து இரு குறள்களை எடுத் துக் காட்டுவதன் மூலம் நிறுவுவார். அவற்றினுள் ஒன்றினை இங்கு நோக் கலாம்.[20] அது,

''காய்ந்ததோர் கோவணங்கைக் கொண்டு தரித்திடுக
காய்ந்தகலிங் கத்தினையு மே''

என்பதாகும்.

## உருத்திராக்க வசிட்டம்

இந்நூலினை ஓரிடத்தில் மாத்திரம் எடுத்தாண்டுள்ளார். உருத்திராக் கத்தைச் செபிக்கும் போது பிறர்கண்ணுக்குப் புலப்படின் செபங்கள் பயன்படாவாம். ஆதலாற் செபமாலையைப் பிறர்காணாவண்ணம் பரிவட் டத்தால் மூடிக் கொண்டு செபி என நாவலரவர்கள்

''பரர்பாவைப் பட்டாற் பலியா செபங்கள்
பரர் பாரா வண்ணம் பரி''

(பொ.இ.கு.149)

என்னும் குறளுக்குப் பொருள் விரிப்பார்[21] செபிக்கும் செபமா லையைப் பிறர்காணா வண்ணம் மூடுதல் என்பதன் கருத்து விளக்கத்து க்கு ஆதாரமாக ''வத்திரத்தினாலே மறைக்க வலக்கரத்தின், வைத்த செப மாலைதனை வாய்க்கவர் என்னும் வெண்பாவினை முழுமையாக எடுத்துக் காட்டுவார் நாவலரவர்கள்[22]

## சித்தாந்த நூல்கள்

சங்கற்ப நிராகரணம், பதிபசுபாசப்பனுவல் முதலான நூல்கள் இப்பகுப்பில் அடங்கும். நாவலரவர்கள் அவற்றைப் பயன்படுத்திய பாடங்களின் மொத்த தொகையும் அதன் நோக்கமும் பின்வரும் அடை வால் விளங்கும்.

| எண் | இலக்கியம் | பயன்படுத்தும் இடங்களின் மொத்தத் தொகை | பயன்படுத்திய நோக்கம் பொ.வி. | சொ.வி. | இ.வி |
|---|---|---|---|---|---|
| 1. | சங்கற்ப நிராகரணம் | 2 | 1 | - | - |
| 2. | பதிபசுபாசப் பனுவல் | 1 | 1 | - | - |

20. மேலது நூல், ப.100 21. மேலது நூல், ப.142
22. பார்க்க, பின்னிணைப்பு - 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கற்ப நிராகரணம்**

இந்நூலினை இரு இடங்களில் பொருள் விளக்கத்தின் பொருட்டு எடுத்தாண்டுள்ளார். சிவபெருமானை ஆசாரியராகப் பாவிப்பது யுக்த மன்று. சாத்திரத்தில் வல்லவர்கள் நற்கதியையடைய விரும்பினால் இப்பொல்லாத புத்தியை விடக்கடவர் (மா.இ.கு17) என்பார் மறைஞான சம்பந்தர்.[23] இக்கருத்துக்கு ஆதாரமாக மூன்று சங்கற்ப நிராகணச் செய்யுள்களை நாவலரவர்கள் எடுத்துக் காட்டுவார்.[24]

''சிவனெனவே தேசிகனை யன்பரையுஞ் சிந்தி
யவனையிவ ராகநினை யல்'' என்பது அவற்றுளொன்றாகும்.

**பதிபசுபாசப் பனுவல்**

இந்நூலை ஓர் இடத்தில் பொருள் விளக்கத்தின் பொருட்டு எடுத்தாண்டுள்ளார். அந்தரியாகப் பூசை

''தம்முள்ளத் துற்ற சலனசிவ லிங்கத்துந்
தம்மன்பா லர்ச்சிக்கத் தாம்''

(பொ.இ.கு.128)

என்னும் அடிப்படையில் இயற்றல் வேண்டும் என்பார் மறைஞான சம்பந்தர். நாவலரவர்கள் ''தம்மன்பாலர்ச்சிக்கத்தாம்'' என்பதற்குப் புறப்பூசை செய்யுமாறுபோல அகப்பூசையைக் கொல்லாமை முதலிய அட்டபுட்பங் கொண்டு அன்பினோடு செய்யக் கடவர் என்பதோடு [25] அப்பொருளுக்கு இயைபாக மேற்படி நூலில் இருந்து இரு செய்யுள்களை எடுத்துக் காட்டுவார். அவற்றுளொன்று வருமாறு[26]

'உள்ளேவல் செய்வாளைக் காந்தன் மிகவுகப்ப
னுள்ளேசெய் பூசை யுகந்து.'

**ஆகம நூல்கள்**

நாவலரவர்கள் ஆகமவிதிமுறைகளே ஏனைய விதிமுறைகளைக் காட்டிலும் சைவர்களுக்குச் சமயவுணர்வுகளை வளர்ப்பதில் முதன்மை யானவை என்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டவர். ஆகமம் சிறப்பு நூல் என்னும் ஆப்த வாக்கியத்தை ஒப்புக் கொள்பவர். ஆகம நூற் கருத்துக்களை நூலின் பல்வேறு இடங்களிலும் பெய்து கருத்து விளக்கம்

---

23. ஆறுமுக நாவலர், 1955, வைவசமய நெறி மூலமும் உரையும், ப.65
24. மறைஞானசம்பந்தர் சங்கற்ப நிராகரணம், சி.த.க.ஸ்ரீ.ம.ஞா.சம்பந்தர் வைசச்சிறு நூல்கள், திருவாவடுதுறை ஆதீனம் கு-ள், 40 - 42
25. 11. ஆறுமுக நாவலர், 1995, சைவசமய நெறி மூலமும் புத்துரையும் ப.131
26. மறை ஞானசம்பந்தர், 1954 பதிபசுபாசப்பனுவல் இத்.இ.ஸ்ரீ.ம.ஞா.சம்பந்தர் சைவச் சிறு நூல்கள் போதவியல் கு-ள். 24 - 25 பார்க்க, பின்னிணைப்பு - 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துள்ளமை ஈண்டு குறிப்பிடத்தக்க தொன்றாகும். நாவலரவர்கள் எடுத்துக் காட்டும் முறைமையை அடிப்படையாகக் கொண்டு ஆகம நூல்களை இருவகையாகப் பிரித்து நோக்கலாம்.

(1) ஆகமக் கருத்துக்களை உரையில் வெளிப்படுத்தல்

(2) ஆகமக் கருத்துக்களைக் கவிதை வடிவின் மூலம் வெளிப்படுத்தல் என்பனவாகும். ஆகமங்களை நாவலரவர்கள் உரையில் பயன்படுத்தும் இடங்களும் நோக்கமும் வருமாறு:

| எண் | ஆகமம் | எடுத்தாண்ட இடங்களின் மொத்தத் தொகை | பயன்படுத்திய நோக்கம் | | |
|---|---|---|---|---|---|
| | | | பொ.வி. | சொ.வி. | இ.வி |
| 1. | சுப்பிரபேதம் - உரை | 2 | 1 | - | - |
| 2. | காமிகம் - உரை | 1 | 1 | - | - |
| 3. | கிரணாகமம் | | | | |
| 4. | காரணாகமம் - உரை | 1 | 1 | - | - |
| 5. | அஞ்சுமான் | | | | |
| 6. | சிவதருமோத்திரம் கவிதை | 5 | 1 | - | - |

**சுப்பிரபேதம்**

இவ்வாகமத்தை இரு இடங்களில் பொருள் விளக்கத்தின் பொருட்டு நாவலரவர்கள் பயன்படுத்தி உள்ளார். அவற்றிளொன்றினை இங்கு நோக்கலாம்[27]. ஆசிரியர் நாற்குலத்துக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதை ம.ஞா.சம்பந்தர்

''உத்தமரா வாரவர்த் முள்ளுஞ் சிறப்புடைய
வுத்தமரே நாற்குலத்துள் ளோர்''

(ஆ.இ.கு.2)

என்னும் குறளால் வெளிப்ப டுத்துவார். இக் கருத்துக்கு அமைய நாவலரவர்கள் பிராமணரும் க்ஷத்திரி யரும் வைசியரும் சுத்த குலத்தில் பிறந்த சூத்திரரும் ஆகிய நால்வருமே ஆசாரியராவார்[28]. என்னும் சுப்பிர பேத ஆகமக் கருத்தை எடுத்துக் காட்டுவார்.

**காமிகம்**

இவ்வாகமத்தை ஒரு முறை எடுத்தாண்டுள்ளார். திரிபதார்த்த லக்ஷணங்களை அறிந்த சூத்திரனும் தேசிகனாவான் (ஆ.இ.கு.37) என்பது மறைஞான சம்பந்தர் தரும் கருத்து. மறைஞான சம்பந்தர் இவ்வாறு

27. பின்னிணைப்பு - 1
28. ஆறுமுகநாவலர், 1955, சைவசமய நெறி மூலமும் உரையும், ப. 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியமைக்குச் ''சூத்திரருள் நைட்டிகப்பிரமசாரி கட்கே குருத்துவம் கிருகத்தார்களுக்குச் சமயபுத்திர சாதகத்துவ மாத்திரங் குருத்துவ மில்லை''[29] யென்று காமிகாகமம் கூறியதே காரணமென்பதை விளங்கிக் கொள்ளும் வகையில் காமிக மேற்கோளை எடுத்துக் காட்டினார் நாவலரவர்கள்.

**காரணாகமம்**

இவ்வாகம நூலைப் பொருள் விளக்கத்தின் பொருட்டு இரு இடங்களில் எடுத்தாண்டுள்ளார். ஒன்று தீக்ஷை பெறும் காலம் பற்றி இந்நூலுக்கும் ஆகமங்களுக்கும் இடையேயுள்ள முரண்பாட்டை தெளிவு பெற வைப்பதற்கும்[30] மற்றயது சூக்குமாகமம் போல் காரணம் **அஞ்சுமான்** என்னும் ஆகமங்களும் ஆன்மார்த்தபூசாவிதிகளை விரித்துக் கூறுகின்றன என்பதை உணரவைக்கும் பொருட்டும் எடுத்தாண்டுள்ளார்[31].

**சிவதருமோத்திரம்**

நாவலரவர்கள் இவ்வுரை நூலில் எடுத்தாண்ட மேற்கோள் நூல்களில் அதிகம் இடம் பெறும் நூல் சிவதருமோத்திரம் ஆகும். நாவலரவர்கள் சைவசமய ஒழுகலாறுகளை வற்புறுத்தும் பொழுது பெரிதும் சிவதருமோத்திரத்தின் வழி நின்றே வற்புறுத்துவார். அத்துடன் சைவசமய ஒழுகலாறுகளைச் சிறப்பாக ஒழுங்கு படுத்திக் கூறும் நூல்களுள் இதுவுமொன்றாகும். இஃது ஆகமநூல், உபாகம நூல்களு ளொன்றாகும். இதனைத் தமிழ்மொழியில் மொழிபெயர்த்துப்பாடியவர் மறைஞான சம்பந்தரேயாவார். எனவே இரு நூல்களுக்கு மிடையே பொருள் மரபில் உடன்பாடு இருப்பது இயல்பேயாகும். இந்நூலை ஐந்து இடங்களில் பொருள் விளக்கத்தின் பொருட்டு எடுத்துக் காட்டுக்களுக்காக ஆட்சிப்படுத்தியுள்ளார். அவ்வாறு ஆட்சிப்படுத்தும் பொழுது உரையின் உடன்பாட்டுப் பொருளுக்காகவும் எதிர் மறைப் பொருளுக்காகவும் எடுத்துக் காட்டுவார். எடுத்துக் காட்டாக சிலவற்றை நோக்கலாம்.

''தனக்கெனக் குறியாது தேவர்களுக்கும் அதிதிகளுக்கும் சிவாக்கி னிக்கும் ஆசாரியருக்கும் எனக்குறித்துப் பாகம் பண்ணப்பட்ட அன்னம் தேவருலகத்திலுள்ள அமிர்தம் போன்றது'' என நாவலரவர்கள் (பொ.இ.261) ஆம் குறளுக்கு உரைவிரிப்பார்.[32] இக்குறளில் வரும்

29. மேலது நூல், பக். 28 - 29 30. நூலினுள் பார்க்க, ப.

31. ஆறுமுக நாவலர், 1955, சைவசமய நெறி மூலமும் புத்துரையும், ப. 280

32. நூலினுள் பார்க்க, ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தேவருல கத்திலமிர் தென்' என்பதன் பொருளை விளக்க வந்த நாவலரவர்கள் சிவதருமோத் திரத்திலிருந்து நாலு(4) பாடல்களை உடன்பாட்டு நிலையில் எடுத்துக் காட்டுவார்.[33] அதிலொன்று வருமாறு

'உலகினில் பாவ பேத முண்டுழ வாதி யைந்த
வலகிடன் முதலைந்தாலு மவ்வினை யறுமெம் மாதிக்
கிலகிய வெரிக்குநூலை யிசைத்தருள் குரவர்க் கென்று
நிலைமைய தவர்க்கும்பூசை நித்தலு நிகழ்த்து வார்க்கே'

ஆசாரியரிடத்திலே கற்கும் முறைமையைக் கூற வந்த ம.ஞா. சம்பந்தர்

''படிக்கும் பொழுது பணிகுர வன்றாள்
முடிக்கும் பொழுது முயன்று''

(பொ.இ.கு.342) எனக் குறிப்பிடுவார்.

''ஆசாரியரிடத்திலே நாடோறும் படிக்கத் தொடங்கும் பொழுதும், படித்து முடிக்கும் பொழுதும் அவ்வாசாரியருடைய திருவடிகளை முயன்று வணங்கு என நாவலரவர்கள் பொருள் விரிப்பார்[34] இது பண்பாட்டு மரபு. இம்மரபிற்கு எதிர் மறையாக யாரும் ஒழுகின் அதனால் ஏற்படும் தீமையைத் தருமோத்திரத்தில் இருந்து

''புத்த கத்தினைப் பூசை புரிகிலார்
சித்தங் கூர்தரந் தேசிகன் றன்னையு
மத்த கைப்பல நீங்குவ ரன்றியுங்
கொத்தை சேர்நர கக்குழி கூடுவார்'

எனும் செய்யுளை எடுத்துக்காட்டுவார்[35]

**கிரணாகமம்**

அநுலோமரிலக்கணத்தை விரித்துரைத்த நாவலர்கள்[36] சற்று அவற்றுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் ''பிராமணர் முதனால்வரும் முறையே நான்கு மூன்றிரண்டொரு வருணங்களிலே விவாகஞ் செய்ய லாமெனக் கிரணாகமத்தில் விதிக்கப்பட்டது'' [37] என எடுத்துரைப்பார். நாவலரவர்கள் சமூக மட்டத்தில் மாற்றங்களை உள்ளார்ந்த ரீதியில் விரும்பியதினாற்போலும். இக்கருத்தை உரைக்கருத்துக்கப்பால் நின்று குறிப்பிட்டார் எனலாம்.

நாவலரவர்கள் சிவாகமங்களை மேற்கோளாக எடுத்துக் காட்டுவதுடன் நின்றுவிடாது ''சிவாகமஞ் செம்பு மென்றறிக'' என்பது போன்ற

34. மேலது நூல்,ப.187 35. பின்னிணைப்பு - 1
36. ஆறுமுக நவலர், 1955, சைவசமய நெறி மூலமும் புத்துரையும், ப.2190
37. மேலது நூல் 219

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை வாக்கியங்களைப் பயன்படுத்தி அவை உணர்த்தும் பொருள் மரபுகள் வருமிடத்து அவற்றை வற்புறுத்தி உறுதிப்படுத்த முனைவார். அவற்றை பின்வரும் அடைவின் மூலம் நோக்கலாம்.

| எண் | சிவாகமங்களை உணர்த்தும் முறைமை | நூலில் வரும் இடம் | நோக்கம் பொ.வி | சொ.வி | இ.வி |
|---|---|---|---|---|---|
| 01 | சிவாகமமே மேலென்றுணர்க | மா.இ.கு.19 | 1 | - | - |
| 02 | சிவாகமமே சிறப்புடையதென்றறிக | ஆ.இ.கு.40 | 1 | - | - |
| 03 | சிவாகமஞ் செப்புகையால் | மா.இ.கு.19 | 1 | - | - |
| 04 | சிவாகமஞ் செப்புதலால் | மா.இ.கு.10 | 1 | - | - |
| 05 | சிவாகமஞ் செப்பு மென்றறிக | பாயிரம் 22 | 1 | - | - |
| 06 | சிவாகமத்திற் கண்டபடி கூறுதும் | பொ.இ.கு.143 | 1 | - | - |
| 07 | சிவாகமத்தில் விதிக்கப்பட்ட | பொ.இ.கு.175 | 1 | - | - |
| 08 | சிவாகமங்கள் கூறுமென்க | பொ.இ.கு.270 | 1 | - | - |
| 09 | சிவாகமங்களிற் கூறப்படும் | பொ.இ.கு.242 | 1 | - | - |
| 10 | சிவாகமநூற்றுணிவு | ஆ.இ.கு.37 | 1 | - | - |
| 11 | சிவாகமங்களிற் கூறப்படும் | பொ.இ.கு.442 | 1 | - | - |
| 12 | சிவாகமத்துக்கு மறுதலைப்பட்ட | ஆ.இ.கு.21 | 1 | - | - |
| 13 | சிவதருமோத்திரத்தில் காண்க | பொ.இ.கு.241 | 1 | - | - |
| 14 | சிவதருமோத்திர உரையிற் காண்க. | பொ.இ.கு.252 | 1 | - | - |

## வேதப் பொருள் உணர்த்தும் நூல்கள்

சங்கர சங்கிதை, வாயுசங் கிதை, கந்தகாலோகத்திரம், நீலகண்டபாஷியம், காசிகாண்டம், சைவபு ராணம் ஆகியன இப்பகுப்பில் அடங்கும் நூல்களாகும். சிலநூல்கள் நாவலரவர்களால் உரைநடையாகவும் செய்யுளாகவும் மேற்கோள்களா கக் காட்டப்பட்டுள்ளன. இவை பொருள் விளக்கத்தின் பொருட்டு எடுத்தாளப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்திய இடங்களையும் நோக்கத்தையும் பின்வரும் அடைவின் மூலம் அறியலாம்.

| எண் | நூல்கள் | நூலினுள் வரும் தன்மை | பயன்படுத்திய இடங்களின் மொத்தத் தொகை | பயன்படுத்தியதன் நோக்கம் பொ.வி. | சொ.வி. | இ.வி |
|---|---|---|---|---|---|---|
| 01 | சங்கர சங்கிதை | உரைநடை | 1 | 1 | - | - |
| 02 | நீலகண்டபாஷயம் | ,, | 1 | 1 | - | - |
| 03 | கந்தகா லோத்திரம் | ,, | 1 | 1 | - | - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 04 | சைவபுராணம் | '' | 1 | 1 | - | - |
| 05 | வாயுசங்கிதை | கவிதை | 1 | 1 | - | - |
| 06 | காசி காண்டம் | '' | 1 | 1 | - | - |

**சங்கர சங்கிதை**

வேதசிவாகமங்கள் ஆன்மாக்களுக்குப் பதிபசுபாசங்களை விளக்கும்படி சொல்லியறிவிக்கும் என்பார் ம.ஞா. சம்பந்தர்.[38] வேதசிவாகமங்களின் தனித்துவத்தை ஒப்பு நோக்கிய நாவலரவர்கள் சிவாகமங்கள் முத்தியைச் சித்திக்க வைக்கும் ஆற்றல் உடையன என்பதற்குச் ''சனகர் முதலிய முநீந்திரர் நால்வரும் வேதங்களையும் உபநிடதங்களையும் நெடுநாள் வரையும் ஓதியும் ஞானம் நிலை பெறாதவராயினர் என்றும் பின்பு ஆகமாந்த மென்னும் பெயரையுடைய சித்தாந்தத்தை ஓதிஞானம் பெற்றனர் என்றும் காந்தத்திலே சங்கர சங்கிதையில்''[39] கூறப்பட்ட கருத்தினை எடுத்துக்காட்டுவார்.

**நீலகண்டபாடியம்**

ஆசிரியன் பால் பக்தி கொண்டு வேதாந்த நிலையை ஆராய்ந்து உணர வேண்டும் என்பார் மறைஞான சம்பந்தர். வேதாந்தம் என்பதற்கு வேதத்தின் ஞானகாண்டப் பகுதியென உரை கண்ட[40] நாவலரவர்கள் வேதாந்தத்தின் மெய்ப் பொருள் வேதம் சிவாகம மிரண்டையும் நன்குணர்தல் மூலமே பெற முடியும் எனப்பொருள் விரிப்பதோடு[41] இவற்றின் பேதமின்மையை ''வேதசிவாகமங்கட்குப் பேதங்காண்கின்றிலம் வேதமே சிவாகமம்'' என நீலகண்டபாடியத்தில் நீலகண்ட சிவாசாரியர் கூறிய வாற்றானுமுணர்க என்பார்.[42] நாவலரவர்களைப் பொறுத்தமட்டில் வேதங்களையும் சிவாகமங்களையும் ஓதி நன்கு உணர்ந்த மகான் நீல கண்ட சிவாசாரியரே யாவார். நாவலரவர்கள் நீலகண்ட சிவாசாரியர் பற்றியும் ஆவரது பாஷியம் பற்றியும் கூறும் பொழுது[43]

> ''வேதம் சிவாகமமிரண்டையும் நன்குணர்ந்த நீலகண்டசிவாசாரியர் உரைத்த பாடியத்தால் இனிது விளங்கும். மற்றுள்ளோர் உரைத்த பாடியங்களும் அவர் வேதாந்தமெனப் பெயரிட்டியற்றிய பிரகரணங்களும் சிவாகமத்தக்கு மறுதலைப்பட்டது புறச்சமய நூற்பொருளை யுடையனவாதலின், அவற்றை மெய்யெனக் கொண்டு மயங்கா தொழிக''

எனச் சிறப்பித்துக் குறிப்பிடுவது அவதானிக்கத்த்க்கதாகும்.

38. மேலது நூல், ஆ.இ.கு.40
39. மேலது நூல், ப.31
40. மேலது நூல், ப.20
41. மேலது நூல், ப.20
42. மேலது நூல், ப.21
43. மேலது நூல், ப.21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கந்தகாலோத்தரம்-சைவபுராணம்**

ஆசாரியராதற்கு நான்கு குலத்துள்ளோரும் சிறப்புடையர் என்பார் ஆசிரியர்[44] இங்கு நான்கு குலத்துள்ளோரும் உத்தமர்கள் என்னும் பொருளை விளக்கும் வகையிலும், குறிப்பாகச் சூத்திரர்களும் உத்தமர் கள் என்பதை விளக்கும் வகையில் கந்தாகாலோத்திரம் சைவ புராணம் ஆகியவற்றின் கருத்துக்களை எடுத்துக்காட்டுவார். நாவலரவர்கள் ''கல்லானது சிவசமஸ்காரத்தினாலன்றோ போக மோஷங்களைத் தருவதாம். கல்லானது சிவத்தன்மையடையுமாகிற் சூத்திரன் அங்ஙன மாகானென்பது எங்ஙனம்'' எனக் கந்தகாலோத்திரன் கூறுவதையும் சைவபுராணம் ''பசுசாத்திரம் பற்றாதுவிட்டுச் சிவசாத்திரம் பற்றிப் பயிலும்பிராமணர்'' முதலிய நான்கு வருணத் தாருமே ஆசாரியராவா ரென்று புகழப்படுவர் எனக் கூறுவதையும் எடுத்துக்காட்டாகக் குறிப்பி ட்டுப் பொருள் விளக்கம் செய்வார்.

**வாயு சங்கிதை**

சிவபெருமானுடைய பாதத்திலே பூவைச் சூடாமல் அன்னம் புசிக்கலாது என்பதை மறைஞான சம்பந்தர் ''அலரினைச்சூட்டாதமலன் றாளினருந் தன்ன, மலமாம் பிணமுமா மாசு'' (பொ.இ.கு.251) என்பார். நாவலரவர்கள் இப் பொருளை விளக்க வாயுசங்கிதையில் இருந்து இருபாடல்களை எடுத்துகாட்டுவார்[45]. அதிலொன்று வருமாறு:

''ஆக்கையினு ளான்மாவிங் குறைவளவும்
    பூசையினை யாற்றி யல்லா
லேக்கறவா லருந்த வொண்ணா தருந்திலவை
    யெதிரெடுத்தங் கெறிநீர் மூழ்கிப்
பூக்கமழுங் குழலுமையோ டிறை முதலை
    யிரு முறைதான் பூசை செய்து
நாக்கு நசை யாலற்றை நாண் முழுது
    மொன்றுமருந் தாது நண்ணி''

**காசிகாண்டம்**

இந்நூலை ஓரிடத்தில் மாத்திரம் பொருள் விளக்கத்தின் பொருட்டு எடுத்தாண்டுள்ளார். குருபன்னியை வழிபடும் முறை பற்றி ம.ஞா. சம்பந்தர், ஆசாரியருடைய மனைவியாரை மனோன்மனியராகப்

44. மேலது நூல், ஆ.இ.கு. 2     ஆ. மேலது நூல், ப.13   இ. மேலதுநூல், ப. 14
45. ஆறுமுக நாவலர், 1955, சைவசமய நெறிமூலமும் புத்துரையும்
பார்க்க: பின்னிணைப்பு - 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவித்து அவருடைய திருவடிகளைத் தீண்டாமல் தன்பெயரைச் சொல்லி மண நிறைந்த பூக்களைப் பூமியிலே தூவி அர்ச்சித்து வணங்க வேண்டுமென்றும்[46] இது கிருதயுகம், திரேதாயுகம் துவாபரயுகம் என்னும் மூன்று யுகங்களிலும் தகுமெனவும் இந்தக் கலியுகத்திலே தகாது எனவும் குறிப்பிடுவார்[47] இந்தக் கலியுகத்தே யாது (மா.இ.20) என்பதற்கு உரைவிரித்த நாவலரவர்கள்;

''அடிதீண்டியருச்சிக்கை தகாதெனவே, தலைவகிர்தல் எண்ணெய் வார்த்தல் முழுகுக்காட்டுதல் கால்பிடித்தல் முதலியனவும் தகா வென்றாயிற்று. கற்புடைய மகளிரும் அழகிற்சிறந்த ஆண்மக்களைக் காணின் அவர் தங்கள் உறவினர்களாயினும் தங்கள் நிலை கலங்கி அவர்களையும் நிலை குலைப்பாராதலால் இவ்வாறு கூறினர்''

என்பதோடு[48] அமையாது எடுத்துக் காட்டாகக் காசி காண்டத்திலிருந்து ஒரு செய்யுளை முழுமையாக எடுத்துக்காட்டுவார். அது வருமாறு[49]:

''தந்தையா யினும் விழைவிற் றன்னுடனே
யொருவயிற்றிற் சார்ந்தாரேனு
மைந்தரா யினுமிகவும் வனப்புடைய
ரெனிலவர் மேன்மடநல் லார்தஞ்
சிந்தை நடந்திடு மதனாற் சாம்பன்மலர்க்
கணைவேனிற் செவ்வி வாய்ந்தோன்
பைந்தொடியா ரினிதமரு முவளகத்திற்
றனிவருதல் பான்மை யன்றே''

எனவே நாவலரவர்களின் இவ்வுரைப்பகுதி இக்கலி யுகத்தில் யாவராலும் மனங்கொள்ளத்தக்க தொன்றென்பதில் ஐயமில்லை.

**மேற்கோள் விளங்காப் பாடங்கள்**

நாவலரவர்கள் இருபந்திமூன்று (23) இடங்களில் நூலின் பெயரைச் சுட்டாது மேற்கோள்களாக எடுத்தாண்டுள்ளார்.[50] இம்மேற்கோள்களில் இருபத்தொன்பது பாடல் வருகின்றன. இம்மேற்கோள்களினை எடுத்தாண்ட நூல்களின் பெயர் சுட்டாமைக்கு யாது காரணமென அறியுமாறில்லை. ஏது எவ்வாறு இருப்பினும் இம்மேற்கோள்கள் நாவலரவர்களது உரைத்திறனுக்கும் பரந்த அறிவுக்கும் எடுத்துக்காட்டாக அமைகின்றன எனலாம். சான்றாக வொன்றினை நோக்கலாம்.

46. மேலது நூல், ப.66 47. மேலது நூல், ப.66 48. மேலதுநூல், ப.66
49. மேலது நூல், ப.66 50. பின்னிணைப்பு - 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபூசைக்கு முன் அந்தரியாகம் பண்ணுதல் வேண்டும். அவ்வாறு செய்யாது சிவபூசை செய்வான் அந்தப் பூசாபலத்தை விட்டவனாவான் என்பார் மறை ஞானசம்பந்தர்[51]. நாவலரவர்கள், இக்கருத்தினை மேலும் இலகுவாகவும் விரித்தும், விளக்கும் வகையில், உள்ளங்கையில் நெய்யை வைத்துக் கொண்டு புறங்கையை நக்குபவன் என்னும் பழமொழி உவமையைப் பிரதிபலிக்கும் வகையில் அமையும் பின்வரும் பாடலை எடுத்துக்காட்டி அந்தரியாகத்தின் முக்கியத்துவத்தினைப் புலப்படுத்துவார். அப்பாடல் வருமாறு[52]

''சிறந்தகத்து ளான்மாவி லுறை சிவனைப்
பூசையினைச் செய்யா னாகி
மறந்துபுறத் தினிற்பூசை வருந்தியே
யியற்றுபவன் வயங்கு மாவின்
கறந்தபா லடிசிலகங் கையுளே
யிருப்பதுந்தான் கண்டு ணாது
புறங்கையினை நக்குமவன் போலு மால்
யாமறியப் புகலுங் காலே''

பொ.இ.கு.503

## வடமொழிப்புலமை

வடநூல்துறையும் தென்திசைத் தமிழும் விதிமுறை பயின்ற நெறியறி புலவன் எனப் பரிமேலழகர் பாராட்டப்படுவது போன்று[53] மறைஞான சம்பந்தரையும் நாவலரவர்களையும் பாராட்டுதல் தகும். மறை ஞான சம்பந்தர் சைவசமய நெறியினைத் தமிழ் மரபில் நின்று செய்தாரா வடமொழி மரபினின்று செய்தாரா என்பது ஆய்வுக்குரியது. ஆயினும் மறைஞான சம்பந்தர் சைவசமய நெறியினை ஆகம மரபினின்று செய்தார் என்பதை மறுப்பதற்கில்லை. இந்நூலெங்கிலும் ஆகமத்தின் செல்வாக்கு இருப்பதோடு ஆகமங்களை ஆராயும் முறைமை பற்றி இருபது குறள்களில் (327-347) குறிப்பிட்டுச் செல்வதை இங்கு மனங்கொள்ளல் வேண்டும். மற்றும் மறைஞான சம்பந்தர் உபாகமங்களிலொன்றான சிவதருமோத்திரத்தினை மொழிபெயர்த்ததோடு அவரால் இயற்றப் பெற்ற சகலாகம சாரம், முதலான நூல்களிலும் சிவாகமங்களின் செல்வாக்கைக் காணலாம். பிறிதோர் வகையில் கூறின் மறைஞான சம்பந்தரின் ஆகமப் புலமையின் வெளிப்பாடே சைவசமயநெறி என்னும் நூலாம். சைவாகமங்கள் வடஇந்தியாவில் தோன்றினவா

51. ஆறுமுக நாவலர், 1995, சைவசமய நெறி மூலமும் புத்துரையும், பொ.இ. 502
52. மேலது நூல், ப.281

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்தியாவிலே தோன்றினவா என்பது பற்றிப் பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. இக்கருத்துக்கள் எவ்வாறு இருப்பினும் இவ்வாகமங்கள் பேசும் விடயங்கள் யாவும் தென்நாட்டு மக்களின் குறிப் பாகத் தமிழ் நாட்டு மக்களின் பண்பாட்டுக் களத்தை மையமாகக் கொண்டே பேசப்படுகின்றன என்பதற்கு இரு வேறு கருத்துக்கள் இருக்க முடியாது. சில பண்பாட்டு அம்சங்களிற், குறிப்பாக வழிபாட்டு அம்சங் களில் சிறப்பாக சிவசின்னங்கள் பற்றி ஆகமங்கள் பேசுபவை இருநாட் டிற்கும் பொதுவான அம்சங்களே ஆகும்.

இந்நூல் குறள் வெண்பாக்களால் ஆக்கப்பட்டது. ஆனால் திருக் குறள் போன்று அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் உணர்த்து வது அல்ல. இது வள்ளுவர் விட்டுச் சென்ற வீட்டுநெறியினைக் காட்ட முற்படும் நூலாகும். அதனால் அதற்கான சில விதிமுறைகளை இந்நூல் வகுத்துக் காட்டும். அது சைவசமய ஒழுகலாற்றின் அடிப்படையில் அதனை வகுத்துக்காட்டும். குறிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டியவற் றையும் விலக்கப்பட வேண்டியவற்றையும் பகுத்தக் கூறும். எனவே சைவசமய நெறி பொருள் மரபில் திருக்குறளினின்று வேறுபட்டது. ஆயி னும் இவற்றுக்கிடையில் ஏதோ வகையில் தொடர்பிருப்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது. அதை முழுமையாக மறுதலித்தும் விட முடியாது.

நாவலரவர்களுக்கு இருந்த வடநூல் புலமையை இந்நூல் வாயிலா கவே பெரிதும் அறிய முடிகின்றது. இந்நூல் பெரிதும் ஆகமம் சார்ந்த நூலாதலால், ஆகமங்களில் ஆழ்ந்த புலமையும் வடமொழி நூல்களி னதும் தமிழ் நூல்களினதும் அறிவும் இந்நூலை விளங்கிக் கொள்வதற் கும் உரை எழுதுவதற்கும் இன்றியமையாதனவாகும். இத்தகைய புலமை உள்ள ஒருவராலேயே இந்நூலுக்கு உரையெழுதி வெற்றிபெற முடியும். இத்தகைய புலமை நெறிகளை நாவலர்கள் கொண்டிருந்தமை யால் நாவலரவர்கள் இந்நூலுக்கு உரையெழுதி வெற்றி கண்டார் என லாம்[54]. இந் நூலில் நாவலரவர்கள் எழுதிய பதவுரை முதல் விருத்தியுரை வரை அமைந்த பகுதிகளும் அவற்றினூடே அமைந்து காணப்படும் உரைநெறிகளும் நாவலரவர்களின் வடமொழிப் புலமையைத் தழுவிச் செல்வதை நன்கறிவர். பிறிதோர் வகையாகக் கூறின் மூலநூலாசிரியர் கருத்துக்களையும் தமது கருத்துக்களையும் தெளிவுபடுத்துமிடத்து வடமொழி இலக்கியம், இலக்கணம், தத்துவம் சார்ந்த கருத்துக்களையும் தமிழ் மரபு சார்ந்த கருத்துக்களையும் குறளோடு இசைவுபடுத்தித் தமது

53. சுந்தரமூர்த்தி,இ.1985 பரிமேலழகர் திருக்குறள் உரைத்திறன்,ப.64

54. இந்நூலை முழுமையாகப் படித்து முடிக்கும் பொழுது இக்கூற்றின் உண்மை புலப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையைத் தெளிந்த அழகிய நடையில் விளக்கிச் செல்வார்.

சைவசமய நெறியின் பாயிரம் இருபத்தைந்து(25) குறட்பாக்களைக் கொண்டது. அவற்றுள் இரு இடங்களில் வடமொழிக் கருத்துக்களை எடுத்துக்காட்டுவார்.[55] ஆசிரியரிலக்கணம் தொண்ணூற்றொரு(91) குறட்பாக்களைக் கொண்டது. அவற்றுள் ஏழு இடங்களில் வடமொழி நூல்களை மேற்கோள் காட்டுவதுடன் பதினெட்டு இடங்களில் வடமொழி நூற்கருத்துக்களைப் பெய்து உரை எழுதியுள்ளார்.[56] மாணாக்கரிலக்கணம் முப்பத்தெட்டுக்(38) குறட்பாக்களைக் கொண்டது. அவற்றுள் ஆறு இடங்களில் வடமொழி நூற் கருத்துக்களை குறளோடு இசைவுபடுத்தி விளக்கியுள்ளார்[57]. பொது இலக்கணம் ஐந்நூற்று எழுபத்திரண்டு குறட்பாக்களைக் கொண்டது. அவற்றில் நூற்றுக்கு மேற்பட்ட குறள்களுக்கு விளக்கவுரை வரைந்துள்ளார். அவற்றுள் 82 என்பதற்கு மேற்பட்ட குறள்களுக்குத் தமிழ் மரபிற்கு அப்பால் நின்று வடநூற்கருத்துக்களை எடுத்துக்காட்டியுள்ளார்.[58]

## சொல்நிலை

நாவலரவர்கள் தம் உரைகளில் வடமொழிக் கருத்துக்களைச் சொல், கருத்து, மரபு என்னும் நிலைகளில் பயன்படுத்துவார்.

பரிமேலழகர் தம்குறளுரையில் பெயர்ச் சொல்லும் திரி சொல்லும் அமையும் பாங்கைச் சுட்டிச் சொற்கள் தொடரில் இயையுமாறு காட்டிச் செல்வார்[59]. அதே போன்று நாவலரவர்களும் தமது உரையில் அவ்வாறு

---

55. ஆறுமுக நாவலர் தம்பாயிரம் சைவசமய நெறிமூலம் புத்துறையும், 22, 24

56. மேலது நூல் ஆசாரிக்கணம், குள் - 2, 3, 19, 21, 36, 37, 39, 40, 44, 46, 56, 59, 60, 62, 65, 76, 81, 86.

57. மேலது நூல் மாணாக்கரிலக்கணம் குள், 2, 10, 19, 22, 23, 28.

58. அ. மேலது நூல் பொது இலக்கணம் குள், 16, 20, 23, 47, 54, 60, 64, 66, 74, 75, 85, 101, 119, 120, 123, 133, 134, 139, 141, 143, 158, 166, 169, 189, 232, 241, 252, 255, 257, 274, 275, 288, 293, 319, 327, 328, 330, 331, 332, 333,335, 336, 337, 338, 344, 345, 346, 354, 355, 356,358,359,370,379,392,402,432, 449, 453, 490, 493, 498, 500, 502, 508, 512, 513, 519, 522, 523, 525, 529, 544, 555, 557, 561

58. ஆ. நாவலர்கள் வடமொழி நூற்கருத்துக்களை விளக்கும் பொழுது தமிழ் நூல் மரபுகளை மேற்கொளாகக் காட்டின் செல்வார் அத்தகைய விளக்கங்கள் இவ்வெண்ணிக்கைகளில் அடங்கா அவற்றை மேற்கோள் விளக்கத்திலும் இந்நூலினுள்ளும் பார்க்க.

59. சுந்தர மூர்த்தி,இ,1985, பரில்மலழகர் திருக்குறள் உரைத்திறன்,ப. 65

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் காட்டிச் செல்வதை இங்கு அவதானிக்கலாம்.[60]

"உத்தரீயமென்பது உத்தரியமெனக் குறுக்கல் விகாரம் பெற்று பெற்று நின்றது. உஷ்ணீஷமென்னும் வடமொழி உட்டிணீட மெனத் தற் பவமாயிற்று. உஷ்ணீஷமாவது விதிப்படி செய்யப் பட்ட தலைச் சீலை"

**பஞ்சலக்கணம்**

ஆன்மாக்களிடத்துள்ள மல விருளானது ஆசாரியருடைய பார்வை யினாலே நீங்கும். அதுபோல இந்நூலினிடத்திலுள்ள குற்றமானது பஞ்சலக்கணத்தை ஆராய்ந்த புலவர்களுடைய பார்வையினாலே நீங்கும் (பா.24) எனப் பொருளுரைப்பார் நாவலரவர்கள்[61]. பஞ்சலக்கணம் பற்றி நாவலரவர்கள் தமது விளக்கவுரையில்.[62]

"அறநூல் பொருணூள் இன்பநூல் வீட்டுநூல் என்னும் நான்கு நூற்கும் கருவி எழுத்துச் சொல் பொருள் யாப்பு அணி என்னும் ஐந்திலக்கணங்களே, அவற்றுள்ளும் நான்கிற்குங் கருவி சொல்லே, அச்சொல்லிற்குக் கருவி அதுவே யாகையால், எல் லாவற்றினுஞ் சொல்லே சிறப்பென்பது நோக்கித் தலைமை பற்றிய வழக்கால் இங்கே அவ்வைந்திணையுஞ் சொல்லென் றார். இக் கருத்துப் பற்றியன்றே வட நூலாரும் சத்தமென வழங்குவர்"

என வட நூலாரின் கருத்தோடு இணைத்துப் பொருள் காண்பார்.

**கருத்து நிலை**

வடமொழிக் கருத்துக்களை குறளோடு இயைபுபடுத்தி அவற்றைத் தனித்துவமான நிலையில் வெளிப்படுத்திக்காட்டும் இயல்பை இவ்வுரைநூலில் மிகுதியாகக் காணலாம். எனவே இந்நூல் வடமொழி நூற் பொருளைக் குறளோடு இயைபுபடுத்தி உரைக்கும் நெறியினை ஒரு உரைநெறியாகக் கொண்டுள்ளது எனலாம். பிறதோர் வகையாகக் கூறின் நாவலரவர்கள் வடமொழி நூற்கருத்துக்களைக் குறளோடு இயைபுப டுத்தி உரைக்கும் உரைநெறியினைக் கையாண்டு இந்நூலுக்கு உரை கண்டார் எனலாம். இதனைப் பல்வேறு வகையில் நோக்கலாம்.

**முதல், சார்பு, வழிநூல்**

நிருமலராகிய சிவபெருமான் அருளிச் செய்த முதனூலாகிய சைவா கமங்களை ஆராய்ந்தறிதலோடு அதன் வழி நூலாகிய உபாகமங்களை

60. ஆறுமுகநாவலர் 1955, சைவசமய நெறிமூலமும் புத்துரையும்;ப.34

61. மேலது நூல், ப. 11 62. மேலது நூல், ப. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் சார்பு நூலாகிய அட்டப்பிரகரண முதலியவற்றையும் ஆராய்ந்தறிக'' என''அதன் பின்னுமசாகமமாய்ந் தறிகன'' (பொ,32) என்னும் குறளுக்கு உரை செய்த நாவலரவர்கள் குறிப்பிடுவார்[63]. அத்துடன் ஆகம நூல்களுக்குப் பிரதான சார்பு நூலாகக் கருதப்படும் அட்டப்பிரகரணங்களை எடுத்துக் காட்டுவார். அவை ''தத்துவப்பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், தத்துவத்திரய நிர்ணயம், போகசாரிகை, மோக்ஷகாரிகை, நாதகாரிகை பர மோக்ஷ நிராசகாரிகை, இரத்தினத்திரயம் என்பனவாம் என்பார்'' நாவலரவர்கள்[64]

சமஸ்தாகமங்களையுஞ் சூக்குமமாகிய வேதாந்த நிலையையும் ஆராய்தல் வேண்டும் என்பார் மறைஞான சம்பந்தர்[65]. வேதாந்தம் என்பதற்கு விளக்கவுரை கூறவந்த நாவலரவர்கள் இதனை இருவேறு பொருளில் விளக்கவுரை செய்வார். அவையாவன:

(1) வேத சிவாகமங்கள் (2) வேதாந்தம்[66]

(1) வேத சிவாகமங்கள் எனப் பொருள் கொண்டு விளக்கவுரை செய்யும் பொழுது அதனை வேதம் - ஆகமம் என இருவேறு பொருள் கொண்டு அவற்றுக்கிடையிலான தொடர்பினை எடுத்துக் காட்டுவார்.[67]

(அ) வேதம் ஆகமங்களுக்கிடையிலான தொடர்புகள் பிரிக்க முடியாதவை.

(ஆ) வேதமும் சிவாகமமும் சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்டவை.

(இ) வேதங்களின் பாடியமாக அமைவது ஆகமங்கள்.

(ஈ) ''வேதமோ டாகம மெய்யா மிறைவனூல்'' போன்ற ஆப்தவாக்கியங்கள் இவற்றின் உண்மையைப் புலப்பதும்.

என்பனவே இவற்றுக்கியிலான தொடர்பிற்கு முக்கிய அம்சங்களென எடுத்துக் காட்டுவார்.

(2) வேதாந்தம்

வேதாந்தம் என்பதற்கு மூன்று வகையாகப் பொருள் கொள்வார் நாவலரவர்கள்.

அ) வேதாந்தம் என்பது உபநிடதம்

ஆ) சிவாகமங்களும் வேதாந்த உண்மைகளைக் குறிப்பிடும்; அவ்வகையில் அவையும் வேதாந்தம்.

---

63. மேலது நூல், ப. 208 64. மேலது நூல், ப.308

65. மேலதுநூல் 20-21 66. மாயாவாதிகள் பற்றிப் பார்க்க பக்.

67. ஆறுமுகநாவலர்,1955, சைவசமயநெறி மூலமும் புத்துரையும் பக்21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) வேதாந்தம் என்னும் பிரகரணங்களும் வேதாந்தம்.

இம் மூன்று பொருள்களுள் முதல் இரு பொருள்களையும் உண்மைப்பொருள் உணர்த்துவன என ஒப்புக் கொள்ளும் நாவலரவர்கள், பிபயறை மறுதவிப்பார். பிரமசூத்திரத்துக்கு நீலகண்ட சிவாசாரியார் எழுதிய பாடியத்தையே வேதாந்த மெய்ப்பொருள் விளக்க நூலாக ஒப்புக் கொள்ளும் நாவலரவர்கள் ஏனையோர் எழுதிய நூல்களைப் புறந்தள்ளுவார். குறிப்பாக சங்கரர் பிரமசூத்திரத்துக்கு நீலகண்ட சிவாசாரியர் எழுதிய நூல்களைப் புறந்தள்வார். குறிப்பாகச் சங்கரர் இராமனுசர் எழுதிய நூல்களைப் புறந்தள்ளுவார். **"வேதாந்தமென்பதன் மெய்ப் பொருள் வேதசிவாகமிரண்டையும் நன்குணர்ந்த நீலகண்ட சிவாசாரியார் உரைத்த பாடியத்தால் இனிது விளங்கும். மற்றையோர் உரைத்த பாடியங்களும் அவர் வேதாந்தமெனப் பெயரிட்டியற்றிய பிரகரணங்களும் சிவாகமத் துக்கு மாறுபட்ட புறச்சமய நூற்பொருளையுடையனவாதலின் அவற்றை மெய்யெனக் கொண்டு மயங்கா தொழிக"** என்ற நாவலரவர் தம் கருத்து அவர் வேதாந்தம் என்பது பற்றிக் கொண்டிருந்த கருத்தைத் துல்லியமாகக் காட்டும்.

## சைவாகமங்களை ஆராய்யும் முறை

சிவபெருமான் ஆன்மாகள் அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய உறுதிப்பொருட்கள் நான்கையும் அடையும்பொருட்டு இருபத்தெட்டு ஆகமங்களையும் அருளிச் செய்தார். ஞானோதயத்துக்குக் காரணமாகிய சுத்த வித்தியா தத்துவத்திலிருந்து பரம்பரையாக மகாமேருவிக்கு வந்து அங்கிருந்து உலகெங்கும் பரம்புமென்றும் உரைப்பார் நாவலரவர்கள். இவ்வாகமங்கள் சத்தியோசாத முகத்தினின்றும் காமிகம் முதல் ஐந்து ஆகமங்களும் தோன்றின வென்றும்[68] வாமதேவ முகத்தினின்றும் தீப்தம் முதல் ஐந்து ஆகமங்களும் தோன்றின வென்றும்[69] அகோர முகத்தின் நின்று விசயம்முதல் ஐந்து ஆகமங்கள் தோன்றின என்றும் தற்புருட முகத்தினின்றும் ரௌரவம் முதல் ஐந்து ஆகமங்களும் தோன்றின வென்றும்[70] ஈசான முகத்தினின்றும் புரோற்கிதம் முதலான எட்டு

68. சத்தியோசாத முகத்தினின்றும் காமிகம், யோகசம், சிந்தியம்,காரணம் அசிதம் ஆகிய ஐந்து ஆகமங்கள் தோன்றும்.

69. வாமதேவ முகத்தினின்றும் தோன்றும் ஆகமங்கள் தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுவான், அப்பிரபேதம் என்னும் ஐந்துமாம்.

70. அகோர முகத்தினின்றும் தோன்றும் ஆகமங்கள் விசயம், நிச்சுவாசம் சுவாயம்புவம், ஆக்கினேயம்,வீரம் என்னும் ஐந்துமாம் தற்புருடமுகத்தினின்றும் தோன்றும் ஆகமங்கள் ரௌவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம் என்னும் ஐந்துமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமங்களும் தோன்றின வென்றும்[71] ம.ஞா.சம்பந்தர் குறிப்பிடுவர். அத்துடன் இம்மூலாகமங்களின் உபாகமங்கள் இருநூற்றேழு எனக் குறிப்பதோடு, இம்மூலாகமங்களைக் கேட்டோர் அறுபத்துமூவர்கள் என்பார். (பொ.இ.335-336)[72]

நாவலரவர்கள் இத்தகைய கருத்துகளையெல்லாம் மனங்கொண்டு இவற்றுக்கு அகலவுரை செய்துள்ளார். அவை நாவலரவர்களது வடமொழி நூல், ஆகமநூற் புலமைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றன எனலாம். நாவலரவர்கள் தரும் அகலவுரைகளைப் பின்வரும் அடிப்படையில் வகுக்கலாம்.

(1) தோற்றம்
(2) உபதேச முறையும் அவற்றுக்கிடையிலான சம்பந்தமும்
(3) ஆகமங்கள் தோன்றுவதற்கான இருபடிகளையும் அவர்களின் கோத்திரங்களையும் அவற்றின் அதிதேவதைகளையும் எடுத்துரைத்தல்
(4) ஆகமங்களின் பேதங்கள் காட்டல்
(5) ஆகமங்களின் கிரந்த சங்கிதையை வரையறுத்தல்
(6) சிவாகமங்களின் பொருள் மரபு காட்டல்
(7) சிவாகமங்கள் இறைவனின் புறத்தோற்ற வடிவம் என்பதை உணர்த்தல்
(8) மூலாகமங்களுக்குரிய உபாகமங்களின் தொகை தரல்
(9) சிவாகமங்களைக் கேட்டோர் தொகை தரல்
(10) வேத சிவாகமங்களுக்கிடையிலான தொடர்புகளை எடுத்துக் காட்டல்

**(1) தோற்றம்**

ஆகமங்களின் தோற்றம் உற்பத்திக் கிரமமெனவும் சங்காரக்கிரமமெனவும் இருவகைப்படும். அவற்றுள் உற்பத்திக்கிரமாவது ஈசான முதற் சத்தியோசாத மீறாகக் கூறுவது, சங்காரக்கிரமமாவது சத்தியோசாத முதல் ஈசான மீறாகக் கூறுவது எனத் தோற்றத்தைப் பகுத்துக் காட்டி உரை விரிப்பார் நாவலரவர்கள்[73]

**(2) உபதேச முறைகளும் அவற்றுக்கிடையிலான சம்பந்தமும்**

நாவலரவர்கள் உபதேச உறவு முறையினை; சதாசிவனால் அருந்தேசுரருக்கும், அருந்தேசுரரால் ஸ்ரீ கண்டருக்கும், ஸ்ரீ கண்டரால்

71. ஈசான முகத்தினின்றும் தோன்றும் ஆகமங்கள் புரோற்கீதம், இலலிதம், சித்தம், சந்தானம்,சருவோக்தம், பாரமேசுதரம், கிரணம்,வாதுளம் என்னும் எட்டுமாம்.

72. ஆறுமுகநாவலர், 1955, சைவசமயநெறி மூலமும் புத்துரையும், பக். 214-215, ப.209

73. மேலது நூல், ப.209

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்களுக்கும், தேவர்களால் முனிவருக்கும், முனிவர்களால் மானுடருக்கும், மானுடரால் மானுடருக்கும் உபதேசிக்கப்படும். இங்ஙனமுபதேசிக்கப்படுங்கால். உளவாகிய சம்பந்தம் ஆறும் முறையே பரசம்பந்தம், மகா சம்பந்தம், அந்தரான சம்பந்தம் திவ்விய, சம்பந்தம், திவ்வியாதிவ் விய சம்பந்தம், அதிவ்வியசம் பந்தம் எனப்பெயர் பெறும் என விளக்குவார்.[74]

**(3) ஆகமங்கள் தோன்றுவதற்கான இருபடிகளையும் அவர்களின் கோத்திரங்களையும் அவற்றின் ஆதிதேவதைகளையும் எடுத்துரைத்தல்.**

சிவனின் ஐந்துமுகங்களில் இருந்து தோன்றிய ஆகமங்கள் கௌசிக இருடி, காசிபவிருடி, பரத்துவாச விருடி, கௌதம விருடி, அகத்திய விருடி ஆகிய ஐந்து இருடிகளின் பொருட்டுத்தோன்றின வென்பதையும் அவர்களின் கோத்திரம், கோத்திரத்தின் அதிதேவதைகள் என்பன பற்றியும் பின்வருமாறு விளக்கிச் செல்வார்.

(அ) சத்தியோசாத முகத்தினின்றும் தோன்றிய காமிகம் முதல் ஐந்து ஆகமங்களும் கௌசிக விருடியின் பொருட்டுத் தோன்றின. இவற்றின் படியே இவருக்குத் தீக்ஷை செய்யப் பட்டது. இவற்றிற்கு அதிதேவதை சிவமூர்த்தி. பூமியின்கண் இவ்விருடி கோத்திரம் சிவகோசரமெனப்படும்[75].

(ஆ) வாமதேவ முகத்தினின்றும் தோன்றிய கீப்தம் முதல் ஐந்து ஆகமங்களும் காசிபவிருடியின் பொருட்டுத் தோன்றின. இவற்றின்படியே இவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. இவற்றிற்கு அதிதேவதை ஈசுரன். பூமியின் கண் இவ்விருடி கோத்திரம் கோசரமெனப்படும்[76].

(இ) அகோர முகத்தினின்றும் விசயம் முதல் ஐந்தும் பரத்துவாச விருடியின் பொருட்டுத் தோன்றின. இவற்றின் படியே இருவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. இவற்றிற்கு அதிதேவதை ஈசானன். பூமியின் கண் இவ்விருடி கோத்திரஞ் சோதி கோசர மெனப்படும்[77].

(ஈ) தற்புருட முகத்தினின்றும் தோன்றிய ரௌரவம் முதல் ஐந்து ஆகமங்களும் கௌதம விருடியின் பொருட்டுத் தோன்றின. இவற்றின்படி இவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. இவற்றிற்கு அதிதேவதை பிரம மூர்த்தி. பூமியின் கண் இவ்விருடி கோத்திரம் சாவித்திரிகோசர மெனப்படும்[78].

---

74. மேலது நூல், ப.210  75. மேலது நூல், ப.210  76. மேலது நூல், ப. 210
77. மேலது நூல், ப. 210-211  78. மேலது நூல், ப. 211

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) ஈசான முகத்தினின்றும் புரோற் கீதம் முதல் எட்டு ஆகமங்களும் அகத்திய விருடியின் பொருட்டுத் தோன்றின. இவற்றின்படியே இவருக்குத் தீக்ஷை செய்யப்பட்டது. இவற்றிற்கு அதிதேவதை நடேசமூர்த்தி. பூமியின் கண் இவ்விருடி கோத்திரம் வியோம கோசரமெனவும் சொல்லப்படும்[79].

**(4) ஆகமங்களின் பேதங்கள் காட்டல்**

இருபத்தெட்டாகமங்களுள்ளும் காமிக முதலிய பத்தும் விஞ்ஞான கலருட் பரமசிவனது அநுக்கிரகத்தைப் பெற்ற பிரணவர் முதலிய பத்துச் சிவன்களுக்கும் அருளிச் செய்யப்பட்டமையாற் சிவபேத மெனவும், விசய முதலிய பதினெட்டும் இவ்வாறு பரமசிவன் பால் உபதேசம் பெற்ற அநாதிருத்திரர் முதலிய பதினெட்டு ருத்திரர்களுக்கும் அருளிச்செய்யப்பட்டமையால் உருத்திரபேத மெனவும் சொல்லப்படும்[80]

என ஆகமங்களின் பேதங்களை அல்லது பகுப்பு முறையினை எடுத்துக் காட்டுவார்.

**(5) ஆகமங்களின் கிரந்த சங்கிதைகளை வரையறுத்துக் குறிப்பிடல்.**

காமிகத்துக்குப் பரார்த்தம். யோகஜத்துக்கு இலக்ஷம். சிந்தியத்துக்கு இலக்ஷம். காரணத்துக்குக் கோடி. அசிதத்துக்கு நியுதம். தீப்தத்துக்கு நியுதம். சூக்குமத்துக்குப்பதுமம். சகச்சிரத்துக்குச் சங்கம். அஞ்சு மானுக்கு ஐந்திலக்ஷம். சுப்பிரபேதத்துக்கு மூன்று கோடி. விசயத்துக்கு மூன்று கோடி. நிச்சு வாகத்துக்குக்கோடி. சுவாயம்பு வத்துக்கு ஒன்றரைக் கோடி. ஆக்கினேயத்துக்கு முப்பதினாயிரம். வீரத்துக்கு நியுதம். ரௌரவத்துக்கு எட்டர்ப்புதம். மகுடத்துக்கு இலக்ஷம். விமலத்துக்கு மூன்றிலக்ஷம். சந்திரஞானத்துக்கு மூன்றுகோடி. முகவிம்பத்துக்கு இலக்ஷம் புரோற்கீதத்துக்கு மூன்றிலக்ஷம். இலளிதத்துக்கு எண்ணாயிரம். சித்தத்துக்கு ஒன்றரைக் கோடி. சந்தானத்துக்கு ஆறாயிரம். சர்வோக்தத்துக்கு இரண்டுலக்ஷம். பாரமேசுரத்துக்குப் பன்னிரண்டிலக்ஷம். கிரணத்துக்கு ஐந்து கோடி. வாதுளத்துக்கு இலக்ஷம்.[81]

என மிக நுணுக்கமாகவும் நுண்ணறிவுடனும் ஆகமங்களுக்குரிய கிரந்தத்தைப் புலப்படுத்துவார் நாவலரவர்கள்.

---

79. மேலது நூல், ப. 212 80. மேலது நூல், ப.212 81. மேலது நூல், 212 - 213

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(6) சிவாகமங்களின் பொருள்மரபு காட்டல்.**

ஆகமங்கள் ஞானபாதம், யோகபாதம், கிரியா பாதம், சரியாபாதம் என்று தனித்தனி நான்கு பாதங்களுடையனவாயிருக்கும்.

இவற்றுள், ஞானபாதத்தில் பரம சிவனுடைய சொரூப மும், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென்னும் ஆன்மாக்களின் சொரூபமும், ஆணவம், காமிகம், மாயேயம், வைந்தவம், திரோ தான சத்தியென்னும் பாசங்களின் சொரூபமும், சந்தியின் சொரூப மும், சிவதத்துவ முதற்பிருதுவி தத்துவம் வரை முப்பத்தாறு தத்து வங்கள துற்பத்தியும், இவை ஆன்மாக்கள் போகம் புசிக்கைக்குக் கருவியா முறைமையும், புவனங்கள் புவனேசர் சொரூபங்களும், புவனங்களின் யோசனைப்பிரமாணங்களும், அதமப்பிரளயம் மத்தியமப் பிரளயம் மகாப்பிரளயங்களின் சொரூபமும், அந்தப் பிரளயங்களின் பின்னர்ச் சிருட்டியா முறைமையும், பாசுபதம், மகா விரதங் காபால முதலிய மதங்களின் சொரூபமும் கூறப்படும்.

கிரியாபாதத்தில், மந்திரங்களி னுத்தாரணஞ் சந்தி யாவந் தனம் பூசை செபமோமங்களும், சமய விசேட நிருவாண ஆசாரியா பிடேகங்களும், புத்திமுத்திகளுக்குபாயமாகிய தீக்கையுங் கூறப்ப டும்.

யோகபாதத்தில், இந்த முப்பத்தாறுதத்துவங்களும், தத்து வேசுரரும், ஆன்மாவும், பரமசிவனும், சத்தியும் சகத்துக்குக் கார ணமாகிய மாயை மகாமாயைகளைக் காணும் வல்லமையும், அணி மாதிசித்திகளுண்டா முறைமையும், இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தியானம் தாரணம் சமாதிகளினு டைய முறைமையும், மூலாதார முதலிய ஆதாரங்களின் முறைமை யும் கூறப்படும்.

சரியாபாதத்தில், பிராயச்சித்திவிதியும் பவித்திர விதியும் சிவலிங்கலக்கணமும், உமாமகேசுர முதலிய வியத்தாவ் வியத்த லிங்கங்களினிலக்கணமும், நந்தி முதலிய கணநாத ரிலக்கணமும், செபமாலை, யோகபட்டம், தண்டம், கமண்டல முதலியவற்றினி லக்கணமும், அந்தியேட்டி விதியும் சிராத்தவிதி யும் கூறப்படும்[82]

என நாவலரவர்கள் ஆழ்ந்து ஆகமங்களை மிகவும் சுருக்கவும் தெளிவாகவும் விடயஞானத்துடன் கூறியிருப்பது நாவலரவர்கள் ஆகம நூல்களின் பால் கொண்டிருந்த ஈடுபாட்டினைக் காட்டுவதாக அமைகின் றது எனலாம்.

---

82. மேலது நூல், ப.213 - 214

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(7) சிவாகமங்கள் இறைவனின் புறத்தோற்ற வடிவம்.**

''சிவபெருமானுக்குக் காமிகம் திருவடிகளும், யோகசம் கணைக் கால்களும், சிந்தியம் திருவடிவிரல்களும்,காரணம் கெண்டைக் கால்களும், அசிதம் முழந்தாள்களும், தீப்தம் தொடைகளும், சூக்குமம் குய்யத்தானமும், சகச்சிரம் கடித்தானமும், அசுமான் முதுகும், சுப்பிரபேதம் கொப்பூழும், விசயம் உதரமும், நிச்சுவாசம் நாசியும், சுவாயம்புவம் முலைகளும், ஆக்கினேயம் கண்களும், வீரம்கழுத்தும்,ரௌரவம் செவிகளும், மகுடம் திருமுடியும், விமலம் கைகளும்,சந்திரஞானம் மார்பும் முகவிம்பம் திருமுகமும், புரோற்கீதம் திருநாக்கும், இலளிதம் கபோலங்களும், சித்தம் திருநெற்றியும் சந்தானம் குண்டலமும் சருவோத்தம் உபவீதமும் பரமேசுரம் ஆரமும் கிரணம் இரத்தினாபரணங்களும் வாதுளம் திருப்பரிவட்டமும், காலோத்தரம் திருமேற் பூச்சும், மற்றை உபாகமங்களெல்லாம் பரிமளத்திரவியங்களும் புஷ்பங்களும்,சைவசித்தாந்தம் நைவேத்தியமுமாம்.''[83]

இருபத்தெட்டு ஆகமங்களையும் இறைவனின் புறவுருவடிவத் துக்கு உவமையாகக் உரை கூறிய நாவலரவர்கள் ஆகமங்களின் உள்ளார்ந்த கருப்பொருளான சைவ சித்தாந்தை இறைவனுக்குச் சமர்ப்பணமாக- நைவேந்தியமாகக் காட்டுவது ஆகமங்களையும் சைவசித்தாந்தத்தையும் நாவலரவர்கள் ஆட்சிப்படித்தி வைத்திருந்த திறமைக்கு எடுத்துக்காட் டாக அமைந்திருந்த தெனலாம்.

**(8) மூலாகமங்களுக்குரிய உபாகமங்களின் தொகையினைத் தரல்.**

மூலாகமத்தின் வழித்தோன்றிய உபாகமங்கள் இருநூற்றேழாகும். இவற்றை மூலாகமத்துக்கு ஏற்றவாறு பின்வருமாறு வகுத்துக் காட்டுவார்.

''காமிகத்துக்கு உபபேதம் மூன்று. யோகத்துக்கு உபபேதம் ஐந்து. சிந்தியத்துக்கு உபபேதம் ஆறு. காரணத்துக்கு உபபேதம் ஏழு. அசிதத்துக்கு உபபேதம் நான்கு. தீப்தத்துக்கு உபபேதம் ஒன்பது. சூக்குமத்துக்கு உபபேதம் ஒன்று. சகச்சிரத்துக்கு உபபேதம் பத்து. அஞ்சுமானுக்கு உபபேதம் பன்னிரண்டு. சுப்பிரபேதத்துக்கு உபபேதம் ஒன்று. விசயத்துக்கு உபபேதம் எட்டு. நிச்சுவாசனுக்கு உபபேதம் எட்டு. சுவாயம்புவத்துக்கு உபபேதம் மூன்று. ஆக்கினேயத்துக்கு உபபேதம் ஒன்று.

83. மேலது நூல், ப. 214

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரத்துக்கு உபபேதம் பதின்மூன்று. ரௌரவத்துக்கு உபபேதம் ஆறு. மகுடத்துக்கு உபபேதம் இரண்டு. விமலத்துக்கு உபபே தம் பதினாறு. சந்திரஞானத்துக்கு உபபேதம் பதினான்கு. முகவிம்பத்துக்கு உபபேதம் பதினைந்து. புரோற்கீதத்துக்கு உபபேதம்பதினாறு. இலளிதத்துக்கு உபபேதம் மூன்று. சித்தத் துக்கு உபபேதம் நான்கு. சந்தானத்துக்கு உபதேசம் ஏழு. சர்வோ த்தத்துக்கு உபதேசம் ஐந்து. பாரமேசுவரத்துக்கு உபபேதம் ஏழு. கிரணத்துக்கு உபபேதம் ஒன்பது. வாதுளத்துக்கு உபபேதம் பன்னிரண்டு. இவற்றின் பெயர்களைக் காமிக முதலியவற்றிற் காண்க[84] என நாவலரவர்கள் குறிப்பிடுவது கூர்ந்து நோக்கத் தக்கது.

**(9) சிவாகமங்களைக் கேட்டோர் தொகை தரல்.**

''சிவபேதம் பத்தையும் கேட்டவர் ஒருவரிடத்தொருவராக ஒவ்வோராகமத்துக்கும் மும்மூன்று பேராய் அணு சதாசிவருட்ட லைவராகிய பிரணவர் முதன் முப்பதின் மராவர் எனவும் உருத்திர பேதப் பதினெட்டையும் கேட்டவர் ஒருவரிடத்தொருவராக ஒவ்வோராகமத்துக்கு இவ்விரண்டுபேராய் அநாதிருத்திரர் முதன் முப்பத்தறுவராவர்'' எனவும் குறிப்பிடுவதன் மூலம் ஆகமத்தை அறிவு பொருந்தக் கேட்டோர் தொகை அறுபத்தறுவர்கள்[85] எனும் எண்தொகையைச் சரியாகக் குறிப்பிடுவதோடு அவர்களின் பெயர்களையும் குறிப்பிட்டுச் செல்வதும் இங்கு மனங்கொள் ளத்தக்கது.

**(10) வேதசிவாகமங்களுக்கிடையிலான தொடர்புகளை எடுத்துக் காட்டல்.**

நாவலரவர்கள் வேத சிவாகமமிரண்டும் சிவபெருமானிடத்தே தோன்றின என்பதை:

''ஊர்த்துவ முகமாகி ஈசானத்தினின்றும்,காமிக முதலிய சிவாக மமிருபத்தெட்டும், அதோமுகங்கணான்கினுள்ளும் தற்புருடத்தி னின்றும் இருக்குவேதமும், அகோரமுகத்தினின்றும் யசுர்வேத மும், வாமதேவ முகத்தினின்றும் சாமவேதமும், சத்தியோசாத முகத்தினின்றும் அதர்வேதமும் தோன்றின என எடுத்துக்காட்டு வார். அத்துடன் இருக்குவேதம் இருபத்தொருசாகையும், யசுர்வேதம் நூறு சாகையும், சாமவேதம் ஆயிரஞ் சாகையும்,

84. மேலது நூல், ப.214 85. மேலது நூல், ப. 215

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதர்வவேதம் ஒன்பது சாகையும் உடையனவாம். இவ்வேதநான்கும் பிரம காண்டமும் பிரமஞானத்திற்கு நிமித்தமாகிய கரும காண்டமும் உணர்த்துவனவாம்''

வேதசிவாகமங்களில் இறைவனால் தோற்றவிக்கப்பட்ட பொழுதும் இவற்றுக்கிடையிலான முதன்மையை ஆராய்ந்து நோக்கிக் குறிப்பிடும் பொழுது;

'வேதசிவாகமமிரண்டும் சிவபெருமானிடத்தே தோன்றினமையால் முதனூலெனப்படும். வேதத்துக்கு வழிநூல் பதினெட்டுப் புராணங்களும் பதினெட்டு மிருதிகளுமாம். சார்புநூல் சிக்ஷை கற்பசூத்திர முதலிய வேதாங்கங்களாம்.

***வேதம் யஞ்ஞாதி கருமங்களைச் செய்து புண்ணிய லோகங்களை அடைய விரும்பும் உலகர்கள் பொருட்டும், ஆகமம் சிவசாலோக்கிய, சிவசாமீப்பிய சிவசாரூப்பிய சிவ சாயுச்சியங்களை அடைய விரும்புஞ் சத்திநிபாத முடையார் பொருட்டும், அருளிச் செய்யப்பட்டன***[87]

எனக்குறிப்பிடுவது சைவர்களால் நன்கு மனங்கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும்.

### மாயாவாதிகள்

வேதாந்தநிலை ஆராய முற்பட்ட நாவலரவர்கள் வேதாந்தமென்பதைப் புறநிலையாக மாயாவாதிகள் எனக் கொண்டு தம் கருத்தினைப் பின்வருமாறு விளக்குவதும் சைவர்களால் ஈண்டு மனங் கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும்[88]

***''தற்காலத்துச் சைவசமயிகள் பலர் புறச்சமயங்களாறனுள் ஒன்றாயுள்ள ஏகான்மவாதவகை நான்கினுள் ஒன்றாகிய மாயாவாதத்துக்குரிய ஆசாரியரை விசேட வொற்றுமைபற்றித் தம்மாசிரியாரனக் கொண்டு வழிபட்டொழுகியும், அம்மாயாவாத நூல்களைத் தம்சமய நூல்களெனக் கொண்டு பாராட்டியும், தம்சமயநிலையின் வழுவித் தாம் முன்னர் பெற்ற சிவதீக்ஷையின் பயனையும் அநுட்டித்த சமயாசாரங்களின் பயனையும் இழந்து எரிவாய் நிரயத்துக்கு இரையாகின்றனர்''***

### சலாசலலிங்கமும் அசலசலலிங்கமும் உணர்த்தல்.

சலாசலலிங்கத்தையும் அசலசலலிங்கத்தையும் உணர்த்த வந்த ம.ஞா.சம்பந்தர்,

86. மேலது நூல், ப.217 87. மேலது நூல், ப. 217 88. மேலது நூல், ப. 218

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வாணலிங்க மற்றுஞ் சலாசலமே மண்டலமுங்
காணி னசலசலங் காண்''

(பொ.இ.123) என்பார்.

''வாணலிங்கமுதலாயின இட்டலிங்கமாகவும் பரார்த்தத்திலே சிவ சன்னிதியில் அங்கலிங்கமாகவும் பூசிக்கப்படிற் சலமெனவும், பரார்த்தமாகத் தாபிக்கப்படின் அசலமெனவும் நிற்றலாற் சலாசல மெனப்பட்டன. அநந்த விசய முதலிய தொண்ணூற்றாறு மண்டல லிங்கங்களுள் யாதொன்று தீக்ஷைக்குச் சொல்லியபடி வேதிகையி லிட்டுப் பூசிக்கப்படின் அசலமெனவும், இட்டலிங்க மாக நாடோ றுமிட்டுப் பூசிக்கப்படிற் சலமெனவும் நிற்றலால் அசல சலமெனப் பட்டன''

என நாவலரவர்கள் ஆகம, சிற்ப சாத்திர விதிகளுக்கமைய சலாசல, அசலசல லிங்கங்கள் பற்றி விரித்துரைப்பார்.[89]

## பரிவார நாயன்மார்

'ஆனைமுக னாதியரை யர்ச்சிக்க' (பொ.இ.500)என்னும் தொடரு க்கு விநாயகர் முதலியோரையும் பிறரையும் அவரவருக்கு விதித்த எல்லையறிந்து விதிப்படி பூசிக்க'' என உரை கூறியநாவலரவர்கள்[90] இப்பரிவார தேவர்களை எவ்வகையில் எழுந்தளப்பண்ணிப் பூசிக்க வேண்டுமென்பதை ஆகம பூசாவிதிகளுக்கமையப் பின்வருமாறு விளக்குவது இங்கு நோக்கத்தக்கது[91]

''இலிங்கத்துக்கு முன்னே மேற்கே முகமாகத்திருநந்தி தேவரை யும், அவருக்கு முன் சூலத்தையும், அவருக்கு வாமத்திலே ஆதித்த னையும், அக்கினித்திக்கிலே சாத்தாவையும், மகேசுரரையும் சிவபெருமானுக்குத் தெற்கே தக்ஷிணா மூர்த்தி வித்தியா பீடத்தை யும், நிருதியிலே கணபதியையும் அவருக்கு இடப்பக்கத்திலே பிரமாவையும், வாயுவிலே சுப்பிரமணியரையும், வடக்கே தெற்கு முகமாக நிருத்த மூர்த்தியையும், அவருக்கு வாமத்திலே போக சத்திமையும், குபேரனுக்கும் வாயுவுக்கும் நடுவே சிவபத்தர்கய ளையும், அவருக்கு வாமனத்திலே வைரவரையும் எழுந்தருளிப் பண்ணிப் பூசிக்குக. இடபத்துக்கும் ஆதித்தனுக்கும் நடுவே திருநீற்றாதாரத்தில் மாயாசத்தியையும், திருநீற்றிலே லகுளீ சுரனையும், கயிற்றிலே வாசுகியையும் பூசித்து, அதற்கடுக்கச் செபமாலையை வைத்துப் பூசிக்குக''.

---

89. மேலது நூல், ப. 129 90. மேலது நூல், ப. 279

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமயிகளின் இலக்கணம்**

சிவனடியாரை வழிபடும் முறை பற்றிக் கூற வந்த மறைஞான சம்பந்தர்

> "**சிவநேசர்** பாதம் வணங்கிச் சிறக்க
> **வவரேவல்** செய்க வறிந்து"

(மா.இ.22) எனக் குறிப்பிடுவர். இக்குறளை மனங்கொண்டு விளக்கவுரை கூற வந்த நாவலரவர்கள்[92]

> "சமயிகள் சாமானியசமயி விசேஷசமயியென இருவகையர். அவருள் ஆசாரியரால் திருநோக்கு முதலிய தீக்கையினாலே தீக்சிக்கப்பட்டுப் புறம்புள்ள சிவகைங்கரியங்களைச் செய்பவன் சாமானிய சமயி, ஆசாரியரால் ஆகுதிபண்ணிப் சிவஹஸ்தம் வைக்கப்பட்டவன் விசேடசமயி. இப்படியே புத்திரரும் சாமானிய புத்திரர் விசேட புத்திரரென இருவகையர். சாதகாசாரியரு மிருவகையர். இவ்வாறுவரும் உத்தரோத்தர விசிட்டராகையால் அவரவர்தார தம்மிய முணர்ந்து வணங்கி ஏவல் செய்க வென்பார்.
>
> ஆசாரியர் சந்நிதியிலே சேட்டரிருந்தலால் கனிட்டர் வணங்கு முறைமை எங்ஙனமெனின், அப்பொழுது மானதமாக வணங்கிக் கொண்டு அவர்புறம்பே சென்றபின் காயத்தினால் வணங்கல் வேண்டுமென்றிக. நைட்டிக்காசாரியனைப் பிரமாகவும் கிருகத்தாசாரியனைச் சதாசிவனாகவும் பாவித்தல் வேண்டும்"

என விளக்குவார். குறிப்பாக குறளில் வரும் **சிவனேசர் பாதம் வணங்கி** என்னும் தொடரையும் **அவவரேவல் செய்க அறிந்து** என்னும் தொடரையும் மனங்கொண்டு விளக்குவதன் மூலம் சமயியின் இலக்க ணத்தை வெளிப்படுத்துவார்.

**தீக்ஷவகை**

ஆசாரியார் நான்கு வருணத்தாருக்கும் குண்டத்தான் மண்டலத்தானும் தீக்கையினைக் கொடுக்க வேண்டும் (இ.62) என்பார் மறை ஞான சம்பந்தர். குண்டலத்தாலும் மண்டலத்தாலும் இயற்றப்படும் தீஷை ஞானத்திரிதீக்ஷ என நாவலரவர்கள் பொருள் கொள்வதோடு தம் விளக்கவுரையில்[93].

> ஞானவதியென்றும் கிரியாவதியென்றும் இருவகைப்பட்ட ஔத்திரிதீக்ஷதான் இன்னும் நிர்ப்பீசதீக்ஷ சபீசதீக்ஷயென வெவ்வேறிருவகைப்படும்.

---

91. மேலது நூல், ப. 279 92. மேலது நூல், ப. 67 93. மேலது நூல், ப. 41 - 42

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றுள் **நிர்ப்பீசதீக்ஷையாவது** மலபரிபாக முடையராய வழியும் தீக்ஷைக்குப்பின் ஒரு தலையான் வழுவின்றி அநுட்டிக்கும் ஆற்றலும் அறிவும் இலராயினாருக்கு மற்றைக் கருமங்களோடு கூடச் சமயாசாரத்தையும் சுத்திசெய் தொழித்து நித்திய கரும மாத்திரிகையில் இயன்ற மட்டும் அதிகார முடையவராகச் செய்வதாம். ஆயினும் சமயாசாரங்களைச் சுத்திசெய்தொழித்தமையின் நைமித்திகத்தினும் காமியத்தினும் அதிகாரங் கெடாமை யால் இது **நிரதிகாரதீக்கை**யெனவும் பெயர் பெறும். இத்தீக்ஷை சமயமும் விசேடமும் நிருவாணமுமென மூவகைப்படும். அவற்றுட் சமயமும் விசேடமும் ஒரோவொன் றேயாம். மற்றை நிருவாணதீக்ஷை **அசத்தியோ நிருவாணமெனவும் சத்தியோ நிருவாணமெனவும்** இருவகைப்படும். அசத்தியோ நிருவாணம் தேகாந்தத்தின் முத்தியைப்பயப்பது; சத்தியோ நிருவாணம் அப்பொழுதே முத்தியைப் பயப்பது. சமயாசார சுத்தியோடு செய்யப்படும் நிருவாணதீக்ஷையும் அதற்கங்கமாயும் சுதந்திரமாயுஞ் செய்யப்படும் சமய விசேடங்களும் நிர்ப்பீச தீக்ஷையெனக் கொள்க.

இனிச் **சபீச தீக்ஷையாவது** மலபரிபாகத்தோடு கூடச் சிற்றறிவும் ஆற்றலும் மிக்குடையராயினாருக்குச் சமயாசார கன்ம மாத்திர நிறுத்தி மற்றைக் கன்மமெல்லாம் சுத்திசெய்தொழித்து நித்தியகன்ம முதலிய மூன்றினும் பேரதிகார முடையராகச் செய்வதாம். ஆதலின் இது **சாதிகார தீக்ஷை**யெனவும் பெயர் பெறும். இத்தீக்ஷைப் பேறுடையார் சாதகரும் ஆசாரியருமென்றிரு திறப்படுவர். இந்தச் சுபீட்சத்தை தான் உலோகதருமிணியும் சிவதருமிணியும் மென்றிருவகைப்படும். இவை முறையே பௌதிகதீக்ஷை, நைட்டிகதீக்ஷை யெனவும் பரியாயப்பெயர் பெறும். **உலோக தருமிணி யாவது** போக காமிகட்குத் திரோதான சுத்திரூபமாகிய சிகாச்சேத மின்றிச் செய்வது. **சிவதருமிணியாவது** முத்திகாமிகட்டுத் திரோ தான சுத்திரூபமாகிய சிகாச் சேதத்தோடு செய்வது, **உலோக தரு மிணி** அபர முத்தியாகிய பதப்பிராப்தியைப் பயக்கும். **சிவதருமிணி** பரமுத்தியைப் பயக்கும். சமயாசார சுத்தியின்றிச் செய்யப்படும் நிருவாண தீக்ஷையும் அதற்கங்கமாய்ச் செய்யப்படும் நிருவாணதீ க்ஷையும் அதற்கங்கமாய்ச் செய்யப்படும் சமய விசேடங்களும் சுபீசதீக்ஷையெனக் கொள்க''

எனத் தீக்ஷைகளை வகுத்தும் வகுத்தவற்றைப் பகுத்தும் குறளோடு இயைபுகாட்டி விளக்குவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருப்பணி**

தன்னிடத்திலுள்ள செல்வத்துக்கேற்பத் திருப்பணி செய்து சிவனது திருவருளைப் பெற வேண்டும் என்பதை ம.ஞா.சம்பந்தர்

''செல்வத்தினுக் கிசையச் செய்து திருப்பணியு
மல்லலறுத் தாளறாது'' (மா.இ.கு.10) என்பார்.

இதற்கு விளக்கவுரை கூறவந்த நாவலரவர்கள்:

''சிவபெருமானுடைய திருவடிகளை அடையக்கருதிய செல்வர்கள் தங்களுடைய செல்வத்தை மூன்று கூறு பண்ணி அவற்றுள் ஒரு கூற்றைத் தங்கள் சீவனத்தின் பொருட்டு வைத்துக் கொண்டு மற்றையிரண்டு கூற்றையுந் திருப்பணியிலே செல்லவிடல் வேண்டுமென்று சிவாகமஞ் செப்புதலால் செல்வத்தினுக்கிசைய வென்றார் என உரை விரித்ததோடு திருப்பணியுமென்ற உண்மையாற் பூசையுங் கொள்க'' என்பார்.[94]

**சோதிடம்**

சடசீதிமுகநான்கு புண்ணிய காலங்களிலே நித்திய கர்மங்களெல்லாவற்றையும் இரு மடங்கு செய்தல் புண்ணியம் (பொ.இ.16) என்பார்[95] ம.ஞா.சம்பந்தர்

''சடசீதிமுகநான்கினும் மாசம்பிறந்த பதினாறு நாழிகை புண்ணிய காலம் கார்த்திகை, மாசி, வைகாசி, ஆவணி என்னும் இந்நான்கு மாசசங்கிரமும் விட்டுணுபதியெனப்படும். இவைகளிலே மாசம் பிறக்குமுன் பதினாறு நாழிகை புண்ணிய காலம். தக்ஷிணாயனமாகிய ஆடிமாச சங்கிரமத்திலே மாசம்பிறக்குமுன் பதினாறு நாழிகை புண்ணியகாலம். உத்தராயண மாகிய தைமாச சங்கிரமத்திலே மாசம் பிறந்தபின் பதினாறு நாழிகை புண்ணியகாலம். சித்திரை விஷு ஐப்பசிவிஷு. என்னும் இரண்டிலும் மாசம் பிறத்தற்கு முன்னெட்டு நாழிகையும் பின்னெட்டு நாழிகையும் புண்ணிய காலம்,'' சூரிய கிரணத்திலே பரிசகாலம் புண்ணிய காலம், சந்திர கிரணத்திலே விமோசனகாலம் புண்ணிய காலம்.'' எனப் புண்ணிய காலங்களைச் சோதிடசாத்திர நூல் அறிவு கொண்டு விரித்துரைத்த நாவலரவர்கள்[96] **உரையிற்கோடல் என்னும் உத்தியைப்** பயன்படுத்தி, ''வியதிபாதம், சிவராத்திரி, அர்த்தோதயம், மகோதயம் முதலாகிய பிற புண்ணிய காலங்களும் கொள்க''[97] என மேலும் விரித்துரைப்பது இத்துறையில் நாவலரவர்கள் கொண்டிருந்த ஈடுபாட்டினைக் காட்டுவதாகும்.

---

94. மேலது நூல், ப. 63 95. மேலது நூல், ப. 82 96. மேலது நூல், ப. 82
97. மேலது நூல், ப. 82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிராயச்சித்தம்

பிராயச்சித்தஞ் செய்து கொள்ள விரும்புவோர் நித்தியாங்கங்களை அநுட்டிப்பதன் மூலம் பாவத்தைப் போக்கலாம் (பொ.கு.22) என்பார் ம.ஞா.சம்பந்தர்.[98] நாவலரவர்கள்:

''நித்தியாங்கங்களாவன நித்தியகர்மலோபம் வந்தபோது அதற்குப் பரிகாரஞ் செய்தலும், அட்டபந்தன சலனம் வந்தால் மீளவும் அவ்வட்டபந்தனஞ் சாத்தலும், மார்கழி மாதத்திற் கிருதாபிஷேக முதலாகப் பன்னிரண்டு மாதத்திலும் மாதபூசை பண்ணுதலும், சாம்வற்சரிகப் பிராயச்சித்தமாகப் பவித்திரஞ்சாத்தலுமுதலியன''

என நித்தியாங்கங்களை விரித்துரைப்பதன் மூலம்[99] வடநூல்களிலும் கரும விதிகளிலும் தமக்குள்ள புலமையை வெளிப்படுத்துவார்.

### பஞ்சதீர்த்தம்

''ஐவகைப்பட்ட தீர்த்தத்தைப் பகுத்துணர்ந்து அததினாலே செய்யப்படுங் கருமத்தை வழுவாதே செய்'' என்று ''பஞ்சவித தீர்த்தத்தைப் பாங்காக'' (பொ.இ.66) என வரும் குறளுக்கு உரைகூறிய நாவலரவர்கள்[100] விரித்தியுரையில் பஞ்சதீர்த் தங்கள் என்பதன் தொகையை விரித்து விளக்கிப் பயன் உரைப்பார். அதுவருமாறு[101].

''பஞ்சதீர்த்தங்களாவன! தேவதீர்த்தம், ஆரிடதீர்த்தம், மானுடதீர்த்தம், பூததீர்த்தம், பிதிர் தீர்த்தம் என்பனவாம். அவற்றுள் தேவதீர்த்த மாவது கைந்நதி. ஆரிடதீர்த்தமாவது விரல்களினிறைச் சந்தி, மானி டதீர்த்தமாவது கனிட்டிகை மூலம். பூததீர்த்தமாவது மணிக்கட்டு. பிதிர்தீர்த்தமாவது தர்ச்சனி அங்குட்டங்களினடு. தேவதீர்த்தத்தினாலே தேவர்களுக்கும், ஆரிடதீர்த்தத்தினாலே இருடிகளுக்கும், மானுடதீர்த்தத்தினாலே மனுக்களுக்கும், பூததீர்த்தத்தினாலே பஞ்சபூதங்களுக்கும் பிதிர்களுக்கும் தருப்பணஞ் செய்க''.

### சன்னியாசி

சன்னியாசியும் மனைவியோடு தங்குகின்றவனாகிய வானப்பிரத்தனும் ஆசாரியராகார் (ஆ.இ.59) என்பார் மறைஞான சம்பந்தர். இங்கு சன்னியாசி வானப்பிரத்தர் என்பதற்கு நாவலரவர்கள் பின்வருமாறு உரைவிளக்கம் செய்வது அவர்தம் வடமொழி இலக்கியப் புலமைக்கும் வாழ்க்கைப்படி நிலை விளக்கத்துக்கும் சிறந்த எடுத்துக் காட்டாகும். சந்நியாசிகள் பற்றி நாவலரவர்கள் [102]

---

98. மேலது நூல், ப. 84 99. மேலது நூல், ப. 84 100. மேலது நூல், ப.104
101. மேலது நூல், ப. 104-105

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நியாசிகள் தபசுவியெனவும் விஷுதீஷு எனவும், வித்துவானெனவும் மூவகையர். வனத்திலே தனித்து மரத்துநிழலே தானிருக்குமிடமாகக் கொண்டவனாய், மாணாக்கர்களைத் தேடி அவர்களுக்கு நூல்களைக் கற்பித்தும் தண்டு கமண்டலந்தரிப்பது மின்றி, மணல் முதலிய க்ஷணிகலிங்கத்தையே பூசை பண்ணிக் கொண்டு, பாணியே பாத்திரமாக இரந்து புசித்து, வேறொரு வியாபாரமுமின்றி மௌனியாகயிருப்பவன் **தபசுவீ யென்னுஞ் சந்நியாசி.** வேதசிவாகமங்களை அத்தியயனம் பண்ணலும் பிறர்க்குப் பண்ணுவித்தலும் அவைகளைக் கேட்டலும் சிந்தித்தலும் ஆகிய இவைகளுடனே, மேற்கூறிய கிருத்தியங்களையுடையவன் **விஷுதீஷு என்னுஞ் சந்நியாசி.**

''ஆசாரியரால் அபிடேகம் பெற்று மாணாக்கர்களுக்குச் சிவாகம வியாக்கியானம் பண்ணிக் கொண்டு அதனை எப்போதும் சிந்தித்தி ருத்தலோடு மேற் கூறிய கிருத்தியங்களையுமுடையவன் **வித்துவா னென்னுஞ் சந்நியாசி**'' எனச் சந்நியாசிகளை வகைப்படுத்தி விரித்துரைப்பார்.

**வானப்பிரத்தர்:**

'**வானப்பிரத்தர்**' இல்லைவிட்டு மனைவியோடு வனத்திற்குச் சென்று பொறிகளை யடக்கிச் சிவபூசை அக்கினி காரியம் குருபூசை யென்னுமிவைகளைச் செய்து கொண்டிருப்ப வர். மனைவியோடு கூடாத வானப்பிரத்தருமுளர். மனைவியோடு கூடிய வானப்பிரத்தனுக்குச் சபத்தினீகனென்றும் கூடாத வானப்பிரத்தனுக்கு **விபத்தினீகனென்றும்** பெயர்.[103] என வானப் பிரத்தர்களை வகைப்படுத்தி விரிப்பார்.

**மரபு நிலை**

இந்நூலினூடே வடமொழி மரபுகளையும் தமிழ் மொழி மரபுகளையும் இணைத்துக் காட்டுவதன் மூலம் தமக்குள்ள இரு மொழிப்புலமையை வெளிப்படுத்துவார் நாவலரவர்கள். சமயநெறியில் வடமொழி மரபுகள் தனித்துப் பேணுவதைவிட அவை தமிழ்மொழி மரபுகளுடன் இணைந்தே போற்றப்பட வேண்டும் என்பதில் நாவலரவர்கள் உறுதி யான கருத்துடையவராகக் காணப்பட்டார். இந்நூல் பெரிதும் வடமொழி நூற் கருத்துக்களை உள்வாங்கியே இயற்றப்பட்ட தென்பதில் கருத்து வேறுபாடுகளுக்கு இடமில்லை. அவ்வகையில் நாவலரவர்க

102. மேலது நூல், ப. 39 103. மேலது நூல். பக்.39-40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கு வடமொழி நூல்களில் உள்ள மரபு பற்றிய அறிவைக் கவனத்துக் கொள்ளும் அதே வேளையில் அவற்றுக்கு ஈடாக நாவலரவர்கள் காட்டும் தமிழ் மரபு அறிவின் உயர் நிலையையும் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்நூலின் பொது விலக்கணத்தில் நாவலரவர்களுக்கு வட மொழி மரபு நிலை பற்றிய அறிவு உயர்ந்து காணப்படுவது போன்றே தமிழ் மரபு நிலை பற்றிய அறிவும் உயர்ந்தே நிற்கின்றது.

ஆசாரியருக்கு இன்றியமையாச் சைவாகமவுணர்ச்சிபற்றிக் கூறவந்த ம.ஞா.சம்பந்தர்

''அல்லாற் சுலோக மொருநியுத மாராய
**வல்லானுந்** தேசிகனா வான்''

*(பொ.இ.3)* என்பார். இதற்குச் சைவாகமங்களில் கிரியாகாண்டம் ஞானகாண்டம் என்னுமிரண்டினையுணர வல்லவனும் ஆசாரியனாவான்[104] எனப் பொருள் உரைத்த நாவலரவர்கள் வல்லானும் என்பதன் கண் இறந்தது தமீஇய எச்சவும்மையை எதிரது தழீஇய வெச்சவும்மையாக்கிப் பின்வருமாறு உரைப்பது இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது.[105]

''ஒரு லக்ஷங்கிரந்தம் ஓதமாட்டாதானாயின் ஐம்பதினாயிரங் கிரந்தமோதினவன் மத்திமாசாரியானெனவும் இருபத்தையாயிரங் கிரந்த மோதினவன் கனிட்டாசாரியனெனவுங் கொள்க. விசேக்ஷ வித்தையாகிய சைவாகமத்தையோதல் வேண்டுமெனவே, அவ்வு ணர்ச்சிக்கு இன்றியமையாக் கருவியாயுள்ள நிகண்டு காவியம் வியாகரணம் தருக்க முதலிய சாமானிய வித்தையும் கற்றுணர்தல் வேண்டுமெனக் கொள்க.

அன்றியும், **தமிழ்வழக்கு நிலத்தின் கண்ணே ஆசாரியராவோர் வடமொழிப் பயிற்சி பெரிதுடையரானுங் கேட்போரெல்லார்க்கும் அஃதுண்மை கூடாமையால் தமிழினும் நிகண்டு கற்று இலக்கிய வாராய்ச்சி செய்து பஞ்சலக்கணப்பயிற்சியுடையராய்த் தமிழ்ச் சித்தாந்த சாத்திரம் பதினான்கையுமுணர்ந்தவராகியும் தமிழ் வேத மாகிய தேவார திருவாசங்களைப் பண்ணோடத்தியயனம் பண்ண வல்லராகியும் இருத்தல் வேண்டுமெனவும் துணிக.**

**''தமிழ் வேதங்களும் தமிழ்ச்சித்தாந்தங்களும் பசுகரணம் நீக்கிச் சிவகரண முற்ற உண்மை நாயன்மார்களால் அருளிச் செய்யப்பட்ட மையால் பதிவாக்கெனவே துணியப்படும். இஃதறியாது பசுவாக் கென நினைப்பினும் நகரத்துன்பமெய்தல் சத்தியமென்பது தெளிக''.**

---

104. மேலது நூல், பக். 75-76     105. மேலவது நூல்.ப.76

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி நாவலர்களின் கூற்றிலிருந்து

(1) ஒருவர் கிரந்தமோதினால் சிறந்த ஆசாரியனாக முடியாது. அவர் ஆசிரியனாவதற்குக் கல்வியுணர்ச்சிக்கு இன்றியமையாக் கருவி களாகிய நிகண்டு காவியம் வியாகரணம் முதலான சாமானிய வித்தைகளைக் கற்று தன்னை ஆசிரியனாவதற்குரிய தகுதியுடைய வனாக்கிக் கொள்ளல் வேண்டும் என்பதையும்

(2) சைவாகமங்கள் தமிழ் நாட்டிலே தோன்றியமையால் வடமொழிக் கருவி நூல்களின் பயிற்சி போதுமானதன்று அது சென்றடைய வேண்டிய பொதுமக்களை அடைய வேண்டுமானால் தமிழில் பஞ்சலக்கணப்பயிற்சியும் திருமுறைகளின் ஓதும் திறனும் சித் தாந்த சாத்திர அறிவும் இன்றியமையாது என்பதையும் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

ஒருவகையில் நாவலரவர்கள் வடமொழி மரபுகளையும் தமிழ் மொழி மரபுகளையும் சமயநெறிக்கு இன்றியமையாத இருகண்களாக வோ உடலும் உயிரும் போல் பிரிக்க முடியாதனவாகவோ கருதினார் போலும்.

மேலும் நாவலரவர்கள் வடமொழி நூல்களிலிருந்து எடுத்துக்காட் டும் மேற்கோள் யாவும் இருமரபுகளின் இணைப்பையே காட்டுவன எனலாம். குறிப்பாக மேற்கோள் நூல் காட்டப்ப டாத இரு பத்து மூன்று மேற்கோள்களும் ஒன்பது நூல்களில் இருந்து மேற்கோள் காட்டுவதும் இருமொழி மரபுநிலையை உணர்த்துவதற்கே யென்பதையும் மனத்திற் கொள்ளல் வேண்டும்.

நாவலரவர்கள் இரு மொழி நூல் மரபுகளையும் எடுத்துக் காட்டும் திறனுக்குச் சில உதாரணங்களை நோக்கலாம்.

சிவலிங்கம் சலம் அசலம், சலாசலம், அசலசலம் என நான்கு வகைப்படும்[106] இவற்றுள் கோபுரம் முதலாயின அசலலிங்கம் ஆகும். இதனை ம.ஞா.சம்பந்தர் கோபுர மாதியசலம் (பொ.இ.122) என்பார்[107] இதற்கு உரைவிளக்கம் செய்த நாவலரவர்கள் ஆதியென்றதினால் விமான முதலியனவுங் கொள்க என்பார். அத்துடன் திருக்கோபுரத்தைச் சிவனாகப் பாவித்துப் புட்பங்கள் சாத்தி அர்ச்சித்தல் போலத் தூபியை யும் அவ்வாறே அர்ச்சிக்க வேண்டும் என்பார்.[108]

''தூபியினைக் கோபுரத்தை யீசனெனக் கண்டுதொழு
பாபமறும் வாய்த்துறுமின் பம்''

என்னும் செய்யுளை அதற்கு உதாரணமாக எடுத்தக்காட்டுவார்.[109]

106. மேலது நூல்,ப.128 107. மேலது நூல்,ப.128 108. மேலது நூல்,ப.130

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மலர்கொய்தல்**

''சூரியோதயத்துக்கு முன்னே ஸ்நானம் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்துச் சந்தியா வந்தனமுடித்து, இரண்டு கைகளையுங் கழுவித் திருப்பழங் கூடையை எடுத்து, ஒரு தண்டு நுனியிலே மாட்டி உயரப்பிடித்துக் கொண்டாயினும் அரைக்கு மேலே கையி னாலே பிடித்துக் கொண்டாயினும் திருநந்தவனத்தில்போய்ச் சிவ பெருமானை மறவாத சிந்தையோடு பத்திரபுஷ்பமெடுக்க.

கைகளை அரையின் கீழே தொங்கவிடுதலும், கைகளினாலே உடம்பை யேனும் வஸ்திரத்தையேனுந் தீண்டுதலும் ஆகாதன வாம். புத்திரபுஷ்ப மெடுக்கும்போது பேசுதலும், சிரித்தலும் சிவபெருமானுடைய திருவடிகளிலேயன்றிப் பிறவற்றிலே சிந்தை வைத்தலும் கொப்புக்கள் கிளைகளை முறித்தலும் பெருங்குற்ற ங்களாம்.

பத்திரபுஷ்ப மெடுத்தவுடனே, அவைகளைப் பத்திரத்தினாலே மூடி மடத்தையடைந்து, கால்களைக் கழுவிக் கொண்டு உள்ளே புகுந்து. திருப்பூங்கூடையைத் தூக்கிவிட்டு திருமாலைக் குறட்டை சலத்தினாலலம்பி இடம்பண்ணித் திருப்பூங்குடை பத்தி ரபுஷ்பங் களை அதில் வைத்துக் கொண்டு, மௌனியாகவிருந்து சாவதான மாக ஆராய்ந்து, பழுதுள்ளவைகளை அகற்றிவிட்டுத் திருமாலை தொடுக்குக.''[110]

என்பது நாவலரவர்கள் ''துன்றுமலர் கொய்து தொடுத்து'' (மா.இ.கு.7) என்னும் தொடருக்கு தரும் விளக்கமாகும். இவ் விளக்கம் செய்யப்பட வேண்டியனவற்றையும் செய்யப்பட வேண்டாதனவற்றையும், குறித் துக் கட்டளைத் தன்மையை உணர்த்தி நிற்கும். இத்தகைய விளக்கம் வடமொழி-தமிழ் மொழி மரபுகளுக்குப் பொதுவான, இந்துசமய பண்பாட்டு உணர்வுகளுக் கும் பொதுமை பொருந்திய தொன்றாகக் குறிப்பிடலாம்.

**பரார்த்தலிங்கபூசை**

சிருட்டி காலத்திலே அநாதிசைவாராகிய சதாசிவ மூர்த்தியுடைய பஞ்சவத்திரத்தினின்றும் தோன்றிய பஞ்சருஷிகோத்திரத்திலே சனித்த சிவப்பிராமணர்களாகிய ஆதிசைவர்களே பரார்த்தபூசைக்கு ஆசாரியர்கள் என்பார் மறை சம்பந்தர்.[111] அநாதி சைவர், ஆதிசைவர், மகா சைவர், அநு சைவர், அவாந்தரசைவர், பிரவரசைவர், அந்திய சைவரெனச் சைவர்

---

109. மேலது நூல்,ப.130 110. மேலது நூல்.ப.57-58 111. மேலது நூல்.ப.253

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுவகையர்[112]'' இதற்குச் சான்றாக ''அரியசதா சிவனென்போ னநாதி'' எனத் தொடரும் பாடலை எடுத்துக்காட்டி விளக்குவார்[113] நாவலரவர்கள் அத்துடன் அமையாது ஆதிசைவருள்ளும் சமயதீக்ஷை, விசேட தீக்ஷை, நிருவாணதீக்ஷை, ஆசாரியாபிஷேகம் என்னும் நான்கும் பெற்றவரே பரார்த்தலிங்கத்தைத் தீண்டற்கு அதிகாரிகளாவர்[114] இவை பெறாதவர் தீண்டின், உலகத்துக்கும் அரனுக்கும் கேடும் விளையும் என விரித்துரைத்தோடு, அதற்கு எழுத்துக்காட்டாக;

''தரித்தபிடேக, மந்தஞ், சுசியினனாற், சுத்தசைவ ரருச்சனை புரிகவொன்று மன்பினாற் பரார்த்த லிங்கந் தரித்திடா னபிடேக காந்தந் தாவர லிங்கந் தீண்டிற்பரித்திடா வளத்தைப் பாரும் பார்த்திவற் காகும் பாவம் என்னும் பாடலையும்[115] ''ஆதலால் வேந்தனராய்'' என்னும் தொடரையுடைய பாடலையும் எடுத்துக்காட்வார்.[116]

## உருத்திராக்ஷத்தின் விசிட்டம்

சிவாலய சேவை முதலிய புண்ணியங்கள் செய்யும் பொழுது உருத்திராக்ஷந்தரித்தல் வேண்டும் என்பதை ''பூணாமற் கண்டிசிவ பூசைபுரி வார்பலத்தைக், காணார் பூணாய்கண்டி கை'' (பொ.இ.கு.131) என்னும் குறள் வற்புறுத்தும்.[117] உருத்திராக்ஷமணி தாமரைமணி பளிங்கு மணி புத்திரதீபமணி சங்குமணி எனப் பலகைகளுண்டு. அவைகள் எல்லாவற்றுள்ளும் உருத்திராக்ஷமே சிறப்புடையதெனக் குறிப்பிடுவார் ம.ஞா.சம்பந்தர்.[118] உத்திராட்சம் வட இந்திய சமயமரபிலும் தென் இந்திய சமயமரபிலும் முக்கியத்துவம் பெறுவது. இது சிவசின்னங்களுளொன்று. அதன் விசிட்டத்தை[119]

''உருத்திரனது கண்ணிற்தோன்றினமையால் உருத்திராக்ஷமெனப் பெயர் பெற்றது. தேவர்கள் திரிபுரத்தசுரர்களாலே தங்களுக்கு நிகழ்ந்த துன்பத்தை விண்ணப்பஞ் செய்து கொண்ட பொழுது திருக்கைலாசபதி ஆயிரந்தேவருடம் தம்முடைய மூன்று திருக் கண்களையும் மலர்த்திக் கொண்டிருப்ப, அவைகளினின்றும் நீர் பொழிந்தன. சூரியரூபமாகிய வலக்கண் பொழிந்த நீரிலே பன்னிரண்டு ருத்திராக்ஷமரமும் சந்திரரூபமாகிய இடக்கண்பொழிந்த

112. மேலது நூல்.ப.252 113. பார்க்க பின்னிணைப்பு -2
114. நாவலர்,1955, சைவசமய நெறிமூலமு வுத்துரையும்.ப.254
115. பொது நூல்.ப.254 116. பார்க்க பின்னிணைப்பு-1
117. மேலது நூல் பொ.இ.கு.180 118. மேலது நூல்.ப.133
119. மேலது நூல், பக். 133-134

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரிலே பதினாறு ருத்திராஷமரமும் அக்கினி ரூபமாகிய நெற்றிக் கண் பொழிந்த நீரிலே பத்துருத்திராக்ஷமுமரமும் உதித்தன. வலக்கண்ணீரினின்று கபிலநிறவுருத்திராக்ஷமும் அதினின்று பொன்றிறவுருத்திராக்ஷமும் தோன்றின. இடக் கண்ணினின்று செந்நிறருத்திராஷரும் சுதனினின்று வெண்ணிறவுருத்திராக்ஷமும் தோன்றிற்று. நெற்றிக்கண்ணினின்றும் கருநிறவுருத்திராக்ஷந் தோன்றிற்று''

என நாவலர்கள் பௌராணிக மரபுக்கதையினைக் குறிப்பாக வட மொழிப்புராணக் கதையினை எடுத்துக் காட்டுவதன் மூலம் எடுத்துக் கொண்ட பொருளின் சிறப்பையும் தனது புலமையையும் வெளிப்ப டுத்துவார்.

**வாணலிங்கம்**

வாணலிங்கத்தின் அடிமுடியினை வரையறை செய்ய முயன்ற ம.ஞா. சம்பந்தர் ''முடிதூல மாமுக முன்னதமாஞ் சூக்கமாடி'' (பொ.இ.114) என்னும் சூத்திரத்தால் அதனைச் சுட்டுவார். வாணலிங்கத் திலே தூலமாயிருக்குமிடம் முடியென்றும் யாதாயினு மொரு பக்கத் திலே உயர்ந்திருக்குமிடம் முகமென்றும் குவிந்திருக்குமிடம் அடியென் றும் நூலோர் கூறினார்கள் என நாவலர்கள் அதற்கு உரை கூறியதோடு அமையாது[120] புதியதொரு விளக்கத்தை அகலவுரையில் தருவார். அதுவருமாறு[121]

''இங்ஙனம் பகுத்துணர்ந்த இலிங்கத்தை ஐந்து கூறுபண்ணி மேலே மூன்று கூறு நிற்கக் கீழிரண்டு கூற்றையும் உள்ளே பதித்து அட்டபந்தனஞ் சாத்துக. இடவிதாயிருந்தாலும் குவிந்திருந்தாலும் எவ்விடம் அழகு பெற்றிருந்தது அதுவே திருமுடி யெனக் கொள்ள லுமாம்''

எனச் சிற்பசாத்திர விதிமுறைக்கமைய விளக்கந்தந் திருப்பது நாவலர்களது பல்துறைப்புலமைக்குத் தக்கசான்றென்லாம்.

**அநுலோமர்**

இந்திய சமுகவியல் வரலாற்றோடு வருணப்பாகுபாடு பிரிக்க முடியாத தொன்றாக இன்றுவரை காணப்படுகின்றது. நான்கு வர்ணங் களின் கலப்பின் கலப்பால் ஏற்பட்டதே அநுலோமர் பிரதிலோமர் என்னும் பாகுபாடாகும். இந்திய ஸ்மிருதி நூல்கள் பலவும் இப்பாகு பாடுகளை எடுத்து கூறுகின்றன. ''பழைய சட்டகாலங்கள், ஒத்தவரு

120. மேலது நூல், ப. 114 121. மேலது நூல், ப. 114

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணத்துப் பெண்ணொருத்தியைத் தன் முதன் மனைவியாகக் கொண்ட வொருவனுக்கு மேற்காப்பு (அனுலோம) மணத்தை அனுமதித்துள் ளன[122] என்னும் கூற்று இங்கு மனங்கொள்ளத்தக்கது. வைதிக நூல்களின் சார்பு நூல்களுளொன்றான இச்சைவசமயநெறி என்னும் சமூக நூலும் பாகுபாட்டினை எடுத்துக் கூறியதில் வியப்பில்லை. அந்நூல்

''புருடனுயர்ந் தானிழிந்த பொற்றொடியைப் புல்ல
வருவார்தா மேயநுலோ மர்''

(பொ.இ.கு466) எனஅநுலோமர் இலக்கணத்தைக் குறிப்பிடுவார். நாவலரவர்கள் இதற்கு நான்கு வருணத்தாருள்ளும் உயர்ந்த வருணத்தாடவன் இழிந்த வருணத்துப் பெண்ணைப்புணரப் பிறந்தவர்களே அநுலோமர் என உரை கூறுவார்[123] அத்துடன் இதற்கு எடுத்துக்காட்டாகப் ''பார்ப்பா ரரசர் வணிகர் வேளாளரென'' என்று தொடங்கும் சூத்திரத்தையும் எடுத்துக்காட்டுவதோடு[124] ஆறுவகை அநுலோமர் பற்றியும் எடுத்துரைப்பார்.[125]

''புருடனிழிந் தானுயர்ந்த பொற்றொடியைப் புல்ல
வருவார் பிரதிலோமர்''

(பொ.இ.கு467) என்னும் குறளின் மூலம் பிரதிலோமரின் இலக்கணக்கத்தைப் புலப்படுத்துவார் ம.ஞா.சம்பந்தர். நாவலரவர்கள் இதற்குப் பொருள் விரிக்கையில் இழிந்த வருணத்தாடவன் உயர்ந்த வருணத்துப் பெண்ணைப்புணர, பிறந்தவர்களே பிரதிலோமர்கள் என்பார்[126] நாவலரவர்கள் தமது விருத்தியுரையில்

''இழிந்த வாணினு முயர்ந்த பெண்ணினும்
வியந்த கூட்டத் தவிர் பிரதி லோமர்''

என்னும் சூத்திரத்தை எடுத்துக்காட்டி[127] அதன் இலக் கணத்தை மேலும் உறுதிப்படுத்தியதோடு,

க்ஷத்திரியனுக்குப் பிராமணப் பெண்ணி டத்திலே பிறந்தவன் சூதன். வைசியனுக்கு க்ஷத்திரியப் பெண்ணி டத்திலே பிறந்தவன் வைதேககன். ஆக வைசியப் பெண்ணிடத்திலே பிறந்தவன்

122. பசாம், ரு.து, 1963 வயத்தகு இந்தியா அ.மொ.தி.வெ.பிரகம்

123. ஆறுமுகநாவலர், 1955, சைவசமய நெறி மூலமும் புத்துரையும், ப. 267

124. பார்க்க பின்னிணைப்பு - 2

125. ஆறுமுகநாவலர், 1955, சைவசமய நெறி மூலமும் புத்துரையும். பக் 267

126. மேலது நூல், ப.268 127. மேலது நூல், ப.268

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயோகவன். க்ஷத்திரியப் பெண்ணிடத்திலே பிறந்தவர் மூவர். ஆகப் பிரதிலோமர் அறுவராதல் காண்க''

அநுலோமத்தானும் பிரதிலோமத்துப் பெண்ணுங்கூடிப் பிறந்தவர் அந்தராளர். பிரதிலோமத்தானும் அனுலோமத்துப் பெண்ணுங் கூடிப் பிறந்தவர் விராத்தியர்[128] எனவும் விரித்துரைப்பது, நாவலரவர்களின் பல்துறைப் புலமையினையும் வடநூற்கல்வியில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டினையும் உணர்த்தி நிற்கின்றது எனலாம்.

128. மேலது நூல், ப.266

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - 05
# நாவலரின் உரை நெறி

## அதிகாரத் தோற்றுவாய்

இந்நூல் எழுநூற்றிருபத்தேழு குறள் வெண்பாக்களால் ஆக்கப் பெற்றது; காப்பு பாயிரம் ஆகியன தவிர்த்து (25) ஆசிரியரிலக்கணம் (91) மாணாக்கரிலக்கணம் (38) பொதுவிலக்கணம் (572) என்னும் மூன்று அதிகாரங்கள் கொண்டது. இவ்வதிகாரங்கள் குறள் போல் முப்பால்களாகவும் அவை ஒவ்வொன்றும் பத்துப்பாக்கள் கொண்ட பல அதிகாரங்களாகவும் அமையாது, பல குறட்பாக்களை உள்ளடக்கிய மூன்று அதிகாரம் கொண்ட நூலாகவே அமைந்துள்ளது. பரிமேலழகர் குறளில் முப்பால் பற்றி விளக்கியும் இயல், அதிகாரம் பற்றித் தனிதனி எடுத்துரைத்தும் அவற்றுக்கிடையிலான இயைபையும் வைப்பு முறைமையையும் காட்டியும் செல்வார். நாவலரவர்களால் இதில் அவ்வாறு செய்ய முடியவில்லை. இந்நூல் மூன்று அதிகாரங்களையும் பல குறட்பாக்களையும் கொண்டு அமைந்தமையும் இதற்குக் காரணமெனலாம். இதனால் இதற்கான அதிகார வைப்புமுறையையும் இயைபையும் பாயிரத்தின் இறுதியிலே பின்வருமாறு கூறிச் செல்வார்[2].

> ''இந்நூலாசிரியர் இதனை ஆசாரியரிலக்கணம் மாணவரிலக்கணம் பொது விலக்கணமென மூன்றதிகாரத்தாற் கூறத் தொடங்கினார். அவற்றுள், தீக்ஷை பிரதிட்டை முதலிய கருமங்களைச் செய்து முடித்தற்கு அதிகாரிகள் ஆசாரியராதலால் ஆசாரியரிலக்கணம் முதற் கண்ணும், அவ்வாசாரியர்களிவரென்றறிந்து அவரையடைந்து வழிபட்டுத் தங்கள் தங்கள் பக்குவத்திற் கேற்ற தீக்ஷை பெறவேண்டுவோர் மாணாக்க ராகையால் மாணாக்கரிலக்கணம் இடைக்கண்ணும், அவ்விருவருஞ் சரியை கிரியை முதலிய வற்றையறிந்து அவ்வாறநுட்டித்து அபர முத்தி பரமுத்திகளைப் பெறவேண்டுகையாற் பொது விலக்கணம் இறுதிக் கண்ணும் வைக்கப்பட்டன''

## அதிகார அடைவு

ஒரு அதிகாரத்தில் கூறப்படும் பொருட்களைக் காரணகாரியத் தொடர்பு படுத்தித் தரும்முறையினை அதிகார அடைவு என்பர்[3].

---

1. சுந்தரமூர்த்தி, இ.,1985 பரிமேலழகர் திருக்குறள் உரைத்திறன், பக் 115 - 129.
2. ஆறுமுகநாவலர், 1955, சைவசமய நெறிமூலமும் புத்துரையும், ப.11
3. சுந்தரமூர்த்தி, இ., 1985, பரிமேழலகர் திருக்குறள் உரைத்திறன், ப. 126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரவர்களும் இந்நூலில் அதிகாரஅடைவினைச் சிறப்பான முறையில் வரன்முறையோடு கையாண்டுள்ளார். நூல் அனைத்தையும் கற்று அதன் வகைமையினை நன்கறிந்து கூறுபடுத்திக் காட்டும் முறைமை நாவலரவர்களின் பல்துறைப் புலமைக்கும் நூலிற் கொண்டிருந்த ஈடுபாட்டிற்கும் சிறந்த எடுத்துக் காட்டாக அமைகின்றது.

இந்நெறியினைச் சிறப்பான முறையில் எடுத்தாண்டார் என்பதற்கு மாணாக்கரிலக்கணம் என்னும் அதிகாரத்தில் வரும் பொருளைத் தொகுத்து நிரல்படுத்திக் காட்டும் முறைமையினைக் குறிப்பிடலாம். இது முப்பத்தெட்டுக் குறட்பாக்களைக் கொண்டது. அதிகாரத் தோற்றுவாயில் ஆசாரியர்களிவரென்றிந்து அவரையடைந்து வழிபட்டுத் தங்கள் தங்கள் பக்குவத்துக்கேற்ப தீக்ஷைபெற வேண்டுவோர் மாணாக்கர்[4] என்பார். இவ்விளக்கத்தை முறையே அடைவாலும் நிரல் பொருத்திப் பார்த்திருக்கும் நெறியினைப் பின்வரும் கருத்துத் தொகுப்பாலும் அறிந்து கொள்ளலாம்[5]

1. மாணாக்கராதற்குரிய சென்மதேச முணர்த்துகின்றார்.
   (மா.இ-1)
2. வருணமுணர்த்துகின்றார்.
   (மா.இ-2)
3. அவருள்ளும் விதந்துணர்த்துகின்றார்.
   (மா.இ-3)
4. மாணாக்கரது வகையுணர்த்துகின்றார்.
   (மா.இ.4)
5. நிறுத்த முறையானே சமயியதிலக்கணம் இருபது திருக்குறளாலுணர்த்தத் தொடங்குதல். (மா.இ.,4+20)
   (அ) முதற்கண் அவனுக்குரிய தீஷையுங் கருமமுமுணர்த்துகின்றார்.
   (ம.இ.5)
   (ஆ) அஃதிதுவென வுணர்த்துகின்றார்.
   (ம.இ.6)
   (இ) அவன் செய்தற்குரிய சரியாபாதமாகிய சிவபுண்ணியங்களுள் சிவனை வழிபடும் முறைமையினை ஐந்து திருக் குறளாலுணர்த்துகின்றார்.
   (மா.இ.6+5)

---

4. ஆறுமுகநாவலர், 1955, சைவசமய நெறிமூலமும் புத்துரையும், ப.11
5. மேலது நூல், பக்.54 - 74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) குருவை வழிபடும் முறைமை ஏழு திருக்குறளாலு ணர்த்துகின்றார்.

(மா.இ.11+7)

(உ) குருபன்னியை வழிபடுமுறைமை இரண்டு திருக்குற ளாலுணர்த்துகின்றார்.

(மா.இ-18+2)

6. புத்திரனதிலக்கணம் நான்கு திருக்குறளாலுணர்ந்துகின்றார்.

(24+4)

7. சாதனதிலக்கணம் எழுதிருக்குறளாலுமுணர்த்துகின்றார்.

(28+7)

8. மாணாக்கர் ஞானசாரியரையடையும் முறைமை யுணர்த்துகிறார்.

(35+1)

9. இருவகையாசிரியரையும் தியானிக்கும் முறைமையுணர்த்து கின் றார்.

(36+1)

10. உரைத்ததிது உரைப்பதிது வென்ப துணர்த்துகின்றார்

(37+1)

## அரும்பொருள் விளக்கம்

உரைகளில் காணப்படும் அரும்பொருள் விளக்கத்தினை அரும் பொருள் அகராதி, இடம் நோக்கிப் பொருள் கொள்ளல், அருஞ்சொல்வி ளக்கம் அல்லது கலைச்.சொல் விளக்கம் என மூன்று வகையாக நோக் குவர்[6]. அகராதிப் பொருள் என்பது அருஞ் சொற்களுக்கு அகராதியிற் காணப்படுவது போன்று பொருள் தரப்படுதலாகும்[7]. உரையாசிரியர் தரும் பொருள் பெரிதும் இடம் நோக்கி அமைந்தால் அதனை இடம் நோக்கிப் பொருள் கொளல் என்பர்[8]. கலைச் சொல் விளக்கம் என்பது இலக்கியக் கோட்பாடுகளின் சாரத்தை உள்ளடக்கிய சிறுசிறு படிமங்க ளாக அமைவதாகும்[9].

நாவலரவர்களும் தமது உரைநூல்களில் இத்தகைய அரும்பொருள் விளக்கங்களை மிகவும் நுணுக்கமாகக் கையாண்டு உரையை இலகு படுத்திச் சிறப்புற விளக்கிச் செல்வார். சைவசமய நெறி உரையிலும் இத்தகைய அரும்பொருள் விளக்கங்களைக் காணலாம்.

---

6. தமிழண்ணல், 1985, உரைவிளக்கு, பக். 113 - 114

7. மேலது நூல், ப. 113  8. மேலது நூல், ப. 114  9. மேலது நூல், ப. 114

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (1) அரும்பொருள் அகராதி

இவ்வரும் பொருள் அகராதியை (அ) ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் தருதல். (ஆ) ஒரு சொல்லுக்கு பலபொருள் தருதல் என இருவகையாகப் பகுத்து நோக்கலாம். நாவலரவர்கள் அகராதிப் பொருளைக் குறிக்கு மிடத்து நேர்பொருளிலும் ஒப்புப் பொருளிலும் எடுத்துரைப்பார். எடுத்துக் காட்டாகச் சிலவற்றை நோக்கலாம்.

### அ) நேர்பொருள் காட்டல்

| சொல் | பொருள் | விளக்கம் | சை.ச.நெ உரை |
|---|---|---|---|
| ஆயாமம் | தடுத்தல் | வினை | பொ.இ.கு.47 |
| தருப்பணம் | உவப்பித்தல் | வினை | பொ.இ.கு.66 |
| பாழி | குழி | சொற்பொருள் | |
| சர்ஷபம் | கடுகு | சொற்பொருள் | பொ.இ.கு.544 |
| அமிலம் | புளி | குணம் | பொ.இ.கு.544 |
| நூளாதிகம் | அருமை | | |
| | பெருமை | பண்பு | பொ.இ.கு.245 |

### ஆ) ஒப்புப்பொருள் காட்டல்

உரையில் சிறிதும் பொருள் மாறுபாடு ஏற்பட்டுவிடக் கூடா தென்பதில் நாவலரவர்கள் மிகுந்த கவனமாக இருந்தமையால் சொற்கள் உணர்த்தும் பொருளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் ஒப்புப் பொருட்களை வேண்டுமிடங்களில் எடுத்துக்காட்டியுள்ளனர். எடுத்துக் காட்டாகச் சில சொற்களை இங்கு நோக்கலாம்.

அ. சத்தி : சத்தியெனினும் ஞானவதி யெனினு மொக்கும் (ஆ.கி.செ.26)

ஆ. சாம்பவிதீஷை : சாம்பவி தீக்ஷை யெனினும் விஞ்ஞானதீஷை யெனினும் மொக்கும் (ஆ.இ.செ.26)

இ. மாந்திரி : மாந்திரியெனினுங் கிரியாவதி யெனினுமொக்கும் (இ.செ.27)

ஈ. கோத்திரம் : கோத்திரமெனினும் கோசரமெனினும் மொக்கும் (பொ.இ.331)

உ. சலாசனம் : சலாசனமெனினும் சடுத்தாசனமெனினுமொக்கும் (பொ.இ.523)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இ) இடம் நோக்கிப் பொருள் கொள்ளல்

இடம்நோக்கிச் சில சொற்கள் கையாளும் திறத்தால் தனிச்சிறப்புப் பெறுகின்றன. ஒரு வகையில் உரையாசான் தரும் பொருள் இடம் நோக்கியதாகவே இருக்கும். உதாரணமாக அதிகாரத்தான் வந்தது' என்பாரன்றோ? என்பது போல் அமையும்.[10] அவ்வகையில் நாவலரவர் கள் இடம்நோக்கிப் பொருள் கொள்ளும் சொற்கள் சிலவற்றை எடுத்துக்காட்டாக நோக்கலாம்.

| | |
|---|---|
| பாச முத்திதன் | பாசநீக்கத்தைக் கொடுப்பவன் (ஆ.இ.கு31) |
| பர்ணசாலை | இலைகளாலும் புற்களாலும் வேயப்பட்ட குடிசை. |
| சந்தேகம் | ஒருபொருளை இதுவோ அதுவோ வென இரண்டுறக் கருதல். (ஆ.இ.கு.41) |
| விபரிதம் | விபரிதமாவது ஒன்றை மற்றொன்றாகத் திரித்து ணர்தல். (ஆ.இ.கு.41) |
| மிருக முத்திரை | பெருவிரல் நடுவிரல் ஆழி ஆகிய மூன்று விரல்க ளும் கூடின் மிருக முத்திரை எனப்படும். (பொ.இ.கு. 292) |

இவ்வுரைநெறி கலைச் சொற்களைப் போன்றும் அமையுமென் பர்.

### தொகை

நாவலரவர்கள் எழுதிய உரைநூல்களுள் சைவசமய நெறியுரை நூலிலேயே மிகவும் கூடுதலான தொகைகளை எடுத்தாண்டுள்ளார். **சுமார் நூற்றுஐந்து** (105) தொகைகளை எடுத்துக் காட்டியுள்ளார். அவற்றில் பாயிரத்தில் எட்டும்(08) ஆசிரியரிலக்கணத்தில் பதினொன்றும் (11) மாணவரிலக்கணத்தில் பதின்மூன்றும் (13) பொது இலக்கணத்தில் அறுபத்து மூன்றும்(63) அடங்கும். தொகைகளைத் தொகுத்துக் காட்டிய தோடு அமையாது வேண்டுமிடங்களில் விளக்கிக் காட்டியும் சென் றுள்ளார். பாயிரத்தில் இரு இடங்களிலும் ஆசிரியரிலக்கணத்தில் ஐந்து இடங்களிலும் மாணாக்கரிலக்கணத்தில் மூன்று இடங்களிலும் பொது விலக்கணத்தில் பத்தொன்பது இடங்களிலும் தொகைகளை விளக்கித் காட்டியுள்ளார். அவ்வாறு விளக்கிச் செல்லும் பொழுது உரைநடையில் மாத்திரம் விளக்காது செய்யுட்கள் மூலமும் தொகையைக் காட்டிச்

---

10. மேலது நூல், ப. 114
11. இவ்வெண்ணிக்கை மிகவும் சரியானதென யான் கூற விரும்பவில்லை. எனது எண்ணிக்கை இங்கு தந்துள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வார். சுமார் ஒன்பது இடங்களில் செய்யுட்கள் மூலம் தொகையைத் தொகுத்தும் விளக்கியும் காட்டுவார். பாயிரத்தில் இரு இடங்களிலும் பொது விலக்கணத்தில் ஏழு இடங்களிலும் இவ்வாறு விளக்கிக் காட்டியுள்ளார். எனவே நாவலரவர்கள் காட்டும் தொகை வகை முறைமையைப் பின்வரும் அடிப்படையில் வகுத்து நோக்கலாம்.

(அ) தொகுத்துக் கூறல்

(ஆ) தொகுத்தும் விளக்கியும் காட்டல்

(இ) தொகுத்தவற்றைச் செய்யுளால் விளக்கல்

## (அ) தொகுத்துக் கூறல்

தொகைகளை எடுத்துக் காட்டல் தொகைகளை விளக்குதல் யாவும் குறள்களின் பொருள் விளக்கத்தின் பொருட்டே எடுத்தாளப்பட்டுள்ளன. தொகுத்துக் கூறல் முறைமைக்குப் பின்வரும் உதாரணங்களைக் குறிப்பிடலாம்.

பஞ்சகிருத்தியங்கள் : பஞ்சகிருத்தியங்களாவன சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரக மென்பனவாம். *(பாயி-கு-2)*

பஞ்சபாசங்கள் : பஞ்சபாசங்களாவன ஆணவம், மாயேயம், கார்மியம், வைந்தவம், திரோதாயி, என்பனவாம். *(பாயிகு.7)*

நவதீர்த்தங்கள் : நவதீர்த்தங்களாவன கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, சிந்து, காவேரி, கோதாவாரி, சோணநதி, துங்கபத்திரை என்பனவாம். *(ஆ.இ.2)*

சத்திநிதிபாதங்கள் : சத்திநிபாதங்கள் நான்கு. அவையாவன மந்த தரம், மந்தம், தீவிரம்,தீவிரதரம் என்பன வாம். *(ஆ.இ.24)*

அட்டபுஷ்பங்கள் : அட்டபுஷ்பங்களாவன கொல்லாமை, ஐம் பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு எனபனவாம். *(ஆ.இ.கு.128)*

## தொகுத்ததை விளக்கல்

'சித்தி மூன்றாவன; உத்தமோத்தமசித்தி, உத்தமசித்தி, கனிட்ட சித்தி என்பனவாம்[12] எனத் தொகுத்துக் கூறிய நாவலரவர்கள் இவற்றைப் பின்வருமாறு விளக்குவார்[13].

''வித்தியேசுரராதலும் உருத்திரராதலும் பிரமவிட்டுணு முதலிய தேவர்களாதலும் உத்தமோத்தம சித்தி. தேவர்களுக்கொப்

12. ஆறுமுகநாவலர், 1955, சைவசமய நெறி மூலமும் புத்துரையும், ப. 71
13. மேலது நூல், ப.71

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வித்தியேசுரராதலும் உருத்திரராதலும் பிரமவிட்டுணு முதலிய தேவர்களாதலும் உத்தமோத்தம சித்தி. தேவர்களுக்கொப் பாகிய சரீரத்தையெடுத்து ஆகாசக மனம் பண்ணி அங்குள்ள போகங்களைப் புசித்துத் திரும்பிவருதல் உத்தமசித்தி, பிலத்து வாரத்தினாலே பாதாளத்திற்பிரவேசித்து அங்குள்ள போகங்க ளைப் புசித்துத் திரும்புதல் கனிட்டசித்தி. இச்சித்திகள் உலக ராற் காணப்படாதன வெனவும் காணப்படுவனவெனவும் பரமெனவும் அபரமெனவும் வருமெனவுணர்க''. என்பார்

## தொகுத்தவற்றைச் செய்யுளால் விளக்கல்

''இருவினையான் மூவிதத்தின்'' (பொ.இ.412) எனத் தொடரும் குறட்பாவுக்கு உரையெழுதிய நாவலரவர்கள் அத்தியான்மிகம், ஆதிதை விகம், ஆதிபௌதிகம் என்னும், மூன்றினையும் மூவிதத்தன் என்பார்[14]. இவற்றை விளக்குகையில் தன்னாலும் பிறவான்மாக்களாலும் வருவது அத்தியான்மிகம் என்றும் தேவர்களால் வருவது ஆதி தைவிகம் என்றும் பிருதிவி முதலிய பஞ்சபூதங்களால் வருவது ஆதிபௌதிகம் என்றும் குறிப்பிட்ட நாவலரவர்கள்[15] ''தன்னாற் பிறராற்றனக்கு வருந் தீங்கு''[16] என வரும் செய்யுளால் அத்தியான்மிகத்தையும் ''கருவிற்றுயர் செனிக் குங் காலைத் துயர்மெய், திரைநரைமூப் பிற்றிளைத்துச் செத்து-நரகரத்தி னாழுந் துயர்புவியை யாளின்ப மாதியெலா, மூழுதவு தைவிக மென்றோ'' என்னுஞ் செய்யுளால்[17] ஆதிதை விகத்தையும் ''பனியா லிடியாற் படர்வாடையினாந்''[18] என வரும் செய்யுளால் ஆதி பௌதிகத் தையும் விளக்கிச் செல்வார்.

## கலைச்சொல் விளக்கம் தரல்

''இலக்கியக் கலைச் சொற்கள் என்பன இலக்கியக் கோட்பாடுக ளின் சாரத்தை உள்ளடக்கிய சிறு சிறு படிமங்கள். அவை குறிப்புப் பொருள்போல் உள்ளடக்கி நின்று வெளிப்படுகின்றன. கலைச் சொல்லை விளங்கிக் கொள்வதிலிருந்தே திறனாய்வு தொடங்குகின்றது'' என்பர்[19]. அவ்வகையில் நாவலரவர்கள் உணர்த்தும் கலைச் சொற்களுக் குச் சில உதாரணங்களை இங்கு நோக்கலாம்.

---

17. ஆறுமுகநாவலர், 1955, சைவசமய நெறிமூலமும் புத்துரையும், ப. 244
18. பார்க்க - பின்னிணைப்பு - 1
19. தமிழண்ணல், 1995, உரைவிளக்கு, பக், 114 - 115.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமம் : ஆகமமென்னுமொழியில் ஆ வென்பது ஞானமும், கவ்வென்பது மோக்ஷமும், 'ம'வ்வென்பது மலநாசமு மாம். ஆகவே ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம் பண்ணி ஞானத்தையுதிப்பித்து மோக்ஷத்தைக் கொடுக்கையால் ஆகமமெனப் பெயராயிற்றென்றுணர்க.

(பாயி. சூ. 23)

சத்திநிபாதம் : இருவினை யொப்பும் ஆணவமலபரிபாகமும் உற்ற விடத்தே சத்திநிபாதம் உண்டாகும். சத்திநிபாத மாவது ஆன்மாவினது ஞானத்தைத் தடுக்கும் ஆணவ மலசத்தி நழுவும் அவசரத்திலே முற்பிற்பாடறச் சிவத்தினது சிற்சத்தி பதிந்து அவ்வான்மாவினது நித்தியஞானக்கிரியை விளக்குவதாம்.

## இலக்கணம்

நாவலரவர்களது இலக்கணப்புலமைக்கும் ஆளுமைக்கும் பின் வரும் பகுதிகள் தக்க எடுத்துக்காட்டுகளாக அமைகின்றன. அவற்றை இங்கு நோக்கலாம்.

## உவமை

கவிதையோடு பிரிப்பின்றிச் செயற்படும் தன்மையுடையது உவமையாகும். கவிஞன் தனது கருத்தை உலகிற்குச் சரியாக எடுத்து ரைப்பதற்கு உவமையை முதற் கருவிப் பொருளாகக் கொள்கின்றான் அது கவிதையின் வெற்றிக்குக் காலாய் யமைந்து விடுகின்றது. கவிஞனுக் கும் உவமைக்கும் உள்ள தொடர்பினைப் பின்வருமாறு எடுத்துரைப் பர்[20].

''உவமைகள் கவிதைக்கு அழகு ஊட்டுபவை. பொருளை விளக்குவதற்கும்,நயம்படுத்துற்கும் இயன்ற உத்திமுறையே உவமை எனலாம். இவை கவிஞனின் நுண்ணர் திறனை உலகி ற்கு உணர்த்தும் பான்மையன. கவிஞன் தன் உள்ளத்து எழுந்த இதய உணர்வின் ஊற்றுகளை எழுச்சி நிறைந்த இன்பதுன்ப உணர்வுகளைச் சிதைவின்றித் தன் உள்ளத்து எழுந்தவாறே உலகிற்கு உணர்த்த உதவுவன உவமைகளே. பொருள்களுக்கு இடையே காணப்படும் நெருங்கிய தொடர்பினை உற்றுநோக்கி ஆராய்ந்து நுட்பமாக வெளிப்படுத்தும் திறன் உவமையைப்

20. உ.த.ஆ.நிறுவன வெளியீடு, இலக்கியக் கொள்கை, தொகுதி, 5, ப.155
21. சுந்தரமூர்த்தி, இ., 1985, பரிமேலழகர் உரைத்திறன், ப.130

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தற்கும் உணர்தற்கும் இன்றியமையாதது. ஒரு பொரு ளோடு மற்றொரு பொருளை இயைபுபடுத்தப் பார்ப்பது ஓர் இயற்கைத் தூண்டு தல் மட்டு மன்று, அறிவு வளர்ச்சிக்கு அடிப் படையுமாகும்.''

இக்கூற்று கவிதைக்கு மாத்திரம் பொருத்தமன்று. உரைக்கும் உரைநடைக்கும் இக்கூற்று பொருந்தும் எனலாம். உரை நடையிலும் நடைசிறக்கக் கருத்து இனிது புலனாக இவற்றைக் கையாள்வர்[21] நாவலரவர்களும் மரபுவழிக் கவிதைத் திறன் வழி நின்று உரைநடையின் சிறப்பை விளக்கும் வண்ணம் உவமைகளைக் கையாண்டுள்ளார். அந்நிலையில் உவமைகள் நூலாசிரியர் கையாண்ட உவமைகளுக்குத் தம் உரையால் விளக்கமளித்தல் தாமே தம் உரையில் கருத்து விளக்கங்க ளுக்காகச் சிறப்பான உவமைகளைப் பெய்து எழுதல் என்னும் இருவகை யுத்திகளையும் பயன்படுத்தி உரைநடையை வளர்த்துச் செல்வார். அவ்வப்போது இவை இன்ன இன்ன உவமை என்று சுட்டிச் செல்வார். இந்நூலின் மூன்று இடங்களில் உவமை பற்றிப் பேசியுள்ளார். இரு இடங்களில் சிறப்பான உவமை விளக்கந்தந்துள்ளார். 'மாணாக்கர்' ஞானாசாரியரையடையும் முறை பற்றிக் கூறவந்த ம.ஞா. சம்பந்தர், ''கிரியா காண்டத்தை மாத்திரம் ஆராய்ந்து ஞான காண்டத்தை ஆராயாத ஆசாரியனை விட்டு, அந்த ஞான காண்டத்தை ஆசிரியனைத்தேடி அடை ந்து அவருக்கு அடிமையாகி அவரிடத்திலே அறியக் கடன் என்பார்[22]. இத ற்கு உரை எழுதிய நாவலரவர்கள்'' வண்டுகள் தாம் அடைந்த பூவினிட த்தே மதுவில்லையாகில் அதனை விட்டு மதுவுள்ள பூவைத்தேடியடையு மாறுபோல்[23] என மரபுவழி நின்று உவமை கூறுவதோடு, விட்டு விட் டொன்றை யொன்று விரைமலர் வண்டு தேடி, மட்டுமட்டுண்டு தாம் பின் மகிழ்தல் போல்[24] என வரும் செய்யுளையும் எடுத்துக் காட்டாகக் குறிப்பிடுவார்.

வாணலிங்கத்தின் பேதத்தை ம.ஞா.சம்பந்தர்

''உத்தமமே நீர்க்குமிழிக் கொத்தெழுந்த வாணலிங்க
மத்திம மண்டத்தினையா வந்து''

(பொ.இ.கு)

எனக் குறிப்பிடுவார். அண்டத்தை முட்டைக்கு ஒப்பாகக் கருதிய நாவலரவர்கள் ''நுனிவு மடியும் உருண்டு சிறுகியிருத்தலால் முட்டையை யுவமித்தார்''[25]. என உவமையை வெளிப்படையாக எடுத்துரைப்பார்.

---

22. ஆறுமுகநாவலர், 1955, சைவசமய நெறியும் மூலமும் புத்துரையும், ப. 73
23. மேலது நூல், ப. 73 24. மேலது நூல், ப. 74

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.ஞா.சம்பந்தர் மாணக்கர் ஆசாரியரைக் கொண்டபின் இகழ்தல் கூடாதென்பதனைச் ''சிவலிங்கத்தையும் ஆசாரியனையும் முன்னர் ஆராய்ந்து கொள்ளாமற் கொண்டதன் பின்பு ஆராய்ந்து அங்கஙீனத்து வத்தையும் குணமில்லாமையுங் கண்டு இகழ்ந்து தள்ளுவார்க்குக் கதியுண்டோ இல்லை''[26] என உரைப்பார். நாவலரவர்கள் இக்கருத்தினை விரித்துரைக்கையில், பழமொழி உவமைகளால் உணர்த்தி மரபு உவமை களைக் கையாண்டும் விரிந்துரைப்பார். இவ்வுரையில் நான்கு உவமைகளைக் கையாண்டு நூலாசிரியரின் உள்ளார்ந்த, உண்மையான கருத்தை வலியுறுத்துவார். இவ்வாறு உரைப்பது **உண்மை உவமை** என்பர். உண்மை உவமை என்பது பூரணமாய் வெளிப்பட்டுப் புலப் பட்ட ஒப்புவமையினாலே உண்மையுணர்ந்து உவமானத்தை மறுத்து இதுவே உண்மையென்று உவமேயத்தைக் கூறுவது உண்மை உவமை என்பர்[27]. நாவலரவர்கள் தரும் பின்வரும் உரைப்பகுதியினை[28] மேற்கூறிய வற்றுடன் ஒப்புநோக்கும் பொழுது நாவலரவர்கள் மூலநூலாசிரியரின் கருத்துக்களோடு இயைந்தும் சற்று மாறுபட்டும் கருத்து விளக்கங்களுக்காக அரிய உவமைகளைப் பெய்து அவற்றின் மூலம் ''உண்மையான சற்குருவே முத்திக்கு வழிகாட்டுவார்'' என்னும் உண்மையை வெளிக் கொணருவார்.

''சுயம்புலிங்கம் சின்ன பின்னப் படினும் அதனையே வைத்துப் பூசிக்குமாறுபோல ஆசாரியன் எப்படியிருப்பினும் அவனையே இகழாது வழிபடுக. கட்டுத்தறியினையும் சிவபெருமானே யென்று கொண்டு பத்தியோடு பூசித்தாற்போல இலிங்கம் எப்படியிருப்பினும் அதனையே இகழாது பூசிக்க. தான்பூசித்து வந்த சிவலிங்கம் அக்கினியினாலே பழுதுபடின் அதனை இகழாமல் மனநொந்து கைவிட்டு வேறொரு சிவலிங்கத்தைக் கைக்கொள்ளுமாறு போலத் தன்னுடைய ஆசாரியன் சிவநி ந்தை சிவத்திரவியாப காரம் கொலைகளவு பிறர்மனை நயத்தல் முதலிய பெரும்பாவங்களைச் செய்து கெடுவானாயின் அவ னையிகழாது மனநொந்து கைவிட்டு வேறொராசாரியனை அடைந்து வழிபடுக. உடையாத ஓடமேயன்றி உடைந்த ஓடம் யாதொன்றினையுங் கரையேற்ற மாட்டாதவாறு போலச் சற்குரு வேயன்றி அசற்குரு யாவரொருவரையும் முத்தியடைவிக்க மாட்டான்''

25. மேலது நூல், ப.  26. மேலது நூல், ப.114  27. தண்டிலரங்காரம்
28. ஆறுமுகநாவலர், 1955, சைவசமய நெறிமூலமும் உரையும், ப. 121

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரவர்களின் உவமை விளக்கத்தை நோக்கும் பொழுது, அவர் குறள் விளக்கத்துக்காகக் கையாண்ட உவமைகளின் நுட்பமும் உரைத் திறன் பாங்கும் நன்கு புலப்படுகின்றன. தெய்வம், மெய்ப்பொருள், இயற்கை, மக்கள் வாழ்க்கை, இலக்கியங்கள் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டு உரை விளக்கம் செய்த பான்மை தெளிவாகின்றது. நாவலரவர்களின் உவமை விளக்கத்தால் ம.ஞா.சம்பந்தர் உணர்த்த விழைந்த கருத்துக்கள் சிறப்பாக முறையில் விளக்கம் பெற்று படிப்போரை மேலும் படிக்கத் தூண்டுவனவாக அமைந்துள்ளன.

**நாவலரின் உவமை விளக்கம்** *(அரகநிரல்)*

| எண் | உவமை | பொருள் | குறள் உரை |
|---|---|---|---|
| 1. | உடையாத ஓடமேயன்றி உடைந்த ஓடம் யாதொன்றினையுங் கரையேற்ற மாட்டாதவாறு போல | ஒட்டைச் சிரட்டையில் நீர்வார்த்தாற் போல, | 103 |
| 2. | கட்டுத்தறியினையும் சிவபெருமானே யென்று கொண்டு பத்தியோடு பூசித்தாற் போல | கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் | 103 |
| 3. | சுயம்புலிங்கம் சின்ன பின்னப்படினும் அதனையே வைத்துப் பூசிக்குமாறுபோல | பொறுத்தார் பூமி யாழ்வார் | 103 |
| 4. | தான் பூசித்த வந்த சிவலிங்கம் அக்கினி யினாலே பழுதுபடின் அதனை யிகழாமல் மனநொந்து கைவிட்டு வேறொரு சிவ லிங்கத்தைக் கைக் கொள்ளுமாறு போல | துரும்பும் பல்லுக்குத்த உதவும் | 103 |
| 5. | வண்டுகள் தாம் அடைந்த பூவினிடத்தே மதுவில்லையாகில் அதனை விட்டு மது வுள்ள பூவைத் தேடியடையமாறுபோல | முயற்சி திருவினை யாக்கும் | 103 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அணியிலக்கணம்:-**

ம.ஞா.சம்பந்தர் இந்நூலில் பல அணிநயங்களை விளக்கிச் சென்றுள்ளார். நாவலரவர்கள் வேண்டுமிடத்தே உவமை நலத்தையும் அணிவகையினையும் எடுத்துக்காட்டுவார். எடுத்துக்காட்டாக, பூசித்த இட்டலிங்கத்தினைக் கைவிடலாகாது என்பதனைத் தன்னை விவாகம் செய்த நாயகன் அழகில்லாத விடத்தும் அவனுடனேயே வாழல் வேண்டும் இல்லையேல் மோட்சம் கிடையாது[29] என்பதனை ம.ஞா. சம்பந்தர்

''கொண்டானை விட்டுருவங் கூர்ந்தானைக் கூடியிடு
மொண்டொடிக்குண்டாமே லுலகு''

(பொ.இ.கு.99)

என்னும் குறளின் மூலம் விளக்கு வார். இதன் உரைவிளக்கத்தில் நாவலரவர்கள் இதன் உண்மைப் பொருளையும் நயத்தையும் பின்வருமாறு விளக்குவார்[30].

''தான் கைக் கொண்ட இலிங்கத்தைச் சிறப்புடைய தன்றென்று வெறுத்துவிட்டுச் சிறப்புடைய வேறிலிங்கத்தைப் பூசிப்பவனுக்கு முத்தி கிடைக்குமோ கிடையாது என்னும் பொருள்பட நிற்பதால், இது **பிறிது மொழித லென்னுமணி''**

**இடை**

இடைச் சொல்லாவது பெயரும் வினையும் போலத் தனித்து நடக்கும் ஆற்றல் இல்லாததாய், அப்பெயரையும் வினையையுஞ் சார்ந்துவரும்[31]. இவை புணர்ச்சிக்கண் வந்து பொருந்தும் சாரியை, காலம் காட்டும் இடைநிலை,வேற்றுமை உருபு, இசைநிறை, அசைச் சொல் என ஒன்பது வகைப்படும். நாவலரவர்கள் தமது உரைகளில் அசைநிலை, சாரியை, இடைச்சொல் என்னும் மூன்றுவகை இடைச் சொற்களைக் குறிப்பிடுகின்றார். அத்துடன் மேலும் பல இடைச் சொற்களை எடுத்துக் காட்டி அவற்றின் பொருளை இடம் நோக்கி விளக்கிச் செல்வார். பெயர், வினை,உரி இடை என்னும் நான்கு வகைச் சொற்களில் நாவலரவர்கள் இடைச் சொற்களையே இந்நூலில் மிகுதியாக எடுத்துகாட்டுவார்.

---

29. மேலது நூல், ப. 119 30. மேலது நூல், ப. 119

31. சுப்பிரமணியம், க.வே., 1976 அடியார்க்கு நல்லார் உரைத்திறன், உ.த. ஆ. நிறுவன வெளியீடு, ப. 57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அசைநிலை**

அசைநிலை என்பது வேறுபொருள் உணர்த்தாது பெயர்ச் சொல் லோடும் வினைச் சொல்லோடுஞ் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்பது[32]. அவ்வகை அசைநிலைச் சொற்களில் நாவலரவர்கள் மூன்று சொற்களை மூன்று இடங்களில் இந்நூலில் எடுத்துக் காட்டுவார். அவை ஏ.தாம்,மன் என்பனவாம். இச் சொற்கள் நிற்கும் இடம் வருமாறு

ஏ- 'தெற்றுவமே' -பாயி.சூ.7பக்.4

தாம்- 'ருற்பவித்துத் தாம்' -ஆ·இ·சூ.ப.12

மன்- 'மாருமதுமன்' .பொ.இ·சூ.85.ப.113

நாவலரவர்கள் தத்தம் பொருளை உணர்த்தும் இடைச் சொற்களான இடத்துக்கேற்ப விளக்கிச் செல்வார். ஆனால் நாவலரவர்கள் அவற்றைக் குறிப்பிடும் பொழுது இவை 'இடைச் சொற்கள்' என்றும் பெயர் சுட்டிக் குறிப்பிட்டுச் செல்லும் மரபு நாவலரவர்களிடத்தில் பெரிதும் காணப்ப டவில்லை. இவ்விடைச் சொல்களில் உம், என்னும் இடைச்சொல் லையே மிகுதியாக நாவலரவர்கள் எடுத்துக்காட்டிப் பொருள் உரைக்கின் றார். இங்கு இருபத்திரண்டு இடங்களில் இவ்விடைச் சொற்களை எடுத்துக் காட்டியுள்ளார். இவ்விடைச் சொல் இறந்தது தழிஇய எச்சம், எதிரது தழீஇய எச்சம், சிறப்பு, இழிவு சிறப்பு, எண், முற்று, எதிர்மறை, என்னும் பொருளில் வருமிடங்களைச் சிறப்பாக இங்கு எடுத்துக்காட்டுவார்.

**உம்:-எச்சம்**

நாவலரவர்கள் எச்சவும்மைகளை எடுத்துக்காட்டும் பொழுது, நாவலரவர்கள் காட்டும் இலக்கணத்திறன் அவரது இலக்கணப்புலமைக் குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. இந்நூலில் பல இடங்களில் எச்சவும்மையை எடுத்துக்காட்டுகின்றார் அதிற் சிலவற்றை நோக்கலாம்.

**உம் :- முற்றும் எச்சமும்**

ஓதுகநாலேழு (பொ.இ.சூ.1) என்னும் சூத்திரத்திற்கு உரை எழுதிய நாவலரவர்கள் ''ஆசாரியன் சைவாகமங்களிருபத்தெட்டையும் ஓதியுண ரக் கடவன், இவைகளுள் ஒன்றையானும் ஓதியுணராதவன் ஆன்மாக்க ளுக்கு ஆசாரியனாவானோ ஆகான்''[33] என்றுரைப்பார்.

நாவலரவர்கள் மூலநூலாசிரியன் கருத்தை ஒப்புக் கொள்ளும் அதே சமயம் ஏனைய நூல்களையும் கற்க வேண்டுமென்பதை வற்புறுத்தும் வகையில் முற்றும்மை எச்சவும்மையாக்கி பின்வருமாறு உரைப்பார்[34]

32. ஆறுமுகநாவலர், இலக்கணச் சுருக்கம், யாழ், கை.ப. சபை வெளியீடு, ப. 112.

33. மேலது நூல், ப. 75 34. மேலது நூல், ப. 75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலேழுமென்பதன்கண் முற்றும்மையை ''முற்றும்மை யொரோவழி பெயரெச்சமுமாகும்'' என்பதலால் எச்சவும்மையாக்கி வழிநூலாகிய உபாகமங்களும் சார்புநூலாகிய பிரகரணங்களுமாகிய இவற்றையுங் கொள் என்பார்.

உம் :- **எதிரது தழீஇய எச்சம்**

''அல்லாற் சுலோகம்''(பொ.இ.கு.3) என்னும் சூத்திரத்திற்கு, சைவாகமங்களிலே கிரியாகாண்டம் ஞானகண்டம் என்னுமிரண்டினும் ஒரு லக்ஷங்கிரந்தமோதி உண்மைப் பொருளையுணர வல்லவனும் ஆசாரியனாவான்''[35] என உரைகூறிய நாவலரவர்கள், எல்லா ஆசாரியனாலும் ஒரு லக்ஷங்கிரந்தமோத முடியாத தென்பதை உணர்ந்தது, ஆசாரியர் தரத்தைப்பகுத்தற்கும் யாவரும் கருவிநூல்களையும் நூல்களையும் கற்றல் வேண்டுமென்பதை வற்புறுத்தும் வகையிலும் இவ்வெச்சத்தினை எடுத்தாண்டு பின்வருமாறு உரைப்பார்[36]

''வல்லானும் என்பதன் கண் இறந்தது தழீஇய எச்சவும்மையை எதிரது தழீஇய வெச்சவும்மை யாக்கி ஒரு லக்ஷங்கிரந்தம் ஓதமாட்டாதானாயின் ஐம்பதிராயிரங்கிரந்தமோதினவன் மத்திமாசாரியனெனவும், இருபத்தையாயிரங் கிரந்தமோதினவன் கனிட்டாசாரியன் எனவுங் கொள்க. விசேஷ வித்தையாகிய சைவாகமத்தை யோதல் வேண்டுமெனவே, அவ்வுணர்ச்சிக்கு இன்றியமையாக் கருவியாகவுள்ள நிகண்டு காவியம் வியாகரணம், தருக்க முதலிய சாமானிய வித்தைகளையும் கற்றுணர்தல் வேண்டுமெனக் கொள்க'' என்பார்.

நாவலரவர்கள் தம்கருத்தை வலியுறுத்தும் வகையில் இவ்வெச்சவும்மையை இங்கு எடுத்தாண்டார் எனக் குறிப்பிடலாம். தம்கருத்தை வலியு றுத்தல் உரைநெறியின் பாற்பட்டதாகும்.

உம் :- **இறந்தது தழீ இய வெச்சம்.**

''தன்னுடனே யொத்தசுத்த சைவர் தகச்சமைத்த
வன்னந்தானும்பரிசுத்தம்''

(பொ.இ.கு.267)

என்னும் சூத்திரத்தில் வரும் 'சுத்தசைவர்' என்பதற்கு இலக்கண விளக்கம் கொண்டு பொருள் கூறவந்த நாவலரவர்கள் ''சுத்தசைவரென்றமையால் மிச்சிரசைவரும் அசுத்த சைவரும் உண் டெனவறிக''. உம்மை இறந்தது தழீஇய வெச்சவும்மை[37] என எடுத்துரைப்பார். மேலும் சில எச்சவுண்மைகளைப் பின்வரும் அடிப்படையில் நோக்கலாம்.

உம் - **சிறப்பு**

---

35. மேலது நூல், ப. 76  36. மேலது நூல், ப. 76  37. மேலது நூல், ப. 188

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரன்றாளும் - சங்கரன்றாளும் என்ற உண்மையால் ஆசாரியன்றாளுங் கொள்ளப்பட்டது. (மா.இ.5.ப.56)

குரவனடியும் - உம்மையால் சேட்டாசாரியர் முதலியோரடியுங் கொள்க. (மா.இ.31.ப.72)

உயிர்க்கும் - உம்மையால் பஞ்ச கிருத்தியஞ் செய்தல் பற்றி முத்தராகிய அனந்தேசுரர் முதலாயினோருக்கும் அப்பெயருண்டெனவறிக. (பொ.இ.11-பக்.80)

இணையும் - உண்மையால் குருபாதங்களுங் கொள்க. (பொ.இ-349.ப.223)

உம் :- இழிவுச்சிறப்பு

புழுவும் - வடிந்தோடாதநீர், இழிகுலத்தார் தீண்டிய நீர், கலங்கனீர், பாசிநீர், உவர்நீர், வெந்நீர், பழநீர், சொறிநீர், கூவனீர் முதலியனவும் ஆகாவெனக் கொள்க. (பொ.இ.66.ப.104 பக்)

ஏனையவும் - ஏனையவுமென்ற உம்மையால் கோழி பருந்து கழுகு முதலாயின கொள்க. (பொ.இ. 307.ப.202)

உம் :-எண்

ஆகுதியிலும் - உம்மையால் தீஷாகாலம் உற்சவ காலம் முதலியனவுங் கொள்க. (ஆ.இ.52.ப.36)

தீக்கை பணலும் - உம்மையால் சிவோற்சவம்,சாந்தி நவகலச ஸ்நபனம் அஷ்டோத்தர சதகலசஸ்நபனம், சுக்கிரகலச ஸ்நபனம் முதலாயினவுங் கொள்க. (ஆ.இ.கு.56.ப.38)

உம் :- ஆக்கம்

ஆக்கத்தும் - ஆக்கத்தும் என்ற உம்மையால் மனத்து மென்பது கொள்ளப்பட்டது. (ஆ.இ.கு.44.ப.33)

உம் :- என்று,

விரதத்தன் - விரதத்தனென்றது பிரமசாரியையும் சந்நியாசியையும். (பொ.இ.கு.17)ப.83)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்வாழ்வான் - இல்வாழ்வானென்றது இவ்வாழ்வானையும் வானப்பிரத்தனையும்.
(பொ.இ.கு.18.ப.83)

அவனியிலும் - அவனியிலுமென்ற உம்மையால் பொன்,பெண் என்பனவுங் கொள்ளப்பட்டன.
(ஆ.இ.கு 53.ப.37)

ஆதி - ஆதியென்றதினால், பச்சடி,வற்றல், வடகம், பணியாரம் முதலியன கொள்க. (பொ.இ.கு.302)

கோபுரம் ஆதி - ஆதியென்றதனால் விமான முதலியனவுங் கொள்க.
(பொ.இ.கு.122.ப.128)

நாவலரவர்கள் தமது பொருள் பொதிந்த நுட்பமான கருத்துக்களை தமது இலக்கணப்புலமையைக் கொண்டே வெளிப்படுத்தியுள்ளார். குறிப்பாக இடைச் சொற்களை நன்கு பயன்படுத்தியே அவற்றை விளக்கியுள்ளார். இந்நூல் முழுவதும் இவற்றைப் பரக்கக் காணலாம்.

**உரைமறுப்பு**

சைவசமய நெறி என்னும் நூலுக்கு முதன் முதல் உரை யெழுதியவர் நாவலரவர்களே யென அறிய முடிகின்றது. அதில் நாவலரவர்கள் இந்நூலுக்கு உரைமறுப்புச் செய்ய வேண்டிய தேவையிருக்கவில்லை. முதல் உரையாசிரியர் என்ற வகையில் நாவலரவர்கள் மூலநூலாசிரியரின் கருத்துக்களோடே முரண்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கலாம். நாவலரவர்கள் மூல நூலாசிரியரின் கருத்துக்களை தேவவாக்காகக் கருதிச் செயற்பட்டவரல்லர். அவ்வகையில் நாவலரவர்கள் இந்நூலில் காட்டிய முரண்பாடுகளை இரு வகையில் நோக்கலாம்.

(அ) மூலநூலாசிரியரின் கருத்துக்களோடு முழுமையான வகையில் உடன்பாடு கொள்ளாது தமது கருத்துக்களை எடுத்துக்காட்டல்.

(ஆ) உரையெழுதிச் செல்லும் பொழுது மூலத்திலும் வேறு உரைகளிலும் ஒத்த தன்மையான கருத்துக்கள் தம்கருத்தோடு மாறுபடும் பொழுது அக்கருத்துக்களை மறுத்துரைத்தல்.

(அ) மூலநூலாசிரியரின் கருத்துக்களோடு முழுமையான வகையில் உடன்பாடு கொள்ளாது தம் கருத்துக்களை எடுத்துக்காட்டும் முறைமையினை மேலும் இருவகையாகப் பிரித்து நோக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(1) கருத்துக்களை முழுமையாக மறுக்க முனைதல்.

(2) மூலநூல்கருத்துக்களுக்கு விதிவிலக்காக அமைந்த கருத்துக்களை எடுத்துக்காட்டல்.

**கருத்துக்களை மறுத்தல்**

தொல்காப்பியம் முதல் காலந்தோறும் வெளிவந்த தமிழ் நூல்கள் பலவற்றிலும் பாடவேறுபாடு காரணமாகவும் அவற்றுக் கெழுந்த உரை காரணமாகவும் கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. கருத்து வேறுபாட்டிற்கு மேலே குறிப்பிட்ட இரு கருத்துக்கள் மாத்திரம் காரணங்களல்ல. மூல நூலாசிரியர் தாம் சொல்ல வந்த கருத்தினைத் தெளிவாகச் சொல்லாத விடத்தும் கருத்து வேறுபாடுகள் தோன்ற இடமுண்டு. நாவலரவர்கள் முன்னோர் நூல்களையும் அதற்கெழுந்த நூல்களையும் பொன்போல் போற்றி வருபவர். ஆனால் மூல நூலாசிரியர் தாம் கூறவந்த கருத்தைத் தெளிவாகத் தெரிவிக்காத விடத்தும் உரையாசிரியர் மூலநூலாசிரியர் கருத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாத விடத்தும் அவர்கள் தாம் கூறவந்த கருத்தைத் தருக்க முறையோடு, தெளிவாகச் சொல்லாத விடத்தும் நாவலரவர்கள் தாம் அவற்றுக்குக் கொள்ளும் கருத்தைக் காரணகாரியத் தொடர்புகளுடன் மறுத்துரைக்கத் தயங்குவதில்லை. நாவலரவர்கள் தமது திருக்குறள் பதிப்பில், (1861) பரிமேலழகர் உரையில் தமக்குப் பிழையெனப்பட்டதைக் காரண-காரியத் தொடர்புடன் சுட்டிக் காட்டியிருப்பது இங்கு நினைவு கூரத்தக்கது. அதேபோல நாவலரவர்கள் சைவ சமய நெறியிலும் சம்பந்தரின் மூலக் கருத்துக்களோடு முரண்படுவார். ம.ஞா. சம்பந்தர் இயற்றிய நூல்களே நாவலரவர்களின் சைவசமய மொழிநடைக்கு மூலமாக அமைந்தவை. அவ்வகையில் மறைஞானசம்பந்தரையே தமது பணிகளுக்கெல்லாம் மூலவராகப் போற்றியவர். ஒரு வகை யில் அவர் நாவலரவர்களுக்கு குரு போன்றவர். எது எப்படியிருப்பினும் எவர் பிழை விடினும் பிழை பிழைதான்; அதற்கு இருவேறு கருத்துக்கள் இருக்கமுடியா தென்பதில் மாறாத நம்பிக்கை கொண்டவர்.

இந்நூலில் ம.ஞா.சம்பந்தர் தீக்ஷைக்கேற்ற மாதங்களில் கார்த்திகை ஐப்பசி வைகாசி ஆகிய மாதங்கள் உத்தம காலங்களெனவும் பங்குனி ஆனி மார்கழி மாதங்கள் மத்திம காலங்களெனவும், மாசி ஆடி மாதங்கள் கனிட்ட காலங்களெனவும், மற்றைய மாதங்களான தை, ஆவணி, சித்திரை, புரட்டாதி ஆகிய நான்கு மாதங்களும் தீக்ஷைக்கேலாத காலங்களெனவும் எடுத்துரைப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.ஞா. சம்பந்தரால் தீக்ஷைக்கெலாத நாட்களாகக் குறிப்பிடப் பட்ட ஆவணி சித்திரை ஆகிய மாதங்களை நாவலரவர்கள் தீக்ஷைக் கேற்ற நாட்களாகக் கொண்டதோடு தம் கருத்தினை வலியுறுத்தும் வகையில் ஆகமங்களைப்பிரமாணங்களாகக் காட்டி நிறுவுவார். ''மற்றைய மாதங்களொரு நான்கும்'' (ஆ.இ.81) என்னும் குறளுக்கு நாவலரவர்கள் எழுதிய பின்வரும் உரை விளக்கம் மேற்படி கருத்துக்களை உறுதிப்படுத்துவனவாக அமையும்[38].

''புரட்டாதி மாசி ஆடி மார்கழி யென்னும் இந்நான்கு மாதங் களையுந் தீக்ஷைக்காகாவெனக் காரணாகமம் விலக்கியிருக்க, இந்நூலாசிரியர் பின்னைய மூன்றையும் ஆகுமெனக் கொண்டு, முன்னையதைத் தை ஆவணி சித்திரையோடு சேர்த்து, ஆகா வென விலக்கியது ஆகம பேதத்தாலெனவுணர்க''

## (ii) விதிவிலக்கான கருத்துக்களை எடுத்துரைத்தல்

நாவலரவர்கள் மூலநூலாசிரியர் கருத்துக்களுக்கு விதிவிலக்காக அமைந்த கருத்துக்களையும் எடுத்துக்காட்டத்தவறவில்லை. இவையும் ஒரு வகையில் உரைமறுப்பென்றே கொள்ளுதல் வேண்டும். இந்தவகையில் அவர் காட்டும் நான்கு இடங்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். அவற்றுள் மூன்றினை இங்கு நோக்கலாம் (அ) ம.ஞா.சம்பந்தர் வெண்கலம் முதலியவற்றினாலே செய்யப்பட்ட பாத்திரங்கள் விரத்தனுக்குப் போசனப்பாத்திரங்களாக என்பார். இதன் பொருள் உலோகப் பொருட்களலல்லாத மட்பாத்திரங்கள் முதலியவற்றிலான பாத்திரங்களே போசனப்பாத்திரங்களாகக் கொள்ளத் தக்கனவாகும் என்பதாம். நாவலரவர்கள் இக்கருத்தினை ஏற்றுக் கொள்பவராகத் தெரியவில்லை. நாவலரவர்கள் புற்றுரமட்கலம் சிலவாகமங்களில் ஆகுமென்றும் சிலவாகமங்களில் ஆகாதென்றுஞ் சொல்லப்படும் என்று உரைப்பதன் மூலம் உலோகப் பாத்திரங்களையும் போசனப்பாத்திரமாகக் கொள்ளலாம் எனத்தம் கருத்தை வலியுறுத்துவார்.[39]

(ஆ) பரார்த்தலிங்கம், சுவயம்புலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம் என நான்கு வகையென ம.ஞா.சம்பந்தர் குறிப்பிடுவார். நாவலரவர்கள் இவற்றோடு காணலிங்க மொன்றுங் கூட்டிப் பரார்த்த லிங்கம், ஐவகைப்படுமெனக் கூறலுமொன்று[40]'' எனக் குறிப்பிடுவதோடு ''மனிதர்தாபித்தலிங்க மாதவர்'' என்று தொடங்கும் செய்யுளை முழுமையாக எடுத்துக் காட்டி நிறுவுவார்.

---

38. மேலது நூல், ப. 60  39. மேலது நூல், பக். 233, (251, 257, 259)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) நால்வகை யாச்சிரமிகளும் சபத்நினீக சன்னியாசியும் விபத்நினீக சன்னியாசியும் ஆசாரியராகார் என்பதை மறைஞான சம்பந்தர்

''சன்னியாசி பாரியுட னேவசனத்திற் றங்குமவ
னென்னுமிவர் தேசியரன் றே''

(ஆ.இ.கு. 59) என்னும் குறளால் வெளிப்படுத்துவார்.

மேற்கூறிய கருத்தினையும் சந்நியாசம் பற்றிப் பொதுவான கருத்தினையும் மனங்கொண்ட நாவலரவர்கள் சன்னியாசம் பூணத்தகுதி யுடையவர்கள் நான்காம் வருணத்தோர் தவிர்ந்த ஏனையோர் என்பது சிலரது கருத்தாகும். மேற்கூறிய கருத்தின் மூலம் நான்காம் வருணத்தார் சன்னியாசம் பூணுதற்கும் ஆசாரியர் ஆதற்கும் தகுதியுடையவரல்லர் என்பதை எதிர் மறைப்பொருளில் உணர்ந்த நாவலரவர்கள் நான்காம் வருணத்தார் சன்னியாசியாதற்கும் மேல் மூன்று வருணத்தாருக்கும் ஆசாரியராதற்கும் தகுதி யுடையவரென்பதை தமது உரையில் பின்வரு மாறு நிறுவுவார்.[42]

**''நான்காம் வருணத்திற் சந்நியாசியில்லையெனச் சிலர் கூறுவர். சிந்தியவிசுவ சாதாக்கியத்திற் பிராமணர் முதற் பத்துச் சாதிக்கும் பிரமசரியம் கிருகத்தம் வானப்பிரத்தம் சந்நியாசமென்னு நான் காச்சிரமு முண்டென விதித்தலானும், இராமாயணத்திற் கிருதயுக முதலிய நான்கு யுகத்தினும் முறையே பிராமணர் முத லிய நான்கு வருணத்தார்க்கும் தபோமுக்கியத்தவஞ் சாற்ற லானும், பிரமாண்ட புராணத்திற் கிருதயுகத்துப் பிராமண சந்நி யாசி முக்கியன், திரேதாயுகத்து க்ஷத்திரிய சந்நியாசி முக்கியன், துவாபரயுகத்துக்கு வைசிய சந்நியாசி முக்கியன் கலியுகத்துக்குச் சூத்திர சந்நியாசி முக்கியன் எனப்பகர்தலானும் அவர்கள் கூற்றுப் பொருந்தாதென மறுக்க''**

## தம் கருத்தினை ஏற்றிப் பொருள் சொல்லல்

நாவலரவர்கள் இந்நூலில் பல்வேறு இடங்களில் தம் கருத்தினை ஏற்றிப் பொருள் விளக்கம் செய்துள்ளார். ஆசாரியருக்கு இன்றியமையாச் சைவாகமவுணர்ச்சியைக் கூறவந்த சம்பந்தர்.

''அல்லாற் சுலோக மொருநியுத மாராய
வல்லானுந் தேசிகன வான்''

(பொ.இ.கு.3)

40. மேலது நூல், பக். 250 - 251 41. பார்க்க - பின்னிணைப்பு - 1
42. மேலது நூல், ப. 40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குறிப்பிடுவார். இதற்குப் பொருள் கூறவந்த நாவலரவர்கள் ''சைவாகமங்களில் கிரியா காண்டம் ஞான காண்டம் என்னுமிரண்டி னும் ஒரு இலக்ஷங்கிரந்த மோதி உண்மைப் பொருளை யுணர வல்லா னும் ஆசாரியனாவான்'' என்பதோடு அமைதி கொள்ளாது, சங்கத மொழிக் கல்வியினால் வரும் அறிவினால் மட்டும் ஒருவன் ஆசாரியராக முடியாது; அவன் சைவசமய நூல்களிலும் சித்தாந்த சாத்திரங்களிலும் போதிய அறிவைப் பெற்றிருக்க வேண்டும்; அத்துடன் அவை பதிவாக் கெனவும் துணியப்பட வேண்டும் எனவும் வற்புறுத்துவார். நாவலர வர்கள் இக்கருத்தினை, பின்வருமாறு குறிப்பிடுவது இங்கு மனங் கொள்ளத் தக்கதாகும்[43].

''அன்றியும் தமிழ் வழங்கு நிலத்தின் கண்ணே ஆசாரியராவோர் வடமொழிப் பயிற்சி பெரிதுடையராயினும் கேட்போரெல் லார்க்கும் அஃதுண்மை கூடாமையால் தமிழினும் நிகண்டு கற்று இலக்கிய வாராய்ச்சி செய்து பஞ்சலக்கணப் பயிற்சியுடை யவ ராய்த் தமிழ்ச் சித்தாந்த சாத்திரம் பதினான்கையு முணர்ந்தா ராகியும் தமிழ் வேதமாகிய தேவார திருவாசகங்களைப் பண் ணோ டத்தியயனம் பண்ணி வல்லவராகியும் இருத்தல் வேண்டுமெனவுந் துணிக.

......தமிழ் வேதங்களும் தமிழ்ச்சித்தாந்தங்களும் பசுகரண நீங்கிச் சிவகரணமுற்ற உண்மை நாயன்மார்களால் அருளிச் செய்யப்பட்டமையினால் பதிவாக்கெனவே துணியப்படும். இஃதறியாது பசு வாக்கென நினைப்பினும் நகரத்துன்பமெய் தல் சத்திய மென்பது தெளிக''

பல பெரியோர்கள் தேவாரம் வேதசாரம் எனவும் வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம் எனவும் கூறிவந்த வேளையில், வேத சிவா கங்கைளக் காட்டிலும் சிவபெருமானுக்குப் பிரீதியுடையது தேவார திருவாசகங்கள் எனவும், அவை பதிவாக்கெனவும் துணியப்படுமென வும் முதன் முதலாகத் தமிழ் - சைவ இலக்கிய வரலாற்றில் எழுதியும் பிரசங்கித்தும் வந்தவர் நாவலரவர்கள்[44]. எனவே அவர்தம் கருத்தினை இங்கும் நிலைநாட்ட முற்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

---

43. மேலது நூல், ப. 76
44. கனகரத்தினம், இரா, வை., 1994, கனகரத்தின உபாத்தி யாயரின் ஆறுமுகநாவலர் சரித்திரம், ஏ.பு.அ. ஆலய வெளியீடு, ப.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுண்ணறிவு தோன்றப் பொருள் கூறல்

உரையாசிரியர்கள் நேரடியாகவும் புதுமையாகவும் உரைகூறுவதோடு அமையாது நுண்ணறிவு தோன்றவும் பொருள் கூறுவர். சிவன்ற -னுற்சவத்தினும்மியலோதேல் (பொ.இ.கு.346) என்ற தொடருக்கு உரை கூற வந்த நாவலரவர்கள் தனது நுண்மாண் நுழைபுலத்தின் ஆளுமையைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை. நாவலரவர்கள் (சிவனின்) உற்சவங்களைக் குறிப்பதோடு அமையாது அவை உணர்த்தும் மெய்ப் பொருள் விளக்கத்தையும், இயல் ஓதேல் என்பதன் விளக்கத்தையும் குறிப்பிட்டுச் செல்வார். அது பின்வருமாறு அமையும்[45]

> மகோற்சவநாள் பத்தினுள், முதனாள் விழாத் தூலலிங்கத்தின் பொருட்டும், இரண்டாநாள் விழாத் தூலசூக்கு நீக்குதற் பொருட்டும், மூன்றாம்நாள் விழா மூவினையும் முப்புத்தியும் முக்குணமும் மும்மனமும் முக்குற்றமும் முப்பிறப்பும் முப்பற்றும் நீக்குதற் பொருட்டும், ஐந்தாள் விழா ஐம்பொறியும் ஐந்தவத்தையும் ஐந்துமலமும் நீக்குதற் பொருட்டும், ஆறாநாள் விழாக் காமாதி யாறும் காலையாதியாறும் வினைக் குணமாறும் பதமுத்தியாறும் நீக்குதற் பொருட்டும், ஏழாநாள் விழா எழுவகைப் பிறப்பும் கலாதிகளேழும் மாயாமல குணமேழும் நீக்குதற் பொருட்டும், எட்டாம் நாள் விழா எண்குணம் விளக்குதற் பொட்டும், ஒன்பதாநாள் விழா மூன்றுருவும் முத்தொழிலும் மூன்றிடத்துறைதலும் இலையெனற் பொருட்டும், பத் தாம்நாள் விழாப் பரானந்த மாக்கடலில் அழுத்துதற் பொருட்டுஞ் செய்யப்படுதலால், சிவோற்சவ காலத்துப் படிக்கலாகா தென்றார்.

## மரபுவழிப் பொருள் தருதல்

சொற்களின் பொருள் காலம் தோறும் மாறுபட்டாலும் நம்பிக்கைகள் மரபு வழி வருவனவாகும். மரபு வழி நம்பிக்கைகள் நூல்கள் வாயிலாக உணர்த்தப்படுவனவாகவும், பண்பாட்டோடு இயைந்தும் வருகின்றன. இத்தகைய மரபு வழிப்பட்ட நம்பிக்கைகளை நாவலரவர்கள் இந்நூலில் ஆங்காங்கே கையாண்டு சிறப்புரை வரைந்துள்ளார்.

> ''வடதிசையில் வையேற் றலைமற்றை யூரிற்
> குடதிசையில் வைக்கை குணம்''
>
> (பொ.இ.கு.228)

45. ஆறுமுக நாவலர், 1955, சைவசமயநெறி மூலமும் புத்துரையும், ப. 221

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் குறளுக்கு நாவலர்கள், ''வடக்கே தலைவைத்துச் சயனித்தால் வியாதியுண்டாம். முத்திகாமன் சயனத் தானத்திலே தான் தலைவைக்குந்திக்கிலே சோமாஸ்கந்தர் முதலிய விக்கிரகங்களுள் ஒன்றைச் சித்திரமாக எழுதி அவரை நமஸ்கரிக்கும் பாவனையிற் சயனிக்க''[46] என விளக்கவுரை செய்வார். இவ்வுரை வடக்கே தலை வைத்தல் கூடாது, நித்திரையின் பொழுது பயம் பீதி முதலானவை ஏற்பட்டால் வீபூதி பூசி தெய்வத்தை வணங்க வேண்டும் என்னும் நாட்டார் வழக்காறுகளை நினைவுறுத்தும்.

## சொற்களை வருவித்தல்

குறள் வெண்பா சுருங்கிய வடிவம் உடையது. சூத்திரம் போன்றது தருக்கமும் நுட்பமும் வாயந்தது. அவற்றைக் கையாளுதற்குச் சிறந்த புலமை அவசியம். குறள் வெண்பாவைக் கையாண்டு வெற்றிபெற்றவர்களுள் ம.ஞா.சம்பந்தரும் ஒருவர். புலமையின் ஆளுமைக் கேற்ப இவ்வடிவம் ஆழமும் அழுத்தமும் செறிவும் நயமும் பெறும். ம.ஞா.சம்பந்தரின் இந்நூலும் அத்தகையதே. திருக்குறளுக்கு உரை கண்டோர் நூலின் திறனை வெளிப்படுத்தும் வகையில் சொல்,பொருள் வருவித்து வெளிப்படுத்தினர். நாவலரவர்கள் பொருளை வருவியாத வகையில் சொற்களை மூன்று இடங்களில் வருவித்து உரை எழுதியுள்ளார். அவற்றுள் ஒன்றினை இங்கு நோக்கலாம்[47].

''மற்றைய முனிவர் மலர்த்தா டலைமேல் வைத்
தெற்றுவமே பாசமெல்லாம் யாம் ''

(பா.சொ) என்ற குறளுக்கு நாவலரவர்கள்;

''யாம்-நாம்-மற்றை முனிவர் மலர்த்தாள் தலைமேல் வைத்து-(ஞான சாத்திரங்களைப் போதிக்கும் அகஸ்தியமாகாமுனிவர் முதலிய) மற்றை முனிவர்களுடைய செந்தாமரை மலர்போலும் திருவடிகளையும் நமது சிரசின் மேலிருத்தி - பாசமெலாம் எற்று வம்- பஞ்சபாசங்களையும் நீக்குவாம்''

எனத் தேவைப்படும் சொற்களை வருவித்து, அவ்வாறு வருவிக்கப்பட்ட சொற்களை அடைப்புக்குறிக்குள் இட்டு உரை காண்பார்.

## சமயக் கோட்பாடு

ஒரு சமயச் சார்பான நூலுக்கு அந்தச் சமயத்தைச் சார்ந்தோரே உரையெழுத வேண்டுமென்ற கட்டாயம் தமிழ் இலக்கிய வரலாற்றில் இருந்ததில்லை. திருக்குறளுக்குப் பல்வகைச் சமயத்தைச் சார்ந்தவர்

46. மேலது நூல், ப. 173 47. மேலது நூல், ப. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகிய பருதியார் (சைவம்) பரிமேலழகர்(வைணவம்) காலிங்கர் (சமணம்) முதலானவர்கள் உரையெழுதியமை ஈண்டு மனங்கொள்ளத் தக்கதாகும். சைவ சமய நெறி என்னும் இந்நூல் மறைஞான சம்பந்தரால் இயற்றப்பெற்றது. இவர் பிறப்பால் சைவர். ஆனால் சைவசித்தாந்தக் கோட்பாட்டைத் தழுவியரல்லர். இவர் ஓர் ஆன்மானந்தவாதி. சைவசித்தாந்தத்திற்கும் இக்கோட்பாட்டிற்குமுள்ள முக்கிய வேற்றுமை முத்திநிலையில் ஆன்மா இறைவனோடு அத்துவிதப்படும் நிலையாலேயே காணப்படுகின்றது என்பர். த.ச.மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் மறைஞான சம்பந்தர் பற்றிக் கூறுகையில்;[48]

> ''இப்பெரியார் சைவாசாரியர் மரபிலே தோன்றியுள்ளவர் எனத் தெரிகின்றது. இவர் சைவசமயத்தவர் ஆயினும் ஆன்மானந்த வாதி யாவார் என்பது இவர் செய்த'' முத்திநிலையால் விளங் கும். இதனை மறுத்துத் தருமையாதீனத்துப் பிரதம பரமாசாரி யார் ஸ்ரீ குரு ஞான சம்பந்த மூர்த்திகள் முத்திநிச்சயம் என்னும் சிறந்த சித்தாந்த நூல் ஒன்று செய்தருளியுள்ளமையும் காண்க. ......யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரவர்கள் இம்ம கான் அருளிச் செய்த சைவநூல்கள் யாவும் சைவருக்கு இன்றிய மையாதன என உட்கொண்டு சைவசமய நெறியைத் தாம் இயற் றிய புத்துரையுடன் அச்சிட்டு பகரித்தார்கள்''

எனக் குறிப்பிடுவது மேற்கூறியவற்றுக்குச் சான்றாக அமைகின் றது எனலாம்.

உண்மையில் நாவலரவர்கள் தமக்குள்ள சித்தாந்த வேறுபாடுக ளைப் பெரிதுபடுத்தாது இந்நூல் சைவசமய வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் என்பதனாலேயே உரையெழுத முனைந்தார். நாவலரவர்கள் முதநூலாசிரின் சமயக் கோட்பாடுளோடு பெரிதும் முரண்படாத வகையி லும் தமது கோட்பாடுகளை எடுத்துக் காட்ட வேண்டிய இடத்தில் எடுத்துக் காட்டியும் சிறப்பான முறையிலே உரை எழுதியுள்ளார்.

''அவனே வினர்தா மருத்த வருத்தி
யவனா யிருப்பரவ ராங்கு''

(பொ.இ.கு.414)

என்னும் குறளுக்கு உரையெழுதிய நாவலரவர்கள் ''முற்கூறியபடி அச்சிவபெருமானாலே பிரேரிக்கப்பட்டவர்கள் புசிக்கப் பொருணசை

---

48. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, த,ச., 1954, சிதம்பரம் - கண்கட்டி மடம் ஸ்ரீ மறைஞான சம்பந்த நாயனார் அருளிச் செய்த சைவச் சிறு நூல்கள், திருவாவடுதுறை ஆதீனம், முகவுரை, பக். 111 - IV

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில்லாது அவர்கள் பயன்கருதிச் சிவயோகம் பாவனையினாலே புசித்து அச்சிவனேயாய் நிற்பார்கள்'' எனச் சித்தாந் தப் புலமையோடு உரை யெழுதுவார்'' ஆயினும், ம.ஞா.சம்பந்தரின் சமய நோக்குப் பிறழாத வகையில் அவனாயிருப்பவராங்கு'' என்னுந் தொடரினை விளக்கும் போது ம.ஞா.சம்பந்தரின் சமயநோக்கினையும் சைவசிந்தாந்த நோக்கி னையும் மனங்கொண்டு நாவலரவர்கள் விளக்கும் பாங்கு நாவலரவர்க ளின் பரந்த மனப்பாங்கினையும் சமயக்காழ்பற்ற தன்மையையும் எடுத்துக் காட்டும். அது வருமாறு[49]

**''ஆன்மா யாதனை யாதன்னைப் பற்றினான் அதனதன் சுபாவமே தன்சுபாவமாந்தன்மையுடையமையால் அதுவதுவாயே நிற்பன்; ஆதலால் அசுத்தப் பொருளாகிய பாசத்தோடு ஒற்றுமைப் பட்டு நிற்கும் போது பசுவேயாய் நின்ற ஆன்மா(ச்) சுத்தப் பொருளா கிய சிவனோடு ஒற்றுமைப்பட்டு நிற்கும்போது சிவன் குணங்க ளாகிய எண்குணங்களும் தன்றன்மையாக் கொண்டு சிவனேயாய் நிற்பன். இதுவே சிவத்துவத்தைப் பெறுதலெனப்படும்''**

இக்குறளினையும் இதற்கு நாவலரவர்கள் கூறும் விளக்கத்தையும் ''அவையே தானே'' எனும் சிவஞான போத சூத்திரத்துக்கு மெய்கண் டார் தரும் விளக்கத்தையும் ஒப்பிட்டு நோக்குதல் அவசியம்.

## சித்தாந்தக் கோட்பாடு

இந்நூல் சைவசமயத்தின் புறநிலைப்பட்ட வழிபாட்டு நெறிக ளைப் பெரிதும் விளக்குவதாகவும் அகநிலைப்பட்ட தத்துவங்களை ஆங் காங்கே சுட்டிச் செல்வதாகவும் அமையும். இந்நூலின் பொதுவிலக்க ணம் தவிர்ந்த ஏனைய இலக்கண சைவத்தின் புறநிலைப்பாங்கான வழிபாட்டு நெறிகளைப் பெரிதும் விளக்குவதாகவும், அகநிலைப்பாங் கான தத்துவங்களை ஆங்காங்கே சுட்டிச் செல்வதாகவும் அமையும். பொதுவிலக்கணம் சைவத்துக்குரிய புறநிலைப்பாங்கான வழிபாட்டு முறைகளையும் ஒழுகலாறுகளையும் சிறப்புற எடுத்து விளக்கும். அவற்றினுடே அகநிலைப்பாங்கான தத்துவக் கோட்பாடுகளையும் குறித்துச் செல்ல அது தவறவில்லை.

நாவலரவர்களால் இந்நூலில் விளக்கப்படும் சித்தாந்தக் கோட்பா டுகள் மறைஞான சம்பந்தரால் முழுமையான வடிவிலே வலியுறுத்தப் பட்டதென்று அழுத்தமாகக் கூறுவதற்கில்லை. ஆயினும் நாவலரவர்கள் தமது நோக்கத்தை எங்கெல்லாம் பயன்படுத்த முடியுமோ அங்கெல்

49. ஆறுமுகநாவலர், 1955, சைவசமய நெறி மூலமும் புத்துரையும், ப. 245

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் தவறாது பயன்படுத்தி உள்ளார். அதற்கான இயைபை உடையதாக இந்நூலும் அமைந்திருப்பது இதற்கோர் முக்கிய காரண மெனலாம். எடுத்துக் காட்டாகச் சிலவற்றை நோக்கலாம்.

ஆசாரியர்கட்கு விசேட விலக்கணம் கூறவந்த ம.ஞா.சம்பந்தர் ஆன்மாக்களின் பக்குவத்திற்கேற்ப தீட்சை வழங்கல் வேண்டும் என்பதைச்

*''சாம்பவியாற் சத்தியான் மாந்திரியாற் சத்திபதிந்*
*தாம்பயத்தின் பேதமா ராய்ந்து''*

*(ஆ.இ.24)*

என்னும் குறளால் விளக்குவார் இங்கு *'சத்திபதிந்து'* என்ற தொடரை விளக்க வந்த நாவலர்;

''இருவினையொப்பும் ஆணவமலபரிபாகமும் உற்ற விடத்தே சத்திநிபாதம் உண்டாகும். சத்திநிபாதமாவது ஆன்மாவினது ஞானத்தைத் தடுக்கும் ஆணவ மலசத்தி நழுவும் அவசரத்திலே முற்பிற்பாடறச் சிவத்தினது சிற்சத்திபதிந்து அவ்வான்மாவினது நித்திய ஞானக்கிரியை விளக்குவதாம்'' எனக்குறிப்பிடுவார்[50].

''பெறினு மபேதம் பிரமத் துலகத்
துருதியுனிச் செய்வினை யும்''

(பொ.இ.கு.7)

என்னும் குறளின் மூலம் ஆசாரியர் கிரியா நுட்டானங்களை விடாது அநுட்டிக்க வேண்டுமென்று வற்புறுத்து வார். இங்கு ''பிரமத்து அபேதம் பெறும்'' என்னும் தொடருக்கு உரைகூறிய நாவலரவர்கள் ஆசாரியன் சிவத்தோடு அத்துவிதமாயிருப்பினும் எனப் பொருள் கொண்டு[51] **'அத்துவிதம்'** என்பதற்கு விளக்கவுரை செய்வார். **அத்துவிதம் என்ற சொல்லுக்கு மாயாவாதிகள் கூறும் இன்மைப் பொருளை மறுத்து சித்தாந்த அடிப்படையில் அன்மைப் பொருள் கொண்டு ''ஆன்மபோதமும் கண்ணொளியும் போலச் சிவமும் ஆன்மாவும் தம்முள் இரண்டற ஒற்றுமைப்பட்டு நிற்றலே அத்துவிதம்''** என்பார்.[52]

---

50. மேலது நூல், ப. 23 51. மேலது நூல், ப. 78 52. மேலது நூல், ப. 79

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயம்

இந்நூலில் காணப்படும் பல்வகை நயங்களையும் நாவலரவர்கள் தமது உரைகள் மூலம் எடுத்துக்காட்டுவார். அவற்றுள் சிலவற்றினை இங்கு நோக்கலாம். கவிதை நயங்களில் உள்பொருள் அல்லது குறிப்புணர்வுப் பொருள் காட்டல் ஒரு முக்கிய அம்சம் என திறனாய்வாளர் குறிப்பிடுவர். ஒரு கவிதையில் வெளிப்படு பொருளினும் உள்ளீடாயமைந்து மனத்தால் உணரப்படும் குறிப்புணர்வுப் பொருளே (suggestion) அக்கவிதையின் உயிரோட்டமாகி அமைகின்றது. உரையாசிரியர்கள் அதனை வெளிக் கொணரவே முயன்றனர். இவ்வாற்றல் உரையாசிரியர்களுக்குச் சிறந்த பயிற்சிக் களமாய் அமைந்து, கவிதைகளை உணர்ந்து அனுபவிக்கவும் பயன் கொள்ளவும் உதவி செய்கின்றன[53] என்ற கூற்று இங்கு மனங் கொள்ளத்தக்கது.

''சயம்புவுந் தைவிகமு மாரிடமு மாந்தர்
நயந்தலிங்கந் தானுசமன நான்கு''

(பொ.இ.கு.431)

பரார்த்தலிங்கமாவது சுவாயம்புவ லிங்கமும் தைவிகலிங்கமும் ஆரிடலிங்கமும் மானிடலிங்கமுமென நான்கு பேதப்படும் என உரை கூறிய நாவலரவர்கள்[54] அவற்றைக்

''குரு சேத்திர முதலிய புண்ணிய ஸ்தலங்களிலே தானே தோன்றுவது சயம்பு. தேவர்களாற்தாபிக்கப்பட்டது தைவிகம். இருடிகளாற் தாபிக்கப்பட்டது ஆரிடம். அசுரர் இயக்கர் சித்தர் முதலாயினாராற் றாபிக்கப்பட்டதும் அது. மானுடராற்றாபிக் கப்பட்டது மானு டம்''

என விளக்குவார்[55] விளக்கங்கள் மூலநூலாசிரியர் கருதிய கருத்துக்களை வெளிப்படுத்தியதோடு, மூலநூல் ஆசிரியன் கருத்துக்கு அப்பா லும் சிந்தித்து,

காணலிங்கமொன்று கூட்டிப் பரார்த்தலிங்கம் ஐவகைப்படுமெனக் கூறலுறமொன்று. அது

''மனிதர்தா பித்தலிங்க மாதவர் வானோர் மற்றைப்
புனிதராங் கணங்கள் பூசை புரிந்திடு மிலிங்க மொன்றும்
பனுமிவை நான்குந் தானே படிதனி லுதித்த லிங்க
மெனுமித னோடுமைந்தும் பரார்த்தமென் றெனுகவென்றும்''

---

53. தமிழண்ணல், 1955, உரைவிளக்கு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, ப. 156
54. ஆறுமுக நாவலர், 1955, சைவசமயநெறி மூலமும் புத்துரையும், ப. 250
55. மேலது நூல், ப. 250 - 251

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் செய்யுளாலறிக எனக் குறிப்பிடுவது[56] பொருள் அல்லது கருத்துப் பொருத்தமுடைய நயம் அல்லது திறனாய்வென்றே கொள்ளல் வேண்டும்.

மடைப்பள்ளியினுள்ளே இறைவனுக்குரிய நிவேதியத்தை மிகுந்த பக்குவத்துடனும் தூய்மையுடனும் விதிப்படியும் பக்குவம் பண்ணல் வேண்டும் என்பதையும் மிகுந்த நுண்ணறிவு புலப்பட அதே வேளை யில் நயமாகவும் பின்வருமாறு விளக்குவார் நாவலரவர்கள்[57]

''பாத்திரத்தில் அரிசியையிட்டு, வடித்தெடுத்த சலத்தை அவ்வ ரிசிக்கு ஒன்றரைக் கூறு அப்பாத்திரத்தில் வார்த்து வார்த்து, சடங்க மந்திரங்களினால் ஆறுதரம் கழுவிக் கழுவி, சத்தியோ சாத மந்திரத்தினாற் கழுநீரை ஊற்றிவிட்டு, இருதயத்தினாற் கல்வாரி, அரிசியினிருமடங்கு சலம் பூரித்துக்கவசத்தினான் மூடி, பின்பு கோமயத்தினால் மெழுகப்பட்ட மடைப்பள்ளி யிலே தருமாதரும சொரூபமாகிய இரண்டுகைகளையுடைய அடுப்பை அரிசி கொண்டு இருதயத்தினால் அருச்சித்து, பின்பு அப்பாத்திரத்தை வாமதேவத்தினால் எடுத்து இருதயத்தினால் அடுப்பின் மேல் வைத்து, அகோரத்தினால் அக்கினிட்டு, தற்புரு டத்தினால் புழுக்கள், பூச்சிகள் எறும்புகள் இல்லாதனவாகவும் பொறி பறவாதனவுமாகிய காட்டங்களிலே குழலைக் கொண் டேனும் தருப்பைப் புல்லைக் கொண்டேனும் வாயுவைக் கிளர் வித்து அக்கினியைச் சொலிப்பித்து, மயிர் உமி கன்முதலியவை கூடாமலும், அபக்குவம் அதிபக்குவமாகாமலும், வேறு நிறமும் துர்க்கந்தமும் வாராமலும், நன்றாகச் சமைத்து, இருதயத்தினால் இறக்கி, முக்காலியில் வைத்து, பொங்கி வடித்ததைச் சுற்று மந்திரத்தினாற் கழுவி, அன்னத்தினடுவே இருதயத்தினால் ஒரு பாத்திரம் வைத்து, ஈசானத்தினால் ஒரு புட்பஞ்சாத்தி, பாத்திரத்தின் கழுத்தடியிலே நான்கு திக்கினும் தற்புருடமுதலிய நான்கு மந்திரங்களினாலும் வீபூதிசாத்துக. நைவேத்தியத்தில் உமி கிடந்தால் வறுமையும், கல்லுக்கிடந் தால் வியாதியும், மயிர் கிடந்தால் மரணமும் வரும்''

இவ்வுரை ஆலய வழிப்பாட்டில் நித்தியமாக நடைபெறும் கிரியை விளக்கயாகும். ''புக்கு மனையுட் சிவனுக்கெனப்போனம், பக்கு வம் பண்ணிப் பரிந்து[58] என்பதே இவ்விளக்கவுரைக்கான குறள். நாவலர வர்கள் நைவேத்தியம் பாகம் பண்ணுதலைச் சாதாரணமாகச் சொல்லி

56. மேலது நூல், ப. 251 57. மேலது நூல், ப. 230

58. மேலது நூல், பொ.இ.கு. 370

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கலாம். நாவலரவர்களது பரந்த நுண்மாண் நுழைபுலம் மிக்க நுட்பமாகவே மேற்படி குறளுக்கு உரை செய்யத் தூண்டிற்று. இவ்வுரை பல நியதிகளையும் பயன் தரும் மந்திரங்களையும் ஒன்றுடன் ஒன்று இயைபுகாட்டிச் செல்வதும் நாவலரவர்களது நலனாய்தற்கு அல்லது திறனாய்வுச் சிந்தனைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்ற தெனலாம். இதில் வரும் நியதிகளையும் இயைபு காட்டிச் செல்லும் மந்திரங்களையும் பின்வருமாறு பகுத்து நோக்கி நயக்கலாம்.

| நைவேத்தியத்தின் பொழுது சொல்லப்பட வேண்டி மந்திரம் | செயல்பட வேண்டிய நியதிகள் |
|---|---|
| சடங்க மந்திரம் | அரிசியைக் கழுவுதல் |
| சத்திதோ சாத மந்திரம் | நீரை ஊற்றல் |
| இருதய மந்திரம் | கல்வாரால் அரிசித்தல், அடுப்பில் வைத்தல், இறக்கல் பாத்திரத்தில் வைத்தல், |
| வாமதேவ மந்திரம் | பாத்திரத்தை எடுத்தல் |
| அகோர மந்திரம் | அக்கினி இடல் |
| தற்புருடம் | வீபூதி சாத்தல், வாயுவை கிளர்வித்தல் |
| சுற்றி மந்திரம் | பாத்திரம் கழுவுதல் |
| ஈசானமந்திரம் | புட்பஞ்சாற்தல் |
| ஈசானம், தற்புருடம், அகோரம் வாமதேவம் ஆகிய மந்திரங்கள் | பாத்திரத்தின் கழுத்தடியில் வீபூதி சாத்தல் |

**''கவிதைப் பொருளை நுட்பமாக விளக்குதல் நலனாய்தல் என்பதன் ஒரு பகுதியாகும்''** என்னும் ஆய்வாளர் கருத்து இங்கு நினைவு கூரத்தக்க தாகும்

''உண்டோ வதீதத் துணர்வுதிக்கை யாமுளத்திற்
கொண்டகுறிப் பின்றிவிளங் கும்''

''காரணத் தாலே விளங்கா ததனுக்
ககாரணனே கன்கா ரணன்''

(பொ.இ.கு.407,408)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் குறள்களுக்கு உரை செய்த நாவலரவர்கள்[60] ''கருத்தா வேண்டுவதில்லை. ஆன்மா தான் செய்த கன்மத்தை அறிந்து புசிப்பானெனின் நாம் சூக்கும தேகத்தைப் பொருந்திய அதீதாவத்தையிலே நமக்கு அறிவுதித்த லுண்டோ; அது கருவி குறைதலினாலென்னிற் கருவி கரணாதிகளோடு கூடிய சாக்கிர வத்தையிலே நாம் காலையில் எழுந்து ஊருக்குப் போதல் வேண்டுமென்று மனதிலே நினைத்துக் கொண்டு நித்திரை செய்த போது விடிந்திரண்டு நாழிகை சென்றும் ஏழாதிருப்ப தென்னை, ஆதலால் ஆன்மாவுக்குக் கருவி கரணாதிகளைக் கூட்டிக் காரியப்படுத்தும் ஒரு கருத்தா உண்டு''

''ஆன்மாவுக்கு அறிவு யாதொரு காரணமின்றி தானே விளங்க மாட்டாது. தமக்குக்காரணமில்லாதவரும் ஒருவருமாகிய சிவ பெருமானே காரணர்''

ஆன்மாவிற்குக் கருவி காரணாதிகளைக் கூட்டி அதனைக் காரியப்படுத்த ஒரு கருத்தா அவசியம் என்பதைக் காரண காரியத் தொடர்புகாட்டி மேற்கூறியவாறு நாவலரவர்கள் உரை செய்திருப்பது நனிநயக்கத்தக்கதாகும். **காரண-காரியத் தொடர்பு காட்டுதல் நலனாய்த லின் சிறப்பம்சங்களில் ஒன்றென்பார்.**[61]

''ஆரியன்பா லன்பாகி யாய்ந்தா கமமனைத்து
நேரியவே தாந்த நிலையும் ''

(ஆ.இ.கு.21)

என்னும் குறளுக்கு நாவலரவர்கள்;

''தன்னுடைய ஆசாரியனிடத்திலே பத்தியுடையவனாகி, சமஸ் தாகமங்களையுஞ் சூக்குமமாகிய வேதாந்த நிலைகளையுமாராய்ந்து ணர்க[62]'' எனப் பொருளுரைப்பார். இங்கு சுட்டப்படும் வேதங்களையும் ஆகமங்களையும் எவ்வாறு ஆய்ந்து நோக்குதல் வேண்டும் என்பது பற்றி நாவலரவர்கள் கருத்துரைப்பது நயம் பயப்பது என்பதைக் காட்டிலும் நாவலரவர்களின் திறனாய்வு மனப்பாங்கினை நன்கு புலப்படுத்துமென லாம்[63].

''வேதாந்த மென்றது வேதத்தின் ஞான காண்டமாகிய உபநிட தங்களை. வேதாந்த மெனினும், வேதசிரசெனினும், உபநிடத

60. மேலது நூல், பக். 242 - 243
61. தமிழண்ணல், 1985, உரைவிளக்கு, ப. 156
62. ஆறுமுகநாவலர், 1955, சைவசமயநெறி மூலமும் புத்துரையும், ப. 20
63. மேலது நூல், பக். 20 - 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெனினும், பிரபல சுருதியெனினும் ஒக்கும். உபநிடதங்களை உற்று நோக்கி வியாச முனிவரியற்றிய சூத்திரரூபமாகிய பிரம மீமாஞ்சை யும் வேதாந்த மெனப்படும். அதன் மெய்ப்பொருள் வேதாகமசிவாகம மிரண்டையும் நன்குணர்ந்த நீலகண்ட சிவாசாரியர் உரைத்த பாடியத்தால் இனிது விளங்கும். மற்றுள்ளோர் உரைத்த பாடியங்களும் அவர் வேதாந்தமெனப் பெயரிட்டியற்றிய பிரகரணங்களும் சிவாகமத்துக்கு மறுதலைப்பட்ட புறச்சமய நூற்பொருளையுடையனவாதலின், அவற்றை மெய்யெனக் கொண்டு மயங்காதொழிக. வேதம் பொருள்பல படத் தோன்றுஞ் சூத்திரமும், சிவாகமம் அதனை அங்ஙனமாக வொட்டாது தெளித்துரைக்கும் பாடியமும் போலச் சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்டன. வேத சிவாக மங்கட்குப் பேதமின்மை

''வேதமொ டாகம மிறைவனூ
லோதும் பொதுவுஞ் சிறப்பு மென்றுன்னுக
நாதனுரையிவைநாடி லிரண்டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே''

என்னும் செய்யுளானும் ......

''வேத சிவாகமங்கட்குப் பேதங்காண்கின்றிலம் வேதமே சிவாகமம்'' என நீலகண்டபாடியத்தில் நீலகண்ட சிவாசாரியார் கூறிய வாற்றானுமுணர்க''

நயம் காணல் என்பது வெறுமனே நயம் பாராட்டல் (appreciative Criticism) என்றே பெரிதும் கருதப்படுகின்றது. இதன் உண்மைத் தன்மையைப் பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள்[64]

''நலம் காணுதல் என்பது வெறுமனே நலம் பாராட்டுதல் அன்று பாடல்களைக் கற்பாரை அப்பாடலுடன் ஒன்றி அனுபவிக்க வைக்கும் பயிற்சிக் களங்களே. இவ்வுரைப்பகுதிகள் உற்று நோக்கவும், உய்த்துணரவும் நயங்காண்டல் என்ற பகுதியும் ஒருவகைத் திறனாய்வாகவும் ஒப்பிடவும் உவமைகளிலும் நயவுரைகளிலும் நிரம்ப அடிப்படைகள் உள தமிழர் கண்ட நோக்குக் கோட்பாட்டின் விளக்க மாகவும் அமைகின்றது. உரை விளக்கம் தருதல், திறனாய்தல், ஆய்வு செய்தல் என்று மூன்று நிலைகளிலும் உரையாசிரியர்கள் செயற்படுகின்றனர்''

64. தமிழண்ணல், 1985, உரைவிளக்கம், ப. 170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் குறிப்பிடுவார். இக்கூற்றினை நாவலரவர்களின் நலனாய்தல் திறனுடன் ஒப்பிடும் பொழுது நாவலரவர்கள் நல்ல திறனாய்வாளராகவே புலப்படுகின்றார்.

''தம்முள்ளத் துற்ற சலனசிவ லிங்கத்து
தம்மன்பா லர்ச்சிக்க தாம்''

பொ.இ.கு.128

என்னும் குறளுக்குத் ''தம்முடைய இருதயத்தை எட்டி தழ்த் தாமரையாகக் கருதி அதை ஆசனமாக்கி அதில் எட்டங்குலவுயரமும் தமக்கு வேண்டியதொரு நிறமுள்ளதாகக் கற்பிக்கப்பட்ட சிவலிங்கத்திலும் புறப்பூசை செய்யுமாறுபோல ஆகப்பூசையைக் கொல்லாமை முதலிய அட்டபுட்பங் கொண்டு அன்பினோடு செய்யக்கடவர்''[65] என உரைவழங்குவார் நாவலரவர்கள்.

நாவலரவர்கள் இவ்வுரையில் புறப்பூசை அகப்பூசை என்னும் உவமை அடைகளையும் இலிங்கம் இருதயலிங்கம் என்னும் பொருளடைகளையும் சுட்டிக் காட்டுவதோடு, அகப்பூசைக்குரிய மலர்களாக அட்டபுட்பங்களைக் குறிப்பிடுவார். ''தன் மன்பால்'' என்பதற்கு அட்டபுட்பங் கொண்டு எனப் பொருள் கொள்ள வேண்டுமென்பதில்லை. ஆனால் அட்டபுட்பங்கள் அந்தரியாகப்பூசைக்கு உகந்த புட்பங்களாகும். எனவே நாவலரவர்கள் பொருள் உணர்ந்து நல்ல சொல்லாட்சியைப் பயன்படுத்திய விதம் நயக்கத்தக்கது. அட்டபுட்பங்களாவன கொல்லாமை, ஐம்பொறி அடக்கம் பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு, எனத் தொகை விரித்து விளக்குவதோடு, ''உள்ளேவல் செய்வாளைக் காத்தன் மிகவுகப்பனுள்ளே செய்பூசை யுகந்து[66]'' என்னும் செய்யுளை எடுத்துக்காட்டி உட்பூசையினுயர்வினை விளக்குவது ஒப்பு நோக்கத்தக்கது. **சொல்லாட்சித் திறனை விளக்கல் நலனாய்தலில்** ஒரு கூறாகும்[67].

## நடை

நடை என்பது கருத்தினை மொழியால் வெளிப்படுத்தும் ஊடகமாகும்[68] ஒருவன் எவ்வாறு சிந்திக்கின்றானோ உணர்கின்றானோ அவ்வாறு எழுதுகின்றான். சிந்தனையில் குழப்பமிருந்தால் எழுத்திலும் குழப்பமிருக்கும். அவனுடைய சிந்தனையில் தெளிவும் நுட்பமும் அமைந்திருக்கு

65. ஆறுமுகநாவலர், 1955, சைவசமயநெறி மூலமும் புத்துரையும், பக். 130 - 131
66. மேலது நூல், ப.131
67. தமிழண்ணல், 1985, உரை விளக்கம், ப. 156
68. சோசபு சுந்தரராசு, சூ., 1973, உரை நடைத் திறன், எழிலரசுப் பதிப்பகம், பாளையங் கோட்டை, ப. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானால் அவனுடைய எழுத்திலும் தெளிவும் நுட்பமும் காணப்படும் என்பர்[69] இவற்றுக்கு அடிப்படை சிறந்த கல்வி அறிவும் வாசிக்கும் திறனும் வெளிப்படுத்து மாற்றலுமாகும்.

நாவலரவர்கள் சிறந்த கல்விமான், பல்மொழிப் புலமைமிக்கவர், தலைசிறந்த பிரசாரகர், வெகுசனக் கோட்பாட்டில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தவர். எனவே நாவலரவர்களின் எழுத்துக்களில் நுட்பம் *(*Accuracy*)* எளிமை*(*Ease*)* நயம் *(*Grae*)*[70] சந்தம்*(*Rcythm*)* என்னும் பண்புகள் இயல்பாகச் காணக்கூடியவை[71]. நாவலரவர்கள் பொதுமக் களை மனங் கொண்டு இத்தகைய ஒழுங்குகளை கைக்கொண்டு எழுதி யமையினாலே புதிய உரை நடையை நாவலர்களால் தமிழ் உலகிற்கு அளிக்க முடிந்தது. இதனாலே தான் நாவலரவர்கள் உரைநடையின் தந்தையாக வும், உரைநடை கைவந்த வல்லாளர் ஆகவும் வரலாற்று ஆசிரியர்களால் போற்றப்பட்டார். அத்துடன் அமையாது நாவலரவர்க ளின் காலத்தை உரைநடை வளர்ச்சிக் காலம் என்று சிறப்பித்துக் குறிப்பிடுவர் வரலாற்று இலக்கிய ஆசிரியர்கள்[72].

நாவலரவர்களின் உரைநடையைப் பலரும் பலவாறு பகுத்து ஆராய்வார்கள். அவ்வாறு பகுத்து ஆராய்வதற்கு ஆசிரியர், காலம், நோக்கம், கருத்து (Theme) இடம், மக்கள் (Audience) முதலான அம்சங்கள் பிரதான காரணங்களாக அமைகின்றன[73]. உரை நடையில் காணப்படும் கருத்துக்களுக்கும் பண்புகளுக்கும் ஏற்றவாறு உரை நடையினை *(1)* வருணனை நடை (Descriptive Prose) விளக்க உரைநடை (Explanatory Prose) உணர்ச்சி உரைநடை (Emotive Prose) என்னும் மூவகையில் அடக்கலாம் என்பர்[74]. நாவலரவர்களது உரை நடையில் விளக்க உரைநடையையும் உணர்ச்சி உரைநடையையும் மிகுதியாகக் காணலாம். ஒவ்வொன்றும் மேலும் பல்வேறு உரைநடைப் பண்புகளைக் கொண்டு விளங்கும். நாவலரவர்கள் கையாண்ட உரை நடை வகைகளைப் பேராசிரியர் வி.செல்வநாயகம் அவர்கள் பழைய செந் தமிழ் நடை, வடமொழிப் பதங்கள் கலந்த நீண்ட வாக்கியங்களைக்

---

69. மேலது நூல், பக். 10 - 11
70. சுந்தரமூர்த்தி, இ., 1974, நடையியல் சிந்தனைகள், நியூசெஞ்சரி புக் ஹவுஸ் பிறைவேட் லிமிட்டட், சென்னை, ப. 15
71. சோசபு சுந்தரராசு, சூ., 1973, உரைநடைத்திறன், ப. 8
72. செல்வநாயகம், வி. 1957, தமிழ் உரைநடை வரலாறு, ப. 96
73. சுந்தரமூர்த்தி, இ., 1974, நடையியல் சிந்தனை, ப. 15
74. சோசபு சுந்தரராசு, சூ., 1973, உரைநடைத்திறன், ப. 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட நடை(3) சிறுசிறுவாக்கியங்களைக் கொண்ட இலகுவான நடை எனப் பாகுபாடுசெய்வார்[75]. இத்தகைய பகுப்பு முறைமை விளக்க உரைநடை என்னும் பாகுபாட்டினுள் அடங்கும்.

நாவலரவர்கள் சில இடங்களில் முன்னை உரை யாசிரியர் கையாண்ட (செந்தமிழ்) நடையைப் பின்பற்றித் தனது நடையை வளர்த்துச் செல்வார். திருமுருகாற்றுப்படை, சைவசமயநெறி ஆகிய அவரது உரைநூல்களில் நாவலரவர்கள் கையாண்ட உரை நடையை இதற் கோர் உதாரண மாகக் குறிப்பிடலாம். சைவசமய நெறியில் நாவலர வர்கள் கையாண்ட உரைநடை பல திறத்தனவாய் அமைந்த பொழுதும் அவற் றினுள் ஒன்றாகச் செய்யுள் நடை காணப்படுகின்றது. ஒருவகை யில் இந்நடை களவியல் உரைநடையினை நினைவு கூருவதாக அமை கின்றது. இந்நூலில் உள்ள உரைநடையில் ஓசைப் பண்புகள் இடையி டையே விட்டிசைத்து நிற்குமாறு சொற்கள் தொடுக்கப் பெற்று வாக்கியம் நீண்டு செல்கின்றது. உரைநடைக்கு இன்றியமையாது வேண்டற் பாலதாகிய தெளிவு, தருக்க முறையாகக் கட்டுரைத்தல் முதலிய பண்புகள் இவ்வுரை நடையில் வருகின்றன[76]. எனக் களவியல் உரையின் சிறப்பினைக் குறிப்பிடுவர். நாவலரவர்களின் உரை நூல்களிலும் இத்தகைய பண்புகளை நோக்கலாம். இதற்கோர் உதாரணம் வருமாறு[77]

''வீட்டினிருந்து செபிக்கின் ஓருரு ஓருருவேயாம்; பசுக்கோட் டத்தினிருந்து செபிக்கின் ஒன்று நூறாகும்; திருநந்தனவனத்திலி ருந்து செபிக்கின் ஒன்று ஆயிரமாகும்; பருவதத்தின் மேலிருந்து செபிக்கின் ஒன்று பதினாயிரமாகும்; நதிக்கரையினிலிருந்து செபிக்கின் ஒன்று கோடியாகும்; சிவசந்நிதியினியிருந்து செபிக்கின் ஒன்று அநந்தமாகும். மரப்பலகை, வஸ்திரம் கம்பளம் மான்றோல், புலித்தோல், தருப்பை என்னும் ஆசன ங்களுள் இயன்ற தொன்றிலே முழந்தாளிரண்டையும் மடக்கிக் காலோடு காலையடக்கி இடத்தொடையினுள்ளே வலப்புறக் காலை வைத்து இரண்டு கண்களும் நாசி நுனியைப் பொருந்த இருந்து கொண்டு செபிக்குக. சட்டையிட்டுக் கொண்டும், சிரசில் வேட்டி கட்டிக் கொண்டும் போர்த்துக் கொண்டும்,

---

75. ★ செல்வநாயகம், வி., 1957, தமிழ் உரை நடை வரலாறு, பக். 100 - 101
★ வை. கனகரத்தினம், எம்.ஏ. நுஃமான் முதலானோர்களும் ஆறுமுக நாவலரின் உரைநடை பற்றி ஆராய்ந்துள்ளனர். பார்க்க உசாத்துணை நூல்கள்

76. செல்வநாயகம், வி, 1957, தமிழ் உரை நடை வரலாறு, ப.

77. ஆறுமுகநாவலர், 1955, சைவசமயநெறி மூலமும் புத்துரையும், ப. 146

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌபீனந் தரியாதும்,விரலிலே பவித்திரந் தரியாதும், பேசிக் கொண்டும், இருளிலிருந்து கொண்டும், நாய் கழுதை பன்றி முதலியவற்றையும் புலையர் முதலானோரையும் பார்த்துக் கொண்டும் செபிக்கலாகாது. செபஞ் செய்யும் போது கோபம், களிப்பு, கொட்டாவி, தும்மல் நித்திரை, சோம்பல் வாதம் முதலியவை ஆகாவாம்''

பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்கள், ''களவியல் உரை நடையை மனங் கொண்டு, இவ்வுரைப்பகுதியின் கண் இடையிடையே எதுகை மோனை முதலிய ஓசைப் பண்புகள் வாய்ந்த சொற்றொடர்கள் வந்துள்ளன. அவற்றைப் பொருளறிந்து படிக்கும் போது செய்யுளொன்றைப் படிக்கும் நேரத்தில் எம்மிடத்தில் உண்டாகும் உணர்ச்சி எத்தகையதோ அத்தகையதோர் உணர்ச்சி எம்மனத்தில் எழுகின்றது; அவ்வுரைப் பகுதியைத் தொடர்ந்து படிக்கும் போது, நாம் பாட்டைப் படிக்கின்றோம் என்ற எண்ணம் நீங்க, உரை நடைப் பகுதி ஒன்றினையே படிக்கின்றோம் என்ற எண்ணம் எம்மனத்தில் எழுகின்றது. சுருங்கச் சொல்லின் உரையும் பாட்டும் கலந்து வருகின்ற நடையே இத்தகைய உரைநடை யெனலாம்''[78] என்பார். இக் கூற்றினை மேற்கூறிய நாவலரவர்களின் உரைப் பகுதியுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, பெரிதும் ஒத்த தன்மையுடையதாக அமைகின்றது எனலாம். மேற்கூறிய உரைநடைப் பகுதியிலே சொற்கள் தம்முன்னே ஓசையும் தொடையும் ஒன்றுபட்டும் வேறுபட்டும் ஒலித்தும் பொருள் முடிவு பெற்றும் செல்லுமாற்றுக்கு இயைய வெவ்வேறு தொடர்புகளாகப் பிரித்து அமைப்பதாயின்[79] பின்வருமாறு அமைக்கலாம்.

வீட்டினிருந்து செபிக்கின்
    ஓருரு ஓருருவேயாம்
பசுக் கோட்டத்தினிருந்து செபிக்கின்
    ஒன்று நூறாகும்
திருநந்தன வனத்திலிருந்து செபிக்கின்
    ஒன்று ஆயிரமாகும்
பருவதத்தின் மேலிருந்து செபிக்கின்
    ஒன்று பதினாயிரமாகும்
நதிக்கரையினிருந்து செபிக்கின்
    ஒன்று இலக்ஷமாகும்

---

78. செல்வநாயகம், 1957, தமிழ் உரைநடை வரலாறு, பக். 23 - 24
79. மேலது நூல், ப. 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாலயத் தினிருந்து செபிக்கின்
ஒன்று கோடியாம்
சிவசந்நிதி யினிருந்து செபிக்கின்
ஒன்று அநந்தமாகும்

மரப்பலகை வஸ்திரம் கம்பளம்
மான்றோல் புலித்தோல் தருப்பை
என்னும் ஆசனங்களுள்
இயன்ற தொன்றிலே முழந்தாழிளிரண்டையும்-மடக்கி
காலொடு காலையடக்கி
இடைத் தொடையினுள்ளே வலப்புறக்காலை வைத்து
இரண்டு கண்களும் நாசிநுனியைப் பொருந்த
இருந்து கொண்டு செபிக்குக.

சண்டை யிட்டுக் கொண்டும்
சிரசில் வேட்டி கட்டிக் கொண்டும்
போர்த்துக் கொண்டும்
குடுமியை விரித்துக் கொண்டும்
இருளில் இருந்து கொண்டும்
நாய் கழுதை பன்றி முதலிய வற்றையும்
புலையர் முதலாயினோரையும்
பார்த்துக் கொண்டும்
செபிக்கலாகாது. செபஞ் செய்யும் போது
கோபம் கொட்டாவி தும்மல்
நித்திரை சோம்பல் வாதம்
முதலியவை ஆகாவாம்.

எனவே நாவலரவர்கள் உரைநெறியின் முக்கிய அம்சமாக விளங்கும் உரைநடைப் பாங்கினை சிறப்பான முறையில் இந்நூலில் கையாண்டு சொல்லின் கருத்தினையும் அதன் வெளிப்பாட்டையும் எளிமைப்படுத்தியதோடு, படிப்போரை அதனுள் ஆழ்த்தியும் மீண்டும் படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை வளர்த்தும் விடுகின்றார். நடை ஆசிரியருடைய உள்ளத்தின் சொல்லோவியம் என்றும் குணத்தை அறியுங்கலை என்றும்[80] கூறுவது நாவலரவர்களுடைய நடைத்திறனைப்

---

*80. சுந்தரமூர்த்தி, இ., 1994, நடையியல் சிந்தனை, ப.14*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்தமட்டிலும் பொருத்தமுடைய கூற்றென்றே கொள்ளல் வேண்டும்.

மற்றும், உரை நெறிகளுள் அடங்கும் மேற்கோள் காட்டி விளக்கல் பல்துறைப்புலமையை வெளிப்படுத்தல் என்பவற்றையும் நாவலரவர்கள் உரை நெறிகளாக் கொண்டார். இவற்றுள் **மேற்கோள் காட்டி விளக்கல்** என்னும் உரை நெறி இயல் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. பல்துறைப்புலமையை வெளிப்படுத்தல் என்னும் உரை நெறி குறிப்பாக இயலில் மூன்றிலும் ஆராயப்பட்டுள்ளது. அவற்றை அவ்வவ்வியல்களில் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - 06

## பரிமேலழகரும் நாவலரும் - ஓர் ஒப்புநோக்கு

நாவலரவர்கள் தமிழ்மொழி வளர்ச்சியையும் சைவசமய நிலைபேற்றையும் கருத்திற் கொண்டு வாழ்ந்தவர். சைவசமய நிலைபேற்றுக்குச் சைவ ஒழுகலாறுகளைத் தக்கவாறு சைவசமயிகள் உணர்ந்து கடைப் பிடிக்க வேண்டுமென்று கருதினார். இதனால் தமிழில் எழுந்த அறநூல்களைப் பதிப்பிக்கவும் அவற்றுள் சிலவற்றுக்கு உரை எழுதவும் முற்பட்டார். தமிழில் எழுந்த அறநூல்களில் தலையாய திருக்குறளைப் பதிப்பித்து (1861) வெளியிட்டார். திருக்குறளுக்கு உரை எழுதிய ஆசிரியர்களுள் மணக்குடவர், பரிப்பெருமாள், காலிங்கர், பரிதியார், பரிமேலழகர் ஆகியோர் பழம் உரையாசிரியர்கள். இவ்வுரையாசிரியர் உரைகளுள் பரிமேலழகரின் உரையையே நாவலரவர்கள் பதிப்பித்தார். ஏனைய உரைகளில் காணப்படாத கருத்துத் தெளிவும் தெளிந்த புலமையும் ஒப்பியல் நோக்கும் தருமசாத்திர கருத்துக்களின் செல்வாக்கும் இவ்வுரையில் காணப்பட்டதினால் நாவலரவர்கள் இந்நூலைப் பதிப்பித்தார் எனலாம்.

திருக்குறளும் பரிமேலழகர் உரையும் பொதுவாகத் தமிழ் மக்களின் ஒழுகலாறுகளை வற்புறுத்துவனவேயன்றி அவை சைவ சமயிகளின் சமய ஒழுகலாறுகளை வற்புறுத்துவனவாய் இல்லை. இந்நிலையில் திருக்குறளைப் போன்று குறள் வெண்பாவினால் ஆக்கப் பெற்றுச் சைவசமயிகளின் ஒழுகலாறுகளையும் அதன் பயனையும் வற்புறுத்தும் சைவசமய நெறிக்கு நாவலரவர்கள் உரை எழுத முயன்றார். இஃதோர் தற்செயல் நிகழ்ச்சி அன்று. அவ்வாறு நாவலரவர்கள் உரையெழுதும் பொழுது பரமேலழகர் மேற்கொண்ட உரைநெறிகளை நன்கு மனங் கொண்டு எழுதினார் எனலாம்.

திருக்குறள் 1330 குறள் வெண்பாக்களால் ஆயது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பெரும் பிரிவுகளை உள்ளடக்கியது 'ஒவ்வொரு பாலும் பல இயல்களாகவும் ஒவ்வொரு இயலும் பல அதிகாரங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் அறத்துப்பால்-பாயிரம்(4) இல்லறவியல் (20) துறவறவியல்(13) ஊழியல்(1) என்னும் நான்கு இயல்புகளையும் பொருட்பால் அரசியல் (20) அங்கவியல்(32) ஒழிபியல்(13) ஆகிய மூன்று இயல்களையும் காமத்துப்பால் களவியல்(7) கற்பியல்(18) என்னும் இரு இயல்களையும் கொண்டுள்ளது.

சைவசமய நெறி 727 குறள் வெண்பாக்களால் ஆனது. பாயிரம்,(26) ஆசாரியரிலக்கணம்(91), மாணாக்கரிலக்கணம்(38) பொதுவிலக்கணம் (572) என்னும் நான்கு பிரிவுகளை உடையது. நூலின் பொருள் மரபு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றே மாறுபட்டாலும் உரைநெறி பெரிதும் ஒத்த தன்மை வாய்ந்ததாகவே காணப்படுகின்றது.

பரிமேலழகர் மேற்கொண்ட உரைநெறிகளான உரைப்பாயிரம் கூறல், அதிகாரத்தோற்றுவாய் கூறல், அதிகார அடைவு கூறல் முதலான நெறிகள் சைவசமய நெறியில் நாவலரவர்களால் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை எனலாம். பரிமேழகர் குறிப்பிடும் இயல் விளக்கம், நாவலரவர்கள் கூறும் அதிகார வைப்பு முறைக்கு ஒப்பானதாகும். இவ்வதிகார வைப்பு முறைத்தன்மை முன்னைய உரைநெறிகளுடன் சற்று இயைபுத் தன்மை உடையதென்பது உரை நெறி அறிந்தோர் அறிவர். நாவலரவர்கள் காட்டும் அதிகார வைப்பு முறைமை அவற்றின் இயைபுத் தன்மை மூலம்

(1) தீக்ஷை, பிரதிட்டை செய்வதற்கு அதிகாரிகள் ஆசாரியர்களே.

(2) மாணவரின் பக்குவநிலை யறிந்து ஆசாரியார் தீக்ஷை வழங்கல் வேண்டும்.

(3) சரியை, கிரியை நெறிகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் அபரமுத்தி, பரமுத்தி ஆகிய முத்திகளைப் பெறலாம்.

என்னும் இவ்விளக்கத்தைப் பெற முடிகின்றது.[1]

மேலும், பரிமேலழகர் தமது உரைநெறியினைச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்னும் உத்தியைக் கடைப்பிடித்துக் கச்சிதமாக உரையினை முடிப்பார். நாவலரவர்களிடத்தில் இப்பண்புகள் காணப்பட்ட பொழுதும் சைவசமய நெறியினை, ஒழுகலாற்றை முழுமையாகப் புலப்படுத்த வேண்டும் என்னும் பேரவாவினால் விளக்கமுறை திறனாய் வாகவே அமைந்து விடுகின்றது. பின்வரும் குறள்பாக்களுக்கு நாவலரவர்கள் பரந்த அளவில் விளக்கவுரை செய்துள்ளார்.

| அதிகரணம் | எண் கு.வி.[2] |
|---|---|
| ஆசாரியரிலக்கணம் | *(5), (20), (21), 37,39,40, (59), (62), (66)* |
| மாணாக்கரிலக்கணம் | *(7), (8), (9), 22, 30* |
| பொது விலக்கணம் | *(3), 20, (24), (74), 130, (134), 143, 206, 217, 231, 241, 251, 257, 261, (370), (392), (412), (432) (435), (443), (446), 461, 467, (500), (544), (553), (557), 561* |

1. ஆறுமுகநாவலர், 1955, சைவசமயநெறி
   1. மூலமும் புத்துரையும், ப.

2. கு.வி - குறள் விளக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாக உரையாசிரியர்கள் மூலநூல் ஆசிரியரிடம் குறை காண்பதில்லை. கருத்து மாறுபட நூலாசிரியர் கூறினும் அவற்றை உரை யாசிரியர் மறுப்பதில்லை. பெரியோர் நூலில் பிழை சொல்ல அஞ்சுவது தமிழ் நெஞ்சத்தின் பண்பு என்பர்.[3] ஆதலால் மூல நூலாசிரியர்களிடம் உரையாசிரியர்கள் அளவற்ற மதிப்பு வைத்திருந்தனர்.

''வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூல் ஆகும்''

என்ற கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.[4] பரிமேலழகர் முன்னையோர்கள் போல் மூல நூல் ஆசிரியரான தெய்வப்புலவர் திருவள்ளுவரில் எந்த குறையும் கண்டதில்லை. ''திருக்குறளைப் போன்ற ஒரு சீரிய நூல் திருக்குறளுக்கு முன்னும் தோன்றியதில்லை. இனிமேலும் தோன்றப் போவதில்லை''[5] என்னும் கூற்று பரிமேலழகருக் கும் பொருந்தும். பரிமேலழகரை உலகிற்கு அளித்த பெருமை வள்ளுவ ருக்குண்டு. ஆயினும் தம் காலத்தும் அதற்கு முற்பட்ட காலத்தும் உரை நூல்களைக் கற்று, தம் கருத்தோடு மாறுபட்ட கருத்துக்களை காரணங் காட்டி, நாகரிகமாக மறுத்துரைத்ததோடு, தம்முரையோடு உடன்பாடு கொள்ளும் உரைகளைத் தம்முரையோடு பொருத்திக் காட்டுவார்[6]. பரிமேலழகர் அறத்துப்பாலில் 29 இடங்களிலும் பொருட்பாலில் 75 இடங்களிலும் காமத்துப்பாலில் 26 இடங்களிலும் பிறர் உரைகளைச் சுட்டிக் காட்டுவார்[7].

நாவலரவர்கள் மூலநூல் ஆசிரியர் கருத்துக்களைப் பொன்போல் போற்றும் முன்னையோர் மரபினின்றும் சற்று வேறுபட்டவராகவே காணப்படுகின்றார். ஏற்கனவே சுட்டிக்காட்டியது போல்[8] ''இந்நூலாசி ரியர் பின்னைய மூன்றையும் ஆகுமெனக் கொண்டு, முன்னையவற்றைத் தை, மாசி, சித்திரையோடு சேர்த்து தகாவென விலக்கியது ஆகமபேதத் தாலென்றுனர்க, என உணர்வு நவிற்சியோடு குறிப்பிடுவது அவதானிக் கத் தக்கதாகும். பிரிக்க முடியாத இவ்விரு இயல்புகளுமே சைவசமய நெறி உரையின் சிறப்பிற்கு முக்கிய காரணங்கள் எனலாம். பரிமேலழகர் திருக் குறள் உரையில் எவ்வகை உரைநெறிகளைப் பயன்படுத்தி வெற்றி கண்டாரோ நாவலரவர்களும் அத்தகைய உரைநெறிகளைப் பெரிதும் பின் பற்றி வெற்றி கண்டுள்ளார்.

3. அரவிந்தன், வை.மு., உரையாசிரியர்கள், 1968, ப.62
4. மேலது நூல், ப.62
5. கழக வெளியீடு, 1970, சிறப்புப்பெயரகராதி, பக். 315
6. சுந்தரமூர்த்தி,இ., 1985, பரிமேலழகர் உரைத்திறன், ப.
7. மேலது நூல், .
8. பார்க்க நூலினுள், ப. 81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமேலழகர் கையாண்ட உரைப்பாயிரம், இயல் விளக்கம் அதிகாரத்தோற்றுவாய் முதலான உரைநெறிகளை நாவலரவர்கள் கையாள முடியாமைக்கு இருநூல்களின் அமைப்புமுறையே காரணமாக அமைந்த பொழுதும், நாவலரவர்கள் மேற்கோள் காட்டல், உறுப்புநெறிப்படுத்தல், வைப்பு முறை காட்டல், சொல்வருவித்தல், பிறப்புக்கிளவி காட்டல், கலைச் சொல் தருதல். இலக்கணம் உரைத்தல், அகராதிப் பொருள் தருதல், உரைமறுத்தல், உவமை காட்டல், இலக்கணம் உரைத்தல், நயம் விளம்பல் முதலான உரைநெறிகளைப் பரிமேலழகர்போல எடுத்தாண்டு சைவசமயநெறியினை ஒரு சைவசமயக் கலைக்களஞ்சியமாக மாற்றிச் சைவ உலகிற்கு அளித்ததோடு, சைவத் தமிழ் இலக்கியப் பரப்பை வளம்படுத்தினார் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் - 07

## நாவலரின் உரை- ஒரு மதிப்பீடு

திறனாய்வின் தோற்றம் பற்றிக் கூறவந்த இ.சுந்தரமூர்த்தி அவர்கள் ''கலையின் பழமையைப் போல அதைப்பற்றிய திறனாய்வும் பழமை யானது. இலக்கியத்தைப் பொறுத்த வரையில் பாடல் அல்லது கவிதை தோன்றியதுமே அதனைக் கேட்போர் சுவைக்கும் இயல்பிலேயே திறனாய்வு தோற்றம் பெறுகின்றது எனினும் வெளிப்படையாக வளர்ந்து செழித்த நிலையில் இலக்கியத்தைச் சுவைப்பதற்கென அறிஞர்கள் சில நெறிமுறைகளை வகுத்துக் கொண்டனர். இந்நெறி முறைகள் பிற துறைப் புலமையால் மேலும் ஊட்டமும் உரனும் பெற்றுத் திறனாய்வுக் கலையை உருவாக்கின''[1] என்பார்.

திறனாய்வு என்பதனைப் பலரும் பலவாறு விளக்க முற்படுவர். அவற்றுள் சிலவற்றை இங்கு நோக்கலாம்.

★ பல்வகை வண்ணமாக விரிந்து கிடக்கும் இலக்கிய உலகைக் கண்டு கொள்ளத் தொடங்கும் ஓர் இலக்கியப் பயணமே இலக்கியத் திறனாய்வு[2] என்பார் சிலர்

★ ஓர் இலக்கியப் படைப்பின் கண் பொதிந்துள்ள இலக்கியச் சிறப்புக்களை யெல்லாம் கலை நுணுக்கத்தின் உதவியால் வெளிப்படுத்தப்படுவதே சிறந்த திறனாய்வாகும்''. என்பர் வேறுசிலர்.[3]

★ ''கலைப்படைப்புகளை விளக்கித் தெளிவாக்குதலும் அழகுணர்வைச் செம்மைப்படுத்தலுமே திறனாய்வின் பணி'' என்பர் இன்னும் சிலர்[4]

இத்தகைய திறனாய்வு முறைகளில் நின்று பல திறனாய்வு முறைகள் பிறந்துள்ளன. அதற்கு நுகர்வோர் தொகையும் தகுதியும் திறனாய்வாளரின் நோக்கமும் சார்பும் எனப் பல்வேறு காரணங்களைக் குறிப்பிடுவர்.[5] படைப்பு வழித் திறனாய்வு, மரபுவழித் திறனாய்வு, மதிப்பீட்டுத் திறனாய்வு, வரலாற்றுமுறைத் திறனாய்வு, மூலபாடத் திறனாய்வு, வாழ்க்கை வரலாற்று வழித் திறனாய்வு, ஒப்பீட்டு முறைத் திறனாய்வு, அமைப்பியல் திறனாய்வு, அறிவியல் திறனாய்வு, உளவியல்

1. சுந்தரமூர்த்தி, கு., 1985, பரிமேலழகர் உரைத்திறன், ப. 159
2. பாலசந்திரன், சு., 1992, இலக்கியத் திறனாய்வு, நியூ செஞ்சரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டட், ப. 11
3. சுந்தரமூர்த்தி, இ., 1985, பரிமேலழகர் திருக்குறள் உரைத்திறன், ப. 159
4. கைலாசபதி, க.,
5. சுந்தரமூர்த்தி, இ., 1985, பரிமேலழகர் திருக்குறள் உரைத்திறன், ப. 159

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனாய்வு, சமுதாயவியல் திறனாய்வு, நடையியல் திறனாய்வு, மாக்சியத் திறனாய்வு, வகைநிலைத் திறனாய்வு, அலசல் முறைத் திறனாய்வு, விதிக் கோட்பாட்டுமுறைத் திறனாய்வு, அபிப்பிராய முறைத் திறனாய்வு, செய்முறைத் திறனாய்வு முதலான திறனாய்வுகள், அவ்வகையில் தோன்றியுள்ளன.[6]

அவற்றுள் விதி **முறைத் திறனாய்வு** ஏனைய திறனாய்வுகளைக் காட்டிலும் காலத்தால் முற்பட்டது. இத்திறனாய்வு சில விதிமுறைகளை வகுத்துக் கொடுத்து இவ்விதிமுறைப்படியே இலக்கியம் செய்ய வேண்டுமெனப் படைப்போனை வற்புறுத்துவது[7]. ஒரு வகையில் விதித்தல் வாய்பாடு இவ்வகைத் திறனாய்வினை எளிதில் புலப்படுத்தும்[8]

**கொள்கைவழித் திறனாய்வு** என்பது இலக்கியத்தின் தன்மைக் கூறுகள் படைப்பு முறை என்பன பற்றிய கொள்கைகளை வகுத்துக் கொண்டு அவற்றின் அடிப்படையில் ஒரு படைப்பைத் திறனாய்வு செய்வது[9] இலக்கியத்தில் எழில், இலக்கிய இன்பம் என மனத்தளவால் சார்த்தி உணரப்படும் முரு கியல் இன்பநுகர்ச்சியே இவ்வகைத் திறனாய்வுக்கு அடிப்படை யாகும்.

**விளக்கமுறைத் திறனாய்வு** என்பது நுகர்வோரை நோக்கிப் படைப்பின் சிறப்பியல்புகளை எல்லாம் அவர்தம் கொள்ளுந் திறனுக் கேற்ப விளக்கி உரைத்துச் சுவைக்கச் செய்வது[10] சிலர் ஒரு குறிப்பிட்ட நூலை எடுத்துக் கொண்டு அதை இயற்றிய ஆசிரியர் பற்றியும் அவருடைய படைப்புக்களில் அமைந்துள்ள பலப்பல கூறுகளைப் பற்றியும் விளக்கிச் சொல்லும் முறையில் அமைந்ததே விளக்கமுறைத் திறனாய்வாகும் என்பர்[11]. நுகர்வோரை நோக்குவதும் படைப்பைச் சுவைத்து இன்புறுவதற்குத் துணைநிற்பதும் இத்திறனாய்வு வகையின் அடிப்படையாகும். இன்று இலக்கிய உலகில் அதிகமாகப் பின்பற்றப்படும் ஆராய்ச்சி முறை இதுவேயாகும்.

இலக்கியத்திறனாய்வு செய்வதற்குச் சில அடிப்படைத்தகுதிகளும் வரன் முறைகளும் இருக்க வேண்டும் என்றும் அப்பொழுது தான் தரமான இலக்கியத் திறனாய்வினை வழங்க முடியுமெனவும் கருதப்படுகின்றது. அவற்றுள் சிலவற்றை இங்கு நோக்கலாம்.

---

6. பார்க்க, நடராசா, தி.சு., திறனாய்வுக் கொள்கைகள், (1990) பாலச்சந்திரன், சு., இலக்கியத் திறனாய்வு (1992)
7. சுந்தரமூர்த்தி, இ., 1985, பரிமேலழகர் திருக்குறள் உரைத்திறன், ப. 160
8. மேலது நூல், ப. 160
9. பாலச்சந்திரன், சு., இலக்கியத் திறனாய்வு, பக்.33-34
10. சுந்தரமூர்த்தி, 1985, பரிமேலழகர் திருக்குறள் உரைத்திறன் ப. 160
11. பாலச்சந்திரன், சு., 1992, இலக்கியத் திறனாய்வு, பக். 33-34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க) திறனாய்வாளர் பரந்துபட்ட வாழ்க்கை அனுபவம் உடையராத லோடு நூல்களைக் கற்றறிந்தவராகவும் புலமை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(கா) ஒரு மொழி நூல்களில் மட்டுமின்றிப் பலமொழி நூல்களையும் கற்று வல்லவராக இருத்தல் வேண்டும்.

(கி) பயில்வோருக்கு மயக்கத்தை உண்டு பண்ணக் கூடிய சிக்கலான பகுதிகள் நூலில் இருப்பின் அவற்றை வெளிப்படுத்திக் காட்டி மூலநூல் ஆசிரியரின் நோக்கத்தை நன்கு புரிய வைக்க வேண்டும்.

(கீ) தன்படைப்பின் மூலம் நூலாசிரியர் எதைச் சாதிக்க விரும்பியுள் ளார் என்பதைக் கண்டு கொள்வதிலேயே கவனம் செலுத்த வேண்டும்.

(கு) பல்வகையாகப் பெருகிக் கிடக்கும் ஆசிரியரது அநுபவப் பெருக் கானது பொங்கித் ததும்பி எழும் ஒரு நூலில் சில சொற்களையோ ஒரு சில வரிகளையோ மற்றவர்களுக்குக் கோடிட்டுக் காட்ட வேண்டும்.

(கூ) நூலுக்குரிய உண்மைத் தகுதியை மதிப்பீடு செய்து மற்றவர்கள் உணர்ந்து கொள்ளும்படி செய்ய வேண்டும்.

(கெ) திறனாய்வால் நூற்பொருள் தெளிவுபெற்றுப் படிப்போரின் உள் ளத்தே இலக்கிய இன்பம் விளைய,நூலின் பயனை விளக்கமுறச் செய்ய வேண்டும்[13].

இத்திறனாய்வு நெறிகளை மனங் கொள்ளும் பொழுது தமிழ் நூல் உரையாசிரியர்கள் நல்ல நூல்களைத் தேர்ந்து, படிப்போருக்கு நூற்பொரு ளும் பயனும் விளங்குமாறு திறனாய்வு செய்துள்ளனர் எனலாம். உரையாசிரியர்களின் பணியினை மதிப்பீடு செய்ய முயறன்றோர் இந் நெறியில் தமிழ் உரையாசிரியர்கள் நல்ல நூல்களைத் தேர்ந்து பயில்வோ ருக்கு நூலின் பொருளும் இன்பமும் விளங்குமாறு திறனாய்வுப் பணியி னைச் செய்தனர்[14]. இவ்வகையில் உரையாசிரியர்கள் தோன்ற வில்லையா னால் பழந்தமிழ் நூல்களின் போக்கை உணரவும், பொருளைத் துய்க் கவும் பெரிதும் இடர் ஏற்பட்டிருக்கக்கூடும் [15] என்று குறிப்பிவது அவதா னிக்கத்தக்கதாகும்.

மேற் கூறிய திறனாய்வு பற்றிய தன்மைகளும் வரன்முறைகளும் நாவலரவர்களின் உரைகளில் எவ்வளவிற்கு பொருந்தி உள்ளன என் பதை நோக்கலாம்.

---

13. பார்க்க, பாலசந்திரன்,சு., 1990, இலக்கியத் திறனாய்வு, படராசன், தி.சு., 1990, திறனாய்வுக் கொள்கைகள்.
14. சுந்தர மூர்த்தி, இ., பரிமேலழகர் திருக்குறள் உரைத்திறன், ப. 162
15. மேலது நூல், ப. 163

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(க) திறனாய்வாளர் வாழ்க்கை அனுபவமும் பரந்துபட்ட பல நூல்களைக் கற்றறிந்தவராகவும் புலமை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

நாவலரவர்கள் சைவசமயநெறி, திருமுருகாற்றுப்படை, திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதி, கோயிற் புராணம், மருதூரந்தாதி முதலான நூல்களுக்கு உரை எழுதியமை தற்செயல் நிகழ்ச்சி அன்று. நாவலரவர்களது தமிழ் மொழிப்பற்றும் சமய வாழ்வும் சமய ஞானமுமே காரணம் எனலாம். நாவலரவர்கள் தனது சமய வாழ்க்கை அநுபவத்தை சிறப்பான முறையில் சைவசமய நெறி உரையில் பல இடங்களில் எடுத்துக்காட்டியுள்ளார். அவ்வுரைக்கு அவரது ஞானமும் பெரிதும் துணைநின்றது. எடுத்துக்காட்டாக உருத்திராக்ஷந்தரிக்கும் முறைமை பற்றி நாவலர வர்களது. கருத்துரையை இங்கு நோக்கலாம்.

''உருத்திராக்ஷமாலையைத் தலையிலும் மார்பினும் திண்மை கொண்ட புயங்களினும் திரண்ட கைகளிலும் அதற்குச் சொல்லிய மந்திரங் கொண்டு தரி''

என்னும் குறளுரையில்[16] வரும் நாவலரவர்கள் கூற்று நாவலரவர்கள் அநுபவித்த வாழ்க்கை அநுபவ உரையாகும்.

சிகையிலும் சிரசிலும் காதுகளிற் றற்புருட மந்திரத்தினாலும், கழுத்தில் அகோர மந்திரத்திரத்தினாலும், மார்பில் வியோமவியாபினி மந்திரத்தினாலும், புயங்களிலும் கைகளிலும் பிராசாத மந்திரத்தினாலும் தரிக்க. சயனத்தினும், மலசலமோசனத்தினும், புணர்ச்சியினும், நோயினும், சனனாசௌச மரணாசௌசங்களினும், உருத்திராக்ஷ தாரணங்கூடாது. சிகையினுங் காதுகளினும் உபவீதத்தினும் எப்போதும் உருத்திராக்ஷங் தரித்துக் கொள்ளலாம்[17].

என மந்திர உபாசனையுடன் உருத்திராக்கம் தரிக்க வேண்டிய இடங்களையும் அதனைத் தரிப்பது தவிர்கப்பட வேண்டிய சூழ்நிலைகளையும் சிறப்பான முறையில் எடுத்துக்காட்டுவார். நாவலரவர்கள் தனது அனுபவத்தினாலும் சமயநூல் அறிவினாலும் தனது சமயஞானத்தினாலும் பெற்ற வாழ்க்கை அநுபவத்தை எடுத்துக்காட்டுவர்.

நாவலரவர்கள் தாம் எடுத்துக் கொண்ட ஆய்வு நூல்களைத் தவிரச் சங்க நூல்கள், நீதிநூல்கள், சைவசித்தாந்த நூல்கள், இலக்கணநூல்கள், திருமுறைகள், ஆகமங்கள், வடமொழி நூல்கள், புராணங்கள் முதலான 38 நூல்களிலிருந்தும் குறிப்பாக சைவசமய நெறியில் 29 நூல்களிலிருந்

16. மேலது நூல், ப. 138 17. மேலது நூல், பக். 138 - 139

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும் மேற்கோள் காட்டியிருப்பதால் நாவலரவர்கள் வட மொழி தமிழ் இலக்கியங்களில் பெற்றிருந்த பரந்த ஆழ்ந்த புலமையையும் பயிற்சியை யும் இங்கு நினைவு கூறதக்கதாகும். இதனை மேல்வரும் அடைவின் மூலம் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.[18]

| எண் | நூல்கள் | தொகை | மேற்கோள்கள் |
|---|---|---|---|
| 1 | சங்கநூல்கள் | 03 | 04 |
| 2 | சித்தாந்த நூல்கள் | 05 | 11 |
| 3 | இலக்கணநூல்கள் | 03 | 13 |
| 4 | திருமுறைகள் | 05 | 12 |
| 5 | ஆகமநூல்கள் | 04 | 05 |
| 6 | வடமொழிகள் | 12 | 13 |
| 7 | புராணங்கள் | 04 | 07 |
| 8 | பிறநூல்கள் | 03 | 06 |
| | | 29 | 70 |

எனவே திறனாய்வாளருக்கு வேண்டிய வாழ்க்கை அனுபவம் பரந்துபட்ட, பல்வகை நூல்கள் பற்றிய புலமை தனி நூல்களில் ஆழ்ந்த புலமை ஆகியவற்றை உரையாசிரியர் நாவலரவர்கள் பெற்று விளங்கி னார் என்பது நன்கு புலனாகின்றது.

(கா)திறனாய்வுக்குரிய நூலினை நன்கு வாசித்து குறை நிறைக ளைக் காட்டும் திறமை திறனாய்வாளருக்கு இருக்க வேண்டும்[19]. நாவலரவர்களுக்கு முன்பிருந்த உரையாசிரியர்களான பரிமேலழகர், நச்சினார்க்கினியர் முதலானோர்கள் பால் மூலநூல் ஆசிரியர்களிடம் குறை காணும் நோக்கம் இருக்கவில்லை. அவர்கள் வழிவந்த நாவலரவர் களும் முன்னையோரைப் பொன்போல் போற்றி, உரை செய்த போதும் மூலநூல் ஆசிரியரின் கருத்துக்கு எதிர்மறையான முறையில் பொருள் விளக்கம் செய்யும் வகையால் நாவலரவர்கள் முன்னைய உரையாசி ரியர்களை விடச் சற்று வேறுபட்டவராகக் காணப்படுகின்றார். எடுத்துக் காட்டாகக் கூறின் ''வெண்கலம் முதலியவற்றினாலே செய்யப்பட்ட பாத்திரங்கள் விரதத்துக்குப் போசனபாத்திரங்களாகாவென்று உரை செய்த நாவலரவர்கள், இந்நோக்கினை விரித்துரைக்கையில் புற்று மட்கலம் சிவாகமங்களில் ஆகுமென்றும், சில சிவாகமங்களில்

18. பார்க்க, பக். 35-36
19. பார்க்க, சச்சிதானந்தம், வை.1983, மேலை இலக்கியச் சொல் அகராதி, மக்கலன் இந்தியன் பிரஸ், பக். 55-59

ஆ) பாலச்சந்திரன், சு, 1992., இலக்கியத் திறனாய்வு, ப. 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாதென்றுஞ் சொல்லப்படும்[20] எனக் குறிப்பிடுவதன் மூலம் வாசகர் மத்தியில் ஆய்வு மனப்பாங்கினை வளர்த்து விடுகின்றார். "குற்றமான வற்றையும் இரண்டாந்தரமானவற்றையும் கடிந்தொதுக்கும் பணி திறனாய்வாளனின் முதற்பணி அன்று" என்ற கூற்று இங்கு நினைவு கூரத் தக்கதாகும்.

(கி) கலை நுணுக்கத்தில் புதைந்து கிடக்கும் கூறுகளை யெல்லாம் வெளிப்படுத்தல் திறனாய்வாளரின் பணியாகும்.

நாவலரவர்களின் உரைகளில் இவ்வம்சம் அமைந்தவாற்றை நோக்கலாம். சிவாகமங்கள் படிக்கப்பட வேண்டிய முறைகளுக்கும் படிக்கலா காத நாட்களுக்கும் (340-345) உரை கூற வந்த நாவலரவர்கள் சிவாகமங்களை சனனமரணா செளசங்களிலும் சிவபெருமான் உற்சவ நிமித்தம் புறப்படுங்காங்களிலும் சைவாகமங்களைப்படியாதே[21] எனப் பின்வரும் குறளுக்கு உரை கூறினார்.

"உற்பத்தி நாசமெனு மாசெளசத் துஞ்சிவன்ற
னுற்சவத்தி னும்மியலோ தேல்"

(பொ.இ.கு. 346)

மேற்கூறிய உரையோடு நாவலரவர்கள் நின்றுவிடாது உற்சவத்தின் நிமித்தம் ஏன் ஓதக் கூடாதென்பதற்கு நாவலரவர்கள் பல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் பின்வருமாறு கலாவிமர்சனம் செய்வார்[22]

**"மகோற்சவநாள் பத்தினுள் முதனாள், இரண்டாம் நாள் விழாத் தூல சூக்கும நீக்குதற்பொருட்டும், மூன்றாம் நாள் விழா மூவினை யும் முப்பத்தியும் முக்குணமும் மும்மனமும் முக்குற்றமும் முப்பி றப்பும் முப்பற்றும் நீக்குதற் பொருட்டும், நாலாநாள் விழா நாற்கர ணமும் நால்வகைத் தோற்றமும் நீக்குதற் பொருட்டும் ஐந்தாநாள் விழா ஐம்பொறியும் ஐந்தவத்தையும் ஐந்து மலமும் நீக்குதற் பொருட்டும், ஆறாநாள் விழாக் காமாதியாறும் கலை யாதியாறும் வினைக்குணமாறும் பதமுத்தியாறும் நீக்குதற் பொரு ட்டும், ஏழாம் நாள் விழா ஏழு வகைப்பிறப்பும் கலாதிகளேழும் மாயாமல குணமேழும் நீக்குதற் பொருட்டும், எட்டாம் நாள் விழா எண்குணமும் விளக்குதற் பொருட்டும், ஒன்பதாநாள் விழா மூன் றுருவும் முத்தொழிலும் மூன்றிடத்துறைதலும் இலையெனற் பொருட்டும், பத்தாநாள் விழாப் பரானந்தமாக் கடலில் அழுத் துதற் பொருட்டுஞ் செய்யப்படுதலால் சிவோற்சவகாலத்துப் படிக்கலாகா தென்றார்".**

20. ஆறுமுகநாவலர், 1955, சைவசமயநெறி மூலமும் புத்துரையும், ப. 50
21. மேலது நூல், ப. 221 22. பார்க்க. இயல், 4,5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுரை ஓசைச் சிறப்பும் தருக்கமும், தத்துவமும், நுட்பமும் நிறைந்த கலாவிமர்சனம் எனலாம். இதைப்போன்ற கலைநுட்பம் வாய்ந்த உரையினைத் திருமுருகாற்றுப்படை உரையிலும் காணலாம்.

## ஒப்பீடு

திறனாய்வாளன் தான் திறனாய்வுக்கு எடுத்துக் கொண்ட நூலின் பொருளைச் சிறப்பித்து விளக்குதற்பொருட்டுப் பிறநூல்களுடன் ஒப்புநோக்கிக் காட்டுவது இயல்பு' நாவலரவர்கள் முப்பத்தைந்துக்கு மேற்பட்ட நூல்களைத் தமது உரைகளின் பொழுது ஒப்புநோக்குவ தற்காக எடுத்தாண்டுள்ளார். சைவசமய நெறி உரையில் மாத்திரம் இருபது நூல்களை ஒப்பு நோக்கிற்காக எடுத்தாண்டுள்ளார். தமிழ் நூல்களோடு அமையாது வடமொழியில் அமைந்த ஆகம நூல்களையும் தருமசாத்திர நூல்களையும் ஒப்புநோக்கிற்காகப் பயன்படுத்தி உள்ளார். இவ்வகையில் நூல்களின் கருத்துக்களை விளக்குதற்பொருட்டு ஒப்பு நோக்கிக் காட்டும் தன்மையினால் நாவலரவர்கள் ஒப்பாய்வில் சிறந்து விளங்குகின்றார். இவ்வாய்வு நூலில் பல இடங்களில் இவ்வொப்பு நோக்கு ஆராயப்பட்டுள்ளது.

உண்மையில் நாவலரவர்களின் உரைத்திறனுக்கு அவரது நுண் மாண் நுழைபுலம் ஒரு காரணமாக அமைந்த போதிலும், நாவலரவர்கள் உரை நூல்களில் காட்டிய ஆர்வமும் உரையாசிரியர்களில் கொண்ட ஈடுபாடும் பிறிதொரு வகையில் முக்கியத்துவம் பெறுகின்ற தெனலாம். குறிப்பாகப் பரிமேலழகர், நச்சினார்க்கினியர் ஆகிய உரையாசிரியர் மீது கொண்டிருந்த ஈடுபாட்டினை இங்கு குறிப்பிடலாம். ஏற்கனவே இந்நூ லில் குறிப்பிட்டிருப் பது. போல[23] நாவலரவர்கள் சைவசமய நெறிக்கு உரையெழுத முயன்றமைக்கு நாவலரவர்களது சமய நோக்கே அடிப் படைக் காரணமாக அமைந்தாலும், அதற்கு மேலாக அவர் திருக்குறளி லும் பரிமேலழகர் உரையிலும் கொண்ட ஈடுபாடும் நாவலரவர்களது வித்துவமும் காரணமாக அமைந்தன எனலாம்.

நாவலரவர்கள் பத்துப்பாட்டிலும் அவற்றுக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையிலும், அவரின் புலமையிலும் கொண்ட ஈடுபாடு காரண மாகவும், நாவலரவர்களின் முருகபத்தி நிமித்தம் நாளாந்தம் பாராயணம் செய்யும் நூலாகத் திருமுருகாற்ப்படை அமைந்திருந்தமையாலும் குறள் போன்ற உரைச் சுருக்கம் உடையதாக இந்நூல் இருந்தமையாலும் நச்சினார்கினியர் உணர்த்தும் தத்துவங்கள் பல்லோராலும் உணர

23. பார்க்க. இயல் 4, பக். 45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாதிருப்பதை உணர்ந் தமையாலும் நாவலரவர்கள் திருமுருகாற்றுப் படைக்கு உரை எழுத முயன்றார்.[24] நாவலரவர்களுக்கும் நச்சினார்க்கினியருக்கும் சில உரைவேற் றுமைகள் காணப்பட்ட பொழுதும் ஒற்றுமைகளே மிகுதியாகக் காணக்கிடத்கின்றன. பரிமேலழகர், நச்சினார்க்கினியர், நாவலர் ஆகிய மூவருக்கும் இடையில் மேற்கோள் காட்டல், உறுப்பு நெறிப்படுத்தல், வைப்பு முறைகாட்டல், சொல்வருவித்தல், விதப்புக்கிளவி காட்டல், கலைச்சொல் தருதல், இலக்கணம் உரைத்தல், அகராதிப் பொருள் தரல், உரைமறுத்தல், நயம் விளம்பல், உவமை காட்டல் முதலான உரை நெறிகள் பொதுமையாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகையில் மூவரும் தம் புலமையை அடிப்படையாகக் கொண்டு பலதுறைகளை வளர்த்ததோடு, தமிழ் இலக்கியப் பரப்பை வளம்படுத் தினர் எனலாம்.

**உரைப்பெருமை**

சைவசமய நெறியில் ஆசாரியரிலக்கணம், தீக்ஷை, அத்துவசுத்தி, முதலானவற்றின் சிறப்பை ஆசாரியரிலக்கணப்பகுதியிலும்[25] தீக்ஷை, இசை, குங்குலியம் குருபன்னியை வழிபடுதல். சிவனடியார் வழிபாடு முதலானவற்றின் சிறப்பை மாணாக்கரிலக்கணப் பகுதியிலும்[26] சிவ பூசை, இலிங்க வழிபாடு, செபமாலை, செபம், வீபூதி, உருத்திராக்ஷம், நித்திரை விட் டெழுதல், மலமோசனம், நீராடல், போசனம், அந்தியேட்டி- ஆசாரிய வழிபாடு, மகோற்சிவம், திருமாலியம், துவாரபூசை, பரிவார தேவர் எண்ணெய்க் காப்பு, அபிஷேக திரவியம், நைவேத்தியம், உடையவரை எழுத்தருளப் பண்ணும் முறைமை முதலான விடயங்களைப் பொதுவிலக்கணப் பகுதியிலும் சிறப்பாக விளக்குவார்[27]. நாவலரவர்கள் இப்பகுதியில் இவ்விடயங்களை விளக்கும் திறன் நாவலரவர்கள் சமய தத்துவங்கள் பால் கொண்டிருந்த ஆழ்ந்த புலமையினைக் காண முடிகின்றது.

---

25. ஆறுமுக நாவலர், 1967, சைவசமயநெறி மூலமும் புத்துரையும்.
ஆசிரியலக்கணம், பக் 14-19, 20-25. தீக்ஷை 39-59, 60-65, அத்துவசுத்தி 64.
26. மாணவரிலக்கணம் , தீக்ஷை பக். 57-59, இசை,60. குங்குலியம், 61. குருபன்னி, 65-66. சிவனடியார் வழிபாடு, 67-68
27. பொதுவிலக்கணம், சிவபூசை, 108-109, 131-132, இலிங்க வழிபாடு, 112-113, 119, 120-121, செபமாலை 140-142, செபம் 142-146, வீபூதி 158 - 160, 163, 169, நித்திரை விட்டெழுதல், 172-173, உருத்திராக்ஷம் 133, போசனவிதி 186-201, அந்தியேட்டி, 174, மகோற்சவம் 221, திருமாலியம் 259-264, துவாரபூசை 258, 278 எண்ணெய்க்காப்பு 282, அபிஷேக திரவியம் 283-284, நைவேத்தியம் 292-296, உடையவரை எழுந்தருளப்பண்ணல் 299.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரவர்கள் எடுத்துக்காட்டும் புராணக்கதைகள், தத்துவ விளக்கம், மேற்கோள்கள் என்பன அவர் இவற்றில் கொண்டிருந்த புலமையைத் தெளிவுபடுத்துகின்றன.

யோகம் பற்றி நடைமுறை இயல்புகளை விளக்கிக் கூறுவதும், சோதிடம் பற்றி விரித்துக் கூறுவதும் உடற்கூற்று மருத்துவம் பற்றி நாவலரவர்கள் தரும் கருத்துக்களும் அவர் அத்துறைகளில் பெற்றிருந்த தனித்துவமான அறிவினை நன்கு விளக்கும்.

தமிழ் இசை பற்றி நன்கு ஆய்வுகள் மேற் கொள்ளப்படாத காலப் பகுதியில் நாவலரவர்கள் தொகுத்துத் தரும் இசை பற்றிய கருத்துக்கள் ஈழ நாட்டிலும் தமிழ் நாட்டிலும் தமிழ் மக்களிடத்தில் இசைமரபு வழியாகப் பேணப்பட்டு வந்ததென்ற உண்மையைப் புலப்படுத்து வதோடு தமிழ் இசைமரபில் நாவலரவர்கள் கொண்டிருந்த புலமையை யும் எடுத்துக்காட்டும். படிமவியல் பற்றி நாவலரவர்கள் குறிப்பிடும் கருத்துக்கள் அத்துறையில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டுக்கோர் எடுத்துக்காட்டாம்.

நாவலரவர்களின் உரைப் போக்கில் சில வரையறைக்குட்பட்ட நெறிகளை இவ்வாய்வில் காணலாம்.

பொருள் விளக்கத்துக்கு ஏற்பச் சொல்லையும் தொடரையும் தேவைப்படும் இடத்து அவாய் நிலையில் வருவித்துக் கொள்கின்றார். சைவசமயநெறி, திருமுருகாற்றுப்படை, மருதூரந்தாதி, திருச்செந்தினி நீரோட்டகயமக வந்தாதி முதலான நாவலரவர்களின் உரைநூல்களில் இதனை அவதானிக்கலாம்.

விதப்புக்கிளவியல் அல்லது தாற்பரியம் பெறும் சிறப்பை ஆத்தி சூடி, கொன்றைவேந்தன், நல்வழி, நன்னெறி முதலான நீதி நூல்களிலும் சைவசமயநெறி முதலான பிரபந்த நூல்களிலும் விளக்கிச் செல்வார். சொல்லுக்கு அரும்பொருள் காண்பதில், தருவதில் ஏனைய உரையாசி ரியர்கள் போல் முன்னிற்பார்.

எழுத்து இலக்கணப் புலமையை நாவலரவர்களது உரைநூல்களில் பரக்கக் காணலாம். யாப்பிலக் கண ஆளுமையை அவரது திருச் செந்தினி ரோட்டகயமக வந்தாதி முதற் செய்யுள் உரையிலும் கோயிற்புராண உரையிலும் காணலாம். சொல்லிலக்கணத்தில் வினைச் சொல்லில் எச்ச முடிவுகளை மிக நுணுக்கமாக முடித்துக் காட்டுவார். இதனைத் திருமுரு காற்றுப்படை, சைவசமய நெறி ஆகிய நூல்களில் மிகுதியாகக் காண லாம். வேற்றுமைத் தொகைகளை விரித்துக்காட்டியும் அது பொருள் கொள்ளும் முறையினை விளக்கிக்காட்டியும் செல்வது அவரது உரைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையாகும். சைவசமய நெறி, திருமுருகாற்றுப்படை ஆகிய உரைநூல்களில் இந்நெறியினைப் பரவக் காணலாம். இவை நாவலரவர்களின் இலக்கணப் புலமையை வெளிக் காட்டுவதோடு நாவலரவர்கள் சிறந்த உரையாசிரியர் என்பதற்கு எடுத்துக்காட்டுக்களாகவும் விளங்குகின்றன. அத்துடன் அருந்தொடர் நயம் காட்டல், உவமையை எடுத்துக்காட்டல், பிறர் உரையை மறுத்தல், ஏற்றல் ஆகிய இரண்டிலும் பொதுண்மை காணல், பாடபேதம் காட்டல், மேற்கோள் தரல், முன்னொடு பின் மலையாமை ஆகிய சிறப்பு நெறிகளை நாவலரவர்கள் பின்பற்றும் முறையினை இவ்வாய்வினை படிப்போர் பரக்கக் காணலாம்.

மரபுவழிப்பட்ட உரைநெறிகளை அடிப்படையாகக் கொண்டெழுந்த உரை நூல்களுக்கு இணையாகச் சொல்லும் வகையில் நாவலரவர்களால் சைவசமய நெறி, திருமுருகாற்றுப்படை, நன்னூல் ஆகிய நூல்களுக்கு எழுதிய உரையினைச் சிறப்பாகவும் மருதூரந்தாதி, திருச்செந்தினிரோட்டகயமக வந்தாதி, கோயிற்புராணம், வாக்குண்டாம், நல்வழி ஆகிய நூல்களுக்கு எழுதிய உரையினைப் பொதுவாகவும் குறிப்பிடலாம். மேலை நாட்டுத் திறனாய்வு முறைகளுக்கு ஈடாக நமது உரையாசிரியர் மேற் கொண்ட முயற்சிகளை ஒப்பிட்டு நோக்கலாமா என்ற வினா எழும் பொழுது எல்லாத் திறனாய்வு முறைகளையும் யாம் ஒப்பிட முடியாது விட்டாலும் விளக்க முறைத்திறனாய்வின் அடிப்படைக் கொள்கைகள் பெரிதும் பழைய உரையாசிரியர் மேற்கொண்ட உரைகளில் காணலாம். திருக்குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர் உரையில் இவ்வுரைநெறியினைக் காணலாம் என்பர்[28]. அவ்வகையில் நாவலரவர்களின் உரைத்திறனின் போக்கும் விளக்கமும் விளக்க முறைத் திறனாய்வுக்கு ஒப்பானதாக அமைந்து விடுகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிறந்த உரையாசிரியர்களுள் ஒருவர் நாவலரவர்கள். சரவணப் பெருமாள் ஐயர்[29] வேதகிரி முதலியார்[30] *(1795-1852)* சந்திரசேகர கவிராச பண்டிதர்[31] *(?-1883)* மாங்காடு வடிவேல்

---

28. சுந்தரமூர்த்தி, இ. 1985, பரிமேலழகர் திருக்குறள் உரைத்திறன், ப.219

29. நாலடியார், நன்னூல், திருவங்கைக்கோவை, திருவள்ளுவர் மாலை, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நறுந்தொகை, மூதுரை நன்னெறி, பரிமேலழகர் உரை விளக்கம் முதலான நூல்களுக்கு சரவணப்பெருமாள் ஐயர் உரை எழுதினர்.

30. சூடாமணி நிகண்டு 3தொகுதி திருக்குறள் நைடதம் ஆகியவற்றுக்கு உரையெழுதி உள்ளார்.

31. நன்னூல் விருத்தியுரை, யாப்பருங்கலக்காரிகையுரை, தண்டியலங் காரவுரை ஆகிய உரைநூல்களை இயற்றி உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியார்[32] கோமளம் இராசகோபாலப்பிள்ளை[33] சுப்பராயச் செட்டியார்[34](1894) பிரமபுரி திருவேங்கடபிள்ளை[35]அஷ்டாவதானம் சபாபதி முதலியார்[36] (-1886) காஞ்சிபுரம் சபாபதி முதலியார்[37](?-1870) தாண்டவராய முதலியார் மகுதண்ணராவுத்தர்[38] காதிரசனா மரைக்காயர்[39] வித்துவசிரோமணி ந.ச. பொன்னம்பலபிள்ளை, வல்வை வைத்திலிங்க பிள்ளை, சிவசம்புப்புலவர் முதலானோர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த உரையாசிரியர்கள். இவர்களுள் சரவணப் பெருமாள் ஐயரின் உரைப்பணியைச் சிறப்பாக விதந்துரைப்பர். அதற்கு உதாரணமாகத் திருவள்ளுவர் மாலைக்கு ஐயரவர்கள் எழுதிய உரைத்திறனை எடுத்துக் காட்டுவர். ஆயினும் அது ஒருபக்கச் சார்பான, சைவசமயம் சார்ந்து நின்று உரை கூறப்பட்டுள்ள உரையென கண்டனத்துக்குள்ளாகியது[40]. இருப்பினும் ஐயரவர்களின் உரைத்திறன் போற்றுதற்கு உரியது. நாவலரவர்கள் உரையெழுதியதற்கு எடுத்துக் கொண்ட நூல்கள் நீதி நூல்களாகவும், சைவசமயம் சார்ந்த நூல்களாகவும் இலக்கணம் சார்ந்த நூல்களாகவும் அமைந்த போதிலும் உரைவேற்றுமைகள், சமயக் காழ்ப்புகள் நாவலரவர்களின் உரைகளில் பெரிதும் காணப்படவில்லை என்றே கூறுதல் வேண்டும். நாவலரவர்களின் பரந்த நோக்கினையும் சமய காழ்ப்பற்ற தன்மையினையும் தமிழ்புலமை என்னும் கட்டுரையிலும் வில்லி புத்தூரர் பாரதப் பதிப்பிலும் காணலாம். ஒருவகையில் யாவற்றையும் ஒப்பிட்டு நோக்குமிடத்து, நாவலரவர்கள் பத்தொன்பதாம்

---

32. திருப்புகழ், ஒளவைகுறள், நெஞ்சறி விளக்கம், மாதான் சாகிப் பாடல்கள், சதாக அலங்காரம், பட்டிணத்தார் பாடல்கள் ஆகிய வற்றுக்கு உரை எழுதியுள்ளார்.
33. இவர் நாலடியார், நள வெண்பா, திருவாய்மொழி ஆகிய நூல்க ளுக்கு உரை கண்டுள்ளார்.
34. செட்டியார் பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம், கம்பரா மாயணம் அயோத்தியா காண்டம், காஞ்சிபுராணம், புலியூர் வெண்பா முதலான நூல்களுக்கு உரை எழுதி உள்ளார்.
35. இவர் நந்த மண்டல சதகத்துக்கு உரை எழுதி உள்ளார்.
36. முதலியார் கந்தரர் ஆனுபூதி, மீனாட்சி பிள்ளைத்தமிழ் ஆகிய நூல்களுக்கு உரையெழுதி உள்ளார்.
37. பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் ஆகியவற்கு உரையெழுதி உள்ளார். புராணம் ஆகிய வற்றுக்கு இவர் உரை கண்டுள்ளார்.
38. சூடா மணி நிகண்டுக்கு உரை கண்டுள்ளார். (1870)
39. விவேக சிந்தாமணிக்கு (1896) உரை இயற்றியுள்ளார்.
40. மரைக்காயர் சீறாப்புராணத்துக்கு உரை எழுதி உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டில் தலைமைத்துவம் வாய்ந்த சிறந்த உரையாசிரியராக விளங்கினார் எனலாம். உரையாசிரியர்கள் பற்றிக் கூறவந்த மு.வை. அரவிந்தன்,

**''யாழ்ப்பாணத்து நல்லூரில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய ஆறுமுகநாவலர் செந்தமிழ்ப் பயிர் வளர்க்கும் சிறந்த ஆசிரியராய் - சைவ சமயத்தின் காவலராய்ப் பழைய நூல்களு க்கு உரையெழுதும் நல்ல உரையாசிரியராய் உரைநடை நூல் வரையும் வித்தகராய் விளங்கியதோடு சிறந்த பதிப்பு ஆசிரியரா கவும் தொண்டாற்றினார்''**

எனக் குறிப்பிடுவதும்[41] இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும்.

இலக்கியப் பணியைச் செய்வதில் திறனாய்வாளன் ஆசானாக நின்று ஆணையிடுவதை விட விளக்கச் சுடராய் நின்று வழிகாட்டுவதே சிறந்த முறை[42] எனக் கருதுவது போன்று நாவலரவர்களும் சைவசமய நெறி, திருமுருகாற்றப்படை, திருச் செந்தினிரோட்டகயமக வந்தாதி, மருதூரந்தாதி, கோயிற்புராணம், வாக்குண்டாம், நன்னெறி, நல்வழி முதலான நூல்களுக்குச் சிறந்த உரை எழுதினார். அவ்வகையில் தமிழ் மொழியும் பண்பாடும் வளம்பெற வழி காட்டியாக எக்காலமும் நிற்பார் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இவ்வுரைகள் எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தால் போல் விளங்குவது சைவசமய நெறி உரையாகும். நாவலரவர்களின் புலமையின் தனித்துவமும் அதன் உயர் எல்லையும் இவ்வுரையினூடாகவே தான் புலப்படுகின்றது. நாவலரவர்கள் தமிழ் - உலகிற்கும் சொல்ல வந்த கருத்துக்கள், சிறப்பாகச் சைவ உலகத்திற்குச் சொல்ல வந்த கருத்துக்கள் பலவற்றையும் இந்நூலினூடாகவே சொல்லியுள்ளார் என்று குறிப்பிடலாம். பொதுவான நாவலரவர்கள் உரை எழுதிய மேற்கூறிய நூல் பலவும் பதவுரையாகவும் மொழிப்புரையாகவும் அமைய சைவசமய நெறியுரையே அகலவுரையின் தனிச் சிறப்பெனலாம் இவ்வகையில் தமிழ் இலக்கியப் பரப்பில் இந்நூல் தனியான இடத்தைப் பெறுவதோடு ஈழத்து இலக்கிய வரலாற்றிலும் காத்திரமான, முதன்மையான இடத்தைப் பெறும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. நாவலரவர்களின் இத்தகைய நிலையான உயரிய பங்களிப்பு, தமிழ் மொழியும் அதன் பண்பாடும் வளம்பெற உரமூட்டி நிற்கும்.

---

*41. அரவிந்தன், வை. 1968, உரையாசிரியர்கள், ப. 538*

*42. மேலது நூல் பக். 598*

*43. சுந்தர மூர்த்தி, 1985 பரிமேலழகர் திருக்குறள் உரைத்திறன் பக்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு - 01 நாவலர் எடுத்தாண்ட நூல்கள்

| பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|
| **சங்க இலக்கியம்** | | | |
| **புறநானூறு -01** | | | |
| 1. நிலமிசை வாழ்க நலமர நீரத்<br>தொறுகதிர்க் கனலி வெம்மை தாங்கிக்<br>காலுண வாகச் சுடரொடு கொட்டு<br>மவிர்சடை முனிவரு மருள | புற.நா.செ 43:1-4 | திரு.மு.ப. வரி. 107 | பொ.வி |
| **காப்பியம்** | | | |
| **சீவகசிந்தாமணி - 02** | | | |
| 2. ''வரையகன் மார்பிடை வரியமூன்றுளவே'' | சீவ.சி.மணி மணி 1462 | திரு.மு.ப வரி 105 | பொ.வி |
| **குறள்: 03** | | | |
| 3. ''இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு<br>நல்லாற்றி னின்ற துணை'' | திரு. கு | திரு.மு.ப வரி - 1 | கொ.வி |
| 4. ''நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்<br>குற்றமு மாங்கே தரும்'' | திரு. கு | திரு.மு.ப வரி - 250 | கொ.வி |
| 5. ''ஏந்திழையார் தன்சயனற் தெய்தித்தன் மெய் தொடினுங்<br>காய்ந்து வர்த்த லேதுறவு காண்'' | திரு. கு | சை.ஆ.இ. கு. 37 | பொ.வி |

**சுருக்கவிளக்கம்**

பொ.வி : பொருள் விளக்கம் இ.வி : இலக்கண விளக்கம் சொ. வி : சொல் விளக்கம்

★நச்சரும் நாவலரும் எடுத்தாண்ட மேற்கோள் #நாவலரெடுத்தாண்ட மேற்கோள் திரு. மு.: முருகாற்றுப்படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | நாவலர் எடுத்தாண்ட பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|---|
| | **திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் - 04** | | | |
| 6. | ''நிலைபெறுமா றெண்ணுதியே னெஞ்சே நீவா<br>நித்தலு மெம்பிரானுடைய கோயில் புக்குப்<br>புலர்வதன்மு னலகிட்டு மெழுக்கு மிட்டுப்<br>பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்<br>தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்<br>சங்கரா சயபோற்றி போற்றி யென்று<br>மலை புனல் சேர் செஞ்சடையெம் மாதீ யென்று<br>மாரூராவென் றென்றே யலறா நில்லே'' | திரு.மு. 6<br>பதி. 312 | சை.மா.இ<br>கு. 9 | பொ.வி |
| 7. | ''பெரும்புலர் காலைமூழ்கிப் பித்தற்குப் பத்தராகி<br>யரும்பெரும் மலர்கள் கொண்டாங் கார்வத்தை யுள்ளே வைத்து<br>விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினா லிடவல்லார்க்குக்<br>கரும்பினிற் கட்டிபோல்வார் கடவூர்வீ ரட்டனாரே'' | திரு.மு. 4<br>பதி. 307 | சை.மா.இ<br>கு. 9 | பொ.வி |
| 8. | ''விளக்கினார் பெற்றவின்ப மெழுகினாற் பதிற்றி யாகுந்<br>துளக்கினன் மலர்தொடுத்தாற் தூயவிண் ணேறலாகும்<br>விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ந்நெறி ஞானமாகு<br>மளப்பில கீதஞ் சொன்னார்க் கடிகடா மருளுமாறே'' | திரு.மு.4<br>பதி. 343 | சை.மா.இ<br>கு. 9 | பொ.வி |

திரு. மு. பதி : திருமுறை, பதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|---|
| 9. | பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றி செய்யு<br>மென்னாவி காப்பதற் கிச்சையுண்டே யிருங்கூற் றகல<br>மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவு கொண்ட<br>நுன்னார் கடந்தையு டுங்கானை மாடச் சுடர்க் கொழுந்தே | திரு.மு.4<br>பதி. 1028 | சை.இ.பொ<br>கு. 195 | பொ.வி |
| 10. | கடவுந் திகிரி கடவா தொழியக் கயிலை யுற்றான்<br>படவுந் திருவிர லொன்றுவைத் தாய்பனி மால்வரையி<br>லிடபம் பொறித்தென்னை யேன்று கொள் ளாயிருஞ் சோலை திங்கள்<br>தடவுங் கடந்தையுட் டுங்கானை மாடத் தெந்தத்துவனே | திரு.மு.4<br>பதி 1030 | ,, | பொ.வி |
| 11. | "திருக்கோயி லில்லாத திருவி லூருந்<br>திருவெண்ணீ றணியாத திருவி லூரும்<br>பருக் கோடிப் பத்திமையாற் பாடா வூரும்<br>பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்<br>விருப்போடு வெண்சங்க மூதா வூரும்<br>விதானமும் வெண்கொடியு மில்லா வூரு<br>மருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்<br>மவையெல்லா மூரல்ல வடவி காடே" | திரு.மு. 6<br>பதி. 933 | சை.பொ.<br>இ.கு 130 | பொ.வி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாடல் | | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|---|
| 12. | ''திருநாம மஞ்செழுத்துஞ் செப்பா ராகிற்<br>நீவண்ணர் திறமொருகாற் பேச ராகி<br>லொருகாலுந் திருக்கோயில் சூழா ராகி<br>லுண்பதன் முன் மலர்பறித்திட் டுண்ணா ராககி<br>லருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகி<br>லளியற்றார் பிறந்தா தோ வென்னிற்<br>பெருநோய்கண் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்<br>பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே'' | திரு.மு.6<br>பதி. 934 | ,, | பொ.வி |
| 13 | இறுமாந் திருப்பன் கொலோ வீசன் பல் கணத் தெண்ணப்பட்டுச்<br>சிறு மானேந்திதன் சேவடிக் கீழ்ச் சென்றங் கிறுமாந் திருப்பன் கொலோ | திரு.மு.4<br>பதி. 92 | திரு.மு.ப<br>வரி. 62-64 | பொ.வி |
| 14. | எண்ணுகே னென் சொல்லி யெண்ணு கேனோ<br>வெம் பெருமான் றிருவடியே யெண்ணி னல்லாற்<br>கண்ணிலேன் மற்றோர் களைக ணில்லேன்<br>கழலடியே கைதொழுது காணி னல்லா<br>லொண்ணுளே யொன்பது வாயில் வைத்தா<br>யொக்க வடைக்கும்போ துணர மாட்டேன்<br>புண்ணியனே யுன்னடிக்கே போது கின்றேன்<br>பூம்புகலூர் மேவிய புண்ணியனே | திரு.மு.6<br>பதி. 97 | திரு.மு.ப.<br>வரி. 62-64 | பொ.வி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|---|
| | **திருவாசகம்:- 05** | | | |
| 15 | உற்ற வாக்கையி னுறு பொரு<br>ணறுமல ரெழுதரு நாற்றம் போல<br>பற்ற லாவதோர் நிலையிலாப்<br>பரம் பொரு ளப்பொருள் பாராதே<br>பெற்ற வாபெற்ற பயனது<br>நுகர்ந்திடும் பித்தர் சொற் றெளியாமே<br>யத்த னாண்டுதன் னடியரிற்<br>கூட்டிய வதிசயங் கண்டாமே | திரு.வா<br>அதி.பத்து.9 | திரு.மு.ப<br>வரி | பொ.வி |
| 16 | தென்பா லுகந்தாடுந் தில்லைச் சிற்றம்பலவன்<br>பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ<br>பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்<br>விண்பா லியோ கெய்தி வீடுவர்காண் சாழலோ | திரு.வா<br>திரு.சாழல்.9 | திரு.மு.ப<br>வரி. 101-102 | பொ.வி |
| | **திருமந்திரம் - 06** | | | |
| 17. | வேதமொ டாகம மெய்யா மிறைவனூ<br>லோதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக<br>நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்<br>பேதம தென்னிற் பெரியோர்க கபேதமே | திரு.ம.ச<br>8:2357 | வச.ஆ.இ<br>கு. 21 | பொ.வி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|
| **கந்தரலங்காரம் - 07** | | | |
| 18. உதித்தாங் குழல் வதுங் சாவதுக் தீர்த்தெனை யுன்னி லொன்றா<br>விதித்தாண் டருடருங் காலமுண் டோவேற்பு நட்டுரக<br>பதித்தாம்பு வாங்கிநின் றம்பரம் பம்பரம் பட்டுழல<br>மதித்தான் றிருமரு காமயி லேறிய மாணிக்கமே | கந்.அல செ. 39 | திரு.மு.ப வரி.293-294 | பொ.வி |
| **திருவள்ளுவர்மாலை - 08** | | | |
| 19. பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புநத<br>மாவிற் கருமுனியா யானைக் - கமரரும்ப<br>றேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே<br>பாவிற்கு வள்ளுவர்வெண்பா | திரு.வ. மாலை.செ.36 | திரு.மு.ப வரி. 18 | பொ.வி |
| **புராணங்கள் - 09** | | | |
| **கந்தபுராணம் : அ** | | | |
| 20. "இருவரு முணரா வண்ண லேனவெண் ளெயிறி யாமை<br>சிரநிரை யனந்த கோடி திளைத்திடு முரத்திற் சீர்கொள்<br>கரதல மொன்று சேர்த்தி மோனமுத் திரையைக் காட்டி<br>யொரு கணஞ் செயலொன் றின்றி யோகு செய் வாறி லுற்றான்" | கந். உற்.மே ப. செ. 12 | திரு.மு.ப. வரி. 112 | பொ.வி |

கந். அல. கந்தரலங்காரம்

கந். உற். மே. ப. : கந்தபுராணம் உற்பத்திக் காண்டம் மேருப்படலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|---|
| | **பெரியபுராணம் - 10** | | | |
| 21. | ஆரமென்பு புனைந்தவையர்த மன்ப ரென்பதோர்<br>நேர வந்தவர் யாவராயினு நித்தமாகிய பத்திமுன்<br>கூரவந்தெதிர் கொண்டுகைகள் குவித்து நின்று செவிப்புலத்<br>தீரமென்பது ரப்பதம்பரி வெய்த முன்னுரை செய்த பின் | தில்லை.அந் சரு.செ. 442 | சை.பொ.இ கு. 268 | பொ.வி |
| 22. | கொண்டுவந்து மனைப்புகுந்து குலாவுபாதம் விளக்கியே<br>மண்டுகாதலி னாதனத்திடை வைத்திருச்சனை செய்தபி<br>னுண்டிநாலு விதத்திலாறு சுவைத்திறத்தன வொப்பிலா<br>வண்டர்நாயகர் தொண்டரிச்சையி னமுது செய்ய வளித்துளார். | தில்லை.அந் சரு.செ. 4443 | சை.பொ.இ கு. 268 | பொ.வி |
| | **அருணகிரிபுராணம் - 11** | | | |
| 23. | வழியிடை நடக்கும்போது மலரினைக் கொய்யும் போதும்<br>விழுமியர்க் கீயும்போது முத்தர வினையின் கண்ணு<br>மெழுதிடும் போதும் வாய்மை யியலினை யிதழின் கண்ணே<br>யழகுறு மரசர் பாற்சென் றடைந்தமர்ந் திருக்கும் போதும் | அரு.புரா செ. | சை.மா.இ கு. 30 | பொ.வி |
| 24. | புனலிடை மூழ்கும் போது நியதியைப் புரியும் போது<br>மனவினை யோம்பும் போது மருச்சனை செய்யும் போது<br>மனையிடை யருந்தும் போது மலசல மாற்றும் போது<br>பனவரைக் குரவார் தம்மைப் பதம் பணி வதுபாங் கன்றே | அரு.புரா செ. | சை.மா.இ கு. 30 | பொ.வி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|---|
| 25. | தேசிகன் றன்னைத் தேவர் திருவடி தன்னை யீச<br>னேசரைச் சந்திதோறும் நிருமலன் றனையரச் சிக்கும்<br>பூசுரர் தம்மைத் தந்தை தாய்தமைப் பணியும் போது<br>காசினைக் களைவார் நீட்டல் வடங்கினுங் கிழங்குங்காலே | திரு.தொ.ப<br>செ. | சை.க.<br>காப்பு.செ | பொ.வி |
| | **திருத்தொண்டர் புராண சாரம் - 12** | | | |
| 26. | தொண்டாடி தொழல்பூசைத் தொழின் மகிழ்த லழகார்<br>துளங்கியவர்சச் சனைபுரித றொகுதி நியமங்கள்<br>கொண்ட பணி திருவடிக்கே கொடுத்த லீசன்<br>குணமருவு மருங்கதையைக் குலவிக் கேட்டு<br>மண்டிவிழி துளும்பன்மயிர் சிறும்ப லுன்னன்<br>மருவுதிருப் பணிகாட்டி வருவ வாங்கு<br>யுண்டிகொளா தொழிதலென விவையோ ரெட்டு<br>முடையரவர் பத்தரென வுரைத்து னாரே<br><br>''ஊனக்கண் பாச முணரா துயிர்க்குயிரை - ஞானக்<br>கண்ணா லுனதுன் ணாடு'' | அரு.புரா<br>அரு.புரா | சை.மா.இ | பொ.வி |
| | **சைவ சமய ஒழுக்க நெறி - 13**<br>**உருத்திராக்க வசிட்டம்** | | | |
| 27. | வத்திரத்தினாலே மறைக்க வலக்கரத்தின்<br>வைத்த செப மாலைதனை வாய்க்கவர - மெய்த் தலையிற்<br>பாத மலர் வைத்தாண்ட பண்டிதன்றான் பார்த்திடினுந்<br>சேதப் படுஞ் செய் செபம் | உரு. வசி<br>செ. 75 | சை.பொ.இ<br>கு. 149 | பொ.வி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|---|
| | **நித்திய கரும நெறி - 14** | | | |
| 28. | ''ஈரத்துகிலுடுத்துச் செய்கரும நிட்பலமே<br>வாரியின்மூழ் கிற்சுசியா வர்'' | நி.க. நெறி<br>கு. 95 | சை.பொ.<br>இ.கு. 54 | பொ.வி |
| 29. | ''காய்த்தோர் கோவணங் கைக் கொண்டு தரித்திடுக<br>காய்ந்தக லிங் கத்திணையு மே'' | நி.க. நெறி<br>கு. 96 | சை.பொ.<br>இ.கு. 54 | பொ.வி |
| | **சைவ சிந்தாந்த நூல்கள் - 15** | | | |
| 30. | ஞானத்தால் வீடொன்றே நான் மறைகள் புராண<br>நல்லவாக மஞ்சொல் வல்லவா மென்னு<br>மூனத்தா ரென்கடவ ரஞ்ஞானத்தா லுறுவது தான்<br>பந்த முயர் மெஞ்ஞா னந்தா<br>னானத்தா லதுபோவ தலர்கதிர் முன்னிருள் போ<br>லஞ்ஞான மறப்பந்த மறு முத்தி யாகு<br>மீனத்தார் ஞானங்க ளெல்லா ஞான<br>மிறைனடி ஞானமே ஞான மென்பர் | சிவ.ஞா.சித்தி<br>சூத். 279 | திரு. மு. ப<br>வரி | பொ.வி |
| 31. | தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்விக்க டஞ்சொ லாற்றின்<br>வந்திடா விடிலு றுக்கி வளாரினா லடித்துத் தீய<br>பந்தமு மிடுவ ரெல்லாம் பார்த்திடிற் பரிவே யாகு<br>மிந்தநீர் முறைமை யன்றோ வீசனார் முனிவு மென்றும் | சிவ.ஞா.சித்தி<br>யார்.ஆக் . 70 | திரு. மு. ப<br>வரி. 98-100 | பொ.வி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|---|
| 32. | போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் பரித லோரார்<br>யோகியா யோக முத்தி யுதவுத லதுவு மோரார்<br>வேகியா னாற்போற் செய்த வினையினை வீட்ட லோர்ரா<br>ரூகியா மூட ரெல்லா மும்பரி னொருவ னென்பர் | சிவ.ஞா.சித்தி யார். ஆக். 106 | திரு. மு. ப வரி. 98-100 | பொ.வி |
| | **சிவப்பிரகாசம் - 16** | | | |
| 33. | கிரியை யென மருவுமவை யாவு ஞானங்<br>கிடைத்தந்கு நிமித்தமெனக் கிளக்கு முண்மைச்<br>சரியை கிரி யாயோகத் தன்மை யோர்க்குச்<br>சாலோக சாமீப சாரூப பங்கண்<br>மருவியிடு முயர்ஞான மிரண்டா மாறா<br>மலமகல வகலாத மன்னு போதத்<br>திருவருளோன் றொன்றதனைத் தெளிய வோதுஞ<br>சிவாகமமென் றுலகறியச் செப்பு நூலே | சிவப்பிரகாசம் செய். 11 | திரு. மு. ப வரி 62-64 | பொ.வி |
| | **சங்கற்ப நிராகரணம் - 17** | | | |
| 34. | "சிவனெனவே தேசிகனை யன்பரையுஞ் சிந்தி<br>யவனையிவ ராக நினை யல்" | செ.ச.நி.கு. 40 | சை.மா.இ. கு. 17 | பொ.வி |
| 35. | "சிவனெனவே தேவரையுஞ் சிந்தி சிவனை<br>யவரெனக் கண் டார்நிரயத் தார்" | செ.ச.நி.கு. 41 | சை.மா.இ. கு. 17 | பொ.வி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|---|
| 36. | ''அரைய னெனக் காண்ப ரமைச்சை யமைச்சா<br>வரையனைக் கண்டாற்றுயர மாம்'' | செ.ச.நி.கு. 43 | சை.மா.இ.<br>கு. 17 | பொ.வி |
| 37. | ஞால நீதியு நான்மறை நீதியும்<br>பாலருன் மத்தர் பிசாசி லெனவு''<br>முறங்கி னோன்கை வெறும்பாக் கெனவுந்<br>தானே தவிரா தானாற் புரியா<br>தொழிந்திடி னிரயத் தழுந்து றிடமே | ----- | சை.மா.இ.<br>கு. 05 | பொ.வி |
| | **பதிபசுபாசப்பறுவல் - 18** | | | |
| 38. | ''உள்ளேவல் செய்வாளைக் காந்தன் மிகவுகப்ப<br>னுள்ளே செய் பூசை யுகந்து'' | பத்.ப.பா.பனு<br>வல்.போ.<br>இயல். 6 : 25 | சை.மா.இ.<br>கு. 128 | பொ.வி |
| 39. | ''அல்லாக் கைக் கில்லை யருவருப்பு மில்லை<br>கொலையுமிலை யுட்பூசை கூடு'' | மேலது நூல்<br>இயல். 6 : 25 | சை.மா.இ.<br>கு. 128 | பொ.வி |
| 40. | ''ஊனக்கண் பாச முணரா துயிர்க்குயிரை - ஞானக்<br>கண்ணா லுனதுன ணாடு'' | மேலது நூல்<br>இயல். 6 : 25 | சை.மா.இ.<br>கு. 128 | பொ.வி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|
| **இலக்கண நூல்கள்**<br>**சிவ ஞான முத்தியார் -19**<br>*41.* தாவி னல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்<br>சூத ரேத்திய துயிலெடை நிலையுங்<br>கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு<br>மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்<br>பெற்ற பெருவளம் பெறா அர்க் கறிடுவுறீ இச்<br>சென்றுபய னெதிரச் சொன்ன பக்க முஞ்<br>சிறந்த நாளணிச் செற்ற நீக்கிப்<br>பிறந்த நாள்வயிற் பெருமங் கலமும்<br>சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமு<br>நடைமிகுத் தேத்திய குடைநிழன் மரபு<br>மாணார்ச் சுட்டிய வாண்மங் கலமு<br>மன்னெயி லழித்த மண்ணுமங் கலமும்<br>பரிசில் கடை இரு கடைக் கூட்டு நியைம்<br>பெற்ற பின்னரும் பெருவள னேத்திய<br>நடை வயிற் றோன்று மிகைவகை விடையு<br>மச்சமு முவகையு மெச்ச மின்றி<br>நாளும் புள்ளும் பிறவற்றி னிமித்தமுங்<br>காலங் கண்ணிப் வோம்படை யுளப்பட<br>ஞாலத்து வரூஉ நடக்கையது குறிப்பிற்<br>கால மூன்றோடு கண்ணிய வருமே | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|
| தொல்காப்பியம் - 20 | | | |
| 42. கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற<br>வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்<br>கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே | தொ. கா.<br>சூத். 33 | திரு.மு.ப<br>நூ.விளக்கம் | |
| 43. செய்யா யென்னு முன்னிலை வினைச் சொற்<br>செய்யென் கிளவி யாகிட னுடைத்தே | தொ.கா.எ<br>சூத். 53 | திரு.மு.ப.<br>வரி. | இ .வி |
| 44. அகன்று பொருள் கிடப்பினு மணுகிய நிலையினு<br>மியன்று பொருண் முடியத் தந்தன ருணர்த்தன்<br>மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின் | தொ.கா.எ<br>சூத். 202 | திரு.மு.ப.<br>வரி. 77 | இ .வி |
| 45. இன்றி யென்னும் வினையெஞ் சிறிது<br>நின்ற விகர முகர மாத<br>றொன்றியன் மருங்கிற் செய்யுளுளரித்தே | தொ.கா.உ<br>சூத். 35 | திரு.மு.ப.<br>வரி. 77 | இ .வி |
| 46. அன்று வருகாலை யாவா குதலு<br>மைவரு காலை மெய்வரைந்து கெடுலுஞ்<br>செய்யுண் மருங்கினி னுரித்தென மொழிப | தொ.கா<br>சூத். 56 | திரு.மு.ப.<br>வரி .77 | இ .வி |

பதி.ப.பா.ப.போ : பதிபசுப்பாசப்பனுவல். போதவியல்-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|
| 47. ''பொன்னென் கிளவி யீறுகெட முறையின்<br>முன்னர்த் தோன்று லகார மகாரஞ்<br>செய்யுண் மருங்கிற் றொடரிய லான்<br>அவ்வழி யெல்லாம் முற றென மொழிப'' | | | |
| 48. சார்பினாற் தோன்றாது தான ருவா யெப்பொருட்கு<br>மேய நின் றெஞ்ஞான்று மின்பந் தகைத்தரோ<br>வாய் மொழியால் வாக்கான் மனத்தா னறி விறந்த<br>தூய்மையதா மைதீர் சுடர். | தொ.கா.பு<br>சூத். 33 | திரு.மு.ப. | இ .வி |
| நச்சர் தாம் மேற்கோளாகக் காட்டும் பாடல்களை முழுமையாகத் தரவில்லை, நாவலர்கள் தாம் எடுத்தாளும் பாடல்களை பெரிதும் முழுமையாகவே தரந்துள்ளார். நச்சரின் பாடல்களைப் பதிப்பாதிரியரான உ.வே. சாமிசந்தையார் அடிக்குறிப்பில் முழுமையாகக் தர விழைந்துள்ளார். ஆயினும் அங்காங்கே நாவலர்கள் காட்டும் பாடல்களுக்கும் உ.வே. ஐயரின் பாடல்களுக்கு மிடையே பாட பேதங்கள் காணப்பெறவே செய்கின்றன. மேற்கூறிய பாடலின் இரண்டாம் கடியை உ.வே.ஐயர் சார்பெனநின் எனத்தொடங்குவார். நாவலர்கள் **மேயநின்** எனத் தொடங்குவதும் . கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|---|
| | **திவாரகம் - 20** | | | |
| 49. | தலைய லென்பது மழைபெய்து விடுதல் | | திரு.மு.ப. வரி. 9 | இ .வி |
| 50. | பழுப்புடை யிருக்கை முடக்கி யடிக்கத்<br>துடக்கிய நடையது துணங்கை யாகும் | | திரு.மு.ப. வரி. 53 | இ .வி |
| 51. | கஞ்சங் குல்லை கஞ்சா வாகும் | | திரு.மு.ப. வரி. 202 | இ .வி |
| 52. | ★ குரவைக் கூத்தே கைகோத் தாடல் | | திரு.மு.ப. வரி. 98 | இ .வி |
| | ★ கொள்கல மொன்றிற் குறுனி யாகப்<br>பல்லுணவு பெய்து பாரிப்பது புரப்பே | | திரு.மு.ப. வரி. 234 | இ .வி |
| | **பிங்கலம் - 21** | | | |
| 53. | எண்கோவை மேகலை காஞ்சி இருகோவை<br>பண்கொள் கலாபமிரு பத்தொன்று- கண் கொள்<br>பருமம் பதினான்கு முப்பத் திரண்டு<br>விரிசிகை யென் றுணரற் பாற்று | | | |
| | இச் செய்யுள் பொருள் முறை திவாரகம் பிங்கலம் சூடாமணி என்பவற்றிலும் வரும் என்பார். உ.வே. சாமிநாதையர். நாவலரவர்கள் தரும் இவ்வெண்பா திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. பார்க்க-பத்தப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் 1956, கபீர் அச்சகம், சென்னை க் 36 | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|
| **வடமொழி நூல்கள் கவிதை**<br>**சிவ தருமோத்திரம் - 22** | | | |
| **54.** உலகினில் பாவபேத முண்டுழ வாதி யைந்தா<br>லலகிடன் முதலைந்தாலு மவ்வினை யறுமெம் மாதிக்<br>கிலகிய வெரிக்கு நூலை யிசைத்தருள் குரவர்க் கென்று<br>நிலைமைய தவர்க்குப்பூசை நித்தலு நிகழ்த்து வார்க்கே | பலவசிட்ட காரணவியல் செ. 13 | திரு.மு.ப. கு. 261 | இ .வி |
| **55.** அட்டவை தம்மைச் சொன்ன நால்வரு மருந்தவன்பா<br>விட்டுமிக் கதனையுண்கை யமிர்தமீ யாதேயுண்கை<br>கட்டமுங் கடுவுமாவி கழிந்தவூன் காயந்தானு<br>மொட்டியே யுடலிற்றோன்றும் புகழுமென் றொழிக வோர்ந்தே | பலவசிட்ட காரணவியல் செ. 14 | ,, | ,, |
| **56.** தலத்துழல் கூலிவேலை சந்தையிற் கொண்டு விற்கை<br>குலைத்தசொற் கூட்டுங்கோப மசத்தியங் கூறலுள்ளு<br>மலக்கிடன் மெழுகலங்கி யாக்கினீ ரரிசி யென்றே<br>யிலக்கணத் தியம்பும் பத்துந் தமக்கெனிற் பாவமீட்டும். | பலவசிட்ட காரணவியல் செ. 15 | ,, | ,, |
| **57.** தேசுறு தன்னச்சிவாதி பூசைக் கெனவிவை தம்மைச் செய்யி<br>னாசமாம் பாவபேதந் தம்மையே நாடிச் செய்யிற்<br>பாசமாய் நரகபேதப் படுகுழிப் படுத்தியென்று<br>மூசல்போ லூழல்வித் தாக்குந் துயரினுக் களவு முண்டோ | பலவசிட்ட காரணவியல் செ. 16 | ,, | ,, |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|---|
| 58. | புத்த கத்தினைப் பூசை புரிசிலார்<br>சித்தங் கூர்தரத் தேசிகன் றண்ணயு<br>மத்த கைப்பல நீங்குவ ரன்றியுங்<br>காத்தை சேர்நர கக்குழி கூடுவார் | கோபுரவியல்<br>சூத். 217 | சை.பொ.இ<br>கு. 342 | பொ.வி |
| 59. | கன்னிகையை விற்பார்கள் பரதாரசுஞ் தன்னைக்<br>காமுறுவார் மனைவிகுறை கண்டிருந்தும் துறவா<br>பொன்வினை செய்ல கொல்வார் மரக் கொல்வர் பொருட் பெண்டிர்<br>விலை புலைவிலைஞர் மதுவிலைஞர் புரந்தாரை மறந்தார். | பரிகாரவியல்<br>செ. 28 | சை.பொ.இ<br>கு. 387 | பொ.வி |
| 60. | தென்னெனவே பாடுமவ ராடுமவர் வாளாற்<br>சேவிப்பார் பூவிற்பார் செக்கர் சொக் கிடுவர்<br>ரென்னுமிவ ரெழுவாய ரன்னாதி யருந்தே<br>லிழுக்காய வன முளத்தை யழுக்காக்கி யிடுமே | | | |
| | **வாயுசங்கிதை - 23** | | | |
| 61. | ஆக்கையினு ளான் மாவிங் குறைவளவும்<br>பூசையினை யாற்றி யல்லா<br>லேக்கறவா லருந்த வொண்ணா தருந்திலவை<br>யெதிரெடுத்தங் கெறிநீர் மூழ்கிப்<br>பூக்க மழுங் குழலுமையோ டிறை முதலை | | சை.பொ.இ<br>கு. 251 | பொ.வி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|---|
| | யிரு முறைதான் பூசை செய்து<br>நாக்கு நாசை யாலற்றை நாண்முழுது<br>மொன்று மருந் தாது நண்ணி | | | |
| 62. | அஞ்செழுத்தை யோர்பதினா யிரமுருத்தா<br>னோதிப்பின்னடுத்த நாளின்<br>மஞ்சுறழுங் கருங் கூந்தல் பாகனுக்கு<br>மாபூசை வகுத்து வாரி<br>நெஞ்சு பொதி மிடற்றிறைக்கு மவனடியார்<br>தமக்குமுறு பொருள்க ணல்கி<br>விஞ்சிய வெம் பகியினா லருந்திய வெல்<br>வினைகள் கெட விளக்க வேண்டும். | | திரு.மு.ப.<br>கு. 251 | பொ.வி |
| | **காசி காண்டம் - 24** | | | |
| 63. | தந்தையா யினும் விழைவிற் றன்னுடனே<br>யொருவயிற்றிற் சார்ந்தாரேனு<br>மைந்தரா யினு மிகவும் வனப்புடைய<br>ரெனிலவர் மேன்மடநல் லார்தஞ்<br>சிந்தை நடந்திடு மதனாற் சாம்பன் மலர்க்<br>கணை வேனிற் செல்வி வாய்ந் தோன்<br>பைந்தொடியா ரினிதமரு முவளகத்திற்<br>றனிவருதல் பான்மை யன்றே | கா.சி.காண்டம் | சை.மா.இ<br>கு. 20 | பொ.வி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|
| **வடமொழி நூல்கள் - உரை**<br>**வேதம்- உபரிடதம், ஆகமம்**<br>**சுப்பிரபேதம் - 25** | | | |
| 64. பிராமணரும் சக்ஷத்திரியரும் வைசியரும் சுத்தகுலத்திற் பிறந்த சூத்திரரும் ஆகிய நால்வருமே ஆசாரியராவர் மற்றையோர்க்கு ஒருக்காலும் ஆசாரியத்துவம் இல்லையா மென்றறிக | | சை.ஆ.இ. கு. 02 | பொ.வி |
| 65. இந்தச் சுத்த சைவசகமம் எல்லோர்க்குங் கொடுக்கத்தக்கது மன்று விளக்கத்தக்கதுமன்று, தீக்ஷை பெற்றவனாய் நிலையுடைய யோனாய்ச் சிவபத்தி மானாயிப்பவனுக்கே விளக்கத்தக்கது, ஏனையோர்க்கு விளக்கல் குற்றமெனப்படும் என்பதாம். | | சை. ஆ. இ கு. 39 | பொ.வி |
| **காமிகம் - 26** | | | |
| 66. சூத்திரருள் நைட்டிகப் பிரமசாரிகட்கு குருத்துவம் கிருகத்தாகளுக்குச் சமயிபுதிர சாதகத்துவமாத்திரங் குற்றமில்லை யென்று காமிகாமத்தில் கூறப்படுவது பற்றி இவ்வாறுரைத்தார். | | சை. ஆ. இ கு. 37 | பொ.வி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|
| **காந்தம் ஆங்கரசங்கிதை - 27**<br>67. சனகர் முதலிய முநீந்திரர் நால்வரும் வேதங்களையும் உப நிடதங்களையும் நெடுநாள் வரையும் ஓதியும் ஞான நிலை பெறாதவராயினர் என்றும் பின்பு ஆகமாந்தாமன்னும் பெயரையுடைய சித்தாந்தத்தை ஓதி ஞானம் பெற்றனர் என்றும் காந்தத்திலே சங்கர சங் கிதையில் கூறியவாற்றால் இவ்வுண்மை நெளிக. | | சை. ஆ. இ கு. 40 | பொ.வி |
| **காரணாகமம் -28**<br>68. புரட்டாதி மாசி ஆடி மார்கழி யென்னும் இந்நான்கு மாதங்களையுந் தீக்ஷைக்காகாவெனக் காரணாகமம் விலக்கும். | | சை. ஆ. இ கு. 81 | பொ.வி |
| **நீலகண்ட பாடியம் - 29**<br>69. வேத சிவாகமங்கட்குப் பேதங்காண் கின்றிலம் வேதமே சிவாகமம் | | சை. ஆ. இ கு. 21 | பொ.வி |
| **சைவபுராணம் - 30**<br>70. பசு சாத்திரம் பற்றாதுவிட்டுச் சிவசாத்திரம் பற்றிப் பயிலும் பிரசணர் முதலிய நான்கு வருணத்தாருமே ஆசாரியராவாரென்று புகழப்படுவர். | | சை. ஆ. இ கு. 3 | பொ.வி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாடல் | எடுத்தாண்ட இலக்கியம் | நூலில் வரும் இடம் | நோக்கம் |
|---|---|---|---|
| **வேதம் - உபநிடதம் - 31 - 34** | | | |
| 71. இருக்கிலே பிராமணத்திலும் உத்திர சூத்திரத்திலும், | | திரு.மு. ப வரி. 62 - 64 | பொ. வி |
| 72. யசுரிலே அருணத்தினும் பிரகதாரணியகத்திலும், | | | |
| 73. சாமத்தில் சாந்தோக்கியத்திலும்,.......... | | | |
| 74. அதர்வ சிரசிலே ஈசுர சாக்ஷாத்காரத்திலும் ஞானத்தால் முத்தி என்னும் சொல்லப்படும். | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு-2

### மேற்கோள் விளங்காப் பாடங்கள்

| எண் | பாடல் | உரையில் வருமிடம் |
|---|---|---|

1. ''அந்தணர்முன் னெருநால்வர் சிவதீக்கைக் கருகரவர்
சிந்தைமகிழ் வுறப்பூசை செய்கசிவன் றிருவடியிற்
புந்தி மகிழ்வுறப்பூசை யநுலோம ரும்புரிக
தந்தமக்குத் தக்கவெலை மண்டபத்திற் றனித்தனியே''

சைவ.பொ.கு. 465

2. அரியசதா சிவனென்போ னநாதிசைவனவன்பா
லவதரித்த சிவமறையோ ராதிசை வரிவர்பா
லுரியசிவ திக்கைபெற்ற பூசுரர்மா சைவ
ருயர்ந்த வரசன் வணிகனநு சைவராவார்
பெரியகுவ ளைப்புயத்தோ னவாந்தரசை வன்சீர்
பெறுசவன்ன னாதியநு லோமர்பிர வரராம்
விரியவளி மிசையொழிந்தோ ரந்தியசை வந்தோர்
விரிந்திடுமேழ் சைவவித மிவையென நூல் விளம்பும்

தரித்தபி டேக மந்தஞ் சுகியினாற் சுத்தசைவ
ரருச்சனை புரிக வொன்று மன்பினாற் பராரத்த லிங்கந்
தரித்திடா னபிடே காந்தத் தாவர லிங்கந் தீண்டிற்
பரித்திடா வளத்தைப் பாரும் பார்த்திவற் காகும் பாவம்

ஆதலால் வேந்த னாராய்ந் தடைவுற வபிடே காந்த
மோது நூன் முறையினுள்ள வுத்தம னாலேயென்றும்
போதக புனிதன் றன்னைப் பூசனை புரிவித்தானே
லாதிதன் சிவலோ கத்தி னமர்வன் பூசனு மாங்கே

சைவ. பொ. இ. 435

3. பொன்னுலகம் வெந்நரகம் புண்ணியபா வம்புரிவார்
நின்மலனு முண்டென்று நிச்சயித்தா- ரிந்நிலை
யாத்திகரே யார் கண்டா ரம்மைப் பலமென்பார்
நாத்திக ரென்றே யுளத்து ணாடு.

கை. பொ. கு. 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இழித்த வாணினு முயர்ந்த பெண்ணினும்
வியந்த கூட்டத் தவர்பிரதி லோமர்

சைவர்.பொ.இ.கு.467

5. எத்திசை தன்னை நோக்கி யிலங்கிடுங் சிவலிங்க ந்தா
னத்திசைத் துவார பால ரர்ச்சனை புரிக வன்பா
லத்திசை தன்னிற் பீட மிடபமு மெதிரே யாகுஞ்
சுத்தகை வாக மத்தின் விதிவழி தொகுத்துச் சொன்னோம்

சைவ.பொ.கி.444

6. கன்ம சாதாக்கி யங்காண் கருதிடிற் புருட மெங்கு
மன்னபானாதி யந்த முகந் தனிற் கொடுக்க வன்பா
லுன்னிடி னகோரங் கர்த்த ரமூர்த்தமே யுணரிற்சாத
மன்னிய மூர்த்தம் வாம மதித்திடிற் சிவமீ சானம்.

கன்மசா தாக்கி யத்திற் கலந்துற மற்றை நான்கு
மன்னுமூன் றிரண்டு மொன்று மற்றைய முகங்க டம்மி
லுன்னியம் முறைமை தன்னை யோதன மாதி யெல்லாங்
கன்மாசா தாக்கி யத்திற் றிசை தொறுங் கொடுக்க கற்றோர்

(சைவ.பொ.கி.கு.446)

7. கன்னியே றாடு சிங்கங் கடகமே முப்பத் தொன்றா
மன்னிய தண்டெண் ணான்கு மகரந்தே னிருபத் தொன்பான்
சொன்னமீ னிறைசால் வில்லுச் சோர்விலா முப்பதாகு
மன்னமென் னடையி னாளே யாதித்த னொடுங்கு நாளே

சைவ.பொ.இ.கு.14

8. "வலஞ் செய்து தண்டதனை மானவிதி வழிதழுவத்
தலந்தன்னிற் பணிந்தெழுக தலைகரமற் றிருகன்னந்
துலங்குமுக வாய்புயங்க ளெனுமெட்டுந் தோயமயி
ரிலங்கு சிரங் கரமுழந்தா ளெனுமைந்து மிசைத்திடவே"

"சிரங்கர முழந்தாண் மண்ணைத் தீண்டிற்பஞ் சாங்கமாகுஞ்
சிரந்தனிற் கரங்கள் கூப்பிற் றிரிவித வங்க மாகுஞ்
சிரந்தனைத் தாழ்த்து நிற்கை தேரினே காங்க மாகும்
வரம்பெறு மெட்டு மைந்து மத்திம மூன்றே கம்பின்"

சைவ.பொ.இ.கு.553

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. சிறந்தகத்து ளான்மாவி லுறைசிவனைப்
பூசையினைச் செய்யா னாகி
மறந்துபுறத் தினிற்பூசை வருந்தியே
யியற்றுபவன் வயங்கு மாவின்
கறந்தபா லடிசிலகங் கையுளே
யிருப்பதுந்தான் கண்டு ணாது
புறங்கையினை நக்குமவன்
யாமறியப் புகலுங் காலே

சைவ.பொ.இ.கு.

10. ஞால நீதியு நான்மறை நீதியும்
பால ருன்மத்தர் பிசாசரி லெனவு
முறங்கி னோன்கை வெறும்பாக் கெனவுந்-
தானே தவிரா தானாற் புரியா
தொழிந்திடி னிரயத் தழுந்துத றிடமே

சைவ.பொ.இ.கு. 5

11. தன்னாற் பிறராற் றனக்குவருந் தீங்குநல
மின்னா விலங்கரவந் தேளெறும்பு - சென்முதனீ
ரட்டையல வன்முதலை மீனரவ மாதியினாங்
கட்டமுமிங் கான்மிகமே காண்

கருவிற் றுயர் செனிக்குங் காலைத் துயர்மெய்
திரைநரைமூப் பிற்றிளைத்துச் செத்து-நரகத்தி
னாழுந் துயர்புவியை யானின்ப மாதியெலா
மூழுதவு தைவிகமென்றோர்
பனியா லிடியாற் படர்வா டையினார்
துனிதென் றலினாஞ் சுகமுந்-தனையனைய
நீரினா மின்பின் னலுநெருப்பி னாந்துயரின்
போரிற் பவுதிகமா கும்

சைவ.பொ.இ.கு.412

12. தூபியினைக் கோபுரத்தை யீசனெனக் கண்டு தொழு
பாபமறும் வாய்த்து றுமின் பம்''

சைவ.பொ.இ.கு.126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. நீயே படைத்தவுட னீகாப்பை காவென்ன
நாயேனுக்கென் பொறுப்பு நாயகனே- யாபுமறைச்
சீர்கேட்டுஞ் சோனகிரிச் சீமானே வைத்தவனை
நீர் கேட்டு மோமரங்கணி ன்று

சைவ. பொ. இ. கு. 410

14. ''பூசையி லாதா னுண்டி புழுப்பிணம் புலையன் கட்ட
மாசுள பாவ மொக்கும் வாளினிற் றீயில் வீழ்ந்து
நாசமா வது வே நன்று நற்குலம் பிறந்தா னேனுந்
தேசுளா ரவனைத் தீண்டிற் றெறிசிக்கி னினைக்கிற் பாவம்''

சைவ.பொ.இ.கு.451

15. ''பார்ப்பார் ரரசர் வணிகர்வே ளாள ரென
நாற்குலத் தவருந் தங்குல நடையினு
முயர்ந்த வாணினு மிழிந்த பெண்ணினும்
வியந்த கூட்டத் தவரநு லோமா''

சைவ. பொ. கு. 466

16. ''பொன்னுலகம் வெந்நகரம் புண்ணியபா வம்புரிவார்
நின்மலனு முண்டென்று நிச்சயித்தா- ரிந்நிலை
யாத்திகரே யார் கண்டா ரம்மைப் பலமென்பார்
நாத்திக ரென்றே புளத்து ணாடு''

சைவ.வா.இ.கு.468

17. ''மங்கையர் சந்நியாசி மறைவானப் பிரத்தன் றேவி
தங்கிய பிரமசாரி சலனத்தினிற் குழைக்க லாகா
வங்குப தேசமில்லா னந்தநீர் குழைக்கலாகா
துங்க வெண்ணீற்றை யள்ளித்துகிலினால் வடித்துக் கொள்வான்''

சைவ.பொ.இ.கு.197

18. ''மதியணி யுஞ்சடை யாருமை கேள்வர் மழவிடையார்
சதியி னடம்புரி வார்கலி யாணர் தலையினுண்பார்
கதிமதற் கெற்றவர் காலற்குங் கால ரெயிலெருத்தார்
துதியிற் சலந்தர னாரை வதைத்த சுகந்தரே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தி யுரித்தவர் வேள்வி யழித்தவர் மாலத்தனார்
சத்தியோர் பாகர் கிராதர்கங் காயர் சண்டே சருக்குச்
சித்தி யளித்தவ ராலால முண்டவர் செம்பொறியான்
பத்தியி னுக்கொரு சக்கர மீந்த பரம்பரனே.

கரிமுக னார்க்கருள் செய்தார்கோ மாக்கந்தர் காவொன்றுளா
ருரிய சுகாதனர் ஞானோப தேச ரிலிங்கத் துற்றா
ரிருபதி னோடைந்து விக்கிர கங்களென் னும்மிவர் தாந்
தெரிவுறத் கொண்டெமைத் தாமாள வந்த செயலிதுவே
சைவ.பொ.இ.கு.434

19. "மனிதர்தா பித்த லிங்க மாதவர் வானோர் மற்றைப்
புனிதராங் கணங்கள் பூசை புரிந்திடு மிலிங்க மொன்றும்
பனுமிவை நான்குந் தானே படிதனி லுதித்த லிங்க
மெனுமித னோடுமைந்தும் பரார்த்தமென் றெணுக வென்றும்"
சைவ.பொ.இ.கு.431

20. எண்கோவை மேகலை காஞ்சி இருகோவை
பண்கொள் கலாபமிரு பத்தொன்று-கண்கொள்
மருமம் பதினான்கு முப்பத் திரண்டு
விரிகையென் றுணரற் பாற்று
திரு.மு.ப.வரி.16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு-3

### நாவலரின் அருஞ்சொல் விளக்கம்

அஃகுதல்-சுருக்குதல் (நான்.சூத்.5)
அங்காத்தல் - வாயைத்திறத்தல் (நன்.சூத்.21)
அண்பால்-நாவினிம் பால அணுகப்படும் பல் (நன்.சூத்.22)
அசைத்தல் - சார்த்துதல் (நன்.சூத்.420)
அத்துவா - வழி (சைவ.பொ.இ.கு.64)
அல்கல்- சுருக்கல், (நன்.செ.16)
அமிலம் -புளி (சைவ.பொ.கு.544)
அவனதர்-தலையிறக்க முடையவர் (கோ.நட.செ.65)
அழலி-ஆசிரியன் கோபித்தல் (நன்.பொ.சூத்.46)
ஆசிரியவசனம்-மேற்கோள். பழஞ்சூத்திரம் (நன்.பொ.சூத்.9)
ஆடல்-சொல்லல், (கோ.நட.செ.37)
ஆதி-புலம்பல் (நன்.சூத்.46)
ஆர்ச்சனம்-தேடுதல் (கோ.வியா.செ.4)
ஆயாயம்-தடுத்தல் (சைவ.பொ.கு.47)
இசை-சொல்,பொது,ஓசை,(நன்.சூத் 416,442)
இயல்பு-இயற்கை,தன்மை (நன்.பொ.சூத-1
இலங்கம்-கூடுதல்(கோ.பத.செ.79)
இன்னா-துன்பம் (வாக்.செ.3)
இன்னாவளவு-முதுமைப்பருவம்(3)
இழவு-சமிண்டீ கரணம் (சைவ.பொ.கு.180)
உத்தி-பொருந்துதல் (நன்.பொ.சூத்.15)
உப்பு-கடல் (மருதா.செ.1)
உபநிடதம்- வேதாந்தம், வேதசிரசு, பிரபலசுருதி,
(சை.ஆ.இ.கு.21)
உருத்தல்- தோன்றல் (கோ.பத.செ.34)
எல்லையில்லாத் திருவேடம் - சடைமுண்டம்,சிகை
(கோ.பாயி.செ. 11)
ஒலி- வாசம் (சைவ.பொ.இ.கு. 152)
கயம்-ஆழம் (மருது.செ.7)
கனகம்-பொன் (கோ.பாயி.செ.12)
குஞ்சிதம்-வளர்தல் (கோ.பத.செ.41)
குவலயம்-பூமி (கோ.இர.செ.13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டம் - மயக்கம் (நன்.சூத்-55)
சகனம்-கடியின் முதற்பக்கம் (கோ.வியா.செ.23)
சகனம்- வடிவுடையது (சைவ.பொ.கு.548)
சத்தி -ஞானவழி (கோ.ஆ.கு.26)
சர்ஷபம்-கடுகு (சைவ.பொ.கு.544)
சாம்பவிதீஷை-விஞ்ஞான தீக்ஷை (சைவ.ஆ.கு.-26)
சிதம்பரம்-ஞானாகாசம் (கோ.பாயி.செ.3)
சிற்பம்-சிந்தித்தல் (கோ.பாயி.செ.21)
சிற்றம்பலம்- ஞானசபை (கோ.பாயி.செ.3)
சை-பொருள்(கொ.வே.52)
சொக்கு-பொன் (கொ.வே. 35)
தந்திரம்-நூல் (நன்.பொ.சூத்15)
தமருகம்- உடுக்கை (கோ.பத.செ.11)
தமனகம்- மருக்கொழுந்து (கோ.திரு.செ.20)
தரம்- மேன்மை (கோ.பாயி.செ.23)
தருப்பணம்- உவப்பித்தல் (சைவ
தற்பரம்- ஆன்மா (கோ.பயி.செ.3)
தனிநிலை - ஆய்தம் (நன்.சூத்.5)
தன்னொடு கற்றோன்-ஒரு சாலை மாணாக்கன் (நன்.சிற.சூத்.5)
தாம்பு - ஊசல் - (நன்.சூத்.416)
திரோதானம் - மறைத்தல் (கோ.பாயி.செ.1)
தீபத்தண்டு-சோதிலிங்கம் ,விளக்கு, கணங்கள் (கோ.திரு.செ.22)
தேவன்-பிள்ளை (ஆத்தி.1)
நாயகம்-மேடு (சைவ.பொ.கு.41)
நிட்களம்-வடிவில்லாதது. (சைவ.பொ.கு.548)
நிர்வாணம்-மோக்ஷம் (சைவ.மா.கு.64)
நிரக்கம்-சுட்டறிவின்மை (கோ.நம. 46)
நிலையம்- கூத்து (கோ.பாயி.செ.3)
நூனாதிகம் - அருமை-பெருமை
நேர்தல்-ஒன்றுபடுதல் (நன்.பொ.கத் 66)
பகர்தல்- விற்றல் (நல்.பா.26)
பக்ல-முகூர்தம்-கொன்.74
பதம் - ஒளி சொல் இடம், பொருள் (கோ.பாயி.1,2,3)
பர்ணம்- இலை (கே ா.வியா.செ.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்-பின் (கோ.பாயி.செ.3)
பரம்பரை- வரிசை (கோ
பராயணன்-பற்றுக்கொள், அடைவோன் (கோ.
பலித்கலம்-பிக்ஷாபாத்திரம் (கோ.பத.செ.11)
பாசமுத்தன்- பாசநீக்கத்தைக் கொடுப்பவன் (சை.ஆ.கு.31)
பாரித்தல்- தோற்றல் (கோ.பா.செ.34)
பால்பகாவஃறிணைப் பெயர்- அஃறிணையியற்பெயர் (நன்.சூத்.281)
பாழி- குழி (சைவ.பொ.கு.429)
பீர்-முலைப்பால் (கொனி.62)
புரணம்-அசைத்தல், துடித்தல் (கோ.பத்.செ.41)
புன்மலத்தார்- சிவதீகைஷயில்லாதார் (சைவ,பொ.கு.453)
பொருநர்-கூத்தர் (நன் சூத்.208)
பொற்பு-மிகுதி (கோ.பாயி.செ.3)
மண்ணுதல்-கழுவுதல் (வாக்.பா.12)
மந்தம்-உபாஞ்சு (சை.பொ.கு.152)
மரியாதை-நன்னெறியினிற்றல் (நல்-பா.8)
மாந்திரி- கிரியாவாதி (சைவ.ஆ.கு.27)
யானம்-ஊர்தல் (மருது.செ.4)
வகித்தல் - பிளத்தல் (திரு.மு.ப
வனம்- சுடுகாடு (மருது செ.3)
வார்-நீர் (மருதூ.செ.4)
விகற்பம்- உறழ்ச்சி (நன் சூத்.160)
விகாரம்-செயல், செயற்கை, விதி (நன்.பொ.சூத்-1)
விரத்தன்- பிரமச்சாரி, சந்நியாசி (சைவ.பொ.கு.17)
வினைப்பெயர்- தொழிற்பெயர் (நன்.சூத் 286)
வேதி- சமபூமி (கோ.இரு.செ.107)
ஸ்தவம் - தோத்திரம் (கோ.இரு.செ.81)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு-4

### நாவலர் தொகை விரித்தல்

அக்களங்கம் முயினிறமும் கறுத்த அப்பிரகக் கன்னிறமும் நீலக் கனினிறமும் என மூவிதமாம்

(சைவ.பொ.இ.செ.106)

அட்டப்பிரகரணங்களாவன: தத்துவப்பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், தத்துவத்திரய நிர்ணயம், போககாரிகை, மோக்ஷகாரிகை, நாத காரிகை பரமோக்ஷ நிராச காரிகை, இரத்தினத்திரயம் என்பனவாம்.

(சைவ.பொ.இ.கு.327)

அட்ட புட்பங்களாவன: கொல்லாமை,ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பனவாம்.

(சைவ.பொ.இ.கு.128)

அத்துவாக்களாறாவன: மந்திராத்துவா,பதாத்துவா, வர்ணாத்துவா, புவனாத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா என்பனவாம்.

(சைவ.ஆ.இ.கு.64)

அதிபாதகங்களாவன: சிவநிந்தை, சிவத்திரவியம் புசித்தல், கூலிக்குப் புசித்தல், குருநிந்தை, குருத்திரவியம் புசித்தல், சிவனடியார் நிந்தை, வேதாகம நிந்தை என்பனவாம்.

(சைவ.பொ.இ.கு.241)

அந்தியேட்டி முதலிய கிரியைகளாவன: அந்தியேட்டி, பாஷாணப்தா பனம், உதககதானம், பிண்டதானம் நக்கினப் பிரச்சாதனம், ஏகோத்தர விருத்திபோசனம், நவசிராத்தம், ஏகோத்திட்டம், பஞ்சதச சிராத்தம், சோதகும்ப சிராத்தம், சபிண்டீ கரணம் என்பனவாம்.

(சைவ.பொ.கு.231)

அத்தியான்மக நூல் சாங்கியமும் பாதஞ்சலமும் வேதாந்தமுமாகிய மூன்றுமாம்

(சை.பொ.இ.கு.338)

அதிமார்க்க நூல் பாசுபதமும் காபாலமும் மகா விரதமுமாகிய மூன்று மாம்.

(சைவ.பொ.இ.கு.338)

அநாதிசைவர், ஆதிசைவர், மாகாசைவர், அநுசைவர், அவாந்தர சைவர், பிரவரசைவர், அந்திய சைவரெனச் சைவர் எழுவகையர்.

(சை.பொ.இ.கு.435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபரை பிராமி, வைஷ்ணவி, ரௌத்திரி என மூன்று விதப்படும்.

(சைவ.பொ.கு .74)

அரசு, ஆல்,அத்தி,இறளி,பலாசு, கருங்காலி, வன்னி, வில்வம், மா, வேங்கை, நறு முருங்கை காட்டுவாகை என்பன யஞ்ஞ விருக்ஷங்களாகும்.

(சைவ.பொ.இ.கு.490)

அவ்வியத்தலிங்கம் சருவதோபத்திரம், வரகுத்த மானம், சைவாதிகம், ஸ்ரீராசிகம் என நான்கு வகைப்படும்

(சைவ.பொ.இ.கு.)

அறநூல் பொருணூல் இன்பநூல் வீட்டு நூல் என்னும் நான்கு நூல்

(சைவ.பா.தசூ.24)

அனந்தம், தன்மம் ஞானம்,வைராக்கியம், ஐசுவரியம், பதுமம் ஆகியன சலாசனமாம்.

(சைவ.பொ.இ.கு.523)

ஆடகம் கிளிச்சிறை சாதரூபம் சாம்பூநதம் என்பன நால்வகைப் பொன்கள்.

(திரு.மு.ப.)

ஆத்தியான்மிகம் ஆதிதைவிகம் அதிபௌதிகம் என்பன மூவினைகள்.

(சைவ.பொ.இ.கு.412)

ஆத்தும சுத்தியாவது பூதசுத்தி,அந்தரியாகம் சமாதி யென்னும் மூன்றன்றொகுதியாம்.

(சைவ.பொ.இ.கு.502)

ஆப்தர்கள் விசேட மானுட ஆப்தர், இருடி ஆப்தர், தேவ ஆப்பர் பிரம ஆப்தர், விட்டுணு ஆப்பர், உருத்திர ஆப்பர், மகேசுவர ஆப்தர், சதாசிவ ஆப்தர் எனப்படுவர்.

(சைவ.பொ.இ.கு.328)

ஆவாகன ஆதிகளாவன ஆவாகனம், தாபனம் சந்நிதானம், சந்நிரோதனம் சுவாக தார்க்கியம் என்னும் ஐந்துமாம்.

(சை.பொ.இ.கு.525)

ஆன்மாக்கள் விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலரென மூவகைப் படுதலினென்க.

(சைவ.பா.கு.)

இருபத்தைந்து (சிவ) விக்கிரகங்களாவன: சந்திரசேகரர், உமாமகேசர், இடபாரூடர், சபாபதி, கலியாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராதி சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், ஹரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தர், அர்த்தநாரீசுரர்,கிராதர், கங்கானர், சண்டே சாநுக்கிரகர், நீல கண்டர், சக்கிரப்பிரதர், கச முகாநுக்கிரகர், சோமஸ்கந்தர், ஏக பாதர், சுகாசீனர் தக்ஷிணா, மூர்த்தி, லிங்கோற்பவர் என்பனவாம்.

(சைவ.பொ.இ.கு.119)

இருவர் தாய் தந்தை

(திரு.மு.ப. 179)

இருவினை நல்வினை தீவினை.

(சைவ.பொ.இ,கு,412)

இழி சொற்களாவன பொய் குறளை, கடுஞ் சொல் பயனில் சொல் என் கின்ற நான்குமாம்.

(ஆத்தி.செ. 76)

ஏகாதசி,திரயோதசி,மகம், மூலம் விதிபாதாகம், மாசப்பிறப்பு, விரததினம், சிராத்ததினம், சிராத்த தினத்துக்கு முதற்றினம், சிராத்த தினத்துக்கு மற்றைத்தினம்; சந்தியா காலங்கள் அர்த்த ராத்திரி என்பவை களும் புணர்ச்சிக்கு விலக்கப்பட்டன வெங்க.

(சைவ.பொ.இ.கு.226)

உச்சியிராகம்: சாரங்கம், தேசாக்ஷரி

(சைவ.மா.இ.கு.8)

உதயத்தில் எடுக்கப்பட வேண்டிய புட்பங்களாவன: நந்தியாவர்த்தப்பூ, வெள்ழுளெருக்கம்.

(சைவ.மா.இ.கு.7)

உபதேசிக்கப்படுங்கால் உளவாகிய சம்பந்தம் ஆறும் முறையே பரசம் பந்தம், மகாசம் பந்தம், அந்தரான சம்பந்தம், திவ்விய சம்பந்தம், திவ்வி யாதிவ்விய சம்பந்தம், அதிவ்விய சம்பந்தம் எனப் பெயர் பெறும்.

(பொ.இ.செ. 330)

உருத்திரபேதம் பதினெட்டையும் கேட்டவர்கள் முப்பத்தறுவராவர் அவர் பெயர் வருமாறு: விசயங்கேட்டவர் ,தசார்ணர், பார்ப்பதி, சுவாயம்புவங் கேட்டவர், நிதனேசர் பத்மபூ. ஆக்கினேயங் கேட்வர் வியோமர், உதாசனர். வீரங்கேட்டவர் தேசர், பிரசாபதி, ரெளவங் கேட்டவர் பிரமேசர், நந்திகேசர், மகுடங் கேட்டவர் சிவர், மகாதேவர், விமலங்கேட்டவர், சாருவாத்மர், வீரபத்திரர், சந்திரஞானங் கேட்டவர், அநந்தர், பிருகஸ்பதி, முகவிம்பங்கேட் டவர் பிரசாந்தர், தசீசி, புரோற்கீதம் கேட்டவர், லிலி, கவசர், இலளிதங் கேட்டவர் ஆலயேசர், இலதர், சித்தங் கேட்டவர் விந்து, சண்டேசர், சந்தானங்கேட்வர் சிவநிஷ்டர், அசம்பாதர், சாருவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கேட்டவர், சோமதேவர், நிருசிங்கர் பாரமேசுங் கேட்டவர் சீதேவி, உசினர். கிரணங் கேட்டவர் தேவவிபு, சம்வர்த்தர், வாதுளங் கேட்டவர் சிவர் மகாகாளர்.

(சைவ.பொ.இ.கு.337)

உருத்திராக்ஷமாலைகளுக்கு மணியளவு எண்ணளவெனவும் எல்லையளவெனவும் இருவகைப்படும்.

(சைவ.பொ.இ.கு.143)

உலோக பாலர் பதின்மராவார்: இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், பிரமா, விட்டுணு என விவர்.

(சைவ.பொ.இ.கு.523)

உலோக பாலராயுதம் பத்தாவன: வச்சிரம், சக்தி,தண்டம், கட்சம், பாசம், அங்குசம், கதை, சூலம், பதுமம் சக்கரம் எனவிவை.

(சைவ.பொ.இ.கு.523)

கணிகலிங்கம் பன்னிரண்டு. அவையாவன மண், அரிசி, அன்னம், ஆற்று மணல், கோமயம், வெண்ணெய், உருத்திராக்ஷம், சந்தனம், கூர்ச்சம், புஷ்பமாலை, சருக்கரை,மா என்பனவாம்.

(சைவ.பொ.இ.கு.556)

கணேசுரர் எண்மராவார்: நந்தி, மகாகாளர், பிருங்கி, கணபதி, இடபம், கந்தர், பார்வதி, சண்டவர் எனவிவர்.

(சைவ.பொ.இ.கு.523)

கிருகத்தர் சாதகன் உதாசீனன் என விருவகையர்.

(சைவ.பொ.இ.கு.60)

கருவி, எழுத்து சொற்பொருள்,யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்கள்.

(சைவ.பா.கு.24)

கோமயங்கொள்ளுதல் சாந்திகம், பௌட்டிகம் காமதம் என மூவகைப்படும்.

(சைவ.பொ.இ.செ.இ.கு.169)

சத்திநிபாதம் நான்கு: அவையாவன மந்தரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்பனவாம்,

(சைவர்.ஆ.இ.கு.24)

சந்நியாசிகள் தபசுவியெனவும் விவிதிஷு எனவும் வித்துவா னெனவும் மூவகையினர்.

(சைவ. ஆ.கி.கு.59)

சமயிகள் சாமானிய சமயி, விசேஷசமயியென இருவகையினர்.

(சைவ.மா.இ.கு.22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்குண்ணிய சொரூபம், முற்றறிவுடமை, வரம்பிலின்ப முடமை, இயற்கையுணர்வுடமை, தன்வயமுடமை, வரம்பிலாற்றலுடமை, குறைவிலாற்றலுடமை என்பன.

(திரு.மு.ப.293-4)

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்காவன: திருவுந்தியார், திருக்களிற்றுப் பாடியார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபாவிருபது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மை விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பனவாம்.

(சைவ.பொ.இ.கு.3)

சித்திகள் உலகராற் காணப்படாதனவெனவும் காணப்படுவன வெனவும் பரமெனவும் அபரமெனவும் வருமெனவுணர்க.

(சைவ.ம.இ.கு.30)

சித்தி மூன்றாவன: உத்தமோத்தம சித்தி, உத்தம சித்தி, கனிட்ட சித்தி என்பனவாம்.

சிவசக்தி அபரை பராபரை, பரை என முத்திறப்படும்.

(சைவ.பொ.இ.74)

சிவலிங்கமாவது பரார்த்தம் இட்டலிங்கம் என இருவகைப்படும்.

(சைவ.பொ.இ.கு.430)

சிவபேதம் பத்தையுங் கேட்டவர் முப்பதின்மராவர்.

அவர் பெயர் வருமாறு:- காமியங்கேட்டவர் பிரணவர், திரிகலர் விதரர், யோகசங் கேட்டவர் சுதாக்கியர், பஸ்மர் விபு சிந்தியங் கேட்டவர், சுதீப்தர், கோபதி, அம்பிகை, காரங்கேட்டவர் காரணர், சர்வ ருத்திரர், பிரசேகர், அசிதங் கேட்டவர் அசிவர், சிவர் அச்சுதர் தீப்தங்கேட்டவர் ஈசர், திரிமூர்த்தி, உதாசனர். சூக்குமங்கேட்டவர் சூக்குமர், வைச்சிரவணர், பிரபஞ்சனர் சகச் சிரங்கேட்டவர் காலர், வீமர், தருமர். அச்சுமான்அப்பு, உக்கிரர், ஆதித்தியர், சுப்பிரபேதங் கேட்ட வர் தேகேசர் விக்கினேசர். சசி

(சைவ.பொ.இ.கு.337)

சிவபூசை சுத்தமும் கேவலமும் மிச்சிரமுடமென மூன்று பேதமாம்.

(சைவ.பொ.இ.கு.471)

சிவஸ்தோத்திரங்கள் தேவாரம், திருவாசகம்,திருவிசையப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்னும் அருட்பாடல்களைந்துமாம்.

(சைவ.மா.இ.கு.8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தான்னம், மத்வன்னம், தத்தியன்மை, பாயசான்னம். கிருசரான்னம், குளான்னம் முதற் கான்னம் என அன்னம் எழு வகைப்படும்.

(சைவ.இ.கு.544)

சுயம்புலிங்கம் சலா சிரயமெனவும் பருவதாசிரயமெனவும் இருவிதப்படும்.

(சைவ.பொ.இ.கு.432)

சென்மத்திரங்களாவன: பிறந்த நக்ஷத்திரமும், அதற்குப் பத்தாநக்ஷத் திரமும் அதற்குப் பத்தா நக்ஷத்திர முமாம்.

(சைவ.பொ.இ.கு.226)

சேடம் பரிகல சேடமெனவும் பாத்திரசேடமெனவும் இருவகைப்படும்.

(சைவ.பா.கு.19)

சைலம், வாணம், ஸ்பாடிகம், லோஹஜம், க்ஷணிகம் என்பனவும் உபசா ரத்தால் இலிங்கம் எனப்படும்.

ஞாயிற்றுக்கிழமை, திங்கட் கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக் கிழமை, திருவோண நக்ஷத்திரம், சத்தமி, அட்டமி, துவாதசி, சதுர்த்தசி, அமாவாசி, பௌர்ணிமை, விதிபாதயோகம், மாசப்பிறப்பு, பிராதக் காலம், சாயங்காலம், இராத்திரி என்னும் மிக்காலங்களிலே துளசியெடுக் கலாகாது.

(சைவ.ம.இ.கு.7)

தந்தசுத்திக்குக் கருவியாகாதன யவம், அரசு, நறுவலி, நீர்வஞ்சி, தருப்பை, நெல்லி, ஆவிரை, நாணல், முருங்கை, ஆமணக்கு, நமை, வேம்பு, பேயத்தி, பட்டமரம், கைவிரல், செங்கல், சாம்பல், மணல் என்பனவாம்.

(சைவ.பொ.கு.34)

திங்கட்கிழமை, சதுர்த்தி, அட்டமி, நவமி, ஏகாதசி, சதுர்த்தசி, அமா வாசி, பௌர்ணிமை, மாசப்பிறப்பு என்னுமிக்காலங்களிலே வில்வமெ டுக்கலாகாது.

(சைவ.ம.இ.கு.7)

துவாரபாலகர் எழுவராவார், கணபதி, சரசுவதி, இலக்குமி, நந்தி, கங்கை, மகாகாளர், யமுனை எனவிவர்.

(சைவ.பொ.இ.கு.498)

நற்குணமில்லாதவள், எண்ணெயிட்டுக் கொண்டவள், தாம்பூலந்தின்ற வள், கணவனுக்கு முன்னுண்பவள், அருவருப்பானவள், உறுப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்தவள், கருங்குட்டை முதலிய நோயுடையவள், விதிப்படி சௌசாதி செய்யாதவள் முதலியோர்களிடத்திலும் பிச்சை வாங்கலாகா.

(சைவ.பொ.இ.கு.388)

நவ தீர்த்தங்களாவன: கங்கை,யமுனை, சரசுவதி, நருமதை, சிந்து, காவேரி, கோதாவாரி, சோணநதி துங்கபத்திரை என்பனவாம்.

(சைவ.மா.இ.கு.க)

நித்தியம், நித்தியாங்கம்,நைமித்திகம், நைமித்தி, காங்கம், காமிகம், காமியாங்கம் ஆகிய ஆறுவகைக் கர்மங்களும் ஆசிரியர்களுக்கு உரியன.

(சைவ.ஆ.இ.கு.54)

நவரத்தினங்கள் மாணிக்கம், முத்து,பவளம்,மரகதம், புருடராகம், வச்சிரகம், நீலம், கோமேதகம் வைடூரியம் ஏன்னும் எழுமாம்.

(கோ.திரு.253)

நாற்பெருந்தெய்வம் இந்திரன், யமன்,வருணன் குபேரன் என்னும் நான்கு தேவர்கள்.

(திரு.மு.ப.161)

நித்தியாங்கங்களாவன: நித்தியகர்மலோபம்-வந்த போது அதற்குப் பரிகாரஞ் செய்தலும், அட்டபந்தன சலனம் வந்தால் மீளவும் அவ்வட்ட பந்தனஞ் சாத்தலும், மார்கழி மாதத்திற் கிருதாபிஷேக முதலாகிப் பன்னிரண்டு மாசத்திலும் மாதபூசை பண்ணுதலும் சாம்வற்சரிகப் பிராயச்சித்தமாகப் பவித்திரஞ் சாத்தலு முதலாயின.

(சைவ.பொ.இ.கு.22)

பற்கள் காளி, காளராத்திரி, யமன், யமதூகி என நான்காம்

(திரு.மு.ப.149)

பிச்சையானது சாந்தானிக பிச்சை, கணபிச்சை மாதுகரி பிச்சை, அயாசக பிச்சை என நால்வகைப்படும்.

(சைவ.பொ.இ.கு.257)

பிரமசாரிகள் பௌதிகப் பிரமசாரியெனவும் நைட்டிகப் பிரமசாரியெனவும் இருவகையர்.

(சைவ.ஆ.இ.கு.60)

பிராணாயாமம் சிரேசகம்,பூரகம், கும்பகம் என மூன்று பகுதியை உடையது.

(சைவ.பொ.இ.கு.47)

பிராமணர்க்குரிய இலக்கணங்கள்: ஓதல், ஓதுவித்தல் வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறாகும்.

(திரு.மு.ப.வ.178)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறச்சமயங்களாவன உலோகாயதம், பௌத்தம் ஆருதம், மீமாஞ்சகம், மாயாவாதம், பஞ்சாரத்திரம் என்பவைகளாம் (கோ.பாயி 18)

புத்திரர்கள் சாமானிய புத்திரர் விசேட புத்திரரென இருவகையினர். (சைவ.மா.இ.கு.22)

புலன்களைந்தாவன சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம் என்பனவாம்.

(நன்.செ.11)

யாமராகம் ஆகரி

மலடிகள் சென்மமலடி, வழிமலடி, காமமலடி, மிருதமலடி என நால் வகையினர்.

(சைவ.பொ.இ.கு.241)

பஞ்ச கர்த்தாக்கள் பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுவரன், சதா சிவன் (திரு.மு.ப.வரி.245)

பஞ்சகவ்வியமாவன: விதிப்படி கூட்டியமைக்கப்பட்ட பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பனவாம்.

(கோ.இர.செ.4)

பஞ்சகோமாதாக்களாவன நத்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்பனவாம்.

(கோ.இர.செ.4)

பஞ்சசத்திகளாவன: பராசத்தி, ஆதிசக்தி, இச்சாசத்தி, ஞானசத்தி கிரியா சத்தி என்பனவாம்.

(சைவ.பா.கு.2)

பஞ்சவிதசுத் திகளாவன: ஆன்மசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திர சுத்தி, இலிங்கசுத்தி என்பனவாம்.

(சைவ.பொ.இ.கு. 502)

பஞ்சதீர்த்தங்களாவன: தேவதீர்த்தம் ஆரிடதீர்த்தம், மானுடதீர்த்தம், பூததீர்த்தம், பிதிர் தீர்த்தம் என்பனவாம்.

(சைவ,பொ.இ.செ.65)

பஞ்சதுந்துபிகளாவன: தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி கஞ்சக்கருவி, கண்டக்கருவி என்பனவாம்.

(கோ.நட.செ.8)

பஞ்சப்பிரமமாவன: ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்பனவாம்.

(சைவ.பொ.இ.செ.139)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சபாவங்களாவன: ஆணவம், மாயேயம், கார்மியம், வைந்தவம், திரோதாயி என்பனவாம்.

(சைவ.பா.செ.7)

பஞ்சபலோதங்களாவன: எலுமிச்சம்பழச்சாறு, நாரத்தம்பழச்சாறு, தமரத்தம்பழச்சாறு, குளஞ்சிப்பழச்சாறு, மாதுளம்பழச்சாறு என்பன வாம்.

(சைவ.பொ.இ.கு.514)

பஞ்சபூதங்கள் பிருதிவி, அப்பு,தேயு,வாயு, ஆகாயம்.

(திரு.மு.ப. 245)

பஞ்சவாயுக்களாவன: நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்பனவாம் .

(சைவ.பொ.க. 289)

பதினெண்கணங்களாவார், தேவர், அரசுரர், வைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிரும்புருடர், கந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர் ஆகாச வாசிகள், போக பூமியர்கள் எனப் படுவர்.

(திரு.மு.ப.169)

பதினொரு மூவர் ஆதித்தர்- பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர் என்றுணர்க.

(திரு.மு.ப.168)

பலபஞ்சாமிர்தம் சேர்க்கப்பட்ட பால்,தயிர்,நெய்,தேன்,சருக்கரை, வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் என்பன பலபஞ்சாமிர்தமெனப் படும்.

(சைவ.இ.கு.514)

பயிருக்கு வேண்டும் முயற்சிகளாவன: உழுதல், எரு இடுதல்களை பிடுங்குதல், நீர்ப்பாய்ச்சல், காத்தல் என்கிற ஐந்தும் ஆம்.

(ஆத்தி.செ. 22)

பராபரை ஞானசத்தி, கிரியா சத்தி, இச்சாசத்தி என மூவிதப்படும்

(சைவ.பொ.இ.கு.74)

பரை இரத்தை சுக்கிலை, அசிதை, கிருஷ்ணை என நான்கு விதப்படும்

(சைவா.பொ.இ.கு.74)

மாலையிராகங்களாவன கல்யாணி ,காபி, கன்னடகம், காம்போதி என்பனவாம்.

(சைவ.மா.இ.கு.8)

மானாங்குலம் உத்தமம், மத்திமம், அதமம் என மூவகைப்படும்.

(சைவ.பொ.இ.கு.60)

முத்தீ ஆகவநீயம், தக்ஷிணாக்கினி, காருக பத்தியம் என்னும் மூன்றுமாம்

(திரு.இ.ப. 182)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்திரண்டிராகங்களாவன: பைரவி, தேவக்கிரியை, மேகரஞ்சி, குறிஞ்சி, பூபாளம், வேளாவளி, மலகரி, பௌளி, ஸ்ரீராகம், இந்தோளம், பல்லதி, சாவேரி, படமஞ்சரி, தேசிலலிதை, தோடி, வசந்தம், ராமக் கிரியை, வராளி, கைசிகம், மாளவி, நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, பங்காளம், தன்னியாசி, காம்போதி, கௌளி, நாட்டை, தேசாக்ஷரி, காந்தாரி, சாரங்கம் என்பனவாம்.

*(சைவ.மா.இ.கு.8)*

முற்கான்னம், சர்ஷபான்னம், மாஷான்னம், அமிலான்னம், திலான்னம் என அன்னம் ஐவகைப்படும்.

*(சைவ.பொ.இரு.544)*

மூவர் அயன், அரி அரன்

*(திரு.பா.163)*

மூவிதம்- ஆத்தியான்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம்.

*(சைவ.பொ.இ.கு.412)*

வசந்த கால விராகம்: காம்போதி, அசாவேரி, தன்னியாசி

*(சைவ.மா.இ.கு.8)*

வித்தியேசுரர் எண்மராவார், அநந்தர், சூக்குமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திருமூர்த்தி, ஸ்ரீ கண்டர், சிகண்டி எனவிவர்.

*(சைவர்.பொ.இ.கு.523)*

விடியலிராகம்: இந்தோளம், இராமகலி, தேசா க்ஷரி, நாட்டை, பூபாளம்.

*(சைவ.மா.இ.கு.8)*

விதிப்படி சேர்க்கப்பட்ட பால், தயிர், நெய், தேன் சருக்கரை- என்பன ரசபஞ்சாமிதர்தமெனப்படும்.

*(சைவ.பொ.இ.கு.513)*

விதிப்படி சேர்க்கப்பட்ட பால், தயிர், நெய், தேன் சருக்கரை, வாழைப் பழம், பலாப்பழம்,மாம்பழம் என்பன பல பஞ்சாமிர்த மெனப்படும்.

*(சைவ.பொ.இ.கு.513)*

வீபூதி கற்பம், அநுகற்பம், உபகற்பம் என்னும் விதத்தால் மூன்று வகைப்படும்.

*(சைவ.பொ.இ.கு.163)*

வைதிக நூல் மீமாஞ்சையும் நியாயமும் வைசேடிமுமாகிய மூன்றுமாம்.

*(சைவ.பொ.இ.கு.338)*

ஸ்நானம் சிரஸ் ஞானம், கண்டஸ்ஞானம், கடிஸ்நானம் என்னும் மூன்றுமாம்.

*(சைவ.பொ.இ.கு.222)*

கைலாசபதி,க. 1979, *சமூகவியலும் இலக்கியமும்*, நியூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு 5

### கலைச்சொல் விளக்கம்

*அகற்பம்*

இடி விழுந்த விடத்தில் உண்டாகிய திருநீறுமலையுச்சியிலும் பூமியிலும் யாதொரு காரணத்தினால் விளைந்த திருநீறும் அகற்ப மெனப்படும்

*சை.பொ.இ. 186*

*அத்துவ சுத்தி*

அத்துவ சுத்தியாவது ஆறத்துவாக்களினும் கட்டுப்பட்டிருக்கின்ற போகங்கள் எல்லாவற்றையும் ஏக காலத்திலே புசித்துத் தொலைப் பித்து மோஷத்தைக் கொடுத்தலாம் .

*சை.ஆ.இ. 64*

*அத்துவிதநிலை*

அத்துவித நிலையாவது ஆன்மபோதமும் தண்ணொளியும் போலச் சிவமும் ஆன்மாவும் தம்முள் இரண்டற ஒற்றுமைப்பட்டு நிற்றல்.

*சை.பொ.இ.7*

*அதிதி*

அதிதி முன்னொரு காலும் அறியப்படாத பரதேசி.
அவன் ஒரு நாளிருந்தாற்றான் அதிதி யெனப்படுவான்.
இதுவே நிர்வாண தீக்ஷையெனப்படும்

*சை.யா.இ. 2*

*அநாதி சைவர்*

அநாதிசைவர் ஏழு வகையர். அவர்களுள்
மகாசைவர் : வைதிகப் பிராமணருள்ளே சிவதீக்ஷை பெற்றவர்
அநுசைவர் : சிவதீக்ஷை பெற்ற க்ஷத்தியரும் வைசியரும்.
அவாந்தரசைவர் : சிவதீக்ஷை பெற்ற சூத்திரர்

---

★ கலைச்சொல் விளக்கம்:

இலக்கியக் கலைச் சொற்கள் என்பன இலக்கியக் கோட்பாடுகளின் சாரத்தை உள்ளடக்கிய சிறுசிறு படிமங்கள் அவை குறிப்புப் பொருள்போல் உள்ளடக்கி நின்று வெளிப்படுகின்றன. கலைச் சொல்லை விளங்கிக் கொள்வதிலிருந்தே இலக்கியத்திற னாய்வு தொடங்கு கின்றது. அக்கலைச் சொற்களுக்கு அப்பொருள் கோட்பாட்டு வளர்ச்சி வழியாகவும் மரபுவழியாகவும் திறனாளியின் நுண்மாண் நுழை புலத்தா லும் அமைகின்றது. எனவே இக்கலைச் சொற்களைத் தனியே தொகுத்துப் பொருளறிதல் இலக்கியக் கல்விக்குப் பெரிந்துணை புரியும் ''(தமிழ ண்ணல் - உரைவிளக்கு 1985) என்னும் கோட்பாட்டிற்கு அமைய ஆறுமுக நாவலரவர்களின் கலைச் சொல்படிமங்கள் தொகுத்து வகுத்துத் தாராய்ந்து தரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரவரசைவர் : சிவதீக்ஷை பெற்ற அநுமலோமர்
அந்தியசைவர் : சிவதீக்ஷை பெற்ற மற்றையோர்

சை.பொ.இ. 435

அப்பியுக்கணம்

★ அப்பியுக்கணம் கவிழ்ந்த பதாகை முத்திரையை யுடைய கைத்தலத்தினாற் செய்தல்

சை.பொ.இ.355

★ சடமாகிய இந்தப் பதார்த்தத்தினிடத்துச் தோன்றிய சித்தினது பிரகாசமானது தன்னுடைய தானத்தை விட்டு நீங்காமல் இருக்கும் பொருட்டு மூடுவது அப்பியுக்கணமாம்

சை.பொ.இ.355

இரேகை

இரேகையானது ஆகாயத்தினின்று விழும் மழைத்துளித்தாரை போன்றதும் பூமியிலெற்றிய கயிறு போன்றதும், பலவாகச் சிதறிய சூரியகிரணம் போன்றதும், என மூன்று விதமாம்

சை.பொ.இ.107

ஆகமம்

ஆகமமென்னு மொழியில் ஆவென்பது ஞானமும், கவ்வென்பது மோக்ஷமும், மவ்வென்பது மலநாசமுமாம்; ஆகவே ஆன்மாக்க ளுக்கு மலத்தை நாசம் பண்ணி ஞானத்தை யுதிப்பித்து மோக்ஷத் தைக் கொடுக்கையால் ஆகமமெனப் பெயராயிற் றென்றுணர்க.

பாயி 23

ஆத்திகர்

ஆத்திகராவார் கடவுளும் புண்ணியபாவமும் சுவர்க்க நரகமும் உண்டெண்போர்; நாத்திகராவார் இல்லையென்போர்

சை.பொ.இ.468

ஆத்துமசுத்தி

ஆத்தும சுத்தியாவது பூதசுத்தி, அந்தரியாகம்
சமாதி யென்னும் மூன்றின்றொகுதியாம்

சை.பொ.இ.502

இராத்திரிஸ்ஞானம்

யஞ்ஞும் மாசப்பிறப்பு மகப்பேறென்பனவற்றினும்
இராத்திரிஸ்நானஞ் செயற்பால தென்றறிக

சை.பொ.இ.44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடல் பொருள் ஆவி மூன்றினையும் தானஞ் செய்தல்**

ஞான தீக்ஷையில் உடல் பொருள் ஆவி மூன்றினையும் தானம் செய்தலாவது

**முன் செயற்கையாற் றன்னுடைமையாய் நின்ற மூன்றினையும் தனக்கின்றிச் சிவபெருமானுக்கே உடைமையாகச் செய்தலாம். ஆவியாகிய தன்னைத் தானஞ் செய்தலாவது** தான் சிவபெருமானுக்குப் பரதந்திரன் என்று உணர்ந்து அவரருளாலல்லது ஒன்றைச் செய்யானாகி நிற்றலேயாம்.

தானே தனக்குச் சுதந்திரமின்றிச் சிவபெருமானுக்குடைமையாய வழித் தன்னின் வேறாய உடல் பொருள்கள் தன்னுடைமையா மாறு யாண்டைய தென்க.

*சை.ஆ.இ.86*

உப வீதம் முறுக்கும் விதி,

முறுக்கும் விதி யெப்படியெனில், கிழக்கு முகமாகவிருந்து வலக் கையிலே நாலங்குலப் பிரமாணத்திலே தொண்ணூற்றாறிழை சுற்றி, இன்னும் அப்படி இரண்டு தரஞ் சுற்றி, அந்த மூன்றிழையை யுஞ் சேர்த்து மேன் முறுக்காக முறுக்கி, ஒன்றாக்கி அதனை மூன் றாக மடித்துக் கீழ்முறுக்காக முறுக்கி, ஒரு புரியாக்குதலாம்.

*சை.ஆ.இ.48*

உருத்திராக்கம்

உருத்திரது கண்ணிற் தோன்றினமையால் உருத்திராக்ஷ மெனப் பெயர் பெற்றது

*சை.பொ.இ.133*

ஏகாவரணபூசை

பிரமாங்களை மாத்திரம் பூசிப்பது. ஏகாவரபூசை

*சை.பொ.இ.529*

ஔத்திரி

ஔத்திரியாவது ஓமத்தோடு கூடிச் செய்வது.

*சை.ஆ.இ.27*

ஔத்திரிதீக்ஷை

ஞானவதி கிரியாவதி யென்னுமிரண்டும்
ஔத்திரி தீக்ஷை யெனப்படும்.

*சை.ஆ.இ.27*

கணிகலிங்கம்

பூசித்தவுடன் விடற்படுதலாற் கணிக மெனப்பட்டன.

*சை.பொ.கு*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமியகர்மம்

காமிய கர்மமாவது பும்ரூபம் ஸ்திரீரூபம், ஸ்திரீபும்ரூபம் என்னும் மூவித தேவதைகளையும் செபதர்ப்பண பூசைகளினாலே சாந்நித்தியம் பண்ணிக் கொண்டும் அவ்வாறே நாடோறும் அநுட்டித்தலாம்.

சை.மா.இ.30

காலாக்கினிருத்திரர்

காலாக்கினிருந்திரர் வலக்காற் பெருவிரலில் எப்பொழுதும் அக்கினியைச் சொலிப்பித்துக் கொண்டு எழுந்தருளிருப்பவர்.

சை.பொ.இ.319

குக்குடாசனம்

குக்குடாசனமாவது இரண்டு பாதங்களையும் கீழே வைத்துக் குந்திக் கொண்டிருத்தல்

சை.பொ.இ.24

கேவலபூசை

விநாயகர் கந்தர் இடபதேவரென்னும் இம்மூவரையும் அவ்விருவருடன் (சிவலிங்கம், உமா தேவி) கூட்டி ஐவராகப் பூசித்தல் கேவல பூசையெனப்படும்.

சை.பொ.இ.475

சிவலிங்கத்தோடு உமாதேவியையுங் கூட்டிப்பூசித்தல் கேவல பூசையென்றறி.

சை.பொ.இ.477

கோமயங் கொள்ளல்

கோமயங்கொள்ளுதல் மூன்று வகைப்படும்.

சாந்திகம்-கோமயமிடும்போது பசுவின் பிற்றட்டிலே கை வைத்தேற்பது

பெளட்டிகம் பூமியிலே விழுமுன் தாமரையிலையிலேற்பது

காமதம் பூமியிலே விழுந்தபின் எடுப்பது காமதம்.

சகளநிட்களம்

சகளம் வடிவுடையது. நிட்களம் வடிவில்லாது இவ்விரு தன்மையுங் கூடுகையாற் சகளநிட்கள ரென்றார்

சை.பொ.இ.548

சுத்தபூசை

சிவலிங்க மொன்றினை மாத்திரம் பூசித்தல் சுத்தபூசையாம்

சை.பொ.இ. 472

சத்திநிபாதம்

இருவினையொப்பும் ஆணவமலபரிபாகமும் உற்றவிடத்தே **சத்திநிபாதம்** உண்டாகும். **சத்திநிபாதமாவது** ஆன்மாவினது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானத்தைத்தடுக்கும் ஆணவமல சுத்தி நழுவும் அவசரத்திலே முற்பிற்பாடறச் சிவத்தினது சிற்சத்தி பதிந்து அவ்வான்மாவினது நித்திய ஞானக் கிரியை விளக்குவதாம்.

சை.ஆ.இ.24

சத்திதீக்ஷை

சத்திதீக்ஷையாவது குண்டலம் மண்டலம் அக்கினி நெய் சுருக்குச் சுருவ முதலியனவெல்லாம் மனத்தாற் கற்பித்துக் கொண்டு விதிப்படி அகத்தே ஆகுதி முதலிய கிரியை செய்து மாணாக்கரது பாசத்தைக் கெடுத்தலாகும்.

சை.ஆ.இ. 26

சந்தேகம்

சந்தேகமாவது ஒரு பொருளை இதுவோ அதுவோவென இரட்டுறக் கருதல்

சை.ஆ.இ.41

சந்நியா சத்தி

சந்தியாவென்பது செவ்வே தியானிக்கப்படுவதெனப் பொருள் படும். சம் செவ்வே. தியானித்தல் அக்கினியோடு உட்டணம் போலச் சிவத்தோடு அபின்னையாய்ச் சகலரும் சாக்ஷிணியாயிருக் கும் சிவசத்தியே சந்தியை எனப் பெயர் பெறும். இச் சிவசக்தி அபரை, பராபரை, பரை என முத்திறப்படும்

பொ.இ.74

சிவத்துவத்தை பெறல்

ஆன்மா யாதனை யாதனைப் பற்றினான் அதனதன் சுபாபமே தன் சுபாவமாந்தன்மையுடைமையால் அதுவதுவாயே நிற்பன்; ஆதலால் அசுத்தப் பொருளாகிய பாசத்தோடு ஒற்றுமைப்பட்டு நிற்கும் போது பசுவேயாய் நின்ற ஆன்மாச் சுத்தபொருளாகிய சிவனோடு ஒற்றுமைப்பட்டு நிற்கும்போது சிவன்குணங்களாகிய எண்குணங் களும் நன்றன்மையாக் கொண்டு சிவனேயாய் நிற்பன். இதுவே சிவத்துவத்தைப் பெறுதலெனப்படும்.

சை.பொ.இ.414

சாதகர்

சாதகரென்பது இம்மைக் கண்ணே சித்தியையும் மறுமைக் கண்ணே போகத்தையும் மோக்ஷத்தையும் சாதித்தடைதலாற் பெற்ற பெயர்.

சை.மா.இ.35

சாம்பவிதீக்ஷை

சாம்பவி தீக்ஷையாவது திருநோக்கு முதலியவற்றால் மாணக்கனது பாசத்தைச் சேதிக்கையாம்

சை.ஆ.இ.26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரயாவரணபூசை

விக்கினேசுரர்களையும் கணேசுரர்களையும் நீக்கிப் பூசிப்பது திரயாவரபூசை

திரிபுண்டரம்

திரபுண்டரமாவது முக்குறித்தொகுதி, முக்குறிகளிடைவெளி ஒவ்வோரங்குலமளவினதாய் இருத்தல் வேண்டும். அவை ஒன்றை ஒன்று தீண்டினும்; மிகவகலினும், வளையினும், இடையறினும் குற்றமாமென்றறிக.

சை.பொ.இ.193

திருநீற்றின் பெயர்கள்

திருநீற்றுக்கு இரக்கை, பசிதம், பசுமம், க்ஷாரம் என்னும் பெயர்களு முண்டு. அவற்றின் வரையறையானது.

இரக்கை : தன்னைத் தரித்த ஆன்மாக்களெல்லாவற்றையும் இரக்ஷித்தலால் இந்தத்திருநீற்றுக்கு இரக்கையெனவும்
பசிதம் : சிவத்தை விளக்கலாற் பசிதமெனவும்,
பசுமம் : பாவங்களை நீறாக்கலாற் பசுமாமனவும்,
க்ஷாரம் : உயிர்களது மலத்தைக் கழுவுதலால் க்ஷாரமெனவும் பெயர் பெற்றது

சை.பொ.இ. 204

திருநீற்றின் முத்திரை

நடு விரன் மூன்றுங் கூடிற் றிருநீற்று
முத்திரையெனப்படு மென்றறிக

சை.பொ.இ.190

பஞ்ச தீர்த்தங்கள்

பஞ்ச தீர்த்தங்கள் ஐவகைப்படும். அவற்றுள்,
தேவ தீர்த்தமாவது கைந்நுதி.
ஆரிட தீர்த்தமாவது விரல்களினிறைச் சந்தி
மானுட தீர்த்தமாவது கனிட்டிகை மூலம்.
பூததீர்த்தமாவது மணிக்கட்டு.
பிதிர் தீர்த்தமாவது தர்ச்சனி அங்குட்டங்களினடு

பஞ்சமகாயஞ்ஞம்

ஆன்மானிடத்துப் பிராணனும், பூதயோனிகளிடத்து அபானனும், தேவர்களிடத்து உதானனும், பிதிர்க ளிடத்தும் சமானனும், மானுடரித்து வியானனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேடித்திருக்கையால், இப்பஞ்சவாயுக்களுக்கும் பலியிடிற் பஞ்சமகாயஞ்ஞஞ் செய்ததாமென்றறிக

சை.பொ.இ.293

பரார்த்தலிங்கம்

பரார்த்தலிங்கமாவது சுயாயம்புலிங்கமும், தைவிகலிங்கமும்; ஆரிடலிங்கமும் மானிடலிங்கமுபகுமன நான்கு பேதப்படும். அவற்றுள்

சுவாயம்பு: குருசேத்திர முதலிய புண்ணிய தலங்களிலே தானே தோன்றுவது.

தைவிகம் : தேவர்களாற்றாபிக்கப்பட்டது.

ஆரிடம் : இருடிகளாற்றாபிக்கப்பட்டது. அசுரர் இயக்கர் சித்தர் முதலாயினாராற் றாபிக்கப்பட்டதும் அது.

மானுடம் : மானுடராற்றாபிக்கப்பட்டது.

சை.பொ.இ.431

பாசமுத்திதன்

பாசமுத்திதன் பாசநீக்கத்தைக் கொடுப்பவன்

சை.ஆ.இ. 31

பிரமசாரிகள்

பிரமசாரிகள் இருவகையினர். அவர்களுள் பௌதிகப்பிரமசாரி: பாலிய வயது தொடுத்துக் கன்னிகா கல்யாண காலம் வரையும் விரதநியமித்துத் துறவியாயிருப்பவன். நைட்டிகப் பிரமசாரி: மரணாந்தம் விரத நியமித்துத் துறவியாக இருப்பவன்.

சை.ஆ.இ.60

பிராணயாமமென்பது பிராணவாயுக்களைத் தடுத்தலே பிராணாயாமம்

சை.பொ.இ.47

புத்திரர்

புத்திரர் இருவகையினர் : அவர்களின் இலக்கணமாவது;

சாமானியபுத்திரர் : சமய தீக்ஷையும் விசேஷதீக்ஷையும் பெற்றவர்

விசேடபுத்திரர் : இவ்விரண்டோடு நிர்வாண திக்ஷையும் பெற்றுச் சாதகாபிடேகமில்லாதிருப்பவர்.

சை.மா.இ.28

மாந்திரிய தீக்ஷ

மாந்திரிய தீக்ஷையாவது குண்டல மண்டலங்களைப் புறத்தே யிட்டு விதிப்படி புறத்தே ஆகுதி முதலிய கிரியை செய்து மாணாக்கனது மலத்தை குன்றும்படி செய்யும் தீக்ஷையாம்.

சை.ஆ.இ. 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நூல்

வேதசிவாகமமிரண்டும் சிவபெருமானிடத்திலே தோன்றினமையால் முதனூலெனப்படும்

சை.பொ.இ.338

மிருக முத்திரை

பெருவிரல் நடுவிரல் ஆழிவிரல் ஆகிய இம்மூன்று விரலுங்கூடின் மிருகமுத்திரை யெனப்படும்.

முழம்

முழமாவது மானாங்குலம் இருபத்து நான்கு கொண்டது. அது மூவகைப்படும். அவற்றுள்

| | | |
|---|---|---|
| உத்தமம் | : | எட்டு நெல்லு குறுக்கே கொண்டது |
| மத்திமம் | : | ஏழு மதத்திமம் |
| அதமம் | : | ஆறு |

மூவினை

சிவபெருமான் நல்வினை தீவினைகளுக்கீடாக ஆத்தியான் மிகம் அதி தைவிகம் ஆதி பௌதிகம் என்னும் மூவிதத்தாலும் சுகதுக்கங் களைக் கொடுப்பார். இவற்றின் இலக்கணம் வருமாறு.

| | | |
|---|---|---|
| ஆத்தியான்மிகம் | : | தன்னாலும் பிறவான்மாக்களாலும் வருவது |
| ஆதிதைவிகம் | : | தேவர்களால் வருவது |
| ஆதிபௌதிகம் | : | பிருதிவி முதலிய பஞ்சபூதங்களால் வருவது |

சை.பொ.இ. 412

விந்து

விந்துவானது இளம் பெண்களுடைய முலைக் கண்ணிறத்தை யுடையதும் நாவற் பழத்தையுடையதும் என இரண்டு விதமாம்

சை.பொ.இ.107

விபரீதம்

விபரீதமாவது ஒன்றை மற்றொன்றாகத் திரித்துணர்தல்

சை.ஆ.இ.41

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் உரை அகராதி


அக்கினி பொ.24.355
அக்கினி காரிய காலம் ஆ.52
அக்கினிபட்ட காலம் பொ. 345
அகங்காரம் ஆ. 22
அகத்திய விருடி பொ 335
அகப்புறச் சமயம் ஆ 21
அகிற் பொடி மா 8
அகோரத்தை பொ. 392
அகோரம் ஆ 51
அகோரமந்திரம் பொ.206,324,561
அகோர முகத்தினின்று யசூர் வேதமும் பொ.338,
அங்காத்தல் பொ.
அங்குராப்பணம் மா.28
அசலம் பொ.123
அசத்தியோ நிர்வாண தீக்ஷை ஆ.62
அசமதாகம் பொ
அசவலிங்கம் பொ.121,122,123,
அசற்பாத்திரலக்கணம் பொ. 417
அசிகம் பொ.335
அசிதை பொ 74
அசுத்த சைவர் பொ.262
அசுத்தநிலம் பொ.206
அசுத்தப் பொருள் பொ. 24
அசுத்தன் பொ. 23
அசோகு பொ 30
அசௌசம் பொ.252
அஷ்டோத்திர சதகலஸ்நபனம் ஆ.இ6
அஞ்சுமான் பொ.335,50,
அஞ்சுமானுக்கு பொ.336
அட்டகோணபீடம் பொ.91
அட்டமி மா.7
அடையாள மிடுக பொ. 274
அணிமாதி சித்திகள் பொ.335
அணுசதா சிவர் பொ.337
அத்திமந்திரம் பொ. 286
அத்தியான்மீகம் பொ.412
அத்தியானமகம் பொ 338
அத்துவா-வழி ஆ.64
அத்துவாக்களாற வன ஆ.64
அத்துவித நிலை பொ.7
அத்துவிதமென்னுஞ் சொற்கு இரண்டின்மையெனப் பொருள் கொள்வர் மாயாவதிகள் பொ.7
அதமதூபம் மா.
அதமப் பிரளயம் பொ. 335
அதமம் மா.7
அதர்வவேதம்
அதர்வ வேதம் ஒன்பது சாகையும் பொ 338
அதமத்தினதமம் மா.9
அதமம் மா 9
அதாதாக்களினிலக்கணம் பொ.417
அதிகார கிருத்தியங்கள் பொ. 75
அதிகாரியாவர் பொ.1470
அதிதி மா.27 பொ.267,
அதிதேவதை, பொ. 331, 332,333
அதிபக்குவம் பொ.370
அதிபரமாப்தர் பொ.328
அதிபாதகர் பொ.392
அதி மார்க்கம் பொ. 338
அதி க்ஷதர் பொ.392
அதோமுகங்கணான் கினுள்ளும் தற்புருடத்தினின்று இருக்குவேமும் பொ.338
அந்தத் தண்டை பொ.350
அந்தராளர் பொ 467
அந்தரியாகம்
அந்தரியாகம் இன்றியமையாமை பொ.503
அந்தரியாகபூசை பொ.128,255
அந்த விசய முதலிய பொ.123
அந்தியேட்டி விதி பொ.335
அநாசாரியர் - 3.37


பாயி : பாயிரம் மா : மாணவரிலக்கணம்
ஆ : ஆசிரியலக்கணம் பொ : பொதுவிலக்கணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாசாரியரெனத் தள்ளலும்
பொ.ஆ.37
அநாதி மலமுத்தர் ஆ.41
அநாதி ருத்திரர் முதன் முதற்பத்தறு
வரரவர் பொ.337
அநாதி மல முத்தர் ஆ.41
அநுட்டித்தல் மா.30
அநுசந்தானம் பண்ணி
அநுட்டான செபம் பொ. 254
அநுட்டானம் பொ. 63
அநுலோமர் மா.ச பொ.202, 458
அநுலோமர் அறுவராகதல் காண்க
மா.2 பொ.466
அநுலோமரிலக்கணம் பொ.466
அபக்குவம் பொ. 370
அபக்குபவன் பொ. 374, 375
அபரம் மா.30
அபர முத்தி பாயி 25. ஆ.63
அபரை பொ.74
அபானன் பொ. 293
அபிடேகாந்தத்திலே செயற் பாலது
பொ.520
அபிஷேக கலசம் பொ.516
அபிஷேகஞ் செய்க 254, 287
அபிமந்தரித்து பொ. 194
அபுத்தி பூர்வமாகவேனும் பொ.544
அம்பட்டன் பொ.466
அமாவாசை பொ. 350
அமிர்தத்துஞ் சொல்லுகையால்
பொ. 470
அமிழ்த்திவிடல் பொ. 350
அயனாதியென்ற தினால் விஷுசங்
கிரமங்களும் ஆசாரியர் தன்னிட
த்து எழுந்தருளி வந்த காலமும்
உயர்ந்த கேட்டாச்சாரியர் எழுந்த
ருளிவந்த காலமும் பெரியோர்க
ளுக்க ஆபத்து வந்த காலமும்
ஒருவர் மரிந்தகால மும் கொள்க
அயாசக பிச்சை பொ 257
அயோகவன் பொ. 467
அர்த்தராத்திரி மா. 7, பொ.266
அரசன் ஆ.44 பொ. 356
அரிபிரமேந்திரிராதி தேவர்கள்
பொ.75
அருக்கியத்துக்குத் திரவியம் உணர்த்
தல் பொ. 535
அருக்கியம் பொ. 535
அருக மல்லாத பூசைகன் பொ.130
அருகர்கள் - மா-1
அருகரல்லாதவர் பொ. 290
அருச்சித்தலுஞ் செய்யாது மா.49
அருச்சித்து பொ.370
அருட்பாக்களைந்துமாம் மா.8
அருணகிரிபுராணம் மா.30
அருணந்தி சிவாசாரியார் ஆ.36
அவகுண்டனம் பொ.525
அவழுக்கொரு கற்பம் பொ. 453
அற்புதம் பொ.
அனந்தேசுரர் பொ. 11
அன்றியும் செபகாலத்தும் மலருமா
சன காலத்தும் யோகஞ் சாதிக்
குங் காலத்தும்மௌனம் வேண்
டுமென்க பொ.325
அன்னம் ஏழுவகைப்படும் பொ. 544
அன்னம் ஐயவகைப்படும் என்றலு
மொன்று பொ.544
அஸ்திர மந்திரம் பொ.43
ஆகமம் பா 23
ஆகத்தும் என்ற வும்மையால் மன
த்து மென்பது கொள்ளப்பட்டது
ஆ.44
ஆகமங் கூறுமென்க பொ.402
ஆகமங் கூறுமெனவறிக பொ.196
ஆகமனஞ் செய்து ஸ்நானம் பண்
ணுக பொ.226
ஆகமனஞ் செய்யில் பொ.62
ஆகமன விதி. பொ.64
ஆசமித்த பின்னும் பொ.206
ஆசமனத்துக்குரிய திரவியங்கள்
பொ.533
ஆசனவகை உணர்த்தல் பொ.522
ஆசாரங்கள் பொ.இ.ஆ 20
ஆசாரியார் சூ 3
ஆசாரியா சேடமும் பயனும் உணர்த்
தல் பொ.561

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரியா பிஷேகம் பொ.20,44
